சமூக வெளி

பன்முகக் கருத்தாடல் ஆய்வுக்களம்...

இதழ் : 02 காலாண்டிதழ் சித்திரை-ஆனி

புவிசார் அரசியலில் மாற்றம்....

மேலே பூதம் கீழே ஆழ்கடல்...

தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்

ரூபா.200.00 ISSN:2279-1418

மீண்டும் 2012 முதல் வெளிவருகிறது...!



ஆசிரியர்: பொ.ஐங்கரநேசன்

விலை: ரூபா.60.00

தொடர்புகளுக்கு:
பதிவாளர் ஒழுங்கை திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்
தொ.பேசி: 0777-969644
மின்னஞ்சல்:nankkoorum@yahoo.com

உள்ளே...

04 இலக்கிய மீளாய்வு - சபா.ஜெயராசா

9 சங்க இலக்கிய வாசிப்பின் அரசியல்: சைவசமயம் - ஐ.சிவகுமார்

31 வட்டார வரலாறு: வழக்காறுகளை முன்வைக்கும் வரலாற்றியல் - பக்தவத்சல பாரதி

47 தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல் - ந.முத்துமோகன்

65 ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரத்தில் உயர்குழாமின் எழுச்சி... - கே.ரி.கணேசலிங்கம்

74 புவிசார் அரசியலில் மாற்றம்.... -எலன் ஆர் இன்ங்ரம் தமிழில்:பாலகம்சத்வனி

83 மேலே பூதம் கீழே ஆழ்கடல்... சிவில் சமூகமும் அரசுசாரா சமூகமும் - ஜமாலன்

ISSN :2279-1418

சமூக வெளி

இதழ் : 02 ஏப்ரல்-யூன் 2012 விலை:200.00

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

இணை ஆசிரியர்கள்:
மா.மோகனகிருஷ்ணன், து.ஜெயராஜ்

ஆசிரியர் குழு :
கா.சுதாகரன், வை.நவதரன், க.கோபிநாத், வி.விஜயரூபன், ப.லவக்காந், பா.ஹம்சத்வனி, ஆ.வானதி, ஏ.எல்.நௌபீர், த.விமல், ச.சத்தியதேவன், பொ.நந்தவர்ணன்

அச்சு:
சேமமடு பதிப்பகம், கொழும்பு -11
தொலைபேசி : 0777 345666

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு:
சமூகவெளி
11/8, பண்டாரிக்குளம், மேற்கு ஒழுங்கை
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 075-0710602/ 077-1381747

அடையாளமும்... இருப்பும்...

"சமூகவெளி" முதல் இதழுக்கு பரவலான ஆதரவும் வரவேற்பும் கிடைத்தது. அந்த வகையில் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான். இந்த மகிழ்ச்சியின் அறுவடையாக தற்போது இரண்டாம் இதழ் வெளிவருகின்றது.

நமது ஒவ்வொரு இதழ்களும் தமிழ்ச் சமூக அசைவியக்கத்தை பல்வேறு நிலைகளில் பல்வேறு தளங்களிலிருந்து மறுவிசாரணை மறுவாசிப்புச் செய்யும் நோக்கிலேயே வெளிவரும் இவற்றுக்குத் துணை செய்யும் கருத்தியல் சாதனங்கள், ஆய்வு முறையியல்கள் முதலானவற்றை அறிமுகம் செய்யும் பாரிய பணிகளையும் 'சமூகவெளி' தனதாக்கியுள்ளது.

இதற்காக நாம் ஈழத்துப் புலமையாளர்களுடன் மட்டுமல்ல தமிழகப் புலமையாளர்களுடனும் இணைந்து பணியாற்றுகின்றோம். இதன் மூலம் கணங்காத்திரமான அறிவார்ந்த விடயங்களை சிந்தனைகளாகவும் உரையாடல்களாகவும் மாற்றுவதற்கான அறிவுப் பண்பாட்டுத் தளத்தை விரிவாக்க விளைகின்றோம்.

நமக்கான பொதுவெளி விடுதலைச் சிந்தனைக்கான பன்முகத்தை அடையாளப்படுத்தும் நுண்ணரசியல் கூறுகளைக் கொண்டதாகும். நாம் இதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் பயணப்படுகின்றோம். இந்தப் பயணம் பாதி வழியில் நிற்கக்கூடியது அல்ல. இன்னும் வெவ்வேறு வடிவங்களில் தொடரக்கூடியது. மேலும் இதுவே நமது கோட்பாட்டாக்கப் பணியாகவும் தத்துவப் படுத்தலாகவும் தடம் மாறும்.

பொதுவாக தத்துவத்தின் பணி என்பது இருக்கும் அறிவுநிலையை கேள்வி கேட்பது, பிரச்சனைப்படுத்துவது என்பது தான். இங்கு நமக்கு பதில்கள் முக்கியமல்ல. அப்படிச் சொல்லப்பட்ட பதில்களும் அடுத்த நிலையில் கேள்விக்குள்ளாக்கப்படும். தத்துவத்தின் முதல் கோட்பாடு அடுத்த கேள்வியைக் கேட்பதுதான். மறுவாசிப்புக்கான களத்தை திறந்துவிடுவதுதான். ஆரம்பத்தில் தத்துவவாதிகள் யாரும் தத்துவ பிரச்சாரகர்களாக இருந்ததில்லை. இதனால் தத்துவவாதிகள் என்ன சொன்னார்கள் என்பதைக் காட்டிலும் என்ன செய்தார்கள் என்பதே முக்கியம் பெற்றது. ஆகவே நாம் தத்துவத்தில் அல்ல தத்துவப்படுத்தலிலேதான் முழுக்கவனமும் செலுத்த வேண்டும். நமக்கு இந்தப் புரிதல் முக்கியம்

கடந்த காலங்களில் நாம் தத்துவம், அரசியல், பொருளியல் சார்ந்த உரையாடல்களில் முழுகவனம் செலுத்தத் தவறியுள்ளோம். இதனால் கலை இலக்கியம் பண்பாடு சார்ந்த புலங்களிலும் ஆழமான விமரிசனச் சிந்தனை இழையோடவில்லை. ஒரு வகையில் தமிழ்சார் அறிவுத்துறைகளில் வறுமையும் வரட்சியும்தான் நிலைபெற்றுள்ளது. இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. மாற்று வாசிப்புச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. மரபுவழியான வாசிப்புத் தன்மைகளுக்கு மாற்றான புதிய வாசிப்புத் தன்மைகளை அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது. ஆழமான நுணுக்கமான வாசிப்பை ஆழ்நிலை வாசிப்பு நோக்கியதாக மாற்ற வேண்டியுள்ளது. இந்தப் புதிய தேவைகளோடு தான் நமது நூலாக்கங்களும் வெளியீட்டு முயற்சிகளும் அமைய வேண்டும்.

நமது தொடர் வாசிப்பும் தீவிரசிந்தனையும்தான் நமக்கான உள்ளுணர்வையும் சுயத்துவத்தையும் மீட்டுத் தரும். இதுவே நமக்கான இருப்பின் அடையாளத்தையும் அடையாளத்தின் இருப்பையும் உணர்த்தும். மேலும் அடையாள உருவாக்கமும் மற்றும் அடையாள வேறுபாடுகளும் குறித்து இன்னும் ஆய்வு ரீதியிலும் கோட்பாட்டு ரீதியிலும் சிந்திப்பதற்கான கடந்து செல்வதற்கான அறிவு மற்றும் அனுபவம் முதலானவற்றை தொகுப்பதற்கான முன் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.

'சமூகவெளி' இந்த வரலாற்றுக் கடமையை தெளிவாக உணர்ந்து கடந்துசெல்ல விரும்புகின்றது. நமது முதல் இதழும் சரி தற்போது வெளிவரும் இந்த இதழும் சரி இந்தக் கடமைகளை நிறைவேற்றும் நோக்கிலேயே உள்ளது.

இந்த இதழில் இடம்பெறும் கட்டுரைகள் குறிப்பாக "அடையாள அரசியல்" பற்றிய ஒரு தெளிவான பின்புலத்தை நமக்கு வழங்குவதாகவே அமைகின்றது. அடையாள அரசியல் குறித்த நுணுக்கமான ஆய்வுக்கான பின்புலத்தை ந.முத்துமோகனின் கட்டுரை தருகின்றது. தமிழ்ச் சூழலில் அடையாளங்கள் உருவாகிய வரலாறுகள் பேசப்படும் பொழுதே அடையாள உருவாக்கங்கள் பன்மைத்தன்மை கொண்டவை என்பதும் அவை உள்ளும் புறமுமாக முரண்பாடு கொண்டவை என்பதும் தெளிவாகும்.

'தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்' எனும் கட்டுரை தமிழகச் சூழலில் பேசப்படும் விடயமாக இருந்தாலும் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் அதன் முறையியல்

இயங்கியல் இன்னும் நுணுக்கமாக பொருத்திப்பார்க்கத் தக்கது. அதைக் கடந்து நாமும் இங்கு தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல் குறித்து பன்முகமான ஆழமான தேடலை மேற்கொள்வது பொருத்தமாக அமையும்.

அடையாளம் குறித்த ஆய்வு அடையாள ஒற்றுமைக் குறித்ததாகவும், வேறுபாடு குறித்ததாகவும் அமையும். இதுவே மார்க்சிய இயங்கியல் தரும் செய்தி. நாம் அடையாளம் என்பதை ஒற்றைப் பண்பு கொண்டதாகவும் நிரந்தரமாகத் தரப்பட்ட ஒன்றாகவும் கருதுவது இயக்க மறுப்பியல் சிந்தனையின் வகைப்பட்டதாகும். ஒன்றுபடு தல், வேறுபடுதல் என்பவற்றுள் ஒன்றுபடுதல் என்பது தற்காலிகமானதென்றும் வேறுபடுதல் என்பதே அடிப்ப டையானது என்றும் லெனின் கூறுவார். வேறுபடுதல் தொழிற்படும் போதே ஒரு நிகழ்வுப் போக்கின் இயக்கம் உறுதிப்படுத்தப்படுகின்றது. வேறுபாடில்லாத ஒற்றுமை அடையாளத்தை முன்னகர்த்திச் செல்லாது. சமூக ரீதியாக வேறுபாடுகள் அடையாளத்தை சனநாயகப்படுத்துகின்றன. ஆதிக்கம், அதிகாரப்பகிர்வு ஆகிய நோக்கங்களுக்காக மேட்டுக்குடிகள் முன்னெடுத்த அடையாளத்தை விடுதலை சனநாயகப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காக அடித்தள மக்கள் கையகப்படுத்த முனைவதை அது சுட்டிக்காட்டுகிறது. அடுத்தடுத்த வேறுபடுத்தல்களின் வழி அடையாளத்திற்கு அடித்தள மக்கள் சார்ந்த உள்ளடக்கம் ஏற்படுகின்றது. இது பற்றிய கவன ஈர்ப்பை சிந்தனையை முத்துமோகன் நமக்குத் தருகின்றார். அடையாள அரசியல் பற்றிய ஒரு மார்க்சிய வாசிப்புக்கான பின்புலம் நமக்கு கையளிக்கப்படுகின்றது. இந்த அறிகை மரபை நாம் நிதானமாக நமது சூழமைவுக்கேற்ப பொருள்கோடல் செய்ய வேண்டிய சமூகப் பொறுப்பும் நமக்கு உண்டு.

அடையாளமென்ற ஒன்று புறவயமாகவே நிலவு கின்றதா? அது வெறும் அரசியல் புனைவா? அதாவது அகவயமானதா? இந்தக் கேள்விகள் அடிக்கடி எழத்தான் செய்கின்றன. தேசியம் பற்றி எழுதிய பெனடிக் அன்டர்சன் அதனை ஒரு கற்பிதக் குழுமம் என்று எழுதினார். ஆயினும் அடையாள உருவாக்கம் என்பது அகமும் புறமும் இணைந்து தொழிற்படும் ஒரு இயங்கியல் நிகழ்வாகத்தான் நமக்குப்படுகின்றது. தொல் சமூகங்க ளில் அது ஒரு புலப்படாப் பொருளாக இருந்து சந்தர்ப்பம் நேரிடும்போது புலப்படத் துவங்குகின்றது. சந்தர்ப்பங் கள் கூடி வரும்போது அடையாள எடுத்துரைப்பு நிகழ் கின்றது. தொல்சமூகங்களில் நவீன யுகம் அல்லது காலனியம் நிலைக்கொள்ளத் தொடங்கியபோது அதனை எதிர்கொள்ள அடையாளத் திரட்சிகள் எடுத்துரைக்கப் பட்டன. மேலும் அடையாளம் புலப்பட்டது. இத்தகைய புலப்பாட்டு உணர்திறனை ஆழமாகப் புரிந்துகொள் வதற்கு சமகாலக் கோட்பாடுகளின் வெளிச்சத்தில் பரிசீலிப்பதற்கான சிந்திப்பதற்கான அவசியத்தையும் முத்துமோகன் தெளிவுபடுத்துகின்றார். இவ்வாறான ஒரு அணுகுமுறை அறிகை மரபு நமது தமிழ் புலமையில் இன்னும் இழையோடவில்லை.

அடுத்து "வட்டார வரலாறு: வழக்காறுகளை முன்வைக்கும் வரலாற்றியல்" எனும் கட்டுரை வரலாறு எழுதியல் தொடர்பிலான மாற்றுச் சிந்தனைக்கான கூறுகளை அடையாளப்படுத்துகின்றது. இந்தச் சிந்தனையும் நமக்கு முக்கியம். குறிப்பாக வரலாறானது சமூகம் சார்ந்த வரலாறாக இன்னும் எழுதப்படவில்லை. வரலாறு என்பது ஒப்பாரும் மிக்காரும், தன்னிகரில்லாத தலைமக்களை மையமாகக் கொண்டே இன்றுவரை நோக்கப்படுகின்றது. இதற்கு ஒரு அடிப்படைக் காரணம் நமக்கு வரலாற்றுப் பாரம்பரியம் இருந்தும் கணக்கற்ற வரலாற்றுச் சான்றுகள் இருந்தும் நமது வரலாற்று வரைவியல் என்பது ஐரோப்பிய வரலாற்று அறிஞர்களால் உருவாக்கப்பட்டமைதான். ஆகவே இந்த மரபுக்கு எதிரான மாற்று வரலாறு எழுதியல் பற்றிய நோக்கு முறையை நாம் விரிவாக்க வேண்டியுள்ளது. அந்த அடிப் படையில்தான் இந்தக் கட்டுரை இங்கு இடம்பெறுகின்றது. நமது சமகால சமூக வரலாற்று ஓட்டத்தில் வட்டார வரலாற்றின் முக்கியத்துவத்தை தெளிவாகப் புரிந்து கொள்வது கூட நமக்கு அரசியல் தேவையாகவும் உள்ளது.

இதுபோல் "சிவில் சமூகமும் அரசுசாரா சமூகமும்", மற்றும் "புவிசார் அரசியல் மாற்றம்" முதலான கட்டுரைகள் சமகால உலக ஒழுங்கமைப்பை புரிந்து கொள்வதற்கான மாற்றுப் பார்வைகளை நமக்குத் தருகின்றது. செப்.11.2001 தாக்குதல்களின் பின்னால் உள்ள அரசியல், அது தொடர்ந்து உலக ஒழுங்கமைப்பில் ஏற்படுத்திவரும் நெருக்கடிகள்... முதலான கூறுகளை நாம் விளங்கிக்கொள்வதற்கு இந்த இரு கட்டுரைகளும் நமக்கு உதவுகின்றன. குறிப்பாக சர்வதேச அளவில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்கள் உள்நாட்டு சர்வதேச அரசியலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அவற்றின் எதிர்ப் புரட்சிகர அம்சங்கள் யாவற்றையும் விளக்கும் வகையில் ஜமாலனின் கட்டுரை இடம்பெறுகின்றது. நமது சூழலில் இன்று அரசுசார்பற்ற நிறுவனங்களில் அதிகார அரசியல் பல்வேறு மட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது. இதனை விளங்கிக்கொள்வதும் விளங்கப்படுத்துவதும் நமது சமகாலத் தேவையாகின்றது.

சமூகவெளியில் இடம்பெறும் கட்டுரைகள் ஒவ்வொரு வகையில் நமது இருப்பை நமது அடையாளத்தை விளங்கிக்கொள்வதற்கான அரசியலை தெளிவுபடுத்து வதற்கான அறிகை மரபை வழங்கும்.

தெ.மதுசூதனன்



இலக்கிய மீளாய்வு

சபா.ஜெயராசா

சபா.ஜெயராசா

கல்வியியல் பேராசிரியர்(ஓய்வு) இவர் கல்வியியல், சமூகவியல், பண்பாட்டியல் தொடர்பில் பல்வேறு ஆய்வு கட்டுரைகளை, நூல்களை எழுதியிருப்பவர்.

"அறிவுப் பொருளாதாரம்" விரைந்து வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளது. வாழ்க்கை முழுவதும் ஒவ்வொருவரும் "வாசிப்பவர்களாக" மாறவேண்டியுள்ளது. வாசிப்பின் வழியாக அறிவைப் பெருக்கிக்கொள்ள முடியாதவர்கள் பொருளாதார நிலையிலே "காலாவதியான பண்டம்" போன்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகின்றனர். அறிவுப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகத் தரச்சிறப்பு மிக்க "ஆய்வியம்" *(Thesis)* ஆக்கும் முயற்சி தூண்டிவிடப்படுகின்றது. தாம் கற்கும் நுண்ணிய துறைகளிலே ஆய்வியத்தை உருவாக்கும் நிலைக்கு ஒவ்வொருவரும் உந்திவிடப் படுகின்றனர். ஏதோ ஒரு நிலையில் ஒவ்வொருவரும் ஆய்வாளராக மாற வேண்டியுள்ளது.

புலமை வளர்ந்து செல்லும்பொழுது அதன் தொடக்க நிலைகளில் 'ஆய்வு பதிகை'யை *(Dissertation)* மாணவர் உருவாக்குவர். அதேவேளை புலமை உச்சங்களில் 'ஆய்வியம்' உருவாக்கப்படும். திறனாய்வுக்கு முகம்கொடுக்கும் ஒன்று திரட்டிய விவாதங்களை *(Murray, R.2004:100)* அவை கொண்டிருக்கும். தருக்க இணைப்புடன் அவை மேலெழுந்து நிற்கும். அறிகை நிலையில் அது புத்தாக்கமாக அமையும்.

வினைத்திறன் கொண்ட நிறைந்த வாசிப்பு புலமை மற்றும் ஆய்வின் ஆழங்களை முன்னெடுத்துச் செல்லும். அந்நிலையில் இலக்கிய மீளாய்வு என்பது ஆய்வுடன் இணைந்த தனிப்பெரும் தொடர் உறுப்பாக வலியுறுத்தப்படுகின்றது. ஆய்வின் தரத்தையும் பெறுமானத்தையும்

உற்றுணர்வதற்குரிய தளத்தை அது அமைத்துக் கொடுக்கும்.

இலக்கிய மீளாய்வு என்பதற்குப் பலர் பல்வேறு நிலைகளிலே வரைவிலக்கணங் களைத் தந்துள்ளனர். அவற்றுள் குறித்துரைக்கத் தக்கவை வருமாறு:

அ. அதுவரை வெளிவந்த ஆய்வுகள் தொடர்பான தொகுப்பு நிலையாகவும் பொருள் கோடலாகவும் அமைதல். *(Merriam 1988:6)*

ஆ. ஆய்வு விசாரணைகள் முன்னைய முன்னைய ஆய்வுகளுடன் எவ்வாறு தொடர்புபட்டுள்ளன என்பதன் காட்டுகை.*(Anderson et.al1970:17)*

இ. ஏனைய ஆய்வுகளிலிருந்து குறித்த ஆய்வு எவ்வாறு தனித்துவம் கொண் டுள்ளது என்பதை இனங்கண்டு கொள் வதற்குரிய ஏற்பாடு. *(Bruce 1994:137)*

ஈ. குறித்த ஆய்வு பிற ஆய்வுகளுடன் இணைந்தும் வேறுபட்டும் நிற்பதைக் கண்டறிவதற்கான சந்தர்ப்பம். *(Leedy, 1986:66)*

இலக்கிய மீளாய்வு ஒரு செயல்முறை யாகவும் அதேவேளை ஒரு விளைவாகவும் அமைகின்றது. செயல்முறையென்ற நிலையில் அது ஆய்வுப் பிரச்சினையை முன்னெடுப்பதற் குத் துணை செய்கின்றது. அதேவேளை தமது ஆய்வின் செயற்பாடுகளைப் பிறஆய்வுகளுடன் ஒப்புநோக்குவதற்கும் துணை செய்கின்றது. விளைவு என்ற நிலையில் அது ஏனைய ஆய்வுகளின் செறிவுள்ள தொகுப்பாகவும் அமைந்து விடுகின்றது.

முதல் நிலைப் புலமை முயற்சிகளை இலக்கிய மீளாய்வு வெளிப்படுத்தி நிற்கும். அவ்வாறான புலமை நிலை முயற்சிகளைத் தொகுத்தல், விளக்குதல், மதிப்பிடுதல், உள்ள டக்கத்துடன் ஒன்றிணைத்தல், வரன்முறைப் படுத்தல் முதலியவை இலக்கிய மீளாய்வின் வழியாக வெளிப்பாடு கொள்கின்றன. குறித்த ஆய்வின் பின்புலமாக அமைந்த கோட்பாடுகள் மீது செலுத்தப்படும் ஒருவித புலமைசார்ந்த ஆட்சியாக இலக்கிய மீளாய்வு அமைந்து விடுகின்றது.

முதல் நிலைப் புலமை முயற்சிகளை இலக்கிய மீளாய்வு வெளிப்படுத்தி நிற்கும். அவ்வாறான புலமை நிலை முயற்சிகளைத் தொகுத்தல், விளக்கு தல், மதிப்பிடுதல், உள்ளடக்கத்துடன் ஒன்றிணைத்தல், வரன்முறைப் படுத்தல் முதலியவை இலக்கிய மீளாய்வின் வழியாக வெளிப்பாடு கொள்கின்றன. குறித்த ஆய்வின் பின்புலமாக அமைந்த கோட்பாடுகள் மீது செலுத்தப்படும் ஒருவித புலமைசார்ந்த ஆட்சியாக இலக்கிய மீளாய்வு அமைந்து விடுகின்றது.

முன்னைய ஆய்வுகளின் தொடர்ச்சியாகவும், முன்னையவற் றுக்கும் புதிய ஆய்வுக்குமிடையே யுள்ள இடைவெளியை நிரப்புதலாக வும் இலக்கிய மீளாய்வு அமைகின் றது. இடைவெளியை நிரப்பும் வேளை புதிய ஆய்வின் தேவை நியாயமாக்கப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான விரிந்து ஆழ்ந்து பரவும் புலக்காட்சிக்கு இலக்கிய மீளாய்வு வழியமைத்துக் கொடுக்கின்றது. எத்தகைய விவா தங்கள் புலமை நிலையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எத்தகைய சிந்தனா கூடங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன என்பவற்றைக் கண்டறியும் வாய்ப்புக் கிடைக்கப் பெறுகின்றது. முன்னைய அறிவின் குவிப்பிலிருந்து மேலெழுந்து செல்லும் புலமைப் பயிற்சிக்கு அங்கே இடமளிக்கப்படுகின்றது.

இலக்கிய மீளாய்வு ஒருவரது ***தனிமுகிழ்ப்பைக்*** *(Originality)* கண்டறிவதற்கு தளமாக அமைகின்றது. பிற ஆய்வுகளின் தழுவலாகவோ, பின்பற்றலாகவோ, ஆய்வு இருத்த லாகாது. தனித்துவமும் தன்முகிழ்ப் பும் ஆய்வுக்கு அவசியமானவை. தன்முனைப்புக்குரிய பண்புகள் பின்வருமாறு விளக்கப்படுகின்றன. *(Phillips and Pugh, 2000:63-4)*

1. பிறர் சொல்லாதவற்றைச் சொல்லல்.
2. பிறர் மேற்கொள்ளாதவற்றை மேற்கொள்ளல்.

இலக்கிய மீளாய்வு ஒரு செயல்முறையாகவும் அதேவேளை ஒரு விளைவாகவும் அமைகின்றது. செயல்முறையென்ற நிலையில் அது ஆய்வுப் பிரச்சினையை முன்னெடுப்பதற்குத் துணை செய்கின்றது. அதேவேளை தமது ஆய்வின் செயற்பாடுகளைப் பிறஆய்வுகளுடன் ஒப்புநோக்குவதற்கும் துணை செய்கின்றது.

3. முன்னர் மேற்கொள்ளாதவாறு கருத்தமைவைத் தொகுத்தல்.

4. புதிய பொருள்கோடலைத் தருதல்.

5. இருக்கும் நுட்பத்தைப் புதிய புலத்துக்குப் பயன்படுத்துதல்.

6. புதிய ஆய்வுமுறையைப் பயன் படுத்துதல்.

7. பிறர் மேற்கொள்ளாத ஆய்வுப் பரப்பைத் தெரிந்தெடுத்தல்.

8. புதிய தகவலை வழங்குதல்.

9. முன்னைய கருத்துக்களை ஆதா ரங்களுடன் மறுத்தல்.

10. முன்னர் பயன்படுத்தாத சான்று களையும் நூல்களையும் எடுத்தாளல்.

பல்கலைக்கழகங்களில் மேற் கொள்ளப்படும் ஆய்வுகளின் தரம் பற்றிய மதிப்பீடுகளும் ஆய்வுகளும் இன்று பரவலாக மேற்கொள்ளப்படு கின்றன. சமூக விஞ்ஞானத் துறைசார்ந்த ஆய்வுகளிலே புள்ளிவிபர முறையே பெருமளவிலே பயன்படுத்தப்படுதலும், ஏனைய ஆய்வுமுறைகள் வளர்முக நாடுகளிலே அதிக அளவிலே முன் னெடுக்கப்படாமையும் கண்டறியப்பட் டுள்ளது. எடுத்துக்காட்டாக இனவரைபியல் முறை *(Ethnographic Method)* பெருமள விலே பயன்படுத்தப் படாதிருத்தலும் கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுகள் "வாய்ப்பாடுகளாக" மாறி வருகின்றன. புள்ளி விபரமுறை ஆய்வுகளும் "ஓரியல்பு" வகையாக இருத்தலும் இனங் காணப்படுகின்றது. இலக்கிய மீளாய்வுச் செயற்பாடு மேற்கூறியவாறு நடப்பு நிலவரங்களைக் கண்டறிவதற்குரிய தரிசனத்தை ஏற்படுத்தி விடுகின்றது. அதாவது இலக்கிய மீளாய்வு ஆய்வுப் பொருள் பற்றிய தொகுத்த காட்சியை உருவாக்குதலோடு மட்டும் நின்று விடுவதில்லை. பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள் பற்றிய தெளிவான காட்சியையும் உருவாக்கிக் கொடுக் கின்றது.

இலக்கிய மீளாய்வு என்பது நிகழ்ந்தவற்றை நோக்குதல் மட்டுமல்ல நிகழ்ந்தவற்றைத் திறனாய்வுடன் நோக்குதலுமாகும். இலக்கிய மீளாய்வின் அடிப்படையில் ஓர் ஆய்வு அளிக்கையின் தரத்தை இலகுவிலே மதிப்பீடு செய்ய முடியும்.

இலக்கிய மீளாய்வு என்பது நிகழ்ந்த வற்றை நோக்குதல் மட்டுமல்ல நிகழ்ந்த வற்றைத் திறனாய்வுடன் நோக்குதலுமாகும். இலக்கிய மீளாய்வின் அடிப்படையில் ஓர் ஆய்வு அளிக்கையின் தரத்தை இலகுவிலே மதிப்பீடு செய்ய முடியும்.

ஆய்வு என்பது அறிவின் சிக்கலாகிய தன்மையுடன் தொடர்புடையது. அறிவு ஆழ்ந்து செல்லும் பொழுது அது இயல் பாகவே சிக்கலாகும் தன்மையை அடையும். கல்வி உளவியலில் "அறிகைச் சிக்கல் அமைப்பாகம்" *(Cogno Complex Formation)* என்ற எண்ணக்கரு வாயிலாக இது விளக்கம் பெறும். அறிவின் வளர்ச்சியானது எளிமை யிலிருந்து சிக்கலை நோக்கிய நகர்ச்சி என்று குறிப்பிடப்படும். முன்னைய ஆய்வுக ளிலிருந்து பின்னைய ஆய்வு எவ்வளவு தூரம் சிக்கலாகும் தன்மையை நோக்கி நகர்கின்றது என்பதைக் கண்டறிவதற்கும் இலக்கிய மீளாய்வே தளம் அமைத்துக் கொடுக்கின்றது.

தரமான ஓர் ஆய்வு பின்வரும் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை புலமையாளர் சுட்டிக்காட்டி யுள்ளனர். *(Jognston, 1997:341)*

1. சிக்கலின் அடக்கம்.
2. தன்முகிழ்ப்பு.
3. உற்றறிகைச் சிந்தனை.
4. புலமை ஒழுக்கம்.
5. அறிவுப் பரப்புக்குப் பொருண்மை கொண்ட பங்களிப்பைத் தருதல்.
6 புதிய எண்ணக்கருக்களின் ஆக்கம்.
7. புத்தாக்க எண்ணங்களின் முகிழ்ப்பு.
8. முடிவுகளைப் பிரசுரக்கூடிய புலமைத் தகுதி.

மேற்கூறிய அனைத்தும் புலமைநிலை வாசிப்புடன் இணைந்தஅறிவுத் தேட்டம் தொடர்பான ஊக்கல் வயப்பட்டவை. குறிப் பிட்ட துறையில் முன்னெழுந்த ஆக்கங்கள் பற்றிய அறிவின்றி ஆய்வின் தரத்துக்குரிய தகுதிகளை எட்ட முடியாது.

இலக்கிய மீளாய்வில் மூல நூல்கள், மற்றும் மூல ஆவணங்களின் நோக்கல்

முக்கியமானது. மூல நூல்களை நோக்காது வழிநூல்களை மட்டும் நோக்குதல் ஆய்வின் தரத்தினைப் பின்னடையச் செய்துவிடும். மூல நூல்களையும் வழி நூல்களையும் ஒன்று சேர்ந்து நோக்கும் பொழுது பலநிலை மட்டுப் பாடுகளை இனங்கண்டுகொள்ள முடியும்.

இலக்கிய மீளாய்வு பற்றி எழுப்பப்படும் வினாக்கள் ஆய்வின் தரத்தைக் கண்டறி வதற்குரிய உபாயமாகவும் கொள்ளப்படு கின்றன. அவ்வகையிலே பின்வரும் வினாக்கள் முற்குவிக்கப்படுகின்றன.

1. தெரிந்தெடுக்கப்பட்ட ஆய்வுப் பொருள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?
2. வேறு எந்த ஆய்வாளர் இதனை முக்கியம் என்று கருதியுள்ளனர்?
3. இதற்கு முன்னர் இத்துறையில் ஆய்வு செய்தோர் யாவர்?
4. எப்பிரிவில் ஆய்வு செய்யாது விட்டுள்ள னர்?
5. ஆய்வில் மேலும் எத்தகைய முன் னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

இலக்கிய மீளாய்வை நியாயப்படுத்தலும் ஆய்வின் ஒரு முக்கியமான பரிமாணமாகின் றது. சில துறைகளிலே பெருந்தொகையான ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. வேறு சில துறைகளில் மிகக் குறைந்த ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டிருக்கும். பெருந்தொகை யான ஆய்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில் எந்த அடிப்படையிலே மீளாய்வுக்குரிய இலக்கியங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பதை நியாயப்படுத்தல் வேண்டும். "தெரிவின்வகை" *(Type of Selection)* அங்கே முக்கியத்துவம் பெறுகின்றது. தெரிவின் வகை தவிர்த்தலின் நியாயப்பாட்டை வெளிப்படுத்தும். தெரிவின் வகையானது. தருக்க வழிமுறை யோடு இணைந்திருத்தல் முக்கியமானது.

இலக்கிய மீளாய்வின் வினைத்திறன்பாடு பின்வரும் ஆய்வு நலன்களுக்கு இட்டுச் செல்கின்றது.

1. ஆய்வு தொடர்பான எண்ணக்கருக்களின் அறிகைப் புலத்துக்கு இட்டுச் செல்கின்றது.
2. ஆய்வு செய்பவரது "சமூக உளக் கோலத்துக்கு" வலிமை சேர்க்கின்றது.



3. அறிகை நுண் உபாயங்க ளுக்கு வலிமையும் வளமும் தருகின்றது.
4. புலமை நிறுத்தலுக்கு *(Defending)* வலிமை சேர்க்கின்றது.
5. திறனாய்வுக்கும் உற்றறிவுக் கும் இட்டுச் செல்கின்றது.
6. வாசிப்புவளம் எழுத்தாக்க வளமாக நிலை மாற்ற முறு கின்றது.
7. முறையியல் சார்ந்த இடர்ப்பா டுகளைத் தகர்த்து விடுகின் றது.
8. முன்னைய எழுத்தாக்கங்களை மீறிப்பாய வேண்டிய தேவையை அறிவிக்கின்றது.

இலக்கிய மீளாய்வைச் சமர்ப்பிக்கும் பொழுது ஒவ்வொரு பாடத் துறைகளுக்குமுரிய "*மொழியாடலை*"க் *(Language Game)* கருத்திலே கொள்ள வேண் டியுள்ளது. அதாவது ஒவ்வொரு பாடத்துக்குமுரிய கருத்து வினைப்பாடு *(Discourse)* அந்தத் துறைகளுக்குரிய தனித்துவமான மொழியாடலுடன் தொடர்புடையது.

இலக்கிய மீளாய்வில் மூல நூல்கள், மற்றும் மூலஆவணங்களின் நோக்கல் முக்கியமானது. மூல நூல்களை நோக்காது வழிநூல்களை மட்டும் நோக்குதல் ஆய்வின் தரத்தினைப் பின்னடையச் செய்துவிடும்.

வெவ்வேறு மொழியாடல்களுக்குரிய பொதுவான தளம் என்று ஒன்றில்லை என்ற கருத்து பின்னவீனத்துவத்திலே முன்வைக்கப்படுகின்றது. *(Glienn, w,2005:215)* பல்கலைக்கழகங்களிற் பல்வேறு கற்கை நெறிகளின் ஒன்றிணைப்பு வளர்ந்துவரும் நிலையில் "மொழியாடல்" என்பதன் மீதும் கவனம் செலுத்துதல் முக்கியத்துவம் பெறுகின்றது.

மேற்கூறிய பின்னத்துவக் கருத்தானது திறனாய்வுக்குரியது ஒன்றாயினும் அதனூடே வெளிக்கிளம்பும் அவதானிப்புக்களை நிராகரிக்க முடியாதுள்ளது.

இலக்கிய மீளாய்வு தொடர்பாக ஒரு கருத்து வடிவாக்கம் இந்த ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்விபரம் வருமாறு:

எண்ணளவு மாற்றம் பண்புநிலையில் மாற்றங்களைக் கொண்டுவரும் என்பது ஓர் இயங்கியல் விதி. அதாவது தொகையின் அதிகரிப்பு தரத்திலே தாக்கங்களை ஏற்படுத்த வல்லது. இதனை அடிப்படையாகவும், இதன் தொடர்ச்சியாகவும் புதிய கருத்துருவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலக்கிய மீளாய்வின் வழியாக எழும் பண்பு நிலையான செறிவும் முன்னேற்றமும் ஆய்வாளருக்குரிய அறிகைச் சட்டத்தில் *(Cognitive Frame)* தகர்ப்புக்குரிய வினாக்களை எழுப்பவல்லது. அத்தகைய வினாக்களின் எழுச்சி புத்தாக்க முயற்சிகளுக்கும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கும் இட்டுச்செல்லும். கற்கும் உள்ளத்தில் நிகழும் இந்தச் செயற்பாட்டுக்கு இக்கட்டுரை ஆசிரியர் "***அறிகைச் சட்ட மீளாக்கல்***" *(Cognitive Reframing)* என்று பெயரிட்டுள்ளார்.

ஆழ்ந்து அகன்ற வாசிப்பும் வினைத் திறன் கொண்ட இலக்கிய மீளாய்வும் அறிகை மீளாக்கலுக்கு இட்டுச் செல்லும். அதுவே புத்தாக்கங்களுக்குரிய நுழைவாயிலாகும். அறிவின் மேலெழுச்சி அறிவுப் பொருளாதாரத்தின் எதிர்பார்ப்புடன் இணைந்த தேவையாகின்றது.

REFERENCES

Anderson, J,(et.al) (1970) Thesis and Assignment Writing, Buckingham: Open University Press.

Bruse, R.S. (2000) Writing your Doctoral Dissertation, Brisbane.Wiley.

Gllen,W. (2005) Post Modernism, Chicago, MC Graw hill.

Johnson,S. (1977) Examining The Examiners, Studies in Higher Education, 22(3)

Leedy, P. (1989) Practical Research, New york: Macmillan.

Merrian,S.P. (1988) Case Study Research in Education, San Franciso CA:Jossey Bass.

Murray, R (2004) How to Write a Thesis Buckingham: Open Universoty Press.

Phlips and Pugh (2000) How to get a Ph.D.Buckingham: Open Universoty Press.



சங்க இலக்கிய வாசிப்பின் அரசியல்: சைவசமயம்

ஜ.சிவகுமார்

ஜ.சிவகுமார்

முனைவர்பட்ட
ஆய்வாளர்
தமிழ்
இலக்கியத் துறை
சென்னைப்
'பல்கலைக்கழகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்வேறு சமூக இயக்கங்களும் அவற்றின் அடையாள அரசியலும் தமிழ்ச் சமூகத்தில் தீவிரமாக வினைபுரிந்தன. இச்சமூக இயக்கத்தவர்கள் படைப் பிலக்கியத்தில் தங்களுடைய அடையாள அரசியலை விரிவாகப் பதிவு செய்தனர். அதேபோல் பழந்தமிழ் இலக்கியங்களையும் தங்களுடைய கருத்தியல் நிலைக்கேற்ப மறுவாசிப்பு செய்தனர். திருக்குறள், சிலப்பதிகாரம் மற்றும் சங்க நூல்கள் முதலானவை இவ்வாறு கருத்தியல் சார்ந்து வாசிக்கப்பட்டு விளக்கப்பட்டன. குறிப்பாக, தமிழின் தொன்மையானதும் பல்வகை நெறிகளைக் கொண்டதும் பரவலான பயிற்சியற்றதுமான சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டு பரவலாக்கப்பட்டபோது, அதனை இவ்வியக் கங்கள் தங்களுக்குரியனவாக அடையாளப்படுத்தின. இவர்கள் ஒரே பிரதியை வெவ்வேறு அடையாளங்களுடன் வாசித்தமை சுவாரசியமானது. குறிப்பாக சங்க இலக்கியத்தைப் பல்வேறு நிலைகளில் அரவணைத்தும் புறக்கணித்தும் வந்த சைவசமயம் பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் அவ்விலக்கியத்தை எதிர்கொண்ட முறைமை சுவாரசியமானது. அது குறித்து இக்கட்டுரை அமைகிறது.

காலந்தோறும் சங்க இலக்கிய வாசிப்பு

சங்க இலக்கியம் பாடப்பட்ட காலத்தின் கல்வெட்டுகளை ஆராயும்போது சமண, பௌத்த சமயங்களின் மேலாண்மை நிலவியதை அறியமுடியும் எனப் பேரா. சிவத்தம்பி குறிப்பிடுகிறார். ஆனால் சங்க இலக்கியத் தொகுப்பு மரபைப் பார்க்கும்போது (பாண்டிய, சேர மரபோடிணைந்த) வைதீக சமயத்தின் - அதிலும் சைவ சமயத்தின் - மேலாண்மையே தெரிகிறது. கடவுள் வாழ்த்து மற்றும் பாடல் வைப்புமுறைமைகளில்

சைவ சமயம் முதன்மைப் படுத்தப்பட்டதையும் அறியமுடிகிறது. இறையனார் களவியல் உரையில் சங்கம் மற்றும் சங்க இலக்கியங்கள் குறித்த கதை அல்லது தகவல்கள் விரிவாக இடம்பெற்றுள்ளன. பின்னர் சங்க இலக்கிய உரைகள், பன்னிரு திருமுறைத் தொகுப்பு, பரஞ்சோதி திருவிளையாடற் புராணம், நம்பி திருவிளையாடல், சீகாளத்தி புராணம், திருப்பரங்கிரிப் புராணம் முதலானவற்றிலும் சங்க நூலுக்கு, சங்கப் புலவர்க ளுக்குச் சைவச் சார்பு கற்பிக்கப்படுகிறது. ஆனால் சுவாமிநாத தேசிகர் தேவாரம், திருவாசகம் முதலான சைவ நூல்கள் இருக்கவும் அகம், புறம் முதலான புறச் சமய நூல்களைப் படிப்பதைக் கண்டிக்கிறார்.

சைவ சமய ஈடுபாடுடைய திருத்தணிகை விசாகப் பெருமாளைய ரும் ஆறுமுகநாவலரும் தங்களிடம் பத்துப் பாட்டுப் பிரதிகள் முழுமையாக இருந்தும் அவற்றிலிருந்து திருமுருகாற்றுப் படையை மட்டும் உருவிப் பதிப்பிக்கின்றனர். இவர்கள் நச்சினார்க்கினியர் உரையின் அடிப்படையில்தான் திருமுருகாற்றுப் படையைப் பதிப்பிக்கின்றனர். நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு முழுமைக்குமே உரையெழுதியவர். ஆனால் இவர்கள் பதிப்பித்தது திருமுருகாற்றுப்படை மட்டுமே.

மேலும் பத்துப்பாட்டு முழுமையும் பதிப்பிக்கப்பட்டபொழுது இவர்களுக்கு நெருக்கமாக இருந்தவர்களின் சுவடிகள் பன்படுத்தப்பட்டுள்ளன. நாவலர் தான் வெளியிட்ட பெரியபுராணம் வசனம் (1845 - 48) பின் அட்டையில் தந்துள்ள பிரசித்த பத்திரிகையில் இனித் தான் வெளியிடப் போகும் நூல்களின் பட்டியலைத் தருகிறார் (வீ.அரசு, 2009. பக். 170). அவற்றுள் திருமுருகாற்றுப் படை, அகம், புறம் உள்ளிட்ட சங்க நூல்களும் இடம் பெற்றுள்ளன. ஆனால் அவற்றுள் சைவ சமயம் சார்ந்த திருமுருகாற்றுப் படை தவிர்த்த பிற நூல்கள் வெளிவரவில்லை. சபாபதி நாவலர் எழுதிய திராவிடப் பிரகாசிகையில் சங்க நூல்களுக்கு முன்பு பன்னிரு திருமுறைகள் பற்றி விரிவாகப் பேசப்படுகின்றது. அவருடைய முறைவைப்பு மற்றும் மதிப்பீட்டில் சங்க நூல்களைவிட சைவ நூல்களுக்கே அவர் அதிக முதன்மையும் முக்கியத்துவமும் தருகிறார். இவ்வாறு 17,18,19ஆம் நூற்றாண்டுகளில் சங்க இலக்கியம் சைவ அதிகாரத்தால் புறக்கணிக்கப்பட்டது. பின்னர் சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்படும்போது மீண்டும் அவற்றுக்குச் சைவச் சார்பு அளிக்கப்படுகிறது.

> இந்தியா முழுவதும் உயர் சாதியினரும் பிராமணர்களும் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்து வந்த வேளையில் பார்ப்பனருக்கு எதிரானப் போக்கு வளர்ந்த தமிழகத்தில் அது சைவசமய எழுச்சியாகவும் திராவிட உணர்வாகவும் பரிணாமம் பெற்றது.

பத்துப்பாட்டுப் பதிப்புரையில் உ.வே.சா., ஹபாண்டி வள நாட்டில் மதுரைப்பதியில் அங்கையற் கணம்மை யோடு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளரருளிய சங்கப்பலகை யில் அக்கடவு ளோடு ஒப்ப வீற்றிருந்து தமிழாராய்ந்த மகிமை பொருந்திய நக்கீரனார் முதலிய நல்லிசைப் புலவர்களால் அருளிச் செய்யப் பட்டு அச்சான்றோர்களாலேயே தொகுக்கப் பட்டவை. (இரா.ஜானகி, 2010, பக். 79-80) எனப் பத்துப்பாட்டினை அறிமுகம் செய்கிறார். அதேபோல குறுந்தொகை முகவுரையில் "தமிழ்த் தெய்வமாகிய சேவற் கொடியுயர்த்த குமாரக் கடவுளையே காப்புடைச் செய்யுளாகக் கொண்ட இந்நூலிடைத் தமிழ்மொழியின் நயங்கள் ஆங்காங்கு தேனூறலாக அமைந்து கிடக்கின்றன" (இரா.ஜானகி, 2010, பக். 122) என முத்துரத்ந முதலியார் குறுந்தொகைச் சுவைக்கும் குமரக் கடவுளுக்கும் முடிச்சு போடுகிறார்.

தமிழகத்தில் சைவ இயக்கம்

இந்தியா முழுவதும் உயர் சாதியினரும் பிராமணர்களும் இந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்து வந்த வேளையில் பார்ப்பனருக்கு எதிரானப் போக்கு வளர்ந்த தமிழகத்தில் அது சைவசமய எழுச்சியாகவும் திராவிட உணர்வாகவும் பரிணாமம் பெற்றது. ஆல்காட்டும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் திருநெல்வேலியில் பார்ப்பனர்களிடம் பெற்ற ஆதரவு, சைவ வேளாளர்களை எதிரிடையாகச் செயல்பட வைத்தது. 1883இல் தூத்துக்குடிச் சைவ சபையும் 1886இல் பாளையங்கோட்டைச் சைவ சபையும் தொடங்கப் பெற்றன. பிரம்மசமாஜியாக இருந்த மனோன்மணியம் சுந்தரம்பிள்ளைதான் திருவனந்தபுரம்

சைவசபையைத் தொடங்கக் காரணமான வர்களில் ஒருவரானார். அவர்தான் பின்னர் "ஆரியம் போல் உலக வழக்கழிந் தொழினும் உன் சீரிளமை திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" எனத் தமிழை வாழ்த்தினார். சைவத்தையும் திராவிடத்தையும் இணைத்துப் பார்த்தார். சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் கூடிய சைவ சித்தாந்த மாநாட்டுப் பந்தலிலே தான் "ஜஸ்டிஸ்" கட்சித் தோற்றத்தின் அவசியத் தைப் பற்றி தியாகராயச் செட்டியார் பேசினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மொத்தத்துவ இந்தியத் தன்மைக்குள்ளி ருந்து தென்னிந்தியாவிற்கும் திராவிட மொழிகளுக்குமான தனித்தன்மையையும் அடையாளத்தையும் கண்டறிந்து சொன்னவர் கள் ஐரோப்பியர்கள்தான். பின்னர் இவ்வடை யாள அரசியலை முன்னெடுத்தவர்கள் சைவர்களே. இவ்வடையாள அரசியல் சைவ சமயம் இந்து மதம், திராவிடர் ஆரியர், தமிழ் சமஸ்கிருதம், பிராமணரல்லாதோர் பிராமணர் முதலான முரண்பாடுகளின் அடிப்ப டையில் முன்னெடுக்கப்பட்டது. சைவ சமயம் இந்து மதத்திலிருந்து வேறானதாகவும் தமிழருக்கான பழம்பெருமை வாய்ந்த சமயமாகவும் அடையாளப்படுத்தப்பட்டது.

பதிப்புக்குப் பின் சங்க இலக்கிய வாசிப்பு

தற்போது இந்தியா என்றழைக்கப்படும் நிலப்பகுதி முழுவதும் பிரித்தானிய ஆளுகையின்கீழ் வந்ததும் இந்தியா முழுவதற் குமான பண்பாட்டு, வரலாற்று ஒருமை குறித்த உரையாடல் தொடங்கியது. இதில் வடஇந்தி யாவும் சமஸ்கிருதமும் முதன்மைப்படுத்தப் பட்டன. புறக்கணிக்கப்பட்ட தென்னிந்தியா விற்கு - குறிப்பாக தென்னிந்திய மொழிகள் பேசும் பிராமணரல்லாதாருக்கு - கால்டுவெல் முதலான அறிஞர்களின் திராவிட மொழிக் குடும்பம் குறித்த பதிவுகளும் தென்னிந் தியப் பண்பாட்டு ஒருமையும் உற்சாகம் அளித்தன. ஐரோப்பிய அறிஞர்களின் மொழி, பண்பாடு குறித்து வெளிவந்த ஆய்வுகளை அடுத்து பெ.சுந்தரம்பிள்ளை, மு.சு.பூரணலிங்கம்பிள்ளை, பரிதிமாற்கலைஞர் ஆகிய அறிஞர் கள் தமிழ் இலக்கியம், வரலாறு, தத்துவம் முதலான துறைகளில் ஈடுபட்டனர். "சமஸ்கிருதத்தையும் சமஸ்கிருத வரலாற்றையும் படித்து இந்து நாகரிகத்தை அறிந்துகொள்ள முடியாது. "முறையான ஆராய்ச்சி செய்யும் சரித்திர ஆசிரியர், கிருஷ்ணா, காவேரி, வைகை முதலிய ஆறுகள் பாய் கின்ற நாடுகளை அறிந்துகொண்ட பின் கங்கா நதியை அடுத்த நாடு களைப் பற்றி ஆராய வேண்டும்" என்று பேராசிரி யர் சுந்தரம்பிள்ளை அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிட்டி ருக்கின்றனர். (ந.சி.கந்தையா, 2002, பக்.111).

இவ்வாறு திராவிட, தென்னிந்திய வரலாற்றை வலியுறுத்திய காலகட் டத்தில்தான் சமஸ்கிருத மரபோடு மொழி மற்றும் கருத்தியல் தொடர் பற்றதும் பழமையானதுமான பழந்தமிழ் இலக்கியங்கள் அச்சில் வந்தன. இந்திய மரபு என்பதே சமஸ்கிருத மரபு என அடையாளப் படுத்தப்பட்டிருந்த சூழலில் அதற்கு மாற்றான - இணையான - தொன்மை யான திராவிட மரபு இயங்கியத னைச் சங்க இலக்கியங்கள் அடை யாளப்படுத்தின.

சங்க இலக்கியங்கள் முழுமை யும் பதிப்பிக்கபடாத சூழலியே அத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழர் வரலாற்றை உருவாக்கியவர் ஈழத்து அறிஞர் வி. கனகசபைப்பிள்ளை. 1904இல் வெளிவந்த "ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்" என்னும் அவரது ஆங்கில நூல் தமிழரின் பெருமையை, தொன் மையை மேலைநாட்டாருக்கும் வெளிப்படுத்தும் விதத்தில் ஆங்கி லத்தில் வெளிவந்தது. அந்நூலில் "கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் எதுவு மில்லை என்பதே இன்று மேலை அறிஞரின் பொதுக்கருத்தாக இருந்து வருகிறது. ஆனால், உண்மை இதற்கு நேர்மாறானது. தமிழிலக் கியத்தின் தலைசிறந்த, தற்பண்பு வாய்ந்த பகுதி முழுவதும் கி.பி. 9ஆம் நூற் றாண்டுக்கு முன் இயற்றப்பட்ட பகுதியே எனலாம். அதற்குப் பின் வந்தவை மிகப்பெரும்பாலும் சமஸ்கிருத ஏடுகளைப் பின்பற்றி

தற்போது இந்தியா என்றழைக்கப்படும் நிலப்பகுதி முழுவதும் பிரித்தானிய ஆளுகையின்கீழ் வந்ததும் இந்தியா முழுவதற்குமான பண்பாட்டு, வரலாற்று ஒருமை குறித்த உரையாடல் தொடங்கியது. இதில் வடஇந்தியாவும் சமஸ்கிருதமும் முதன்மைப்படுத்தப்பட்டன.

இயற்றப்பட்ட கீழ்த்தரமான போலிப் பகர்ப்புகளாகவோ, மொழிபெயர்ப்புக ளாகவோ மட்டுமே கொள்ளத்தக்கவை யாயுள்ளன. (வி. கனகசபை, 2001. பக். 9) எனப் பழந்தமிழ் இலக்கியங்களின் மூலம் சமஸ்கிருத மரபுக்கு மாற்றான தமிழ் மரபை வி.கனகசபைப்பிள்ளை அடை யாளப்படுத்துகிறார்.

மேலும் அந்நூலில் சங்க இலக்கி யங்கள் புறச்சமயமாகக் கருதிப் புறக் கணிக்கப்பட்டதை, பண்டைத் தமிழிலக் கியம் அகல்பெரும் பரப்புடை யது. அதேசமயம் அது முன்னால் வேறு எவர் காலடியும் படாத ஒரு புதுநிலப் பரப்புப் போன்ற இயல்புடையதாகவும் இலங்கு கின்றது. ஆயினும் இப்பழம் பேரிலக்கிய ஏடுகள் உண்மையிலேயே வெளியீட் டொளி கண்டுள்ளன. இதுகாறும் அவை கையெழுத்துப் படிவங்களாகப் பனை யோலைகளில் எழுதப்பட்டு, அவற்றைக் கைக்கொண்டிருந்த புலவர் பெருமக் களால் வேறு எவர் கண்ணிலும் படாமல் பூட்டி வைக்கப்பட்டேயிருந்து வந்தன.

அவற்றின் மொழிநடை பழமை படிந்ததாயேயிருந்தது. அவற்றின் சமயச் சார்போ அயல் சமயச் சார்பாய் அமைந்திருந்தது. இவ்விரண்டு பண்புகள் காரணமாகவும் அவை மாணவருலகின் மதிப்பார்வர்த்தைப் பெற முடியாது போயின. உண்மையில் தமிழர் கல்விக் குழாங்கள் *(Tamil Schools)* பலவற்றில் அவை படிக்கத்தகாதவை என்றே ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தன. பள்ளி மாணவர்களுக்கு அவற்றைக் கற்பிப்ப தென்பது மன்னிக்கமுடியாத ஒரு பழி கேடாகும் என்றுதான் சைவ வைணவப் புலவர்கள் கருதி வந்தார்கள் (மேலது, பக்.8) எனக் குறிப்பிடுகிறார். இதே விடயத்தை வேறொரு தொனியிலும் முறையிலும் ம.பாலசுப்பிரமணிய முதலியார் பதிவு செய்கிறார்.

"நமது சமாஜம் சங்க இலக்கி யத்தை வெளியிடுதல் பொருத்தமாகுமா என்று சிலர் ஐயுறுதல் கூடும். 'சங்க நூல்களெல்லாம் புத்த சமண சமயச் சார்புடையன. அவற்றைப் பயிலுதல் கூடாது' என்று எனது இளமைப் பருவத்திற் சில சிவனடியார்கள் கூறியதுண்டு. இக்காலத்தின் நல்வினைப் பயனாக இக் கொள்கை மறைந்துவிட்டது. திருத் தொண்டத் தொகையுள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறும் பொய்யடிமையில்லாத புலவர் யாவர் என்பதை விளக்கவந்த நம்பியாண்டார் நம்பிகள் தமது வழிநூலில்,

'தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர்முதல் நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயுந்திரு வாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே'

என்று கூறுவது நமக்குறுதி தருகின்றது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் ஆற்றிலிட்ட ஏட்டெழுதிய பதினோராவது பாடலிலுள்ள 'மதுரைத் தொகையாக்கி னான்' என்ற சொற்றொடருக்குச் சேக்கிழார் சுவாமிகள் கூடல் மாநகரத்துச் சங்கம் வைத்தவன் (சிவபெருமான்) என்று தம் பெரியபுராணத்துள் மிக அழகாக உரை கூறியது நோக்கத்தக்கது. இப்பதிப்பில் 1434-வது பாடலாகவும் கலித்தொகையுள் 150-வது பாடலாகவுமுள்ள 'அய்ந்திகழ் நறுங்கொன்றை யலங்கலந் தெரியலான்' எனத் தொடங்கும் பாடலைப் படிக்குந் தோறும் சிவமணம் கமழ்கின்றது. 'அரன் சேவடிக்கே பொருள் அமைத்தின்பக் கவிபல பாடும் புலவர்களே' என்று நம்பி யாண்டார் நம்பிகள் மேலே கூறியதற்கு இப்பாடல் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது" பன்னிரு திருமுறைகளுள் காலத்தால் மிக முற்பட்டது திருமுருகாற்றுப்படை என்ற பதினொறாம் திருமுறைப் பகுதி. இது சங்க இலக்கியத்துள்ளதெனில் சங்க இலக்கியம் சைவத்துக்கு புறகென்று எவர் கூற இயலும்? முக்கண் போன்று விளங்கும் சைவப் புராணங்களுள் ஒன்றாகிய திரு விளையாடற் புராணத்துள் சிவபெருமான் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவித் தாமும் ஒரு புலவராக வீற்றி ருந்தது முதலிய செய்திகள் கூறப்படுகின்றன. மாதவச் சிவஞானயோகிகள் தமது உரை நூல்க ளுள் புறநானூறு முதலிய பல சங்க

சங்கம் எனும் அமைப்பின் இருப்பு குறித்த ஆய்வுகளில் தேசிய இயக்கத்தினருக்கும் சைவக் கருத்தியல்வாதிகளுக்கும் இடையே பெரும் முரண்பாடு ஏற்பட்டது. அடிப்படையில் இவ்விருவரும் சமய நம்பிக்கையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவதைச் சைவச் சான்றோர் நன்கறிவர். இவைகளை யெல்லாம் நன்கு கருதியே நமது சமாஜம் இந்நூலை வெளியிடத் துணிந்தது.'' (இரா.ஜானகி, 2010, பக். 172-173).

ந.மு.வேங்கடசாமி நாட்டார் 1919இல் வெளியிட்ட 'நக்கீரர்' நூலில் கூறிய செய்தி களின் செறிவுபடுத்தப்பட்ட வாக்கியங்களே இவை. இப்பதிப்புரை அதுவரை சங்க இலக்கி யங்களைப் புறக்கணித்து வந்த சைவ சமயம் சங்க இலக்கியங்களுடனான தனது பாரம்பரிய உறவைத்தேடிக் கண்டடைந்த விதத்தை உணர்த்துகிறது. இப்பதிப்பில்தான் முதன்முதல் பாட்டும் தொகையுமான இத்தொகுப்பிற்கு சங்க இலக்கியம்' எனும் பெயர் வருகிறது. தமிழுக் குச் சைவ முதன்மை தருவதற்காக எட்டாம் நூற்றாண்டில் இறையனார் களவியலுரை குறிப்பிடும் 'சங்கம்' குறித்த பதிவுகளை இருபதாம் நூற்றாண்டில் இப்பதிப்புரை மீள்கட்டுமானம் செய்கிறது. அதேபோல் சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்தது என நிரூபித்தால் மட்டுமே சைவத்துக்கும் தமிழுக்குமான தொன்மையான உறவை/உறவுத் தொடர்ச்சி யைக் கூறிக்கொள்ள முடியும். எனவேதான் சைவர்கள் சங்கம் எனும் ஓர் அமைப்பு இருந்தமை பற்றியும் அச்சொல்லின் தொன்மை குறித்ததுமான ஆய்வுகளில் ஈடுபட்டனர். இங்கு ஆய்வு என்பது தரவுகளினூடாக முடிவை அடைவது என்பதைக் காட்டிலும் தன்னுடைய கருதுகோளுக்கு அல்லது அவதானத்திற்குச் சார்பாக தரவுகளைத் தர்க்கமுறையில் கோத்துத் தருவது எனும் புரிதல் அவசியம்.

சங்கம் எனும் அமைப்பின் இருப்பு குறித்த ஆய்வுகளில் தேசிய இயக்கத்தினருக்கும் சைவக் கருத்தியல்வாதிகளுக்கும் இடையே பெரும் முரண்பாடு ஏற்பட்டது. அடிப்படையில் இவ்விருவரும் சமய நம்பிக்கையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'தமிழர் வரலாறு' எனும் நூலை எழுதிய பி.டி.சீனிவாசையங்கார் சங்கச் செய்யுள் என்ற தொடரையே பொரு ளற்ற தொடர் என்று கூறுகிறார். சங்கச் செய்யுளை இவர் சான்றோர் செய்யுள் எனக் குறிப்பிடலாம் என்கிறார். அவர் 'இதில் (இறையனார் களவியலுரையில்) கூறப்பட்டிருக் கும் சில செய்திகள் மேலெழுந்த வாரியாக நோக்கினும் நம்புதற்கு இயலாதன. சில நகைப் பிற்கு உரியன. மூன்று சங்கங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஆண்டுகள், அச்சங் களுக்குக்குக் கூறிய கால நீட்சியால் மட்டுமல்லாமல், அவ் வெண்களுக்கி டையே காணப்படும் ஒரே மாதிரித் தன்மையாலும் நம்பக் கூடியனவாக இல்லை. ஒவ்வொரு சங்கத்திற்கும் கூறிய ஆயுட்காலம் 37-இன் பெருக்குத் தொகையாக அமைகிறது. அவற்றின் மொத்த ஆயுட்காலம் முறையே 37120, 4440, 37100, 3700:3750, 1850. இது அவ்வெண்கள் எத்தனை செயற்கை யானவை என்பதைக் காட்டுகிறது. மற்றுமொரு காரணத்தாலும், இவ் வெண்கள் நம்பத்தக்கனவாக இல்லை. அப்பழங் காலத்தில், உண்மையில் கூறப் போனால் எட்டாம் நூற்றாண்டு வரை, கிறித்துவ ஆண்டு போலும், ஆண்டு கணிப்பு முறை தமிழ் நாட்டில் கண்டுபிடிக்க வில்லை அல்லது பின் பற்றப்பட வில்லை. ஆகவே ஆண்டுக ளைப் பெருமெண் அளவில் எண்ணிக் காணும் வழிமுறை இடம்பெறவில்லை'' (பி.டி. சீனிவாசை யங்கார், 1989,ப.341) என்று குறிப்பிடுகிறார். மேலும், 'முதல் இரு சங்கங்களைச் சேர்ந்த புலவர்கள் பாடிய பாக்களையும் இத்தொகை நூல்கள் கொண்டிருக்கும்போது, அத்தொகை நூல்களைக் கண்முன் வைத்துக் கொண்டே, இவையெல்லாம் கடைச் சங்கப் புலவர்களால் பாடப் பட்டன எனக் கூறுவாரேயானால், அவ்வகப் பொருள் உரையாசிரியர், அறவே நம்பிக்கைக்கு உரியரல்லாத வர் என்ற முடிவிற்கு நாம் வரவேண் டிய வராகிறோம்' (பி.டி. சீனிவாசை யங்கார், 1989,ப.344) என அகப் பொருள் உரை நம்பிக்கைக்கு உரியதல்ல என்ற முடிவுக்கு வருகிறார். இதேபோல் சங்கம் என்பது வரலாற்றில் வலுகட்டாய மான திணிப்பு எனக் கருதும் கே.என். சிவராஜபிள்ளை, 'சங்க இலக்கியம் என்று சொல் லப்படும் எந்நூலிலும் புலவர்கள் கூடி தமிழராய்ந்த சங்கம் இருந்ததாக அகச் சான்றுகள் கிடையாது.

தமிழுக்குச் சைவ முதன்மை தருவதற்காக எட்டாம் நூற்றாண்டில் இறையனார் களவியலுரை குறிப்பிடும் "சங்கம்" குறித்த பதிவுகளை இருபதாம் நூற்றாண்டில் இப்பதிப்புரை மீள்கட்டுமானம் செய்கிறது.

எந்நேரத் தும் போர் மேகம் சூழ்ந்தி ருந்த ஒரு காலகட்டத்தில், அரசியல் பின்னல் வளைகளால் சமூகம் அமைதி யற்றுக் கிடந்த காலகட்டத்தில் இத்தகைய அமைப்பு ரீதியான சங்கம் என்பது சாத்தியமில்லாததாகும். மேலும் புலவ னின் நோக்கம், தன் பாடலைப் பாடி பரிசல் பெற்று பசி நீக்க வேண்டும் என்பதுதானே தவிர, அவையில் வைத்து ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதல்ல' (மேற்கோள், கோ.கேசவன், 1979,ப.99) என்று எழுது வதுடன் சங்கம் என்ற அமைப்பே இல்லை என்று மறுக்கிறார். சங்கம் என்ற அமைப்புப் பற்றிய செய்திகளில் மிகுந்த கற்பனை கலப்புள்ளதாக வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

தேசிய இயக்கத்தின் இத்தகைய கருத்தாடலுக்கு நேர் எதிரான கருத்தாட லைச் சைவ இயக்கத்தினர் முன்வைத் தனர். சங்க இலக்கியங்கள் எதிலும் 'சங்கம்' எனும் சொல் பயின்று வர வில்லை என்றும் சங்கம் எனும் சொல்லே வட சொல்தான் என்றும் கூறுபவர்களை நோக்கி ந.மு.வேங்கடசாமி நாட்டார் பின்வருமாறு குறிப்பிடுகிறார். இனி, 'சங்கம்' என்னுஞ் சொல் வடசொல் லாகலானும், இச்சொல் நல்லிசைப் புலவர் செய்யுட்களிற் காணப்படாமை யானும், தமிழ்ச் சங்கமென்பது பிற்காலத்தோற் படைத்துக் கொண்ட தாகும் எனின், நன்று சொன்னாய்! தமிழகத்துக் குடியேறிய பிறமொழியா ளர்கள் தம் பெற்றோர்களை அம்மை, அப்பன் என்னும் தமிழ்ச் சொற்க ளால் வழங்கிவரின், முற்காலத்து அவர்கட் குப் பெற்றோர் இருந்திலர் என்று கூறலமையுமோ? சங்கம் என்னும் சொல்லால் வழங்குவது பற்றி, வேறு பல சான்றுக ளால் நிறுவப்படும் தமிழ்ப் புலவர் கூட்டத்தினை இன்றெனக் கூறுவது எத்துணை பேதமையாகும்! சங்கம் என்னும் பொருளுள்ள தமிழ்ச்சொல் இல்லாமற் போகவில்லை. 'அவை' என்னுஞ் சொல் அத்து முதலிய சாரியை பெற்றும், பெறாதும் தொல் காப்பியத்தும், தொகை நூல்களிலும் பலவிடத்துப் பயின்று வருவதுண்டாகலின், அதுவே முன்னர் வழங்கியிருத்தல் வேண்டும். மற்றும் மன்றம், பொதியில், பட்டி, தொகை என்னும் சொற்கள் சான் றோர் செய்யுளில் பயின்று வருகின்றன. இச்சொற்களும் சங்கம் என்னும் பொருளுடையனவாகும். (ந.மு.வேங்கட சாமி நாட்டார், 2006,22).

சைவ சமய அறிஞரான ந.சி.கந்தையா அவர்கள் சங்க நூல்களில் உள்ள சங்கம் குறித்த அகச் சான்றுகளைக் குறிப்பிடுவ தோடு சங்க வரலாற்றைப் பிற உலக வரலாறுகளோடு ஒப்பிட்டு விளக்குகிறார்.

"உலக மொருநிறையாத் தானோர் நிறையாப புலவர் புலக்கோலாற்றூக்க - வுலகனைத்தும் தான் வாடவாடாத தன்மைத்தே தென்னவ னன்மாடக் கூடல் நகர்'

என்னும் பரிபாடல் மதுரையில் தமிழ்க் கழகம் இருந்ததென்பதை வலியுறுத்தும், 'தமிழ் வையை' 'தமிழ் மதுரை' 'தமிழ்க் கூடல்' எனப் பண்டை நூல்களிற் கிளக்கப் படுதலே மதுரையிற் றமிழ் வளர்க்கப்பட்ட தென்பதற்குப் போதியச் சான்றாகும். இச் சங்க வரலாற்றினை ஒருவாறு திரட்டி இறையனார் அகப்பொருள் உரைகாரர் கூறியிருக்கின்றனர். இறையனாரகப் பொருள் உரை கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இவ்வுரையிற் காணப்படும் சில விபரங்கள் சந்தேகத்துக்கு இடமாயிருப்பினும் சங்க வரலாறு பொய்யா காது. பழைய காலத்தவர் காலக்கணக்கு களைக் கவனியாது வரலாறுகளை எழுதியி ருத்தல் உலக வரலாற்றைக் கற்போருக்கு நன்கு விளங்கும். அக்காலத்து நூல்களை யும், பிற ஆதாரங்களையும் ஆராய்ந்து விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டை வரைந்த மொசே என்பார், சிலர் ஆயிரத் துக்கு மேற்பட்ட ஆண்டுகள் உயிர் வாழ்ந் தனர் என எழுதியிருத்தல் கவனிக்கத்தக்கது.

எகிப்திய சரித்திரத்தில் ஓர் அரசன் 30,000 ஆண்டு உயிர் வாழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது. தசரதன், இராவணன், சூரன் ஆகியோர் வரலாறுகளாலும் பண்டை ஆசிரியர்களின் மனப்பான்மை விளங்கும். சங்கம் என்பது கற்பனைக் கதை எனக் கூறுவாரும் உளர். இங்ஙனம்

சங்கம் எனும் அமைப்பின் இருப்பு குறித்த ஆய்வுகளில் தேசிய இயக்கத்தினருக்கும் சைவக் கருத்தியல்வாதிகளுக்கும் இடையே பெரும் முரண்பாடு ஏற்பட்டது. அடிப்படையில் இவ்விருவரும் சமய நம்பிக்கையுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.



கூறுவோர் வட மொழிப் பற்றுடைய ஒரு சிலராவர் அவ்வகை ஆசிரியர் வடமொழிக் குரிய சிறப்பைச் சரித்திரத்துக்கு மாறுபட எவ்வாறு கூறினும் ஆட்சேப மின்றி ஏற்றுக்கொள்வர். தமிழுக் குரிய பழமையைத் தக்க நியாயங்க ளோடு காட்டினும் மறுப்பர். இவ்வகைப் பண்புகளைப் பி.தி.சீனிவாச ஐயங்கார் ஆங்கிலத்தில் எழுதிய தமிழர் வரலாறு என்னும் நூலில் நிரம்ப காணலாம். (ந.சி. கந்தையா, 2002, பக். 79-80) என்று ந.சி.கந்தையா பி.டி.சீனிவாசையங்காரை நேரடியாகவே மறுக்கிறார்.

மேலும் சிவபெருமானும் முருகனும் சங்கத்தில் இருந்து தமிழாராய்ந்தனர் எனும் இறையனார் களவியலின் கூற்று மறுமலர்ச்சிக் காலத்தில் நம்புவதற்குக் கடினமாக இருந்தது. அதற்கும் இவர் பின்வருமாறு அமைதி கூறுகிறார். "சங்கத்தை ஆரம்பித்த காலத்துப் பாண்டிய அரசன் புலவருடையவும், தனதும் வழிபடு கடவுளர்களாகிய முருகக்கடவுள், சிவபெருமான் ஆகியோரின் சிலைகளைச் சங்க மண்டபத்தில் நிறுவி, அக்கடவுளரே கழகத்துத் தலைவரெனக் கூறினன். இன்றும் பிள்ளையார் பிடித்து வைத்து ஒவ்வொரு நற்கருமங்களையும் தொடங்குவது தமிழர்களின் வழக்க மாயிருக்கின்றது. இவ் உபசார வழக்கே திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், குன்ற மெறிந்த குமரவேள் முதலிய தெய்வங்கள் தலைச்சங்கமிருந்து நூலாய்ந்தனர் என்று பிற்காலத்தாரால் கூறப்பட லாற்று. (ந.சி. கந்தையா, 2002, பக்.79) எனக் கூறுவதன் மூலம் சங்கம் குறித்து நம்பகத்தன்மையை உருவாக்கு வதோடு பாண்டிய மன்னனையும் புலவர்களையும் சைவர்களாக அடையாளபடுத்து கிறார்.

இதேபோல் மற்றொரு சைவ அறிஞரான கா.சு.பிள்ளை அவர்கள் "தமிழ்நாட்டிலே முச்சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் தழைத் தோங்கின என்பதை நம்பாதிருப் பதற்கு இடமில்லை. அவற்றை நிறுவி நடத்திய அரசரையும், புலவரையும் பற்றிக் கூறப்படும் செய்திகளில் ஒரு சிறிது பொருத்தமின்மை காணப்படு தல் ஒன்றே பற்றி அவைகள் உண்மையில் நிலவியிருந்ததில்லை என்று கூறுதல் அடாது" (கா.சுப்பிரமணியபிள்ளை, 2007. பக்.17) எனக் குறிப்பிடுகிறார். மேலும் அவ்வாறு பொருத்தமின்மையாக உணரப்படும் பகுதிகளுக்கு தர்க்கபூர் வமான சமாதானமும் சொல்கிறார். "அவருள் (சங்கமிருந்தாருள்) விரிசடைக் கடவுளும் குமரவேலும் சேர்க்கப்பட்டிருப்பதை நோக்கு மிடத்து அக்கடவுளர் மக்களுடன் ஒருங்கிருந்து தமிழாராய்ந்திருத்தல் கூடுமோ என்கிற ஐயம் நிகழற் பாலதே. புராணத்தின்படி இவர்களே,

பிள்ளையார் பிடித்து வைத்து ஒவ்வொரு நற்கருமங்களையும் தொடங்குவது தமிழர்களின் வழக்கமாயிருக்கின்றது. இவ் உபசார வழக்கே திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், குன்றமெறிந்த குமரவேள் முதலிய தெய்வங்கள் தலைச்சங்கமிருந்து நூலாய்ந்தனர் என்று பிற்காலத்தாரால் கூறப்படலாற்று.

சூரன் முதலியோர் திகழ்ந்த காலத்திலே, முறையே முப்புரமெரித்தும் குன்றமெறிந்தும் மன்னுயிர்களை உய்யக் கொண்டன ராவர். அக்கடவுளர் தம்பால் அன்பு வைத்த அடியார்கட்குத் தோன்றியருளி மெய்யறிவு, கலைஞானம் முதலியவற்றை நல்கியிருத்தல் கூடுமேயன்றி, அவர்களே மக்களைப் போலச் சங்கமிருந்து தமிழாராய்ந்தாரென்று கொள்ளுதல் பொருந்துவதன்று" இன்னொரு முறியாக வும் இதனைக் கொள்வதுண்டு. ஈண்டு குறித்த இருகடவுளரும் அக்கடவுளரது திருவாற்றல் நன்கமையப் பெற்ற சைவமரபைச் சார்ந்த பெருமக்களென்று கொள் வாருமுளர்" (கா.சுப்பிரமணியபிள்ளை, 2007, பக்.20) எனச் சமாதானம் கூறுகிறார் கா.சு. பிள்ளை. அதேபோல் மார்க்கண்டேயர், கௌதமர், முடிநாகராயர் முதலான புலவர்களின் பெயர்கள் அவ்வவ் குடியில் வந்தார்க்கு அமைந்திருத்தல் இயல்பே என்றும் குறிக்கிறார். இவ்வாறு இயற்கை மீறிய தகவல்களுக்கு தன் வாதத் திறமையால் நம்பகத்தன்மை ஏற்படுத்துகிறார்.

சைவ எழுச்சியில் ஆர்வம் காட்டியவரான அ.சிதம்பரனார் உணர்ச்சிபூர்வமான முறையில் சங்கத்தின் இருப்பு குறித்து பதிவு செய்கிறார். "கடைச் சங்கப் புலவரான ஔவையாரும் தலையானங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் கடைச் சங்கத்தைப் பற்றிப் பாடியிருப்பரேல், தமிழ்ச் சங்கம் நடைபெற்றதைப் பற்றி யாரேனும் ஐயம் கொள்ளுவார்களா?... கடைச்சங்கம் அழிவெய்திய பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்த மாணிக்கவாசகர் (கி.பி. 250-282), கடைச்சங்கத்தைப் பற்றிப் பேசுவாரானால், அவர் சொல்லிலும் ஐயம் உண்டோ? அவர் பாண்டியன் முதல்மந்திரியாய் இருந்து, கடைச்சங்கம் நடைபெற்று வந்ததற்கு ஆதாரங்களை அரசாங்க நூல் நிலையத்தில் இருந்து பார்த்தவர் அன்றோ? அதனால் அல்லவோ "கூடலில் ஆய்ந்த ஒண் தீந்தமிழின், துறைவாய் நுழைந்தனையோ?" என்று ஆனந்தக் கூத்தனைக் கேட்கிறார். ஆதலின் தமிழ்ச் சங்கங்கள் தமிழ்நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன என்பதற்கு ஐயம் கிடையாது. (அ.சிதம்பரனார், 1948.பக்.5) எனும் இவரது வாதங்கள் சமயவுணர்ச்சி அடிப்படையிலானவை. சைவ ஆய்வாளர்கள் மாணிக்கவாசகரின் காலமாக குறிப்பிட்ட காலத்தின் அடிப்படையில் இருந்து இவர் சங்கத்தின் இருப்பை உறுதி செய்ய முயல்கிறார்.

> சைவ இயக்கச் சார்புடையவரான ம.ரா.போ. குருசாமி இறையனார் களவியல் உரை கூறுகின்ற செய்திகளில் ஏறுமாறுகளும் புனைந்துரைகளும் மிகைப்படக் கூறலும் மிகுந்துள்ளன என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றே.

சைவ இயக்கச் சார்புடையவரான ம.ரா.போ. குருசாமி "இறையனார் களவியல் உரை கூறுகின்ற செய்திகளில் ஏறுமாறுகளும் புனைந்துரைகளும் மிகைப்படக் கூறலும் மிகுந்துள்ளன என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றே. ஆயினும் களவியலுரைக் கூற்றுக்கள் அடிப்படையே இல்லாத பொய்கள் என்று கூறிவிடுதல் முற்றிலும் பொருந்தாத ஒன்றாகும். பழைய நூற்சான்றுகளையும், இடைக்காலத்தெழுந்த இலக்கியச் சான்றுகளையும் ஒருங்குவைத்து நோக்குவோமாயின், சங்கம் இருந்ததற்கான சான்றுகள் பல கிடைக்கின்றன. சங்கம் எனும் அமைப்பு இருந்ததில்லை எனக் கருதியிருப்பின் ஓரிடத்தேனும் அச்செய்தி காணப்படுதல் வேண்டும். சங்கம் இருந்தமைக்குரிய சான்றுகள் தவிர, அதன் உண்மையை மறுக்கும் சான்று ஒன்று கூடக் காணக்கிடைக்கவில்லை. எனவே, இறையனார் களவியலுரை கூறுகின்ற அமைப்பிலே சங்கங்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், சங்கம் என்னும் அமைப்பு கட்டாயம் இருந்திருக்க வேண்டும்" (ம.ரோ.போ. குருசாமி, 1967. பக். 11) என மிக நேர்த்தியான முறையில் சங்கத்தின் இருப்பை உறுதி செய்ய முயல்கிறார்.

சைவம் சார்ந்து தீவிரமாக செயல்பட்ட ந.மு.வேங்கடசாமி நாட்டார் "புராணக் கதையானது இற்றை நாள் ஆராய்ச்சியாளர்க்குப் புதுமையுடைத்தாய்த் தோன்றும். எனினும், உலகத்து வழங்கும் கதைகள் ஒவ்வொன்றும் யாதானும் ஓர் உண்மையை அடிப்படையாகக் கொண்டே யெழுந்தனவாம் என்பது ஆராய்ச்சியாற் பெறப்படுதலின் இதனின்று அறியலாகும் உண்மையினை அறிந்துகொள்ளுதல் கடனாம்.

பன்னூறாண்டுகளின் முன்னர் மதுரையில் தமிழ்ச்சங்கம் நடைபெற்றது எவரானும் மறுக்க வொண் ணாத்தோ உண்மையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இக்கதையெ ழுந்தது. வடமொழியிற் புராணமெழுதினோர், அக்காலத்துத் தமிழ்ச்சங்க நிகழ்ச்சி எவரானும் ஐயுறவின்றித் துணியப்பட்டிருந்தமையின், அதனை முதலாகக் கொண்டு, செவி வழக்காக வந்த சில செய்திகளோடு தாம் புகுத்தக் கருதியவற்றை உருவகப்படுத்திக் கூறியுள்ளா ரென்பது தேற்றம்" (ந.மு.வேங்கடசாமி நாட்டார், 2006. 22). நவீன ஆய்வுப் புலத்தின் தர்க்க பூர்வமான அழுத்ததை உணர்ந்த சைவ ஆய்வாளர்கள் சைவத்தின் பிடியையும் விட்டுவிடவில்லை என்பதனை மேற்கண்ட கூற்றுக்கள் உணர்த்தும்.

சங்க இலக்கியம் - காலம்

"பண்டைத் தமிழ் இலக்கிய ஏடுகளை யான் கூர்ந்து ஆராய்ந்தபோது, எனக்கு ஏற்பட்ட கருத்து ஒன்றே ஒன்றுதான். அவற்றுள் ஒரு பெரும்பகுதி இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு முன் இயற்றப்பட்டது என்பதில் சிறிதும் ஐயம் ஏற்பட வழி இல்லை. ஏனெனில் அவை இயற்றப்பட்ட காலத்தில் தமிழர் அராபியரு டனும், உரோமருடனும் இவர்களை ஒத்த மற்ற அயல் நாட்டவருடன் வாணிகத் தொடர்பு கொண்டு, இவை காரணமாக உயர் நாகரிகமும் பெருஞ்செல்வ வளமும் உடையவர்களாய் இருந்தார்கள்" (வி.கனகசபைப் பிள்ளை, 2001. பக். 9-10) என அயல்நாட்டு வணிக உறவு களையும் அயல்நாட்டார் குறிப்புகளையும் கொண்டு சங்க இலக்கியக் கால கட்டம் இரண்டாயிரம் ஆண்டு பழமையுடையது என வி.கனகசபைப்பிள்ளை நிறுவுகிறார்.

சங்க வரலாற்றை உறுதிபடுத்த முயலும் ந.சி.கந்தையாபிள்ளையின் கூற்று கவனிக் கத்தக்கது. 'சங்கம் 197 பாண்டியர்களால் ஆதரிக்கப்பட்டதென முன்கூறினோம். ஒரு அரசனின் ஆட்சிக் காலம் இருபது எனக் கொண்டால், 197 அரசரின் காலமும் 3940 ஆண்டுகளாகும். தென்மதுரையில் நடந்த சங்கம் 89 பாண்டியரால் ஆதரிக்கப்பட்டது. 89 பாண்டியரின் காலமும் 1780 ஆண்டு களாகும். நாம் 3940 ஆண்டிலிருந்து 1780 ஆண்டுகளைக் கழித்தால் மீந்திருப்பன 2160 ஆண்டுகளாகும். இக்காலத்தில் தென் மதுரையைக் கடல் கொண்டிருக்கலாம். இக் கணக்கு கி.மு.2015இல் பெரிய வெள்ளப் பெருக்கு உண்டானது எனக் கூறும் யூதரின் காலக்கணக் கொடு ஏறக்குறைய ஒத்திருக்கின்றது. ஆகவே கி.மு.3940இல் தலைச் சங்கம் தொடங்கிற்று எனக் கூறலாம். (ந.சி.கந்தையா பிள்ளை, 1947.பக்.15) என்று குறிப்பிடுகிறார். இவர் யூதரின் காலக்கணக்கையும் கடல்கோள் நிகழவையும் துணையாகக் கொண்டு சங்க இலக்கிய காலகட்டத்தினைக் கி.மு. நான்காம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல் கிறார்.

மேலும் அவர், "புராணங்களில் உண்மை அணுவளவும் பொய் மலையளவும் காணப்படுவதை நோக்கிய சில ஆராய்ச்சியாளர் தமிழ்ப் புலவர் கூறியுள்ள வரலாற் றுண்மைகளிலும் ஐயம் கூறுகின்ற னர். புராணங்களிலுள்ள கற்பனைக் கதைகளுக்குப் பொறுப்பு பிராமண ரேயன்றி தமிழ்ப் புலவர்க ளல்லர் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால், இம்மயக்கம் எழ வாய்ப் பில்லை. தமிழ்ப் புலவர்கள் உள்ள வற்றை உள்ளவாறே கூறும் இயல் பின ரென்பது சங்கச் செய்யுட்களால் தெளிவுறும். 'இராமர் 11 ஆயிரம் ஆண்டு அரசு புரிந்தார். தசரதன் அறுபதினாயிரம் ஆண்டு வாழ்ந்தான்' என இயற்கைக்கு மாறான எதையும் இறையனார் களவியலுரை கூறாமை கருத்திற் பதிக்கத்தக்கது.

கொதோதசு ஆசிரியர் ஓர் அரச னுக்குள்ள சராசரி காலம் 33 ஆண்டு கள் எனக் கணக்கு செய்துள்ளார். மூன்று சங்கங்களும் நடை பெற்ற காலத்தில் இருந்த அரசரின் எண் 197. இவ்வரசர் ஒவ்வொரு வருக்கும் முப்பது ஆண்டுகள் ஈந்தால் 5970 ஆண்டுகளாகும். இவ்வாண் டுகள் சந்திர அளவின்படி கணக்குச் செய்து சூரிய ஆண்டாக்கின் 5470 வரையி லாகும். இறையனார் களவியலுரை யில் மூன்று சங்கங்களும் 9990 ஆண்டுகள் நடைபெற்றனவாகக் கூறப்பட்டுள்ளது. பழைய காலக்

பண்டைத் தமிழ் இலக்கிய ஏடுகளை யான் கூர்ந்து ஆராய்ந்த போது, எனக்கு ஏற்பட்ட கருத்து ஒன்றே ஒன்றுதான். அவற்றுள் ஒரு பெரும்பகுதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது என்பதில் சிறிதும் ஐயம் ஏற்பட வழி இல்லை.

கணக்குகளில் இவ்வாறு சில பிழைகள் நேர்தல் இயல்பு' (ந.சி.கந்தையா பிள்ளை, 1959. பக்.275) எனத் தாம் சார்ந்த கருத்தியலுக்குத் தேவையான சங்க வரலாற்றை எழுதிச் செல்வதை உணர முடிகிறது. அதேபோல் புராணங் கள் இயற்றிய பிராமணர்களைக் கற்பனைக் கதைகளைப் புனைபவர்க ளாகவும் தமிழ்ப் புலவர்களை - அதாவது பிராமணரல்லா தாரை (சைவ வேளாள ராகவும் இருக்கலாம்) - உள்ளதை உள்ளவாறே கூறும் இயல் பினராகவும் இவர் அடையாளப்படுத் துவது குறிப்பிடத்தக்கது.

கா.சு.பிள்ளை அவர்களோ பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் சங்க கால கட்டத்தினை கி.மு. ஐந்தாம் நூற்றாண் டுக்குக் கொண்டு செல்கிறார். இவ்வாறு இவர் சங்க காலத்தினை மிகவும் பின் னுக்குத் தள்ளுவதில் உள்ள காரணத் தினை உணர முடிகிறது. இவர் தொல்காப்பியர் சமயத்தினைக் குறிப் பிடும்போது, 'ஆசிரியர் (தொல்காப்பியர்) காலம் வான்மீகி இராமாயணம் எழுந்த கி.மு. ஏழாவது நூற்றாண்டிற்கு முற்பட்ட தாகலானும், சமணம், புத்தம் முதலியன அக்காலத்திற் குப்பின் தோன்றியமை யாலும் ஆசிரியர் அம்மதங்களுள் எதனையாவது சேர்ந்தவர் என்று கோடல் தவறாகும். அகத்தியரது சமயம் தமிழரது சமயமாகிய சிவநெறியாத லின் தொல்காப்பியனார் சமயமும் தமிழரது நெறியே என்று கொள்ளுதல் பொருத்த முடையதே' (கா.சுப்பிரமணிய பிள்ளை, 2007.பக்.43) எனத் தொல்காப்பி யக் காலத்தைப் பின்னுக்குத் தள்ளு வதன் மூலம் அவைதீக சமயங்களின் உரிமை கோரலில் இருந்து அப்பனு வலை விடுவித்து சைவ சமயத்துக்கே உரித்தான பிரதியாக அதனைக் கொண் டாடுகிறார். இந்த முனைப்பும் கூட இவர் கள் பழந்தமிழ் இலக்கிய, இலக்கணங் களின் காலத்தைப் பின்னுக்குத் தள்ளு வதற்கு ஒரு காரண மாகலாம் என அவதானிக்க முடிகிறது.

சைவ இயக்கத்தினர் சங்கத்தின் இருப்பை உறுதி செய்தனர். தேசிய இயக்கத்தினர் அதன் இருப்பைக் கேள்விக் குட்படுத்தினர். இந்நிலையில் மொத்தத்துவ இந்தியத் தேசியத்துக்குள் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தியவர் தெ.பொ.மீ. இவர் கண்பார்வை இழ்ந்த நிலையில் பன்னிரு திருமுறைகளின் பாடல்களை வரிசையாக சொல்லிப் பொழுது கழித்த சைவராகவும் இருக்கிறார். இவர் சங்கத்தின் இருப்பு குறித்த உரையாடலில் தனது கருத்துக்களைப் பதிவு செய்வதைவிட மற்றவர்களின் மேற்கோள்களையே பெரும்பாலும் பயன்படுத்துகிறார். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வச்சிரநந்தி ஏற்படுத்திய திரமிள அல்லது திராவிட சங்கத்தினை இவர் 'சைன திராவிட சங்கம்' என சைன ஒட்டைச் சேர்த்தே அடையாளப் படுத்துவது கவனிக்கத்தக்கது. இவர் இந்தியாவில் உள்ள பல்வேறு மொழி களும் தனித்தனியாகவும் ஒருங்கிணைந்தும் வளர்ச்சியடைய தனித்தனி இலக்கியச் சங்கங்கள் தேவை என்கிறார். அச்சங்கங்கள் 'பழைய தமிழ்ச் சங்கம் இருந்த நன்மதிப் போடும், ஆற்றலோடும், பெருமையோடும் இன்று விளங்கவேண்டும். உரிமை பெறு வதற்கு முன்னர்ப் பலர் இத்தகைய முயற்சிகள் எடுத்த துண்டு. அறிஞர் கசின்சு (டாக்டர் கஸின்ஸ்) இத்துறையில் பெரிதும் முயன்றார். இஃது ஒரு பழங்கனவு. ஆனால், இத்தகைய சங்கம், அந்நாளைய மன்னர்பிரான் பொறியொடு வெளிவருவது அடிமையின் அறிகுறியாகுமே அன்றி உரிமைப் பண்பாட்டினை வளர்க்காது என ஒரு சிலர் அஞ்சினர். மக்களுடைய தலை வர்களில் பெரும்பான்மையோர் விடுதலைப் போராட்டத்தில் குதித்திருந்தமையால் இதனைப் பற்றி எண்ண அவர்களுக்கு நேரமில்லாது போயிற்று. உரிமை பெற்ற பின்னர் ஓவியம், இசை, முதலியவற்றிற்கு ஒரு குழு அமைத்தது போல, இலக்கியத் திற்கும் ஒரு நிலையம் அமைக்க ஏற்பாடுகள் எழுந்தன. சென்ற ஆண்டு டில்லியில் பல நாட்டுப் பல மொழியினரும் கூடினர், பேசினர், திரும்பினர். முடிவு வெளிவரக் கணோம். வரவுசெலவுத் திட்டத்தில் அரசியலார் இதற்கெனப் பணம் ஒதுக்கி வைக்கக் காணோம்.' (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம்

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வச்சிரநந்தி ஏற்படுத்திய திரமிள அல்லது திராவிட சங்கத்தினை இவர் "சைன திராவிட சங்கம் என சைன ஒட்டைச் சேர்த்தே அடையாளப்படுத்துவது கவனிக்கத்தக்கது.

(தொ,ஆ.), 2007: பக். 27) எனப் பழந்தமிழ்ச் சங்கங்களை இந்தியத் தேசியப் பின்புலத்தில் நினைவு கூறுகிறார். மேற்கூறிய மேற்கோளின் வழி நனவிலி மனதில் இவர் சங்கத்தின் இருப்பை ஏற்றுக்கொண்டார் என்பதனை உணர முடிகிறது.

மேலும் 'இந்தி மொழி பரவுவதே போதும் என அங்குள்ளார் நினைக்கலாம். வடநாட்டு மொழிகள் வடமொழியாம் சமஸ்கிருதத்தின் திரிபுகள். தென்நாட்டு மொழிகளில் பல வடமொழியால் வாழ்ந்தாலும் அவற்றின் அடிப்படை வடமொழி யன்று. பச்சைத் தமிழும், அச்சுத் தெலுங்கும், பச்சை மலையாளமும் பழங் கன்னடமும் பசுந்துளுவும், வடமொழியை வெறுக்காவிடினும், வடமொழியின் துணை யின்றி வாழ முடியும். இவை எல்லாம் ஒரு தாய்மொழியின் மக்கள். 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும் அழியாதுன் சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே' என்று அறிஞர் சுந்தரம்பிள்ளை தமிழைப் போற்ற வில்லையா? (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக். 27-28) என்று குறிப்பிடும் தெ.பொ.மீ.யிடம் இந்தியத் தேசியத் திற்கும் சைவத் திராவிடத்துக்குமான ஒரு சமரச நிலையை அல்லது தடுமாற்ற நிலையை உணர முடிகிறது. அவர் தென்னாட்டு மொழிகள் வடமொழியை வெறுக்காவிடினும் வடமொழி யின் துணையின்றி வாழமுடியும் என்று குறிப்பிடுவதுடன், சைவத் திராவிடப் பின்புலத் தில் இருந்து மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய தமிழ்த் தாய் வாழ்த்தில் வரும் 'ஆரியம் போல் உலக வழக்கழிந்தொழினும்' எனும் சொற் களைக் கவனமாக நீக்கிவிட்டே மேற்கோள் காட்டுகிறார்.

நக்கீரரையும் அவர் இயற்றிய திருமுரு காற்றுப்படையையும் சைவ சமயம் சார்ந்த தாகவே சைவர்கள் அடையாளப்படுத்தினர். ஆனால் தெ.பொ.மீ., சங்க இலக்கியங்கள் பாடியுள்ள பல திறத்தினரைப் பற்றிக் குறிப்பிடும்போது 'உலோச்சனார் போன்ற சமணர்கள், இளம்போதியார் போன்ற பௌத்தர்கள், நக்கீரர் போன்ற இந் துக்கள்' (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக்.377-378) என்று குறிப்பிடுகின்றார். இந்த 'இந்து' எனும்



சொல்லையே சென்ற நூற்றாண்டு சைவர்களுள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இங்கு நினைக்கத்தக்கது.

சைவம் - தமிழர் சமயம்

பத்தொன்பது இருபதாம் நூற் றாண்டுகளில் தமிழகத்தின் சைவ சமயம் இந்து மதத்திற்கு எதிராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டமை ஏற்கெனவே குறிப்பிடத் தக்கது. இதன் உடன் விளைவாக, சைவப் பற்றுடைய ஆராய்ச்சியாளர் கள் சைவ சமயத்தைத் தமிழர்களின் தொன்மையான சமயமாக அடை யாளப்படுத்துவதற்கான தரவுகளைத் தேடினர், சிந்துவெளி ஆதாரங்கள் மற்றும் சங்க இலக்கியங்களின் மூலம் சைவ சமயத்தை அடையாளப் படுத்துவது என்பது தமிழின் தொன் மையை சைவத்தின் தொன்மையோடு இணைத்து பேசுவதற்கு வாய்ப் பளித்தது.

ம.ரா.போ.குருசாமி அவர்கள் சங்ககாலச் சமுதாயத்தில் சைவசமயம் சிறப்பிடம் பெற்று விளங்கியதாகக்

தென்நாட்டு மொழிகளில் பல வடமொழியால் வாழ்ந்தாலும் அவற்றின் அடிப்படை வடமொழியன்று. பச்சைத் தமிழும், அச்சுத் தெலுங்கும், பச்சை மலையாளமும் பழங் கன்னடமும் பசுந்துளுவும், வடமொழியை வெறுக்காவிடினும், வடமொழியின் துணையின்றி வாழ முடியும்.

குறிப்பிடுகிறார். (சங்ககால) வாழ்க்கையில் தெய்வ வழிபாட்டிற்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் பாடுவது அகப்பொருளாயினும் இறைவனைப் பற்றிய குறிப்புகள், தெய்வம் தொடர்பான புராணக் கதைகள் முதலியன இடம்பெறுவதைக் காண்கின்றோம். பாடுவது வீரத்தைப் பாராட்டியதானாலும், 'முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்' எனவும், நெல்லிக்கனி ஈந்ததைப் போற்றுவதாயினும் 'நீலமணி மிடற்றொருவன் போல மண்ணுக' எனவும் தெய்வ இணைப்புடன் புலவர்கள் பாடுகின்றனர்.

மேலும் இல்லில் தெய்வங் கொண்டாடுதல் (ப.பா.159-160), ஆலமரத்தில் தெய்வம் உறைவதாக நம்புதல் (புறம். 199) போன்ற குறிப்புகள் சங்ககாலச் சமுதாயத்தில் சமய ஊற்றம் பெற்றிருந்த நிலையினைத் தெளிவுறுத்த வல்லன. (ம.ரோ.போ. குருசாமி, 1967, பக். 76) என்று அவர் குறிப்பிடுகிறார். தமிழின் தொன்மையோடு சைவத்தின் தொன்மையை (மட்டும்) இணைக்கும் தொனியோடு அவர் எழுதுகிறார். இங்கு ஆரிய சைவத்திலிருந்து தமிழ் சைவத்தைத் தனித்து அடையாளப்படுத்த வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருக்கிறது. எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை ஆரியர்களின் கோட்பாட்டின்படி சிவன் அழிக்கும் கடவுளாகச் சித்தரிக்கப்பட் டுள்ளார். ஆனால் சைவ சித்தாந்தம் ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், வீடுபேறு என்னும் ஐந்தொழில் புரிபவனாகச் சிவனைக் காட்டுகிறது. *(M.S.P., 1985. Pg.254)* எனக் கூறுவது இங்கு நினைக்கத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான சைவப் புலமையாளர் மறை மலையடிகள், சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நாத்திகப் பிரச்சாரம் மேற்கொள் ளப்பட்டபோது தமிழகத்தின் அனைத்து சைவ அறிஞர்களும் பங்கேற்கும் நிகழ்வாக திருப்பாதிரிப் புலியூர் சைவ மாநாடு நடைபெற்றது. அதன் தலைவர் மறைமலையடிகள். இவர் சைவம் என்பது தமிழர்களின் மிகத் தொன்மையான சமயம். ஆரியர்களின் வருகைக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டில் சைவம் தழைத்து வந்தது என்பதனைச் சிந்துவெளிச் சான்றுகள், சங்க இலக்கியங்களைக் கொண்டு நிறுவுகிறார்.

இனிப், பழையநாட் புலவர்களும், அவர்தம் ஆணைவழி நின்று தமது வாழ்க்கையை நன்கினிது நடாத்திய தமிழ் மக்களும் ஒரேயொரு முழுமுதற் கடவுளாகிய முக்கணானைத் தொழுது, தாமெல்லாரும் அம் முதற்பெருங் கடவுளாகிய ஒரேயொரு தந்தைக்கு உரிமைப் புதல்வர்களாம் உண்மை கண்டு, தமக்குள் ஏதும் வேற்றுமை இலராய் இன்மையிலேயே பேரின்ப வாழ்க்கையில் வாழ்ந்து வந்தனர். பண்டைத் தமிழாசிரியருந் தமிழ்மக்களும், ஒரே முழுமுதற் கடவுள் உலகமே யுருவாய் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றொளிகளையும் மூன்று திருக்கண்களாகக் கொண்டு, எல்லா வுயிர்க்கும் புறக்கண் அகக்கண்களை விளக்கி, அவர் தம் மெதிரே நின்று பேரருள் வழங்கும் பான்மையினைத் தெளியக்கண்டு அவனொருவனையே முக்கணானென்னும் பெயரால் வணங்கி வந்தமை

'பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே'
(புறம், 6)

என்னும் மிகப்பழைய திருப்பாட்டில் அதனாசிரியர் காரிகிழார், 'பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி'க்கு அறிவுரை தெருட்டு மாற்றானும், ஆரியராற் போற்றப்பட்ட 'இந்திரன்', 'வருணன்', 'அக்நி', 'மாத்ரிஸ்வரன்', 'பிரமன்', 'விஷ்ணு' முதலியோரெல்லாம் உண்மையிற் கடவுளரல்லராய்ப் பிறந்திறக்கும் ஆருயிர் வகையிற் சேர்ந்தவராகலின் அவரெல்லாந் தம்மை யொத்த மாற்றாரால் தமக்குவரும் ஏதங்கள் களையமாட்டாராய் இளைத்து வருந்தி எல்லாம் வல்ல இறைவனான முக்கணானை வேண்டிக் குறையிரப்ப, இறைவனே அவர்தம் அல்லல் களைந்து அவர்க் கருள் செய்தமை,

நக்கீரரையும் அவர் இயற்றிய திருமுருகாற்றுப்படையையும் சைவ சமயம் சார்ந்ததாகவே சைவர்கள் அடையாளப்படுத்தினர். ஆனால் தெ.பொ.மீ., சங்க இலக்கியங்கள் பாடியுள்ள பல திறத்தினரைப் பற்றிக் குறிப்பிடும்போது "உலோச்சனார் போன்ற சமணர்கள், இளம்போதியார் போன்ற பௌத்தர்கள், நக்கீரர் போன்ற இந்துக்கள்" என்று குறிப்பிடுகின்றார்.

'ஓங்கு மலைப் பெருவிற் பாம்புநாண் கொளீ,
ஒருகணைக் கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல்'

(புறம், 56)

என்னும் பழைய பாட்டில் மதுரை மருதனிளநாகனார் குறிப்பிடுமாற்றானும் (மறைமலையடிகள், 2000, பக். 109-110) விளங்கிக்கொள்ளலாம் எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் ஆரியர்களின் நுழைவுக் குப் பிறகும் தமிழர்களின் முக்கண்ணனே தமிழர்கள் மத்தியில் செல்வாக்கோடு விளங்கியமையைப் பின்வருமாறு விளக்குகிறார். காலங்கடோறும் வடவாசிரியர் செந்தமிழ் நாடு புகுந்து குடியேற அவர் வணங்கிய தெய்வங்களும், இத் தமிழகத்தார் வணங்கிய வேறு சில தெய்வங்களும் இங்குள்ளாராற் றொழப்படலானபோதும், அவ்வெல் லாத் தெய்வங்களுக்கும் மேலாக முக்கட் பெருமானே முதல்வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்தமை

'ஏற்றுவல நுயரிய எரிமரு
ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற்
றோனுங்.
கடல்வளர் புரிவளை புரைய மேனி
அடல்வேந் நஞ்சிற் பனைக்கொடி
யோனும்,
மண்ணுறு திருமணி புரைய மேனி
விண்ணுயிர் புட்கொடி விறல்வெய்
யோனும்,
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய்
யோனுமென ஞாலங் காக்குங்
கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வர்'

என மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் அருளிச் செய்திருக்குமாற்றானும் நன்கறிகின்றன மல்லமோ? எனக் குறிப்பிடுவதோடு இனி, அம் முழுமுதற் கடவுளாகிய முக்கணானுக்கு மக்களெல்லாரும் உரிமைப் புதல்வர்க்ளாகலின் அவர்களெல்லாரும் ஒரே குலத்தினராய் ஒருவரோடொருவர் வேற்றுமை யேதுமின்றி அளவளாவி வாழ்தற்குரியரென்னும் உண்மையினையும் நம் பண்டைத் தமிழாசிரியர் கண்டறிந்தமை,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
...
பெரியோரை வியத்தலும் இலமே.
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே'

(புறம், 192)

என்னும் ஆசிரியர் கணியன் பூங்குன்றனா ரருளிய திருப்பாட்டால் நன்கு விளங்கிக்கிடத்தல் காண்மின்கள்! (மறைமலையடிகள், 2000. பக். 110). என யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் சாங்கியத் தத்துவத்தினைத் தமிழ்ச் சைவத் தத்துவமாக விவரிக்கிறார்.

சிவன்-பெயர்

சங்க காலத்தில் சைவ சமயத்தின் கூறுகள் தெளிவாகக் காணப்படினும் 'சிவன்' என்னும்



பெயர் எங்கும் குறிக்கப்படவில்லை. முக்கட் செல்வன், மூவெயில் எரித்தவன், சடையன், மணிமிடற்றான் முதலான பெயர்களே காணப்படுகின்றன. இதற்குச் சைவப் புலமையாளர்கள் பல்வேறு வகையாக விளக்கம் தருகின்றனர். ஈழத்து சைவப் புலமையாளரான ந.சி.கந்தையாபிள்ளை அவர்கள், சங்க நூல்களில் சிவனென்னும் பெயர் காணப்படாமையால் சிவவழிபாடு பிற்பட்டதெனச் சிலர் கருதினர்.

பண்டை நாளில் கடவுளின் பெயரை வெளிப்படச் சொல்லுதலும் எழுதுதலும் வழக்கில்லை. இம்மரபு பற்றியே கடவுளின் பெயர்கள் மூலமந்திர மென இரகசியமாக வைத்துப் போற்றப்படுகின்றன. பாலஸ்தீன நாட்டில் யேகோவின் பெயரை வெளிப்படச் சொல்பவர்களுக்கு மரணதண்டனை போன்ற தண்டனைகள் இருந்து வந்தன. யேகோவா என்னும் பெயருக்குப் பதில் வேறு பெயர் எழுதக் கையாளப்பட்டது. பெரியவர்களைப் பெயர் சொல்லி அழையாமையாகிய வழக்கு இன்றும் நமது நாட்டில் உண்டு. (ந.சி. கந்தையா, 2002, பக். 70) எனப் பிற நாட்டார் வழக்குகளையும் நாட்டார் நம்பிக்கைகளையும் ஒப்பிட்டு சிவன் எனும் பெயர் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படாமைக்கு ந.சி.கந்தையா பிள்ளை சமாதானம் கூறுகிறார்.

தெ.பொ.மீ அவர்களோ, சங்க இலக்கியங்களிலும் சிவன் என்ற பெயர் காணக் கிடைக்கவில்லை. அருகர் முதலியோரும் தத்தம் வீட்டு நிலையைச் சிவகதி என்று வழங்கியமையால் பொதுச்சொல்லாகப் போய்விட்டது போலும்! (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக். 629). என சிவன் எனும் பெயரை அனைத்து சமயத்தினருக்கும் உரியதாகக் கூறி சைவ சமயத்தை உயர்த்துகிறார்.

மறைமலையடிகளோ, ஆரியர் வருவதற்கு முன்னமே பஞ்சாப் மாகாணத்திற் சிறந் துயிர்வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்களின் அழிந்துபட்ட நகரங்களாகிய 'அரப்பா' 'மொகஞ்சதாரோ' என்பவைகளை அகழ்ந் தெடுத்த ஆங்கில ஆசிரியர்கள் (ஜான் மார்ஹெல்), அகழ்ந்தெடுத்த அரும்பொட்களுட் சிவபிரான்றிருவுருக்களுஞ் சிவலிங்கத் திருவுருக்களும் மிகுதியாயிருத்தலைக் குறிப்பிட்டுச் சிவபிரானை வழிபடுஞ் சைவசமயமானது பண்டைத் தமிழ் மக்கட்கே யுரியதாதலுடன், அதுவே உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களினும் மிக்க பழமையுடையதாகவுங் காணப்படுகின்றது என இவ்வரும்பேருண்மையினை ஒளியாமல் திறந்து சொல்லியிருக்கின்றனர். ஆதலாற், சிவன் என்னும் பெயர் இவ்விந்திய நாட்டின் வடமேற்கேயிருந்த பண்டைத் தமிழ் மக்களால் ஐயாயிர ஆண்டுகட்கு முன்னமே ஆக்கப்பட்டு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளுக்குரிய சிறப்புப் பெயராக வழங்கப்பட்டபான்மை தெளியற்பாற்று. (மறைமலையடிகள், 2002, பக். 146) என சிவன் என்னும் பெயர் வட இந்தியாவில் வாழ்ந்த தமிழர்களால் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்.

மேலும், தொல்காப்பியத்திற்கு அடுத்த படியிற் பழமையானதுங், குமரிநாட்டில் ஓடிய ப..றுளியாறு கடல்வாய்ப்படு முன் இயற்றப்பட்டதுமான

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅது துருகெழு குமரியின் றெற்கும்'

என்னுங் காரிகிழாரது புறப்பாட்டிற்

'பணியிய ரத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே'

எனச் சிவபெருமான் முக்கட்செல்வர் என்று நுவலப்படுகின்றனன். இச்செய்யுள் ஐயாயிர ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொன்றாகளின் இதன்கண் நுவலப்பட்ட முக்கண்ணான் என்னுஞ்சொல் பண்டைத் தமிழ் மக்களால் முழுமுதற் கடவுளுக்குச் சிறப்புப் பெயராக வைத்து வழங்கப்பட்டமை நன்கு தெளியப்படும். இச்செய்யுள் இயற்றப்பட்ட காலத்தில் தமிழ் மக்களும் அவர் வழங்கிய தமிழ்மொழியும் வடக்கே பனிமலையாகிய இமயும் வரையிற் பரவியிருந்தமை 'வடாது பனிபடு நெடுவரை

சங்க காலத்தில் சைவ சமயத்தின் கூறுகள் தெளிவாகக் காணப்படினும் "சிவன்" என்னும் பெயர் எங்கும் குறிக்கப்படவில்லை. முக்கட் செல்வன், மூவெயில் எரித்தவன், சடையன், மணிமிடற்றான் முதலான பெயர்களே காணப்படுகின்றன.

வடக்கும்' என்னும் இதன் முதலடியாற் புலனாகின்றது (மறைமலையடிகள், 2002. பக். 149) எனக் கூறுகிறார். ஆரியர் வருகைக்கு முன்பிருந்தே தமிழர்கள் இந்தியா முழுவதும் வாழ்ந்திருந்தனர். சிந்துவெளி நாகரிகமும் தமிழர்களுடையதே. அத்தமிழர்கள் முழுமுதற் கடவுளுக்கு வழங்கிய 'சிவன்' என்னும் பெயரே பின்னாளில் தென்னிந்தியத் தமிழர்களால் வழங்கப்பட்டது எனக் குறிப்பிடுவதன் மூலம் சிவன் எனும் பெயர் ஆரியர்களுடையதல்ல என்பதையும் இந்தியா முழுக்க தமிழர்களே வாழ்ந்திருந்தனர் என்பதையும் சொல்லாமல் சொல்கிறார்.

மேலும் வட இந்தியாவில் வழங்கப்பட்ட சிவனும் தென்னிந்தியாவில் வழங்கப்பட்ட முக்கண்ணனும் ஒருவனே என்பதை வேத்தின் துணை கொண்டு பின்வருமாறு நிறுவுகிறார். வடநாட்டிலிருந்த பண்டைத் தமிழர் 'உருத்திரன்' 'சிவன்' என்னும் பெயர்களாற் குறித்த கடவுளும், தென்னாட்டிலிருந்த பழந்தமிழாசிரியர் 'முக்கண்ணான்', 'சடையன்', 'மணிமிடற்றான்' என்னும் பெயர்களாற் குறித்த கடவுளும் ஒன்றே என்பதற்குச் சான்று என்னை யெனிற், காட்டுதும். மூவெயில் எரித்த அருட்செயல் முக்கண்ணான் செய்த தொன்றாகக் கலித்தொகை கூறுமாறு போலவே, உருத்திரன் மேலனவான இருக்கு வேதப் பதிகங்களுங் கூறாநிற்கின்றன (மறைமலையடிகள், 2002. பக். 150) என வட இந்தியாவின் பழமையான் படைப்பான வேதத்தையும் தமிழின் தொன்மையான இலக்கியமான சங்கப் பாடல்களையும் ஒப்பிட்டு கூறுகிறார்.

சைவத்திற்கே ஆதரவாக செயல்படும் மறைமலையடிகள் தமிழர் மதங்களாக சைவம் வைணவம் ஆகியவற்றினைக் குறிப்பிடுகிறார். அதேசமயம் உமையம்மை, திருமால், முருகன், விநாயகர் முதலான தெய்வங்கள் தனிப்பெருங் கடவுளான சிவபெருமானின் உட்கூறுகளே என வலியுறுத்துகிறார். மேலும் ஆரிய சமயம், சிற்றுயிர் வழிபாடு (நாட்டார் தெய்வங்கள்), பௌத்தம், சமணம், கிறித்து, இஸ்லாம், நாத்திகம் முதலான சமயக் கொள்கையை மறுப்பதோடு அவை தமிழர் சமயம் அல்ல வென்றும் விவரிக்கிறார்.

இவ்வாறு ஒருபுறம் சைவத்தைத் தமிழருக்கான பழம்பெரும் சமயமாக அடையாளப் படுத்திய சூழலில் அதற்கு எதிராக இந்து மதம் சார்ந்து தமிழர் சமயத்தை விளக்கினர் இந்தியத் தேசியவாதிகள். இந்தியத் தேசியச் சார்புடைய தெ.பொ.மீ. அவர்களோ வேதத்தினையும் சங்க நூல்களையும் ஒப்பிட்டுக் கூறுகிறார். உருத்திரனைக் காட்டில் திரிவோனாகக் கண்டது வேதம். சங்க நூல்களில் சிவபெருமான் காட்டில் வளரும் கொன்றையே சூடி விளங்குவதனைக் கூறினோம். காட்டில் ஆடும் ஆடலையும் காடமர்ந் தாடிய ஆடலன் எனச் சிவ னோடு ஒன்று சேர்த்துப் புகழ்வதனையும் அங்குக் காண்கின்றோம்.

புராணக் கதைகளும் சங்க நூல்களில் காணப்பெறாமல் இல்லை. உபநிடதங்கள் 'உமா சகாயம்' என்று ஆண்டவன் பெருமையைக் கூறுவதோடு, 'நீலகண்டம்' என்ற கருத்தினையும் வற்புறுத்துகிறது. இதனையும் சங்கப் புலவர்கள் மறப்பதில்லை. 'மணிமிடற்றண்ணல்' என்று வாயாறப் புகழ்கின்றனர். இவ்வளவும் கூறியமையால் சிந்துநதிக் கரையில் வளர்ந்த சைவம் குமரிக் கரை வரை பரவியதொன்றே ஆகையால், சங்க நூல்களிலும் அந்தச் சிறப்போடேயே தோன்றுவதனைக் காணலாம்.

மக்களது அடிப்படைக் கொள்கையாக அவர்கள் பண்பாட்டில் ஊன்றிவிட்டமையால் அப்போதப் போது வேத முதலானவற்றிலும் புகுந்து வளர்ந்தது இந்தச் சைவம் (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக். 631-632) எனக் குறிப்பிடுவதன் மூலம் இந்திய நிலவியல் தன்மை மற்றும் ஆரிய, திராவிடப் பின்புலத்தில் இந்தியப் பண்பாட்டு ஒற்றுமையை நிறுவுகிறார்.

மேலும் இவர் சங்க நூல்கள் குறித்து எழுதும்போது சமய ரீதியிலான விளக்கங்களையும் தருகிறார். அதியமானை அவ்வை பாராட்டும் 'நீலமணிமிடற்றான்' என்னும்

தமிழர்கள் முழுமுதற் கடவுளுக்கு வழங்கிய "சிவன்" என்னும் பெயரே பின்னாளில்தென்னிந்தியத் தமிழர்களால் வழங்கப்பட்டது எனக் குறிப்பிடுவதன் மூலம் சிவன் எனும் பெயர் ஆரியர்களுடையதல்ல என்பதையும் இந்தியா முழுக்க தமிழர்களே வாழ்ந்திருந்தனர் என்பதையும் சொல்லாமல் சொல்கிறார்.

சொல்லைத் தெ.பொ.மீ. பின்வருமாறு விளக்குகிறார். தான் சாவத் துணிந்து, சாவினைத் தன் அகத்தடக்கி, அவள் வாழ நெல்லிக்கனி தருகின்றான் (அதியமான்). இதனை அறியாது, தந்த கனியைச் சுவைத்த அவ்வை, பின் உண்மை அறிந்து வருந்துகிறாள். அவளுக்குச் சிவபெருமான் நினைவு வருகிறது. அவனும் இத்தகையவனே. கடல் கடைந்த தம் முயற்சியில் ஆல கால நஞ்சு கண்டு, தேவர்கள் நடுங்கி அழுது ஆண்டவனை அடைய, அவர்க ளைக் காக்க அந்த நஞ்சின் பயனைத் தான் நுகர அதனை வாரி விழுங்குகி றான். அவர்கள் வாழ, இவன் சாவினை எதிர் ஏற்கிறான். சாவாப் பெரியோன் சாவ முந்துவதே அருளின் வடிவம். தான் அழிய வருவழியும் அருளு வதன்றோ பேரருள்? தூயவன் களங்க ளெல்லாம் விழுங்குகி றான். பாதகமே சோறு பற்றியவாறு இதுதான். இதுவே நீலகண்டம் என்பதன் கருத்து. சாவைத் தின்னும் சாவாத பெருமான் அதிய மானைச் சாவாது காக்க, அவன், அவர் போல நீடுடி வாழவேண்டும் என வாழ்த்துகின்றாள் அவ்வை (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக். 635) என நீலமணிமிடற்றான் எனும் பெயருக்கான பொருளை சைவ சமயக் கண்ணோட்டத் திலிருந்து விளக்குகிறார் தெ.பொ.மீ. திராவிட, பொதுவுடைமைப் பின்புலத் தில் கல்வி கற்றவர்கள் எளிதாகக் கடந்துச் சென்றுவிடும் 'நீலமணி மிடற்றான்' எனும் ஒரு சொல்லுக்குத் தான் தெ.பொ.மீ. மேற்கண்டவாறு விரிவான விளக்கம் தருகிறார்.

வேள்விக் குறிப்புகள்

சங்க இலக்கியங்களில் வரும் வேள்வி பற்றிய குறிப்புகளிலும் தமிழ் சைவம், இந்திய அல்லது ஆரிய சைவம் ஆகிய வேறுபாடுகளையும் அறிஞர் களின் கூற்றுகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. சங்ககால மக்களின் வாழ்வில் 'வாரணாசி அன்றாட பேச்சாக இருந்தது' எனக் குறிப்பிடும் தெ.பொ.மீ. அவர்கள், 'பாரதத்தில் தருமர் இராசசூய யாகம் செய்ததனைப் படிக்கின்றோம். பேரரசராக முடி சூட்டிக்கொள்வோர் அதற்கேற்ற சடங்காகச் செய்யும் யாகமே இராசசூயம். இத்தகைய வடமொழிச் சடங்குகளும் யாகங்களும் தமிழ்நாட்டில் புகுந்தன. வெளிநாட்டுத் தொடர்பும் இந்தியா வின் ஒருமைப்பாட்டு நம்பிக்கையும் வளர்ந்தபின் வடநாட்டரசர் செய்வது போலத் தமிழ் அரசரும் செய்ய முயல்வது இயல்புதானே? பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற ஒரு பாண்டியன் பல யாகங்கள் செய்தவனாகப் புகழப்படுகின்றான்.

ஆனால், இராசசூயம் செய்தவனாகச் சோழன் ஒருவனே பாராட்டப்படுகின்றான். அவன்தான் சோழன் பெருநற்கிள்ளி. சடங்குகளை நாம் நம்பாமற் போனாலும், இவற்றை ஆரிய வெற்றியென்றோ சூழ்ச்சி என்றோ கருதாமல், இந்திய ஒருமைப்பாட்டு ணர்ச்சியின் பயனாக எழுந்த பழக்கவழக்க ஒற்றுமை விளக்கம் என்று கொள்வதே சிறந்த முறையாகும் (காவ்யா சண்முகசுந்தரம், பல்லடம் மாணிக்கம் (தொ,ஆ.), 2007: பக். 379) என சங்ககால அரசர்கள் செய்த வேள் வியை இந்திய ஒருமைப்பாட்டுணர்ச்சி யின் பயனாக தெ.பொ.மீ. குறிப்பிடுகிறார். இவரது பதில் நாத்திகரையும் தமிழ் சைவரையும் நோக்கி அமைகிறது. ஆனால் ந.சி.கந்தையாபிள்ளை இந்தக் கருத்தில் மாறுபாடு கொள்கிறார். அவர், 'இக் காலம் மகேசுர பூசை என்னும் பெயருடன் நடை பெறுவதே அக்காலத் தமிழர் வேள்வியா யிருத்தல் கூடும். மகேசுர பூசையின் சிறப் பைத் திருமந்திரம் சிறப்பாகக் கூறுகின்றது. வள்ளுவனாரும் விருந்தோம்பலைப் பாராட் டிக் கூறுகின்றனர்.

வேள்வி முடிவில் பலருக்குச் சோற ளித்தல் வழக்கமாயிருந்தது (புறம். 166). தமிழ் அரசர் புரிந்த யாகங்களில் விலங்கு களை வதைத்தார்கள் என்று எங்குஞ் சொல்லப்படவில்லை. இராவணன் முதலிய தமிழ் வேந்தர் ஆரியரால் இயற்றப்படும் கொலை சம்பந்தப்பட்ட யாகங்களை அழித்தார்கள் என்றே சொல்லப்படுகிறது. இராவணன், தாரகன் ஆகியோர் ஆகமங் களிற் கூறப்படுவது போலவே தீ வளர்த்துக் கடவுளை வழிபட்டார்கள் (ந.சி. கந்தையா,

> சைவத்திற்கே ஆதரவாக செயல்படும் மறைமலையடிகள் தமிழர் மதங்களாக சைவம் வைணவம் ஆகியவற்றினைக் குறிப்பிடுகிறார். அதேசமயம் உமையம்மை, திருமால், முருகன், விநாயகர் முதலான தெய்வங்கள் தனிப்பெருங் கடவுளான சிவபெருமானின் உட்கூறுகளே என வலியுறுத்துகிறார்.

2002, பக். 71-72) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு தமிழ் வேள்விக்கும் ஆரிய வேள்விக்குமிடையிலான வேறுபாட்டைக் குறிப்பதோடு சங்க கால வேந்தர்கள் செய்த வேள்வியும் ஆகம நெறியிலான தமிழ் சைவ வேள்வியே எனவும் நிறுவுகிறார்.

திராவிடர் x ஆரியர்

சங்க இலக்கியங்களின் அடிப்படையில் தமிழர் மற்றும் தமிழ் வரலாறு எழுதப்பட்ட போது திராவிடர் ஆரியர் எனும் முரணைத் தொடாமல் கடந்துவிட முடியாது. முதல்முதல் தமிழர் வரலாற்றை எழுதிய வி.கனகசபைப் பிள்ளை அவர்கள், யானைப்பாகர் யனைக ளிடம் ஆரியத்தில் தான் பேசினார்கள் என்ற செய்தி மிகவும் சுவைகரமானது. திராவிடர் காட்டில் குழிகள் வெட்டி யானைகளைப் பிடித்து வந்தார்கள். ஆனால் ஆரியர் பழக்கப் பட்ட பெண் யனைகளைக் கொண்டு காட்டு யானைகளை வசப்படுத்திப் பிடிக்கும் சூழ்ச்சி நயமிக்க முறையைப் புதுவது புகுத்தினார்கள் (வி.கனகசபைப்பிள்ளை, 2001, பக். 116) எனத் தமிழர்களை உழைப்பாளர்களாகவும் ஆரிய ரைச் சூழ்ச்சி மிகுந்தவராகவும் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர் குறிகாரர் என்ற முறையில் ஆரியருக்குத் திராவிடரி டையே போட்டியாளர் இருந்ததனைக் குறிப்பிடுவதோடு இவ்வரசன் (மலாட்டுக் கோமான்) மாள்வின் போது உடனிருந்த புலவர் கூடலூர் கிழார் அந் நிகழ்ச் சிக்கு ஏழு நாட்களுக்கு முன்பே அந் நிகழ்ச் சியை ஓர் ஒளிமிக்க எரிமீன் வீழ்ச்சி குறித்துக் காட்டிற்று என்று கூறுகிறார். இந்தத் தறுவாயில் அவர் பாடிய பாட்டு தனிச் சிறப்புடன் நம்மால் கவனிக்கத்தக்கது. ஏனெனில் பார்ப்பனரின் வேறாகத் தமிழருக்கு வானூலாராய்ச்சி உண்டு என்பதையும், நாள்மீன்களுக்கும் வானகமனை களுக்கும் தனித்தமிழ்ப் பெயர்கள் இருந்தன என்பதையும் அது தெளிவுபடுத்துகிறது (புறம். 229) (வி.கனகசபைப் பிள்ளை, 2001. பக். 181) என்பதனையும் குறிப்பிடுகிறார் இவ்வாறு இவர் ஆரியர் திராவிடர் என்பதனோடு பிராமணர் பிராமணரல்லாதார்எனும் முரணை யும் சேர்த்தே பதிவு செய்கிறார்.

தென்னாடு புகுதற்குத் துணிந்து வந்த ஆரியப்படையினைப் பாண்டியன் நெடுஞ் செழியன் என்பான் வென்று துரத்தினமை பற்றியே அவன் ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் எனச் சிறப்புப் பெயர் பெற்றமை புறநா நூற்றினால் அறியப்படுதலாலும், விந்திய மலைக்குத் தெற்கே போந்து கலிங்கம் வரையில் வென்ற அசோக அரசன் தமிழ் மூவேந்தரையும் வெல்ல இயலாமல் திரும்பிப்போய், தான் வெட்டுவித்த கல்வெட்டு ஒன்றில் அத்தமிழ் மூவேந்தரையுந் தந் தோழர்கள் எனக் குறித்தமை அதனால் விளங்குதலாலும் வட ஆரியராதல் வடநாட்டு மன்னராதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரையிற் பெருந் தொகையினராய்த் தமிழ் நாட்டிற் போந்து நிலைபெறுதற்கு இடம் பெற்றிலரென்பது தேற்ற மேயாம் (மறைமலையடிகள், 2002, பக். 109-110) எனச் சங்க காலத்தினை ஆரியரின் வருகையற்ற தூய தமிழர் கள் வாழ்ந்த காலமாக மறைமலை யடிகள் பதிவு செய்கிறார்.

வேளாளர் × பார்ப்பனர்

வி.கனகசபைப் பிள்ளை அவர் கள் ஆரியர் திராவிடர் என்பத னோடு பிராமணர் பிராமணரல்லாதார் எனும் முரணையும் சேர்த்தே பதிவு செய்கிறார் என்று முன்பே குறிப் பிடப்பட்டது. அம்முரண் பார்ப்பனர் வேளாளர் எனும் முரணாகவும் உருப்பெற்றது. வி.கனகசபைப் பிள்ளை அவர்கள் தாம் எழுதிய தமிழர் வரலாற்றில், ஆரியர் பின்பற்றிய பிரம, கஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற நால் வருணப் பாகுபாடு தமிழர் களிடையில் இருந்ததில்லை. திருநூல் அணியப் பெற்றவர்களுக்கெல்லாம் ஆரியர்களால் இருபிறப்பாளர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்படுகின்றது. பண்டைத் தமிழிலக்கியத்தில் அது பார்ப்பனரை மட்டுமே குறிக்க வழங் கிற்று. இதிலிருந்து திருநூலணிந்த கஷத்திரியரும் வைசியரும் தமிழகத்தில் இருக்க வில்லை என்று அறிகிறோம்.

தூய தனித்தமிழினத்தவரி டையே மிகவும் உயர் மதிப்பிற்குரிய

சங்க இலக்கியங்களின் அடிப்படையில் தமிழர் மற்றும் தமிழ் வரலாறு எழுதப்பட்ட போது திராவிடர் ஆரியர் எனும் முரணைத் தொடாமல் கடந்துவிட முடியாது. முதல்முதல் தமிழர் வரலாற்றை எழுதிய வி.கனகசபைப்பிள்ளை அவர்கள், யானைப்பாகர் யனைகளிடம் ஆரியத்தில் தான் பேசினார்கள் என்ற செய்தி மிகவும் சுவைகரமானது.

திருநூல் அணியப் பெற்றவர்களுக்கெல்லாம் ஆரியர்களால் இருபிறப்பாளர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்படுகின்றது. பண்டைத் தமிழிலக்கியத்தில் அது பார்ப்பனரை மட்டுமே குறிக்க வழங்கிற்று. இதிலிருந்து திருநூலணிந்த கஷத்திரியரும் வைசியரும் தமிழகத்தில் இருக்கவில்லை என்று அறிகிறோம்.

வர்கள் அறிவர் அல்லது சித்தர்களே. அவர்கள் காலத்தின் மூன்று கூறுகளையும் அதாவது இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றையும் அறிந்தவர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் ஒதுங்கிய சமய வாழ்வு வாழ்ந்ததால், பெருநகரங்களுக்கு வெளியிலேயே தங்கியிருந்தனர். பார்ப்பனர் ஆடல் நங்கையருடனும் கூத்தியருடனும் ஊடாடத் தயங்கவில்லை. காதலரிடையே தூதுவராய்ச் செல்லவும் தயங்கவில்லை. ஆனால் அறிவர்கள் இவற்றிலிருந்து முற்றிலும் விலகியிருந்தனர்.

அறிவருக்கடுத்தபடி மதிப்புடையவர் உழவர் அல்லது வேளாளர். அறிவர் துறவிகளே. ஆகவே சமுதாயம் பற்றிய மட்டில், இவ் வேளாளரே உச்ச உயர் வகுப்பினராவர் (வி.கனகசபைப்பிள்ளை, *2001*, பக். 204-205) எனக் குறிப்பிடுகிறார். இதனால் ஆரியரின் நால்வருணப் பாகுபாடு தமிழரிடையே ஊருவவில்லை. தமிழரில் மிக உயர்ந்த வகுப்பினர் வேளாளரே என்பதை உணர்த்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் சைவத்துக்கும் வேளாளருக்கும் கருத்தியல் அரணாக விளங்கிய மறைமலையடிகள் வணிகம் உருவாகிய வரலாற்றைப் பின்வருமாறு கூறுகிறார். நன்செய் புன்செய்ப் பயிர்கள் மிகுதியான விளைபொருள்களைத் தர அவற்றை விளைத்த வேளாளர் தாம் அவற்றைப் பகுத்துண்டு, மிஞ்சிய பொருள்களைப் பிறர்க்கு விலைசெய்து, பிறரிடமுள்ள அரிய பண்டங்களைத் தாம் விலை கொண்டு, இங்ஙனமாக அவர்கள் விற்றல் வாங்கல் செய்யப் புகுந்த காலந் தொட்டு வாணிக வாழ்க்கை உளதாயிற்று. நாகரிக வாழ்க்கைக்குக் காரணம் உழவும் வாணிகமும் ஆமென்றும், அவையிரண்டற்கும் காரணம் அறிவும் முயற்சியுமாமென்றும் அறிதல் வேண்டும். (மறைமலையடிகள், *2000*, பக். 32) எனக் குறிப்பிடுவதன் மூலம் வேளாளர்கள் செய்த உழவும், அவற்றில் மிஞ்சிய விளைபொருட்களும் வேளாளரால் வணிக வாழ்க்கை உருவாகக் காரணமாக இருந்தன என மார்க்சிய இயங்கியல் முறையைக் கைக்கொண்டு வேளாளரை உயர்த்திக் கூறுகிறார்.

மேலும், ஓர் அரசின்கீழ் வாழும் பல திறத்தாரான குடிமக்கள் எல்லாரிலும், உழவும் வாணிகமும் மடியாது நடத்தும் வேளாளக் குடிகளென்னும் அச்சு மரத்தின் இருபுறத்தும் உள்ள அவ்வுழவும் வாணிகமுமாகிய ஈருருளின் மேல் நின்றே அரசியலாகிய ஒரு பெருந்தேர் ஓடுகிறன்தென்றும் உரைக்கலாம். இங்ஙனம் அரசியலுக்கு இன்றியமையாச் சிறப்பினரான வேளாண் மக்களின் வாழ்க்கை இனிது நடைபெறுவே, அரசியல் இனிது நடைபெறுவதோடு, அவ்வரசின்கீழ் வாழும் ஏனைக் குடிமக்களின் வாழ்க்கையும் இனிது நடைபெறுமென்பது தானே போதரும். அஞ்ஞான்றிருந்த வேளாண்மக்கள் தாம் உலகியலொழுக்கத்திற்கு முதல் வேராயிருப்பதனை நன்குணர்ந்து தங்கடமையின் வழாதொழுகினமையாற்றான், அவ்வுலகியலொழுக்கஞ் செவ்வனே நடைபெறலாயிற்றென்று, பாண்டிய மன்னனும் நல்லிசைப் புலவனுமாகிய இளம்பெருவழுதி என்பான்,

'உண்டால் அம்மஇவ் வுலகம், இந்திரர்

....

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே'

என்று நன்கு விளக்கிச் சொல்லிய செய்யுள் நினைவிற் பதிக்கற்பாலதாம்.

இச்செய்யுளை உரையாசிரியர் இளம்பூரணப், தொல்காப்பியப் புரத்திணையியல் 17-ஆஞ் சூத்திரத்திற்கு மேற்கோளாக எடுத்துக்காட்டி, 'நோனாற்றாட் பிறர்க்கென முயலுநர் வணிகவேளாளர்' என்றதூஉம் மறவற்க. விருந்து வந்தவர் தம்மினத்தவர் அல்லாக்கால், அவர் எத்துணைப் பசியோடிருப்பினும் அவரைப் புறத்தே வருந்தியிருக்க வைத்துக் கதவடைத்துத், தாம் அகத்தே தம்மவரோடிருந்து விலாப்புடைக்கத் தின்று, தாம் தின்று மிகுந்ததைப் பின்னர் அவ் விருந்தினர்க்கு இடும் ஆரியப் பார்ப்பனர் தம் நல்லொழுக்கம், பண்டை நம் தமிழாசிரியர்மாட்டும் அவரது ஆணைவழியொழிகிய

உயர்குடிப் பிறப்பினரான பண்டை நம் வேளாண் மாந்தர் மாட்டும் இல்லாமை, 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத், தமியர் உண்டலும் இலர்' என இச்செய்யுண் முதலிற் சொல்லப்பட்டமை யால் நன்கறியக் கிடக்கின்றது. (மறைமலையடிகள், 2000, பக். 92-93). என மறைமலையடிகள் குறிக்கிறார். வேளாள மக்களின் செம்மையான வாழ்க்கையால் சங்க காலச் சமூகமே மதிப் புடன் விளங்கியது எனக் கூறுவதுடன் இளம் பெருவழுதி பாடிய பாடலும் வேளாளரை நோக்கியே அமைந்தது என்பதனை இளம்பூரண ரைச் சான்று காட்டி விளக்க முயல்கிறார் மறைமலையடிகள். மேலும் பணிகர் என்று குறிக்கப்படுவோர் தமிழ் வணிக வேளாளரே என்றும் குறிப்பிடுகிறார்.

கா.சு.பிள்ளையும் வணிகரை வேளாளர் என்பதனோடு தமிழ் அரசர்களான மூவேந்தர் களும் வேளாளர் மரபினரே எனக் குறிக்கி றார். வேளாளர்க்கு வணிகமு முண்டென்பது பட்டினப்பாலையுட் கூறப்பட்டது. தமிழ்நாட்டு அரசர் மூவேந்தரும் பெண் கோடல் கொடுத்தல் செய்வதற்குரிய மரபினர் வேளாளரென்பது ஆசிரியர் நச்சினார்க்கினியருரையால் இனிது விளங்கும். மன்னர்க்கு முடிசூட்டி னோர் வேளாளரென்பது ஆராய்ச்சியாற் விளங்குத லின், அரசரும் வேளாளரேயாவார். (கா.சுப்பிரமணிய பிள்ளை, 2007, பக்.61) எனக் குறிப்பிடுகிறார். ந.சி. கந்தையா பிள்ளைக்கும் இக்கருத்து உடன்பாடே. அவர், சேர சோழ பாண்டியரும் சிற்றரசர்களும் வேளாண் வமிசத்தில் தோன்றியவர்கள். சிறிய நிலங்க ளையுடையராயினோர் வீழ்ங்குடி உழவர் எனப்பட்டனர். இதனால் மற்றைய வேளாண் மக்கள் செல்வர்களாயும் பெரிய நிலங்கள் உடையவர்களாயும் இருந்தார்களென்றும் விளங்குகின்றது. கரிகாலன் அறுவாளரை வென்று, அவர் நாட்டைத் தனது தேசத்தோடு இணைத்த போது, வெற்றி கொண்ட நிலத்தை வேளாண் பிரபுக்களுக்கு பகுத்தளித் தான். அப்பிரபுக்கள் வழியில் வந்தோர் பெருநிலமு டையராய், ஆங்கில அரசின்கீழ் சிறு சமீந்தார்க ளாயிருக்கின்றனர். அவர்கள் இப்பொழுது முதலிமார் என்று அழைக்கப்படுவர். முதலியார் என்பதற்கு முதற் சாதி என்பது பொருள். தெலுங்கு நாட்டைவென்ற வேளாண் குடும்பங் கள் வேள்மா என்றழைக்கப்படுகின்றனர். அங்குள்ள பெரிய சமீந்தார்கள் இன்றும் வேள்மா மரபினரே. வேளாளர் கன்னட தேசத்தில் வெள்ளாள பரம்பரையைத் தாபித்து பல நூற்றாண்டுகளாக ஆட்சி புரிந்தனர்' (ந.சி. கந்தையா, 2002, பக். 52-53) எனப் பல்வேறு சான்றுக ளைக் காட்டி அரசர்களும் வேளாளர் மரபினரே என்று நிறுவுகிறார்.

அந்தணர்

அரசர், வணிகர், வேளாளர் ஆகிய மூன்று வகுப்பினரும் தமிழ் வேளாளரே எனும் கருதுகோளை முன்வைத்த சைவ அறிஞர்கள் அந்தணர் என்பது பார்ப்பனரல்லர் எனவும் குறிப்பிட்டனர். அந்தணர்க்கு நூலும், கமண்டலமும், முக்கோலும், மனையும் உரியவென்றாசிரியர் மொழிந்தமையால் அந்தண ரென்பார் ஒரு வகைத் துறவிய ராவரென்பது கருதப்படும். நூலென்பது கற்கும் ஏட்டினை உணர்த்திற்று' (கா.சுப்பிர மணிய பிள்ளை, 2007, பக்.60) என்று கா.சு.பிள்ளை தொல்காப்பியத்தைச் சான்று காட்டி குறிப்பிடுகிறார். நூல் என்பதற்கு பூணூல் அல்லது முப்புரி நூல் எனப் பொருள் கொண் டால் தமிழ்ச் சமூகத்தில் பூணூல் அணியும் மரபுடையவரான பிராமணன் அல்லது விஸ்வகர்மா வகுப்பினரையே குறிக் கும். எனவேதான் நூல் என்பதற்கு கற்கும் ஏடு என்று பொருள் கொள்கி றார். பழந்தமிழ் இலக்கிய இலக் கணங்களின் சில்லாட்சியும் இதற்கு துணைபுரிகின்றன.

மறைமலையடிகளும் அந்தணர் என்பதற்கு துறவி என்றே பொருள் கொண்டார். 'மறைமலையடிகள் வரலாறு' எழுதிய அவரது மகன் மறை. திருநாவுக்கரசு அவர்கள் அந்த நூலில் தி.ரு.வி.க. உள்ளிட்ட பல பார்ப்பனரல்லாதாரை அந்தணர் என்றே தொடர்ச்சியாகக் குறிப்பிடு கிறார். மறைமலையடிகள் சைவ உணவுப் பழக்கம் வேளாளர்களுடை யதே அல்லாமல் பிராமணர்களுடை

வேளாள மக்களின் செம்மையான வாழ்க்கையால் சங்க காலச் சமூகமே மதிப்புடன் விளங்கியது எனக் கூறுவதுடன் இளம்பெருவழுதி பாடிய பாடலும் வேளாளரை நோக்கியே அமைந்தது என்பதனை இளம்பூரணரைச் சான்று காட்டி விளக்க முயல்கிறார் மறைமலையடிகள்.

யதல்ல என்று கூறுகிறார். இதனைக் 'கொல்லா வறத்தினை விடாப் பிடியாய்க் கொண்டு ஒழுகினவர்கள் வேளாளர்களே யென்பது 'பட்டினப்பாலை' என்னும் பழைய பாட்டினால் நன்கறி யப்படுகின்றது. இவர்கள் முழுமுதற் கடவுளைச் சிவம் என்னும் பெயரால் அழைத்து வணங்கி வந்தமையின், இவர்கள் இடைப்பட்ட காலத்திலிருந்து சைவர் எனவும் பெயர் பெறலாயினர். இவர்கள் கைக்கொண்ட கொல்லா வறமும் அவ்வேளாளர் வழியே 'சைவம்' என வழங்கப்பட்டு வருகின்றது (மறை மலையடிகள், 2002, பக். 57-58) எனவும், தமிழ்நாட்டிற் குடியேறித் தமிழிற் சிறந்த புலவராய் விளங்கிய பார்ப் பனருங் கூட ஊனுணவை விலக்காமல் அதனை உட்கொண்டு வந்தமை கபிலர் பாடிய 'கடுக்கண்ண கொல்களிற்றால்' என்னும் புறநானூற்றுச் செய்யுளால் நன்கறியக் கிடத்தலானும், இத் தமிழ்நாடு புகுந்த பார்ப்பனர், பண்டுதொட்டே ஊன்மறுத்த சைவ அருளொழுக்கத்தி னரான வேளாளருடன் கலக்க இடம்பெறாமல், தம்போல் ஊன் உணவு கொள்வோரான ஏனை இழிகுடித் தமிழருடன் மட்டுமே கலக்க இடம்பெற றுத், தாந் தாங் கலந்த தமிழ்க்குடி மக்களின் ஏற்றத் தாழ்வுக்குத் தக்கவாறு தாமுந் தம்முள் ஏற்றத்தாழ்வு பல உடைய பல்வகை பார்ப்பனர் ஆயினர். (மறைமலையடிகள், 2002, பக். 43) எனவும் வரும் மறைமலையடிகள் கூற்று உணர்த்தும்.

ஈழத்து அறிஞர்களான வி.கனகசபைப் பிள்ளையும் ந.சி.கந்தையா பிள்ளையும் இக்கருத்து சார்ந்து மறைமலையடிக ளுடன் முரண்படுவர். அவர்கள் அந்தண ரும் பார்ப்பனரும் ஒருவரே என்னும் கருத்துடைய வர்கள். வி.கனகசபைப் பிள்ளைக்கும் மறைமலையடிகளுக்கும் பார்ப்பனர் விடயத்திலான முரண்பாடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் எதிரொலித் தது. 24.5.1905இல் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்க நான்காம் நாள் விழாவிலே தலைமை உரையாற்றிய வி.கனகசபைப் பிள்ளை அவர்கள், 'தொல்காப்பியர் பிராம்மணராவார், ஆதலால், தமிழர் ஆரிய ருக்குக் கடைமைப்பட்டவர்' என்று கூறினார். அந்நிலையில் மறைமலையடிகள் பேசும் போது 'ஆரிய நாகரிகத்திற்கும் பிராம்ம ணர்களுக்கும் தமிழர்கள் கடமைப்பட்டி ருக்கவில்லை என்று முழங்கினார். ஆரியர்களாலும் பிராம்மணர்க ளாலுந் தமிழ் பாழ்பட்டது. தமிழர்கள் இழிக்கப்பட்டனர் என்றார்' (மறை. திருநாவுக்கரசு, 1959, பக்.99).

பின்னாளில் மறைமலையடிகளின் கருத்தை மறுக்கும் வகையில் 'கபிலர் பாடிய புறநானூற்றுச் செய்யுட்களால் (புறம் 14 : 113) 'அந்தணர் ஊன் புசிக்கும் இயல்பினர்' எனச் சிலர் சாதிப்பர். கபிலர் தம்மைப் பாணர் வரிசையில் வைத்துப் பாடினமையில், அங்ஙனம் கூறினரன்றி, அவர் ஊண் புசிப்பவர் என்று கூற இடமில்லை. சங்க காலத்துச் செய்யுளாகிய பெரும்பாணாற்றுப்படை அந்தணரின் சைவ உணவைப் பற்றிக் கூறுதலே அவர் ஊண் புசிப்பவரல்லர் என்பதை நன்கு விளக்கும். போதாயனர், அபஸ்தம்பர் முதலியோரின் தர்ம நூல்களில் புசிக்கத்தக்கவும், புசிக்கத் தகாதனவுமாகிய பறவை, விலங்குகளைப் பற்றிக் கூறப்படுதலின், வடநாட்டில் பிராமணர் மாமிச உணவருந்தினர் என்று தெளிவாயறியப்படுகின்றது. (ந.சி. கந்தையா, 2002, பக். 45-46) என ந.சி.கந்தையா பிள்ளை தமிழ்ப் பார்ப்பனர் கள் ஊன் புசிக்கவில்லையென்றும் வடநாட்டு பிராமணரே மாமிசம் உண்ணும் இயல்பினர் என்றும் குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக சைவம் வெவ்வேறு நிலைகளில் இயங்கியது மட்டுமின்றி சங்க இலக்கியங்களையும் வெவ்வேறு கண் ணோட்டத்துடனே வாசித்தன. சைவரான நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டுக்கு எழுதிய உரையை சைவரான மறைமலையடிகள் மறுத்ததையும் இந்தப் பின்புலத்திலேயே புரிந்துகொள்ள முடிகிறது. இதற்கு, 'தொல்காப்பிய நூலுக்கு உரை வகுத்த இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலான உரைகாரரெல்லாந், தொல்காப்பியருக்கு நாலாயிர ஆண்டு பிற்பட்ட காலத் தேயிருந்தவர், அல்லாமலும், இவ்வுரைகாரர்

நூல் என்பதற்கு பூணூல் அல்லது முப்புரிநூல் எனப் பொருள் கொண்டால் தமிழ்ச் சமூகத்தில் பூணூல் அணியும் மரபுடையவரான பிராமணன் அல்லது விஸ்வகர்மா வகுப்பினரையே குறிக்கும். எனவேதான் நூல் என்பதற்கு கற்கும் ஏடு என்று பொருள் கொள்கிறார். பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களின் சில்லாட்சியும் இதற்கு துணைபுரிகின்றன.

காலத்தே பார்ப்பனர் தம் பொருந்தாக் கொள்கைகள் இத்தமிழ் நாட்டின்கட் பரவிவிட்டமையால், அக் கொள்கைகளிற் சிக்குண்ட அவ்வுரைகாரர் அக்கொள்கைக ளுக்கு ஏற்பத் தொல்காப்பிய நூலுக்கு இடையிடையே பொருந் தாவுரையுரைத்து, அதன் ஆசிரியர் கருத்தினைப் பெரிதும் பிறழ்த்திப் பிழைப்பட்டனர். மேலும், நச்சினார்க்கினியர், ஆசிரியர் தொல்காப்பி யனாரை ஓர் ஆரிய முனிவராக்க விழைந்து அவர் ஜமதக்நி புதல்வரென்றும், அவரது இயற்பெயர் 'திரன தூமாக்நி' என்றும், அவர் அகத்திய முனிவர்க்கு மாணாக்கரென்றும் ஒரு பொய் கதையைக் கட்டி அதனைத் தமது உரைமுகத்தில் விரித்து வைத்தார். இக்கதைக் குத் தினையளவு சான்று தானும் பழைய செந்தமிழ் இலக்கியங்களிலாதல், தொல் காப்பிய நூற்பாவிலாதல் காணப்பட வில்லை. அகத்திய முனிவரைப் பற்றிய இறையனார் அகப்பொருளுரைப் பாயிரத்தில் முதன்முதல் நீலகண்டனாரென்பவரால் நுழைக்கப்பட்டது. இறைய னாரகப் பொருளு ரைக்கு முற்பட்ட எந்தப் பழந்தமிழ் நூலிலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புமில்லை. (மறைமலையடிகள், 2002, பக். 215-216) எனும் மறைமலையடிகளின் கூற்றும் வலு சேர்க்கிறது. அதேபோல் சங்ககாலத் திருமணச் சடங்கு நடத்தப்பட்ட முறை, காதல், வணிகம், விருந்தோம் பல் எனப் பலவற்றை இவர்கள் விவரிக்கும் முறைமை யிலும் மிக நுட்பமான வேறு பாடும் அரசியலும் உள்ளது. இதனை

- பிராமணரையும் ஆரி யரையும் விலக்கும் தமிழர் அடை யாளத்தை முன்னெடுத் தோர் (மறை மலையடிகள், கா.சு. பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலானோர்)
- பிராமணரை உட்படுத்தி ஆரி யரை விலக்கும் தமிழர் அடையாளத்தை முன்னெடுத் தோர் (வி.கனகசபைப் பிள்ளை, ந.சி.கந்தையா பிள்ளை முதலானோர்)
- இந்தியப் பண்பாட்டுக்குள் இரண்டற கலந்துவிட்ட தமிழர் அடையாளத்தை முன்னெடுத்த சைவர் (தெ.பொ.மீ. முதலா னோர்) எனும் நிலைகளில் சைவ சமயத்தார் சங்க இலக் கியத்தை அணுகியுள்ளனர்.



இவ்வாறு 'சங்கம்' எனும் அமைப்பின் இருப்பு, சங்க இலக்கி யங்களுள் காணப்படும் சமயம், சங்க இலக்கியத்தின் காலக்கணிப்பு முதலானவை குறித்த ஆய்வுகள் மற்றும் வரலாறுகள் நேர்செய்யப் பட்டனவுமில்லை, ஒரே மாதிரித் தன்மையுடையனவாகவு மில்லை. அவை தம்முடைய சமூக மற்றும் காலச் சூழலுக்கு ஏற்ப எழுதப்பட்டனவாகவே உள்ளமையை அனுமானிக்கவும் முடிகிறது.

துணைநூற்பட்டியல்

கந்தையா பிள்ளை, ந.சி., தமிழ் இந்தியா, கழக வெளியீடு, சென்னை, 1959.

கந்தையா பிள்ளை, ந.சி., முச்சங்கம், முத்தமிழ் நிலையம், சென்னை, 1947.

கந்தையா பிள்ளை, ந.சி., தமிழர் சரித்திரம், அமிழ்தம் பதிப்பகம், சென்னை, 2002.

கனகசபைப் பிள்ளை, வெ., ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், (கா.அப்பாதுரை -மொ.பெ.), வசந்தா பதிப்பகம், சென்னை, 2001.

குருசாமி, ம.ரா.போ., சங்க காலம், மெர்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், 1967.

கேசவன், கோ., மண்ணும் மனித உறவுகளும், சென்னை புக் ஹவுஸ், சென்னை, 1979.

சண்முகசுந்தரம், காவ்யா, மாணிக்கம், பல்லடம் (தொ,ஆ.), காவ்யா, சென்னை, 2007:

சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறு, காவ்யா, சென்னை, 2007.

சீனிவாசையங்கார், பி.டி., தமிழர் வரலாறு, (இராம. சுந்தரம் -மொபெ.) தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008.

திருநாவுக்கரசு, மறை., மறைமலையடிகள் வரலாறு, கழக வெளியீடு, திருநெல்வேலி - சென்னை, 1959.

மறைமலையடிகள், முற்கால் பிற்காலப் புலவர் வாழ்க்கை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

மறைமலையடிகள், தமிழர் மதம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002.

ஜானகி, இரா., (தொகு.) சங்க இலக்கியப் பதிப்புரைகள், பாரதி புத்தகாலயம், சென்னை, 2010.

Purnalingampillai, M.S., Tamil Literature (Revised and Enlarged), The Tamil University, Thanjavur, Photo Reprint:1985, India.



வட்டார வரலாறு: வழக்காறுகளை முன்வைக்கும் வரலாற்றியல்

பக்தவத்சல பாரதி

பக்தவத்சல பாரதி

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவர். மானிடவியல் பண்பாட்டியல் துறையில் பல்வேறு ஆய்வு நூல்களை எழுதியிருப்பவர்.

சொல்லாட்சி: வரையறை

'வட்டார வரலாறு' *(local history)* எனும் சொல்லாட்சி விவாதத்திற்குரியதாக உள்ளது. 'உள்ளூர் வரலாறு' என்றும் சொல்லலாம். 'தல வரலாறு' என்றும் கூறலாம் என்கிறார் அறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன். சில சமயங்களில் வெவ்வேறான இரண்டு மொழிகளில் நேர் சொல்லாட்சிகள் கிடைப்பதில்லை. மொழிகளுக்கிடையில் மொழியாக்கம் செய்யமுடியாத *(untranslatability)* கூறுகள் உள்ளன என்பதை நிரூபிக்கும் சொல்லாட்சியாகவே வட்டார வரலாறு அமைந்துள்ளது. எடுத்துக் கொள்ளும் கருத்தினத்திற்கேற்ப நம்மொழியில் கலைச் சொல்லாக்கம் செய்வதே நல்லது. இந்நிலையில் *'local history'* என்பதற்கு 'வட்டார வரலாறு' என்று இக்கட்டுரையில் வரையறுத்துக் கொள்ளலாம்.

வரலாறு எழுதுதல்

'வரலாறும் வழக்காறும்' எனும் தலைப்பிலான தம் நூலில் ஆ. சிவசுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார். தமிழர்களாகிய நமக்கு நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. கிறித்துவுக்கு முந்தைய காலத்திலேயே எழுத்து வடிவம் பெற்றுத் திகழ்ந்த

மொழி தமிழ்மொழி, ரோம், கிரேக்கம், போன்ற தொன்மை நாகரிக நாடு களுடன் வாணிபத் தொடர்பு கொண் டிருந்த சிறப்பு நமக்குண்டு.

ஆயினும், நம் வரலாறானது சமூகம் சார்ந்த வரலாறாக இன்னும் எழுதப்படவில்லை. வரலாறு என்பது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத, தன்னி கரில்லாத தலைமக்களை மையமாகக் கொண்டே இன்றுவரை நோக்கப் படுகிறது. இதற்கு ஓர் அடிப்படைக் காரணம், நமக்கு வரலாற்றுப் பாரம் பரியம் இருந்தும், கணக்கற்ற வரலாற் றுச் சான்றுகள் இருந்தும் நமது வர லாற்று வரைவியல் என்பது ஐரோப்பிய வரலாற்று அறிஞர்களால் உருவாக்கப் பட்டமைதான் (ஆ.சிவசுப்பிரமணியமன் 2010: 19).

கிரேக்க நாகரிக காலத்திலிருந்தே "வரலாறு எழுதுதல்" தொடங்கிவிட்டது. தமிழகத்தில் நான்கு வகை மன்னர்களும் வரலாறுவழி அறியப்பெற்றுள்ளனர். சீறூர் மன்னர், முதுகுடி மன்னர், குறுநிலமன்னர், வேந்தர் ஆகியோர் பாண் மரபினருக்குத் தானங்கள் வழங்கித் தம் பெருமைகளை சங்க இலக்கியங்களில் கண்டுள்ளனர். தமிழ்ச் சூழலில் பண்டைய வரலாற்றைக் கூறும் ஆவணங்கள் பலவாக இருந்தன. அவற் றில் புராணங்கள், இலக்கியங்கள், கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திகள், நாண யங்கள், செப்பேடுகள், சுவடிகள், பானை ஓடுகள் போன்றவை முக்கியமானவை.

> கிரேக்க நாகரிக காலத்திலிருந்தே "வரலாறு எழுதுதல்" தொடங்கிவிட்டது. தமிழகத்தில் நான்கு வகை மன்னர்களும் வரலாறுவழி அறியப்பெற்றுள்ளனர். சீறூர் மன்னர், முதுகுடி மன்னர், குறுநிலமன்னர், வேந்தர் ஆகியோர் பாண் மரபினருக்குத் தானங்கள் வழங்கித் தம் பெருமைகளை சங்க இலக்கியங்களில் கண்டுள்ளனர்.

இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தி யம் 1757இல் தொடங்கி 190 ஆண்டு களுக்குப் பின் 1947இல் முடிவுக்கு வந்தது. இக்கால கட்டத்தில் இந்திய வரலாறு ஏகாதிபத்திய சார்பு நிலையில் எழுதப்பெற்றது. அகழ்வாராய்ச்சியில் கிடைத்த புதைபொருட்கள், பிறநாட்டு வணிகர்களின் குறிப்புகள், மதகுருமார் களின் குறிப்புகள், நிர்வாகத்தினரின் கைபீதுகள், உள்ளூர்க் குறிப்புகள் போன்றவையும் வரலாற்றுக்கான ஆதாரங்களாக அமைந்தன.

தொடக்கத்தில் நிகழ்வுகளையும் செய்திகளையும் காலவரிசையில் உண்மைத் தன்மை மாறாமல் விளக்குவதே வரலாறு எனப்பட்டது. தொடக்கத்தில் பிரெஞ்சு வரலாற்றாசிரியர் ராங்கே *(Ranke)*, இங்கிலாந்து வரலாற்றாசிரியர் ஆக்டன் *(Acton)*, கார்லைல் போன்றோர் இத்தகைய அணுகுமுறையில் வரலாற்றை எழுதினார் கள். ஆங்கிலக் காலனியவாதமானது "இந்தியதேசம்" என்ற பரந்த எல்லையை முதன் முதலாக உருவாக்கியதுடன், அது மாகாணம், பிராந்தியம், வட்டாரம் எனும் வரிசையில் நுண்ணிய நிலப்பகுதிகள் வரை ஊடுருவி தன் இருத்தலை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டது.

நிகழ்வுகள் எப்படி நடந்தனவோ அப்படியே விவரிப்பதுதான் வரலாற்று ஆசிரியரின் கடமை எனத் தொடக்கத்தில் கருதினார்கள். அக்காலத்தில் அரசர்களின் படைபலம், படையெடுப்புகள், போர்முறை கள், வெற்றி வாகைகள், குளம் வெட்டுதல், சாலை அமைத்தல், கோயில் கட்டுதல், சமயச் செயல்பாடுகள், ஆட்சிமுறை, தானம் வழங்குதல் போன்றவை வரலாற்றின் முக்கிய உள்ளீடாக இருந்தன. இதனால் பல காலம் வரையில் அரசர் வரலாறே வரலாறு எனப்பட்டது. இத்தகைய வரலாறே கல்வெட்டுகளிலும் இலக்கியங்க ளிலும் பதிவாயின.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பல்வேறு நிலைகளில் செயல்பட்டார்கள். இந்தியாவைப் புரிந்துகொள்ளவும் இந்தி யர்களின் மனதில் தமது மேலாண்மையை நிறுவுவதில் தீவிரமாகச் செயல்பட்டார்கள். அதற்குத் திட்டமிட்ட அறிவுநிலை சார்ந்த செயல்களை இந்தியா முழுவதும் மேற் கொண்டார்கள். அவற்றில் முக்கியமான எட்டு செயல் திட்டங்கள் வருமாறு:

1. இந்தியா முழுவதிலும் பயணம் செய்து நேரில் கண்டுணர்ந்தவற் றைப் பதிவு செய்தல் *(obsevational / travel modality)*.
2. இந்து மக்களிடமும் பிற சமுதாயத் தாரிடமும் கிறிஸ்து வத்தைப் பரப்பும் பணியைச் செய்தல் *(missionary modality)*.

3. பூர்வீக மக்கள், வளமான நிலம், தொழில் முதலியவற்றை மதிப்பாய்வு செய்தல் *(survey modality).*
4. கணக்கெடுப்பு முறை (மக்கள் தொகை கணக்கெடுப்பு, மாவட்ட கையேடு தயாரித்தல் போன்றவை *(enumerative modality).*
5. அருங்காட்சியக முறையை உருவாக்குதல் *(museological modality).*
6. கண்காணிக்கும் முறையை மேற்கொள்ளுதல் *(surveillance modality).*
7. இந்திய தேசத்துக்கான விரிவான வரலாற்றை எழுதுதல். *(historiographic modality).*
8. கல்விப்புலம் சார்ந்த ஆய்வு முறைகளை உருவாக்குதல் *(investigative modality).*

இங்கு வரலாறு எழுதுதலை மட்டும் கவனிப்போம். இதனை மூன்று கட்டமாகச் செய்தார்கள். முதற்கட்டமாக 1770களில் மேற்கு வங்கத்தில் "விசாரணைகள்" என்னும் வகையில் நிலத்தீர்வை, வரிகள், வட்டார வரலாறு தொடர்பான விசாரணைகள் நடந்தன. அடுத்த கட்டத்தில் இந்தியப் பண்பாடு, நாகரிகம் தொடர்பான வரலாறு எழுதுதல் மேற்கொள்ளப்பட்டது. அலெக்சாண்டர் டவ், ராபர்ட் ஓர்ம், சார்லஸ் கிராண்ட், மார்க் வில்க்ஸ், ஜேம்ஸ்மில், ஜேம்ஸ் டாட் போன்றவர்கள் இத்தகைய பணியினை மேற்கொண்டார்கள். மூன்றாம் கட்டத்தில் அனைவருக்குமான எளிய வரலாறுகள் எழுதப்பட்டன. எனவே நம்நாட்டு வரலாறு என்று நாம் கற்றுக்கொண்டிருப்பவை ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு ஆங்கிலேயர்கள் என்ற வென்றவர்களால் எழுதப்பட்ட தோற்றவர்களின் வரலாறு ஆகும்.

விடுதலைக்குப் பிந்தைய காலகட் டத்தில் இந்திய வரலாற்று ஆசிரியர்கள் தேசியவாத *(nationalism)* அணுகுமுறையில் இந்திய வரலாற்றினை அணுக முற்பட்டனர். அடுத்து, இந்திய வரலாற்றியல் ஆய்வுகளில் 1960களின் இறுதியில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது எனலாம். மிகத் தெளிவான மாற்றம் 70களில் தோன்றியது (சம்பகலட்சுமி 1987: 3). மன்னராட்சி முறைகளையும் அரசியல் வரலாற்றையும் வண்ணனையாக எடுத்துரைப்பதிலிருந்து விலகி டி. டி. கோசாம்பி, ஆர். எஸ். ஷர்மா, ரொமிலா தாப்பர், இர்ஃபான் ஹபீப், இன்னும் சிலர் புதிய சிந்தனை முறைகளையும் கருத்துருவாக்கங்களையும் ஏற்படுத்தினார்கள். அரசியல் வரலாறு *(political history)* என்பதிலிருந்து விலகி சமூக வரலாற்றையும் *(social history)*, பொருளாதார வரலாற்றையும் *(economic history)* ஆராயத் தொடங்கினார்கள். இந்நிலையில் இந்திய வரலாறானது "காலனியவாத வரலாறு" எனத் தொடங்கி பின்னர் அது "தேசியவாத வரலாறு" என்பதாக மாறி இரண்டு தனித்த கண்ணோட்டங்களில் வளர்ச்சி பெற்றது.

தென்னிந்திய வரலாற்றியலில் இதே கால கட்டத்தில் அமெரிக்க வரலாற்றறிஞர்களின் அணுகுமுறைகள் புதிய வெளிச்சத்தைக் கொண்டு வந்தன. புகழ்பெற்ற அமெரிக்க வரலாற்றாசிரியர் பர்ட்டன் ஸ்டீயின் என்பவரும் அவரது வழிவந்த கென்னத் ஹால், ஜார்ஜ் ஸ்பென்சர், டேவிட் லட்டன் *(David Ludden)* ஆகிய அறிஞர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் சமூகவியல், மானிடவியல் அணுகுமுறைகளையும் ஏற்றுக்கொண்டவை. அரசியல் வரலாறு என்பதிலிருந்து விலகி சமூக வரலாறு, பொருளாதார வரலாறு ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் தந்தனர். ஊக வரலாற்று அணுகுமுறையிலிருந்து முற்றிலும் விலகி ஆணித்தரமான, அழுத்தமான முடிவுகளை நோக்கி இவர்களுடைய ஆய்வுகள் சென்றன.

அடுத்த அணியாக உருவெடுத்தவர் ஜப்பானிய வரலாற்றாசிரியர் நொபுரு கராஷிமா. இவர் தென்னிந்தியாவில் கிடைக்கக்கூடிய அதிக எண்ணிக்கையிலான கல்வெட்டுத் தரவுகளை மையமிட்டு ஆய்வுகளை மேற்கொண்டார். புள்ளியியல் அணுகுமுறையில் ஒவ்வொரு பகுதியிலும், தனித்தனியான காலகட்டத்தை முன்வைத்து ஆராய முற்பட்டார். நொபுரு கராஷிமா தலைமையில்

இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியம் 1757இல் தொடங்கி 190 ஆண்டுகளுக்குப் பின் 1947இல் முடிவுக்கு வந்தது. இக்கால கட்டத்தில் இந்திய வரலாறு ஏகாதிபத்திய சார்பு நிலையில் எழுதப்பெற்றது.

மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அணுகு முறையால் குறிப்பிடத்தக்க நுண்ணாய்வுகள் *(microhistory)* நிகழ்த்தப் பட்டன.

மேற்கூறிய மாற்றங்களின் ஊடாகத் தென்னிந்திய வரலாற்றியல் ஆய்வு முறை மாறத் தொடங்கியது. காலவரிசையிலும் வண்ணனை நிலையிலும் அமைந்த பழைய வரலாற்றியல் முறையிலிருந்து விலகிய இப்புதிய வகை ஆய்வுகள் பகுப்பாய்வு சார்ந்து அமைந்தன. சமூக வரலாறு, பொருளாதார வரலாறு ஆகிய புதிய தளத்திற்கு நகர்ந்தன. இந்திய வரலாற்றில் தென்னிந்திய வரலாறு என்பதற்கான முக்கியத்துவம் இல்லாத போக்கும் மாறத் தொடங்கியது. விந்திய மலைக்குத் தெற்கே தீபகற்ப இந்தியா என்ற ஒன்று உள்ளது, அதற்கென தனித்துவ மான வரலாறு ஒன்று உண்டு என்று உணரப் படாத போக்கு வடஇந்திய வர லாற்றாசிரியர்களிடம் இருந்தது. இத்தகைய ஒற்றை நிலையிலான பொதுமையாக்கக் கருத்து நிலையில் புதிய போக்கு ஏற்பட்டது. இடம், காலம் சார்ந்து தென்னிந்தியப் பகுதிகளுக்கான தனித்துவங்களைக் காண வேண்டுமென்ற அணுகுமுறை அயலவர்களின் ஆய்வு முடிவுகளால் அவர்களிடம் மெல்ல வலுப்பெற்றது.

1965களிலேயே டி. டி. கோசாம்பி இந்திய வரலாற்றை ஒற்றை தளத்தில் வைத்துப் பொதுமைப்படுத்த முடியாது என்றார். வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபாடுகள் காணப்படுகின்றன என்றார். இதனால் வட்டார ரீதியாக ஆராய வேண்டியதை வலியுறுத்தினார்.

வட்டார வரலாறு

"வட்டார வரலாறு" என்பது குறிப்பிட்ட புவியியல் பரப்பு சார்ந்த பிராந்தியத்துக்கான வரலாற்றை குறிக்கும். இதில் எண்ணற்ற வரலாற்றுக் கூறுகள் அடங்கி யுள்ளன. இத்தகைய வரலாறு இடம் பற்றியதாக இருக்கலாம். முக்கியத்துவம் கொண்ட ஆறு, மலை, குளம் பற்றியதாக அமையலாம். அப்பிராந்தியத்தின் சமூகங்களைப் பற்றியதாக இருக்கலாம். சமூக நாயகர்கள், வரலாற்றில் இடம்பிடித்தவர்கள், விடுதலை வீரர்கள், மதகுருமார்கள் பற்றியதாக அமையலாம். அப்பிராந்தி யத்தின் கோயில், விழாக்கள், சாமிகள், வழிபாட்டு மரபுகள், வீர விளையாட்டுகள், பிற பண்பாட்டு நிகழ்வுகள் பற்றியதாகவும் இருக்கலாம். அப்பிரதேசத்திலிருக்கும் பழம்பெரும் கட்டிடங்கள், அரண்மனைகள், கோட்டைகள், தானியக்கிடங்குகள், சுரங்கப் பாதைகள், பெருவழிச் சாலைகள், நினைவுச் சின்னங்கள் பற்றியதாகவும் இருக்கலாம். இவ்வாறாக இன்னும் பிற வகைகளிலும் அமையலாம்.

இத்தகைய வரலாற்றுக்கான செய்திகள் தனித்த ஆவணமாகக் கிடைப்பதில்லை. மக்களிடம் நினைவில் தேங்கியுள்ள செய்திகள், கேள்வியறிவு, கண்ணாரக் கண்ட புலன்வழி கூற்றுகள், பலதரப்பினரிடம் பொதுவில் சொல்லப்படும் விவரங்கள் ஆகியவற்றை வாய்மொழி வரலாற்றுக்கான சான்றா தாரமாகக் கொள்ள வேண்டியுள்ளது. புலன்வழி அறிவே வாய்மொழி வரலாற்றுக்கு ஆதாரமாகும். இது தலைமுறை தலைமுறையாக வருவது *(transmitted)* அனைவராலும் பகிர்ந்து கொண்டிருப்பது *(shared)* சமூகத்தின் கூட்டு ஞாபகத்தில் பேணப்படுவது *(collective consciousness)*. இத்தகைய வாய்மொழிப் பண்புகளைக் கொண்டிருக்கக்கூடிய வழக்காறுகள் வட்டார வரலாற்றை எழுதுவதில் பெரும் பங்காற்ற முடியும்.

பெரும்பாலும் வட்டார வரலாறு பற்றிய ஆய்வுகளில் தொழில்முறை ஆய்வாளர்கள் இன்னும் தீவிரமாக ஈடுபடவில்லை என்று சொல்லலாம். ஒவ்வொரு வட்டாரத்திலும் வரலாற்றில் ஆர்வமுள்ளவர்கள் தனித்தனியே செயல்படுகிறார்கள். இவர்கள் தொழில் முறை ஆய்வாளர்களாக இருப்பதில்லை. வேறு பணிகளில் ஈடுபடுபவர்களாக, பள்ளி ஆசிரியர்களாக, அரசு அலுவலர்களாக இருக்கிறார்கள். தமிழ்ச் சூழலில் சுவடிகள் தேடுதல், கல்வெட்டுகளைக் கண்டறிதல், பிற ஆவணங்களைத் தேடுதல், கோயில் வரலாற்றை ஆராய்தல் எனத் தமிழ் ஆர்வலர்கள் இதில் பெரிதும்

காலவரிசையிலும் வண்ணனை நிலையிலும் அமைந்த பழைய வரலாற்றியல் முறையிலிருந்து விலகிய இப்புதியவகை ஆய்வுகள் பகுப்பாய்வு சார்ந்து அமைந்தன. சமூக வரலாறு, பொருளாதார வரலாறு ஆகிய புதிய தளத்திற்கு நகர்ந்தன.

ஆர்வம் காட்டுகின்றனர். தமிழாசிரியர்களும் இத்தகு பணிகளில் பெரிதும் பங்காற்றி யுள்ளனர்.

வாய்மொழிச் சமூகங்கள் அவற்றின் வரலாறுகளை வழக்காறுகளின் வழியாகவே சேமித்து வைத்துள்ளன. தமிழ்ச் சமூகங்களில் எழுத்து மரபு நீண்ட நெடிய மரபாக இருந்தாலும் வரலாற்றோடு தொடர்புடைய புராணங்கள், கதைப்பாடல்கள், பழமரபுக் கதைகள், நாட்டார் கதைகள், பாடல்கள் வழி தம் வரலாறுகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. பழம்பெரும் வரலாற்றாசிரியர்கள் மரபுச் செய்திகளுக்கும், கர்ண பரம்பரை கதைகளுக்கும் உரிய இடம்கொடுத்துள்ளனர். உலகளாவிய நிலையில் பார்க்கும்போது கூட வரலாறு எழுதுவதில் வாய்மொழி வழக்காறுகளுக்கு இன்றியமையாத இடமிருப்பதைக் காண முடிகிறது.

வாய்மொழி வழக்காறுகளில் கதைப் பாடல்கள் *(ballads)* மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. வரலாறு எழுதுவதில் இவற்றிற்கு முக்கியத்துவம் உண்டு. இன்று தமிழகத்தில் வழக்கிலுள்ள பல்வேறு கதைப்பாடல்கள் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கு நேரடியாகப் பயன்படுபவை. கட்டபொம்மன் கதைப் பாடல்கள், தேசிங்குராஜன் கதை, பொன்னர் சங்கர் கதை, நந்தன் கதை, இராமப்பையன் அம்மானை, கன்னடியன் போர், இரவிக்குட்டிப் போர், மதுரைவீரன் கதை, நல்லத்தங்காள் கதை, கான்சாகிபு சண்டை, பாஞ்சாலங்குறிச்சி அழிவு சரித்திரம் போன்றவை மக்களின் வரலாற்றைக் கூறுவனவாகும். இவை அந்தந்த வட்டாரத்தின் வரலாற்றை அறிவதற்கான ஏராளமான சான்றாதாரங்களைக் கொண்டுள்ளன.

இன்னும் சில கதைப்பாடல்கள் சமூகஞ் சார்ந்தவை. அண்ணன்மார் கதை, காராளர் அம்மானை, வெங்கலராஜன் கதை, வலங்கை மாலை போன்ற கதைப்பாடல்கள் தனிப்பட்ட சாதியாரின் வரலாற்றைக் கூறுபவை.

முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை போன்ற கதைப்பாடல்கள் தனித்தனியான நாட்டார் வீரர்களை முன்னிலைப்படுத்துபவை. இவையுங்கூட சமூக வரலாற்றை மீட்டெடுப்பதற்கு உதவக் கூடியவையே. சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளை அறிவதற்கும்



உதவக் கூடியவை. குமரி மாவட்டத்தில் பழமரபுக் கதையை *(legend)* “ஐதீகம்” என்று அழைக்கிறார்கள். பழங்காலத் தில் ஓர் இடத்தில் நடந்த உண்மை நிகழ்வை தலைமுறை தலைமுறையாகச் சொல்லி வருவதையே ஐதீகம் என்கின்றனர் (ஸ்டீபன் 2004: 179). இதனை நாட்டார் வகைமையாகக் *(ethnic category)* கொள்ளுதல் வேண்டும். ஆய்வாளர்கள் பகுத்தாய்ந்து கூறும் ஆய்வு வகைமைகள் *(analytical category)* உலகனைத்தும் காண்கின்ற வகைமை சார்ந்ததாகும்.

தமிழகத்தில் உரைநடைக் கதைகளில் *(prose narratives)* கூட வரலாற்றுச் செய்திகள் பொதிந்துள்ளன. கதைப்பாடல் கள், நாட்டார் பாடல்கள் போன்றவற்றை கவனிக்குமளவிற்கு உரைநடைக் கதைகளைக் கவனிப்பதில்லை. மக்களிடம் வழங்கும் கதைகளை ஒட்டியே இன்று ஏராளமான வட்டார நாவல்கள் உருவாக்கப் பெற்றுள்ளன கி.ராஜநாராயணன் எழுதிய “கோபல்ல கிராமம்” வாய்மொழியி லுள்ள உரைநடைக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது தான். நீல. பத்மநாபன் எழுதிய “தலைமுறைகள்” நாவலும் இந்த வகையைச் சேர்ந்ததுதான்.



கோபல்ல கிராமம் நாவலானது நாயுடு சாதியார் ஆந்திராவிலிருந்து தமிழகத் திற்குப் புலம்பெயர்ந்த கதையை விளக்க, தலைமுறைகள் நாவல் பூம்புகாரிலிருந்து குமரி மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்த ஏழூர்ச் செட்டிமார் கதையை விளக்குகிறது.

புராணங்களும் தலபுராணங்களும்

"வாய்மொழி மரபு" *(oral tradition)* பெரும்பாலும் "மரபார்ந்த வரலாறு" *(traditional history)* என்றே கருதப் படுகின்றது. வரலாற்று ஆய்வுகளுக்குத் தகுந்த சான்றாதாரங்களை வாய்மொழி மரபு கொண்டிருக்கிறது. ரிச்சர்ட் டார்சன் என்பவர் உலகளவில் புகழ்பெற்ற நாட் டார் வழக்காற்றியல் அறிஞரும் வரலாற் றறிஞரும் ஆவார். இரு துறைகளிலும் வல்லுநர், இருதுறைப் பேராசிரியர் இவர் எழுதிய "நாட்டார் வழக்காறு களும் மரபார்ந்த வரலாறும்" *(Folklore and Traditional History, 1973)* எனும் நூலில் வழக்காறுகளுக் கும் வாய்மொழி வரலாறுக்கும் *(oral history)* உள்ள தொடர்புகளை மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். அவ்வாறே ஜான் வான்சினா *(Jan Vansina)* எனும் அறிஞரும் அவரது "வாய்மொழி மரபே வரலாறு" *(Oral Tradition as History, 1985)* எனும் நூலில் ஆப்பிரிக்காவின் காங்கோ பகுதியில் உள்ள மக்களின் வரலாற்றினை வாய்மொழி மரபிலிருந்து மீட்டுருவாக்கிக் காட்டுகிறார்.

வாய்மொழி மரபில் எண்ணற்ற வழக்காறுகள் இருந்தாலும் தொன்மங்கள் அல்லது புராணங்கள் மிக முக்கியமானவை யாகும். உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு மானி டவியல் அறிஞர் கிளாட் லெவிஸ்ட்ராஸ் வரலாற்றுக்கும் தொன்மத்துக்கும் உள்ள ஆழமான உறவினை வெளிப்படுத்துகிறார். இவரது அணுகுமுறைப்படி நமது புராணங் களில் வரலாற்றுண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. தொன்மவியல் ஆய்வு முறைப்படி இவற்றை வெளிக்கொணர முடியும்.

புராணம் என்பது "பழமை சான்று வரலாறு" எனும் பொருள் பெறும். மணிமேகலையில் முதன்முதலாகப் "புராணம்" என்ற சொல் வருகிறது. புராணம் என்பது "பழங்கதையின் வழி வருவது" *(ancient tale)* என்றும், "வழிவழி வரும் மரபு வரலாறு" *(traditional history)* என்றும் கூறுவது வழக்கம். மணிமேகலையில் சமயக் கணக்கர் தந்திரம் கேட்ட காதையில் "காதல் கொண்டு கடல்வணன் புராணம் ஓதினான்" (மணி. 27: 98-99) என்று வருகிறது. புராணங்களில் 18 புராணங்கள் மகா புராணங்கள் எனப்படும். இவற்றிற்குத் துணையாய் அமைந்தவை 18 உபபுரா ணங்கள். மிகவும் பிற்காலத்தில் தோன்றி யவை அதிபுராணங்கள் இவையும் பதினெட்டுதான். கி.பி. 7ம் நூற்றாண்டளவில் குப்தர்கள் காலத்தில் தான் வடமொழிப் புராணங்கள் செம்மையும் ஒழுங்கும் பெற்றன என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர் (மாதவன் 1995: 15).

நான்கு வேதங்களுக்கடுத்து ஐந்தா வது வேதமாகக் கருதப்படுவது புராணங்க ளாகும். புராதனமாக இருந்து வருவதே புராணம் என்பர். புராணம் செவிவழியாக அறியப்பெற்ற வரலாறு. வேதகாலந் தொட்டு மக்களிடம் வழங்கப் பெற்ற கதை களே புராணங்கள். இந்திய நாகரிகத்தின்

கருவூலம் புராணங்கள் எனலாம். இந்தியாவை தரிசனம் செய்யவும், அதன் சமயக் கோட்பாடு களை அறிந்துகொள்ளவும் புராணங்கள் உதவுகின்றன. இடம், காலம், சமூகம், சமயம், பண்பாடு பற்றிய வரலாறு இவற்றில் பொதிந்து கிடக்கின்றன.

புராணங்கள் புனிதமானவை, கவனத்திற் கெட்டாத காலப் பழமை கொண்டவை. இத்தகைய புராணங்களின் பின்னாளைய நீட்சியாக உருவானவைதான் "தலபுராணங்கள்" இவையும் புனிதமானவை. ஆனால் நினைவுக் குட்பட்ட காலப் பழமை கொண்டவை. சிறு வரலாற்றைக் கொண்டவை. தமிழகத்தில் உள்ளூர் வரலாற்றை ஆராய்வதற்குப் பெரிதும் உதவுபவை தலபுராணங்கள் ஆகும். சைவ, வைணவ எழுச்சிக்காக ஆழ்வார்களும், நாயன்மார்களும் எழுதிய பக்தி இலக்கியங் கள் சமய உணர்வு வளர்க்க முனைந்தாலும் அவற்றினூடாக உள்ளூர் வரலாறுங்கூட பதிவு செய்யப்பெற்றன.

தலபுராணங்கள் சொல்லும் வரலாறு களில் புனைவுகள் இருப்பினும் அவற்றில் உண்மையில்லை என ஒதுக்கிவிட முடியாது. ஆங்காங்கு வழங்கிய வாய்மொழி வரலாறு கள் பதிகங்கள் வாயிலாகப் பதிவு செய்யப் பட்டன. உள்ளூர் வரலாறு, நகர வரலாறு, நாட்டு வரலாறு எனப் பலவற்றை அறிய இவை உதவுகின்றன. டேவிட் சுல்மன் எழுதியுள்ள "தமிழ்க் கோயிற் புராணங்கள்" (*Tamil Temple Myths*) என்ற நூலில் தமிழ் மக்களின் ஊர், சமூகம், சமயம் ஆகிய மூன்றோடும் தல புராணங்கள் எவ்வாறு உறவு பெற்றுப் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை விளக்குகிறார். கிருஷ்ணசாமி 581 புராணங்கள் உள்ளன என்கிறார். ஆனால் கமில் சுவெலபில் 2000 தமிழ்ப் புராணங்கள் உள்ளன என்கிறார்.

தலபுராணங்கள் யாவும் கோயில் எழுந்த ஊர்களின் பண்டைய பெருமையை அறிய உதவும் வரலாற்றாவணமாக உள்ளன. முன்பு பெரு நகரங்களாக இருந்த இடங்கள் இன்று சிற்றூர்களாக மாறிவிட்டதை அறிவதற்குத் தலபுராணங்களே பெரிதும் சான்றாக உள்ளன. எடுத்துக்காட்டாக, "பழையாறை" என்பது ஒரு காலத்தில பெரிய நகரமாகவும், சோழர்களின் தலை நகரமாகவும் இருந்தது. இந்நகரம் பாண்டியனால் அழிக்கப்பட்ட பின்னர், இன்று அதன் பகுதிகள் "பட்டீச்சுரம்" என்றும் "சத்திமுற்றம்" என்றும் தனித்தனி சிற்றூர் களாக உள்ளன. அன்றைய பழையாறை இன்று இல்லை.

அவ்வாறே, சோழர்களின் தலை நகராய் இருந்த உறையூர் இன்று சிறிய ஊராகக் குறைந்து நிற்கிறது. அன்று திருச்சிராப்பள்ளி நகர் இல்லை. காலத்தால் உறையூர் நகரம் சிறிய ஊராகவும், திருச்சி பெருநகர மாகவும் மாறிய நிலையை அறிய முடிகிறது. மேலும், பேரூர் என்பது ஒரு பெரிய நகரம் என்பது அதன் பெயரிலேயே விளங்குகிறது. ஆனால், அது இன்று ஒரு சிற்றூராக மாறி விட்டது. அதனருகில் புதிய சிற்றூராக விளங்கிய கோயமுத்தூர் இன்று பெருநகரமாக விளங்குவதைக் காண்கிறோம். அன்று பேரூர்களாக விளங்கிய பழையாறு, உறையூர், பேரூர் ஆகிய நகரங்களின் பழம் பெரும் சிறப்புகளை விளக்கும் வரலாற்று நூல்களாக இத்தல புராணங்கள் விளங்குகின்றன (மாதவன் 1995: 167-68).

தமிழில் கிடைக்கும் தலபுராணங் களில் மிகுதியான எண்ணிக்கையில் கிடைப்பன சோழநாட்டுத் தலபுரா ணங்கள் ஆகும். கிடைக்கக்கூடிய 142 தலபுராணங்களில் பெரும்பான் மையவை சிவதலங்களுக்குரியவை. தமிழ்த் தலபுராணங்களில் மிகப் பழமையானது திருவிளையாடற் புராணம் ஆகும். இது பாண்டி நாட்டுக்குரியது. இறைவன் 64 திருவிளை யாடல்களையும் புரிந்த ஒரே நாடு இப்பாண்டி நாடே.

தமிழ்த் தலபுராணங்களில் மிகுதியான பாடல் எண்ணிக்கை உடைய மிகப் பெரிய புராணம் திருநெல்வேலித் தலபுராணமாகும். 120 படலங்களையும் 6892 பாடல் களையும் கொண்டது (மாதவன் 1995: 221). மிகச் சிறிய புராணம் திருமூல நகரப் புராணம் 9 சுருக்கங்களும் 120 பாடல்களும் கொண்டது.

வாய்மொழி மரபில் எண்ணற்ற வழக்காறுகள் இருந்தாலும் தொன்மங்கள் அல்லது புராணங்கள் மிக முக்கியமானவையாகும். உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு மானிடவியல் அறிஞர் கிளாட் லெவிஸ்ட்ராஸ் வரலாற்றுக்கும் தொன்மத்துக்கும் உள்ள ஆழமான உறவினை வெளிப்படுத்துகிறார்.

ஒவ்வொரு நாடும் தேசமும் பல வட்டாரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வட்டாரங்களில் உள்ள இடங்கள், ஊர்கள் ஆகியவற்றின் இயற்பெயர்கள் தனிச் சிறப்புடையவை. இந்த வட்டாரங்களில் வாழும் குடிகளின் இனங்களின் சிறப்புப் பெயர்களும் கூட தனிச் சிறப்புடையவை. இவை அந்த வட்டாரத்தின் வரலாறோடு தொடர்புடையவை. ஆகவே தலபுராணங்களோடு ஊர்ப் பெயர்களும்கூட வட்டார வரலாற்றுக்கு உதவுபவையாக உள்ளன.

குடும்ப வரலாறு

வட்டார வரலாற்றை உருவாக்குவதிலும் மீட்டெடுப்பதிலும் "குடும்ப வரலாறு" *(family history)* ஒரு பகுதியாக அமைகிறது. ஒரு வட்டாரத்தின் சமூக அரசியலில் பெரிதும் பங்குபெற்ற நாயகர்களின் குடும்ப வரலாறு, அந்த நாயகரின் கால்வழியில் வருகின்ற வம்சாவளியினர், அவர்களின் குலப் பிரிவுகள் போன்றவை இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாறான வரலாற்று நாயகர்களின் குடும்ப வரலாற்றைத் தேடுவதில் எழுத்து ஆவணங்கள் இருந்தால் அவை உதவக்கூடும். வாய்மொழித் தரவுகளே பெரிதும் உதவ முடியும்.

சில சமயங்களில் குடும்ப வரலாறு என்பது ஒரு தனிமனிதரின் சுயசரிதையாக மாறி நிற்பதையும் காணமுடியும். வரலாற்று நாயகராக விளங்கிய அவருடைய சொந்த சுயசரிதையே கூட அவரது குடும்ப வரலாறாக மாறக்கூடும். மற்றவர்கள் எழுதும் வரைவியலும் *(biography)* குடும்ப வரலாறாகவே கருதப்பெறும். இடம்பெயர்ந்த குடும்பங்கள், குழுக்கள் ஆகியவற்றின் வரலாறு, ஒரு இராணுவ வீரரின் வரலாறு போன்ற வகைகளில் அமையும் விவரிப்புகளும் குடும்ப வரலாறாகவே அமையும். கடிதப் போக்குவரத்து, நாட்குறிப்பு, நிழற் படங்கள், நண்பர்களின் கருத்துகள், அரசுப் பதிவுகள், பிற பதிவுகள் எனப் பல்வேறு வகையான தரவுகள் குடும்ப வரலாற்றுக்கு உதவுபவையாக உள்ளன.

ஈழத்தில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் பெற்றோர் நினைவாகப் பிள்ளைகள் ஒரு சிறு நூலை எழுதி வெளியிடுவது பரவலான வழக்கமாக உள்ளது. 2009 நவம்பரில் நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் சென்றிருந்த போது இவ்வாறான சில நூல்களை அப்பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்னிடம் கொடுத்தனர். இன்றுங்கூட வாய்மொழி நினைவுகளே இத்தகைய குடும்ப வரலாற்றை எழுத உதவுகின்றன.

தானாபதிப்பிள்ளை வரலாறு (2005) இப்போது வே. மாணிக்கம் அவர்களால் எழுதப்பெற்றுள்ளது. கட்டபொம்மனின் வலதுகரமாக செயல்பட்டவர் தானாபதிப் பிள்ளை. பாளைய ஆட்சிமுறையில், வட்டார அளவிலான சமூக உறவுகளில் சாதிகள் / குழுக்கள் மற்ற குழுவினரை முன்வைத்தே தங்களை வரையறுத்துக் கொண்டுள்ளனர். இதனை அறிவதற்குத் தானாபதிப்பிள்ளை வரலாறு ஒரு பயில்களமாக அமைவதைக் காணமுடிகிறது.

இனவரலாறு

தமிழகத்தில் ஐந்திணைகளின் தொடர்ச்சியை வரலாறு நெடுக காணமுடிகிறது. தமிழகம் ஒரு சிறிய பகுதியாயினும் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை ஆகிய புவியியல் கூறுகள் தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் இடம்பெற்றுள்ளன. மலைகளிலும் காடுகளிலும் பல்லாண்டுக் காலம் தனித்தொதுங்கி வாழக்கூடிய முதுகுடிகள் *(aborigines)*, பழங்குடிகள் *(tribes)*, பழமைச் சமூகங்கள் *(traditional societies)* ஆகியவற்றின் வரலாற்றை ஆராய்வதற்கென மானிடவியலில் உருவாக்கப் பெற்றுள்ள ஒரு தனித்துவமான முறையே "இனவரலாறு" *(ethnohistory)* ஆகும். மிகத் தொன்மையான பூர்வ சமூகங்களின் இனவரலாறு எழுதப்பட்டதில்லை. இத்தகு சமூகங்களின் வரலாறுகள் பல்வேறு வடிவங்களில் அவர்களுடைய வாய்மொழி வழக்காறுகளில் மட்டுமே புதைந்து கிடக்கின்றன. ஆனைமலைக் காடர், நீலகிரித் தொதுவர், கோத்தர் போன்ற பல்வேறு தொல்குடிகளின் பூர்வ வரலாறு இன்னும் மாயமாகவே, புதிராகவே உள்ளது.

தொன்மங்கள், பழமரபுக் கதைகள் *(legends)*, கதைப்பாடல்கள் *(ballads)*, நாட்டார் கதைகள் / பாடல்கள், புலப்பெயர்வுக் கதைகள், நாட்டார் புராணங்கள், சொலவடைகள், புதிர்கள், வம்சாவழி வரலாறு, நிகழ்த்துக் கலை வடிவங்கள், வழிபாட்டு மரபுகள், வெளிப்பாட்டு மரபுகள் *(expressive traditions)*, சடங்குகள் போன்ற எண்ணற்ற வழக்காறுகளில் இத்தொல் குடிகளின் வரலாறு புதைந்து கிடக்கின்றது.

ஒரு வட்டாரத்தின் வரலாற்றை முழுமைப் படுத்திக் காண வேண்டுமானால், அந்த வட்டாரத்தில் வாழக்கூடிய முதுகுடிகள், பழங்குடிகள் ஆகியோரைத் தவிர்த்து ஆராய்ந்துவிட முடியாது. ஏனெனில் தமிழ்ச் சமூகத்தின் மிக நீண்ட அறுபடாத தொடர்ச்சியுடைய மரபில் தொல்குடிகளின் மரபு சாதியச் சமூகம் வரைக்குமான தொடர்ச்சியுடன் *(tribe – caste continuum)* நீளுவதைக் காணமுடிகிறது. இன்று சைவத்தின் ஆதிமூலராய் விளங்கும் சிவபெருமான் பழங்குடி மக்களிடம் நாச்சியப்பனாகவும், மலையப்பனாகவும் இருப்பதைக் காண்கிறோம். பழங்குடிகளின் சிவனே இந்திய தேசத்தின் பெருஞ் சமயங்களில் சிவபெருமானாய்ப் பரிணமித்து இருக்கிறார். இவ்வாறு தொல்குடிகளின் பல்வேறு மரபுகள், நமது பெரும் பண்பாட்டின் எண்ணற்ற தளங்களில் ஊடுருவி கால ஓட்டத்தில் விரிவுபட்டிருப்பதைக் காணமுடிகிறது.

இந்திய தேசத்தின் "பெருமரபு" எனக் கூடிய கூட்டு மரபில் *(great tradition)* எண்ணற்ற தொல்குடிகளின் "தனிமரபுகள்" *(little traditions)* வியாபித்திருக்கின்றன (பக்தவத்சல பாரதி 2007: 21-35). ஆதலின், வட்டார ஆய்வுகளில் கூட்டு மரபுக்கும் தனி மரபுகளுக்கும் இடையேயான அறுபடாத தொடர்ச்சியினை ஆராய்வது அவசியமானதாகும். இதில் தொல்குடிகளின் பூர்வ இனவரலாறு முக்கியத்துவம் பெறுகிறது.

சமூக வரலாறு

வரலாறு நெடுக பொருள் உற்பத்தியின் ஊடாகச் சமூகங்கள் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளன. இந்தப் போராட்டத்தின் ஊடாகவே சமூகங்களின் வரலாறு கட்டமைக்கப்படுகிறது என்று மார்க்சியவாதிகள் தீர்க்கமாக உணர்த்தினார்கள். கூடவே சமூக வரலாற்றின் முக்கியத்துவத்தையும் உணர்த்தினார்கள். வரலாறு எழுதுதல் என்பது வரலாற்றை அறிவதற்கன்று. சமூகத்தை மாற்றியமைக்க வரலாறு எழுதப்பட வேண்டும் என்றார்கள். மார்க்சியத்தில் இக்கருத்தியல் வலுவாக உருவானது. ஆளுவோர் ஆளப்படுவோர் என்ற வர்க்க முரண் பாட்டில் வெகுசன மக்களாகிய ஆளப்படுவோரின் பார்வையில் வரலாறு எழுதும்முறை வலியுறுத்தப்பட்டது. மன்னர்களின் வரலாற்றை நாட்டின் வரலாறாக விவரிக்கும் "மேலிருந்து நோக்குதல்" எனும் நிலையைப் புறந்தள்ளிவிட்டு உழைக்கும் மக்களின் வரலாற்றை முன்னிலைப்படுத்தி ஆராய்வது "மக்கள் வரலாறு" ஆகும். இது "அடித்தளத்தி லிருந்து எழுதுதல்" *(history from below)* ஆகும்.

இதனை மானிடவியல் அறிஞரும், வரலாற்றறிஞருமாகிய பெர்னார்டு கான் *(Bernard S. Cohn)* '*proctological history*' என்று பின்வருமாறு வரையறுக்கிறார். ரிச்சர்ட் டார்சன் போன்றே இவரும் இருதுறை பேராசிரியர். இவர் சொல்கிறார்: "*Proctological history is the study of the masses, the inarticulate, the deprived, the dispossessed, the exploited, those groups and categories in the society seen by earlier and more elitist historians, not as protagonistic but as passive, and therefore not a proper historical focus.......... The historians who study from the bottom up have demonstrated the possibility of a more complex and rounded history (Cohn 1994: 39).*

"விளிம்புநிலை மக்கள்" அல்லது "அடித்தள மக்கள்" எனக்கூடிய சமூக பொருளாதார நிலையில் பின்னுக்குத் தள்ளப்பட்ட மக்கள் குறித்த மாற்று விவாதங்கள் 1970களின் பிற்பகுதியில் தீவிரம் பெற்று 1980களில் அதற்கான தனித்த,

தமிழில் கிடைக்கும் தலபுராணங்களில் மிகுதியான எண்ணிக்கையில் கிடைப்பன சோழநாட்டுத் தலபுராணங்கள் ஆகும். கிடைக்கக்கூடிய 142 தலபுராணங்களில் பெரும்பான்மையவை சிவதலங்களுக்கு உரியவை.

முறையான வடிவத்தைப் பெற்றன. ரணஜித் குகா தலைமையில் 1982 லிருந்து வெளியான "விளிம்புநிலை ஆய்வுகள்" *(Subaltern Studies)* வட்டார வரலாற்றையும், மாற்று வரலாற்றை யும் மையமிட்டு எழுதப்பெற்றவை யாகும்.

பழைய வரலாற்றுத் தடத்திலி ருந்து விடுபட்டு "மாற்று வரலாறு" *(Alternative History)* ஒன்றை உருவாக்கும் காலகட்டத்தில் நாம் உள்ளோம். "புதிய வரலாறு" *(New History)*, "சாமானியர் வரலாறு" *(Gross roots History)*, "அடித்த விளிம்பு நிலையினர் வரலாறு" *(History of Maginals)* என்ற வரலாற்றுப் பள்ளிகள் மரபுவழி வரலாற்றுக்கு மாற்றாக உரு வாகியுள்ளன (ஆ. சிவசுப்பிரமணியன் 2010: 20).

தமிழ்ச் சமூகத்தின் நீண்ட வரலாற் றில் அடித்தள மக்கள் இன, மொழி, சமூக, சமய, இசை என்பன போன்ற பல்வேறு தளங்களில் அந்நியப்பட்டு உள்ளனர். பலர் முதுகுடிகளாக மலைக ளிலும் காடுகளிலும் வாழ்கின்றனர். பலர் நாடோடிகளாக அலைந்து வாழ்கின்றனர். பலர் அடித்தளச் சாதியாராக சாதி அடுக்கில் ஒடுக்கப்பட்டுள்ளனர்.

விளிம்புக்கு விளிம்பாக அதி விளிம்புச் சமூகத்தாராக ஒடுக்கப்பட் டுள்ள இவர்கள் அனைவருமே வரலாற் றின் கால ஓட்டத்தில் தங்களின் சமூகப் பெறுமானத்தையும், இருத்த லையும் இழந்து நிற்கின்றனர். இவர்களுக்கான வரலாறு இதுவரை எழுதப்பெறவில்லை. இதனை இனங்கண்டு, மீட்டுருவாக்கம் செய்து, தங்கள் சுயத்தை நினைவு கொள்வதும், மறுநிர்ணயம் செய்வதும் நீண்ட, நெடிய அறுபடாத வரலாற்றைக் கொண்ட தமிழ்ச் சூழலில் தேவையான ஒன்றாகும். இதனை "அழிவுமீட்பு இனவரலாற்று வரைவியல்" *(salvage ethnohistorio graphy)* என்று மானிட வியலர்கள் வகைப்படுத்துகின்றனர்.

அழிவு மீட்பு இனவரலாறு உள் ளிட்ட மக்கள் வரலாறு யாவும் வட்டார வரைவியலின் கீழ் அமையும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய வரலாறு அறிவு ரீதியான வரவேற்புக் குரியது. ஏனெனில் அடித்தள மக்களுடைய இன்றைய தாழ்வின் ரணத்திற்கு நேற்றைய உயர்வு மருந்தாக அமைய லாம் அல்லது நாளைய எழுச்சிக்கு ஊக்கமாக மாறலாம். இந்நிலையில் இத்தகைய "இனமீட்பு" வரலாறுகள் தமிழ்ச் சமூகத்தின் நீண்ட வரலாற்றின் ஏற்ற இறக்கங்களைச் சமன் செய்வதற்கும், சமகாலச் சமூக மேம்பாட்டிற்கும் உதவக் கூடியவையாக அமையும்.

இன்று தேவேந்திர குல வேளாளர் கள் சீர்மரபினர் என்ற அடையாளத்தி லிருந்து விடுபட்டு புதிய அடையாளத்துடன் வாழ விரும்புகின்றனர். அதனால் அட்ட வணைச் சாதியிலிருந்து தங்களை நீக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

வரலாறு எழுதுவதில் அடித்தளப் பார்வை அவசியமானது. ராஜராஜன் பெரியகோயிலைக் கட்டினார் என்பதே வரலாறு. ஆயிரக்கணக்கான உழைப் பாளிகள் அல்லவா கட்டினார்கள்!, மகாத்மா காந்தி சுதந்திரம் வாங்கித் தந்தார் என்கிறோம். இலட்சோப லட்சம் மக்கள் அல்லவா விடுதலைப் போரில் ஈடுபட்டனர். கல்லணை கட்டியது யார்?, மூவேந்தர்க ளின் வெற்றிகளுக்குப் பின்னால் இலட்சக் கணக்கான வீரர்கள்தானே போரிட்டனர். இவ்வாறு எல்லா நிகழ்வுகளுக்கும் கேள்வி கேளுங்கள். அப்போது தெரியும் அது மன்னர் வரலாறா? மக்கள் வரலாறா? என்பது. அடித்தள வரலாற்றுக்கும், மாற்று வரலாற்றுக்கும் இத்தகைய கேள்விகளே அடித்தளமாகும்.

வரலாறு எழுதும் முறை பற்றி இந்தியாவின் புகழ்பூத்த வரலாற்றறிஞர் ரொமிலா தாப்பர் எழுதிய "வரலாறும் வக்கிரங்களும்" *(Past and Prejudice)* எனும் ஆய்வு தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இந்திய வரலாற்றியலுக்கு எத்தகைய முறையியலை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற ஒரு பெரிய விவாதம் நடைபெற்றபோது தாப்பர் எழுதிய மிக முக்கியமான கட்டுரையாகும் இது.

வட்டார வரலாற்றில் வரலாறும் வழக் காறுகளும் இணைத்து ஆராயப்படுவது

வரலாறு எழுதுதல் என்பது வரலாற்றை அறிவதற்கன்று. சமூகத்தை மாற்றியமைக்க வரலாறு எழுதப்பட வேண்டும் என்றார்கள். மார்க்கசியத்தில் இக்கருத்தியல் வலுவாக உருவானது. ஆளுவோர் ஆளப்படுவோர் என்ற வர்க்க முரண்பாட்டில் வெகுசன மக்களாகிய ஆளப்படுவோரின் பார்வையில் வரலாறு எழுதும்முறை வலியுறுத்தப்பட்டது.

தவிர்க்க முடியாததாகும். இதனை 1908இல் ஜார்ஜ் கோம் *(George Lawrence Gomme)* எழுதிய "வரலாற்று அறிவியல் போன்றது நாட்டார் வழக்காற்றியல்" *(Folklore as an Historical Science, 1908)* நூலில் மிக விரிவாக ஐரோப்பிய, அமெரிக்க தேசங்களை முன் வைத்து நிறுவியுள்ளார். பின்னிஷ் சிந்தனைப் பள்ளியில் இதற்கு இறுதி வடிவம் கொடுக்கப் பட்டது. இதையொட்டியே பரவல் கோட்பாடும் *(diffusionist theory)*, வரலாற்று நிலவியல் முறையும் *(historical – geographical method)* உருவாக்கப்பட்டன. இக்கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆறு. இராமநாதன் நிட்டூரி கதையின் 25 வடிவங் களையும், சின்னண்ணன் - சின்னச்சாமி கதை, கதைப்பாடலின் 25 வடிவங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றின் வட்டார ரீதியிலான பரவலை ஆராய்ந்தார்.

நாட்டார் வழக்காற்றியல் அறிஞருக்கு வரலாற்று அணுகுமுறை தேவைப்படுவதும், வரலாற்றறிஞருக்கு நாட்டார் வழக்காற்றியல் அணுகுமுறை தேவைப்படுவதும் மிகவும் தவிர்க்க முடியாதது. ஏனெனில் வரலாறு எப்போதும் நிகழ்காலத்தில் வந்து முடிய வேண்டும். கடந்த காலமும் நிகழ்காலமும் பொருள்பொதிந்த வகையில் விளக்கம் பெறுதலே வரலாற்றாய்வின் மிக முக்கியமான நோக்கமாகும். வரலாற்றாசிரியன் எவ்வாறு வெற்றி பெறுகிறான் என்பதைப் பின்வரும் கருத்துக்கள் வழி அறிய முடியும்.

1. *"The functions of historian is neither to love the past nor to emancipate himself from it but to master and understand it as the key the understanding of the present" (Carr 1973: 26).*
2. *"Great history is written when the historian's vision of the past is illuminated by an insight into the problems of the present" (Carr 1973: 37).*
3. *"The past which the historian studies is not a dead past, but a past which in some sense is still living in the present" (Collingwood, The Idea of History; quoted in Carr 1973: 20).*

மேற்கூறிய கருத்தை நோக்கும் போது வரலாறு என்பது நடந்து முடிந்துவிட்ட கதையல்ல. இன்று வாழும் மரபோடு, அது எவ்வாறு தொடர்கிறது என்பதற்கு விளக்கம் தந்தாக வேண்டியுள்ளது. இதற்கு வரலாறும் நாட்டார் வழக் காற்றியலும் அல்லது வரலாறும் மானிடவியலும் சார்ந்த கண்ணோட் டங்கள், அணுகுமுறைகள் தேவையா கின்றன.

இதனை, நமது சூழலிலிருந்து அறிவோம். கட்டபொம்மன் வரலாற் றில் இரண்டு பரிணாமங்கள் இருப் பதை வாய்மொழி வரலாற்றியல் ஆய்வு மூலம் ஆ. சிவசுப்பிரமணியன் (2003: 11-15) விளக்கியுள்ளார். "கிழக்கிந்தியக் கம்பெனியார் நம்மை ஆளத் தொடங்கியபோது அவர்கள் ஆட்சியை எதிர்த்து பாளையக் காரர்கள் போரிட்டனர். இவர்களுள் ஒருவர் வீரபாண்டிய கட்டபொம்மன். போரில் தோற்றுப்போய் புதுக் கோட்டையில் அடைக்கலம் புகுந்தி ருந்த இவரைக் கைது செய்து கயத்தாறில் தூக்கிலிட்ட பின்னர் இவர் வணக்கத்திற்கும் போற்று தலுக்குமுரிய வீரராகி இன்று வரை மக்கள் மனதில் நிலை பெற்றுள் ளார்.

ஆயினும் இவர் போராடிய காலத்தில் இவரது கட்டுப்பாட்டி லுள்ள படைவீரர்களைத் தவிர



சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் இப் போராட்டத்தில் கலந்துகொள்ள வில்லை. இதற்கான காரணத்தைக் கிழக்கிந்திய கம்பெனி ஆவணங்கள் எவையும் நமக்குக் குறிப்பிடவில்லை. ஆனால் நட்டாத்தி, குறும்பூர் பகுதிகளில் வாழும் நாடார் சாதியினரிடமும் ஆழ்வார் திருநகரி பிராமணர், கோனார் சாதியின ரிடமும் வழங்கும் வாய்மொழிக் கதைகள், வழக்கமான குறுநில மன்னர் களின் நடைமுறைகளிலிருந்து கட்டபொம்மன் மாறுபடவில்லை என்பதை உணர்த்து கின்றன.

இதனால் கட்டபொம்மனுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகளுக் குமிடையே நிகழ்ந்த சண்டையை ஜமீன்தார்களுக் கிடையில் அவ்வப் போது நிகழும் மோதலாகக் கருதினார் கள். விடுதலைப் போராட்டமாக அவர்கள் கருதவில்லை." இத்தகைய வாய்மொழித் தரவுகளே மாற்று வரலாற்றை இனங்காட்டுகின்றன. வாய் மொழி வழக்காறுகளின் ஒவ்வொரு வகையும் ஏதோவொரு வரலாற்றைக் காட்டுவதாக உள்ளது. இதனை எண்ணற்ற நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

கட்டபொம்மனைப் போன்றே கள்ளர் சமூகத்திற்கென்றும் இரண்டு வரலாறுண்டு. பாரம்பரியமாக ஊர்க்காவல் செய்து வந்த கள்ளர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் காவல்துறையின் நலன் காக்கப்படுவதற்கு அவர்கள் குற்றச் சாதியாராக முத்திரை குத்தப்பட்டார்கள். மாட்டுக்கு மூக்கணாங் கயிறு போல கள்ளர் சமூகத்திற்குக் குற்றவாளிப் பழங்குடிச் சட்டம் 1871இல் போடப்பட்டது. காலனிகளின் ஊக்கத்தால் கள்ளர்களுக்கு எதிரான இயக்கத்தில் *(anti - Kallar movement)* இடையர்களும் மாற்றவர்களும் பங்கேற்றார்கள் (ஆனந் பாண்டியன் 2009). *திண்டுக்கல் மாவட்டம்* வேடசந்தூர் வட்டத்தில் உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் அம்மையப்பகோன். இவர் கள்ளர்களுக்கு எதிரான இயக்கத்தில் தலைமையேற்று தீவிரமாகப் பங்கேற்றவர். இவர் இடையர் சமூகத்தைச் சேர்ந்தவர்.

இவர் கள்ளருக்கு எதிராக நடத்திய இயக்கத்தின் போது அரசியல் நிலை வேறுபட்டதாக இருந்தது. ஆனால் இன்றைய சமூக, அரசியல் அசைவியக்கத்தில் புதிய பரிணாமங்கள் உருவாகியுள்ளன. எதிர்முனைகளில் செயல்பட்ட இருவேறு சமூகங்களின் வழக்காறுகளை ஆராய்ந்து, அதனை ஒரு நிகழ்கால வட்டார வரலாறாக இணைத்து இனங்காண்பதற்குக் கடந்த காலந்தொட்டு இன்று வரையிலான வாய்மொழி வழக்காறுகளே உதவ முடியும்.

கடந்த காலத்தில் "கள்ளர் கொடுமை" களை அனுபவித்த மற்ற சாதியாரின் கூற்று ஒரு வகையானதாக உள்ளது. ஆனால் முக்குலத்தோர் கூற்று வேறாக உள்ளது. கள்ளர்கள் மேற்கொண்ட பழைய "ஊர்க் காவல்" முறையை பிரிட்டிஷ் காவல்படை பறித்துக்கொண்டது. இன்றைய நிலையில், அதுவும் அரசியல் தளத்தில் "அயலவர்" கூற்று "தம்" குரலாக மீண்டெழுந்துள்ளது. "வெற்றி கொண்டு வா என்றால் வெட்டிக் கொண்டு வருவாய்" என்று டாக்டர் சேதுராமன் பெருமிதத்துடன் பேசியது மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் குரல். இது முக்குலத்தோரின் அரசியல் தளம் சார்ந்த குரலாகும். இன்று அரசியல் தளத்தில் முழங்கப்படும் இத்தகைய குரல்கள் சமூகத் தளத்தில் எவ்வாறுள்ளன என்பது பற்றிய சமூக வரலாறு நம்மிடமில்லை. வரலாறு சமூகத்தின் பார்வையில் எழுதப்பட வேண்டும். எந்தச் சமூகத்தின் பார்வையில்? இதுவே சமூக முரண்பாடுகளின் அரசியலாக செயல்படுகிறது. ஜான் பாண்டியன் எவ்வாறு ஒரு தலைவராக உருவானார் என்பது பற்றிய நிகழ்கால வட்டார வரலாறும் வரலாற்றியலின் பங்களிப்பாக உருவாக வேண்டும். இவை போன்று இன்னும் எத்தனையோ சமகால நிகழ்வுகளின் அசைவியக்கங்களை வட்டார வரலாற்றியல் நோக்கோடு அணுகப்பட வேண்டும். கடந்தகால சமூக உறவுகளிலிருந்து சமகாலத்திற்கும், சமகாலத்திலிருந்து வருங் காலத்திற்குமான சமூக வரலாறு எழுதப்பட வேண்டும். இதற்கு வட்டார வழக்காறுகள் உதவும். நாட்டார் வழக்காற்றியல் துறையின் அணுகுமுறைகள் உதவும்

பின்னுரை: நுண் வரலாறு எழுதுதல்

வட்டார வரலாறு எழுதுவதில் பல்வேறு அணுகுமுறைகள், கருத்தாக்கங்கள், ஆய்வுமுறைகள் இருப்பதை இப்போது நம்மால் உணர முடிகிறது. இந்நிலையில் *'local history'* என்ற கருத்தினம் ஒரு "புவிபரப்பு" அல்லது "வட்டாரம்" சார்ந்தது மட்டுமன்று என்பதை தெளிவாகவே உணரமுடிகிறது.

குறிப்பிட்ட நிலப்பரப்பு சார்ந்தும், அங்குள்ள புவியியல் கூறுகள் சார்ந்தும், கட்டிடங்கள், கோயில்கள் சார்ந்தும், வாழும் சமூகங்கள் சார்ந்தும், சமூக நாயகர்கள் சார்ந்தும், தனிநபர்கள் சார்ந்தும், குடும்பங்கள் சார்ந்தும், அவற்றின் வம்சாவளியினர், கால்வழியினர் சார்ந்தும், தனித்தொதுங்கிய பூர்வகுடிகள் சார்ந்தும், இன்னும் பல்வேறு நிலைகள் சார்ந்தும் அவற்றின் வரலாறுகளை உருவாக்க வேண்டியுள்ளது. இவையனைத்தும் ஒரு முழுமையின் பகுதிகளாக விளங்குகின்றன. உறுப்புகள் சேர்ந்து உடலை உருவாக்குவது போல் இப்பகுதிகள் யாவும் ஒருங்கிணைந்தே வட்டார வரலாற்றை உருவாக்க முடியும். இந்நிலையில் ஒவ்வொரு பகுதியின் வரலாறும் "நுண் வரலாறு" *(micro history)* என்பதாகவே அறியப்பட வேண்டும்.

"நிலம்" அல்லது "வட்டாரம்" சார்ந்து மட்டும் வரலாறு அமைய முடியாது. மற்ற கூறுகள் யாவும் "நிலம்" சாராதவை. ஆகவே நிலம் சாராத கூறுகளை முன்வைக்கும் வரலாறு நிலம் சார்ந்து அடையாளப் படுத்த முடியுமா? அதனாலேயே வட்டார வரலாற்றை "நுண் வரலாறு" என்று அடையாளப்படுத்தலாமா? என்ற வினா எழுகிறது.

இங்கு, நுண் வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட சிறிய விடயத்தை முன்வைத்து மேற்கொள்ளப்படும் மிக நுட்பமான, ஆழமான

கடந்த காலத்தில் "கள்ளர் கொடுமை"களை அனுபவித்த மற்ற சாதியாரின் கூற்று ஒரு வகையானதாக உள்ளது. ஆனால் முக்குலத்தோர் கூற்று வேறாக உள்ளது. கள்ளர்கள் மேற்கொண்ட பழைய "ஊர்க்காவல்" முறையை பிரிட்டிஷ் காவல்படை பறித்துக்கொண்டது.



வரலாற்றுத் தேடுதலாகும். இத்தகைய தேடுதலானது ஒரு தனித்த நிகழ்வு பற்றியதாக இருக்கலாம், ஒரு கிராமத்தில் வாழும் குறிப்பிட்ட சமூகத்தாரைப் பற்றியதாக இருக்கலாம் அல்லது ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தனிமனிதரைப் பற்றியதாக இருக்கலாம். ஆகவே, "வட்டார வரலாறு" என்பதற்குப் பதிலாக "நுண் வரலாறு" என்பதாக அறியப்படலாம்.

இத்தகைய நுண் வரலாறு எழுதுதல் என்பது 1970களில் இத்தாலியில் தோன்றிய ஒரு வகையாகும். *'Microstoria'* எனப்பட்ட இத்தகு சிறிய அலகைப் பற்றிய மிக நுட்பமான, ஆழமான தேடுதல் என்பது அப்போது சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு பற்றியதாக அமைந்தது. 1980, 90களில் பிரான்சில் *Annals School*, ஜெர்மனியில் *Alltagsgeschichte* (வரலாற்று மானிடவியல்) ஆகிய சிந்தனைக் குழுவினரைச் சார்ந்து இம்முறை வளர்த்தெடுக்கப்பட்டது.

ஆதலின், "வட்டார வரலாறு" என்பதை "நுண்வரலாறு" என்றும்கூட சுட்டுவது பொருத்தமானதாக அமையக்கூடும்.

துணைநூல்கள்

சிவசுப்பிரமணியன்,ஆ. 2002.*அடித்தள மக்கள் வரலாறு*. சென்னை: மக்கள் வெளியீடு.

சிவசுப்பிரமணியன்,ஆ.2003. "மாற்று வரலாற்றைத் தேடி. *வல்லினம்* இதழ் 4-5: 11-15.

சிவசுப்பிரமணியன்,ஆ.2001. *கிறித்தவமும் சாதியும்*. நாகர்கோவில்: காலச்சுவடு.

சிவசுப்பிரமணியன்,ஆ. 2008. *வரலாறும் வழக்காறும்*. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

தாப்பர், ரொமிலா. 1972. "வரலாறும் வக்கிரங்களும்" *ஆராய்ச்சி* மலர் 2 இதழ் 3.

பக்தவத்சல பாரதி. 2003. "விளிம்புநிலை ஆய்வுகளின் வரலாறு" *வல்லினம்* இதழ் 4-5: 4-10.

பக்தவத்சல பாரதி. 2007. *தமிழகப் பழங்குடிகள்*. புத்தாநத்தம்: அடையாளம்.

பிலவேந்திரன், ச.(பதி.). 2004. *சனங்களும் வரலாறும்: சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறுகள்*. புதுச்சேரி: வல்லினம்.

மாதவன், இரா. 1995. *தமிழில் தலபுராணங்கள்*. தஞ்சாவூர்: பாவை வெளியீட்டகம்.

ஸ்டீபன், ஞா. 2004. "வாய்மொழிக் கதைகளும் சமுதாய வரலாறும்". ச. *பிலவேந்திரன்*(பதி.), 2004,

நூலிலுள்ள கட்டுரை.

Axtell, J. 1979. "Ethnohistory: An Historian's Viewpoint". Ethnohistory 26(1): 3-4

Baum, W K. 1974. Oral History in the United States, in Oral History. 15-29,

Blackburn, Stuart H. & A. K. Ramanujan, (eds.) 1986. Another Harmony: New Essays on the Folklore of India. Berkley: University of California Press.

Bornat, J. (ed.) 1994. Reminiscence Reviewed: Perspectives, Evaluations,

Achievements, Buckingham: Open University Press,

Bynum, David Y. 1973. "Oral Evidence and the Historian", in Dorson (1973).

Carr, E. H., 1973 (1961, 1964), What is History? New York (Pelican Edition).

Caunce, S. Oral History and the Local Historian, London: Longman, 1994

Champakalaxmi, R. 1987. " Historiography of South India: New Directions".

Presidential Address , South Indian History Congress, 7th Session, Madras.

Claus, Peter J. & Korom, Frank, 1991. Folkloristics and Indian Folklore, Udupi.

Cohn, Bernard S.. 1994 (1987). An Anthropologist among the Historians

And Other Essays. New Delhi: Oxford University Press.

Daaku, Kwame Y. 1973. "History in the Oral Traditions of the Akam", in Dorson 1973.

Daaku, Kwame Y. 1992. "The Nexus between Oral and Written Traditions" Anundam. Vol. I

Datta, Birendranath. 2002. Folklore and Historiography. Chennai: National Folklore Support Centre

DeMallie, Raymond J. 1993. "These Have No Ears": Narrative and the Ethnohistorical Method". Ethnohistory 40: 515–538.

De Lee, N., Oral History and British Soldiers' Experience of Battle in the Second World War, in Addison, P & Calder, A (eds.) Time To Kill: The Soldier's Experience of War in the West, 1939-1945: 359-368, London: Pimlico, 1997

Dorson, Richard M., (ed) 1972. Folklore and Folklife: An Introduction, Chicago: University of Chicago Press.

Dorson, Richard M., (ed.) 1973. Folklore and Traditional History, The Hague & Paris, Mouton.

Dorson, Richard M., 1973a, "Traditional History of the Scottish Highlanders", in Dorson 1973.

Dorson, Richard M., 1978. Folklore in the Modern World, The Hague & Paris.

Dundes, Alan, (ed.). 1965. The Study of Folklore, New York: Prentice- Hall.

Evans, G.E. 1987. Spoken History, London: Faber,

Evans, G.E. 1993. The Crooked Scythe: An Anthology of Oral History, London Faber,

Fenton, W. N. 1966. "Field Work, Museum Studies, and Ethnohistorical Research". Ethnohistory 13 1/2: 75.

Finberg, HPR; Skipp, VHT.1967. Local History: Objective and Pursuit. David & Charles.

Gomme, George Lawrence. 1908. Folklore as an Historical Science, Detroit: Singing Tree Press.

Harkin, Michael. 2010. "Ethnohistory's Ethnohistory: Creating a Discipline from the Ground Up". Social Science History 34: 113–128.

Levi-Strauss, Claude. 1980 (1979). Myths and Meaning, New York: Schocken Books.

Lummis, Trevor. 1992. "Oral History", in Richard Bauman 1992.

Lurie, N. 1961. "Ethnohistory: An Ethnological Point of View. Ethnohistory 8: 83

MacHenry, R., (ed.) 1993. The New Encyclopaedia Britannica (Macropaedia).

Marziali, Carl (2001-10-26) "Mr. Boder Vanishes." "This American Life." Retrieved from

Michael E. Harkin, "Ethnohistory's Ethnohistory," Social Science History, Summer 2010, Vol. 34#2

pp 113-128. National Curriculum - level descriptions

Pandian, Anand.2009. Crooked Stalks: Cultivating Virtue in South India. Delhi: Oxford University Press.

Peter Burkk, 2003. History as Social Memory – Varieties of Cultural History. Polity Press.

Russell, Bertrand. 1957. Understanding History and Other Essays, New York: Philosophical Library.

Schieffelin, E. and D. Gewertz (1985), History and Ethnohistory in Papua New Guinea, 3

SDFML, 1984 (1972). Standard Dictionary of Folklore Mythology and legend, Ed. M. Leach, San Fransisco: Harper & Row.

Sills, David L., (ed.) 1972. International Encylopaedia of Social Sciences.

Simmons, W. S. 1988. "Culture Theory in Contemporary Ethnohistory". Ethnohistory 35 (1): 10.

Thapar, Romila, 1994 (1973) The Past and Prejudice. New Delhi: Publications Division, Ministry of Information and Broadcasting, Govt. of India.

Thompson, P.R. 1988. The Voice of the Past: Oral History, Oxford: Oxford University Press.

Thomson, A., Anzac, 1990. Memories: Putting Popular Memory Theory into Practice in Australia, In Oral History.

Vansina, Jan. 1973. Oral Tradition: A study in Historical Methodology.

Chicago: Aldine Publication Company. Harmondsworth.

Vansina, Jan. 1985. Oral Tradition as History, sMadison, Wis.: University of Wisconsin Press.





தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்

ந.முத்துமோகன்

ந.முத்துமோகன்,

மதுரைப் பல்கலைக்கழக குருஞானப் பீடத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவர்.

மார்க்சியச் சிந்தனையில் நம்பிக்கைகொண்டவர். பல்வேறு தத்துவ நூல்களை ஆய்வுகளை எழுதியிருப்பவர்.

இது ஒற்றைப்படையானது அல்ல

தமிழ் அடையாள அரசியல் என்பது ஒற்றைப்படையான, ஒருபடித்தான கருத்தாக்கம் அல்ல. அதனுள் பல்வேறுபட்ட போக்குகள் புதைந்தும் வெளிப்பட்டும் கிடக்கின்றன. அதனுள் பல சமூக வர்க்கங்கள், சாதிகள் ஆகியவற்றின் நலன்களும் மதங்கள் மற்றும் மொழிவழிக் கருத்தியல்களும் திணிந்து கிடக்கின்றன. ஆதிக்க அரசியலும் விடுதலை அரசியலும் குமைந்து கிடக்கின்றன. இக்கருத்தாக்கத்தினுள் ஆழ்ந்து கிடக்கும் உட்போக்குகளை காலநேர்கோட்டில் முதலில் வரிசைப்படுத்திக் கொள்வோம். ஆறுமுக நாவர் ஈழப்பின்னணியில் துவக்கிய ஆகமச் சைவ மீட்டுருவாக்கம், கால்ட்வெல்லின் திராவிட மொழிகள் குறித்த ஒப்பாய்வு நூல், பண்டைத் தமிழ் நூல்கள் அச்சேற்றம் - பரவல், இலக்கிய வழி வரலாற்று வரைவியல், வைகுண்ட சாமி, வள்ளலார் போன்றோரின் சிந்தனைகள், அயோத்திதாச பண்டிதரின்

பூர்வ பௌத்தம், நீதிக்கட்சியின் பிராமணரல்லாதார் இயக்கம், பெரியாரின் வரவும் சுயமரியாதைச் சிந்தனையும், சிங்காரவேலர், ஜீவா பங்கேற்ற சுயமரியாதைச் சமதர்மம் என்ற இடையீடு, சைவ சித்தாந்த மீட்டுருவாக்கமும் தகவமைப்பும், தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், அண்ணா முதலானோரின் வருகையும் தமிழ்மொழி - இலக்கியம் சார்ந்த அரசியலும், நாடகங்கள் - திரைப்படங்கள் - மேடைப் பேச்சு சார்ந்த வெகுசன ஊடக அரசியல், இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளின் தோற்றம், தி.மு.க அரசியல் அதிகாரத்தை ஈட்டிய நிகழ்வு, ஈழத்தில் தமிழர் போராட்டங்கள், அ.தி.மு.க, ம.தி.மு.க, பெரியார் திராவிட கழகம், தமிழ் தேசிய பொது உடமைக் கட்சி போன்றவை, ஈழத்தில் இப்போதைய இனப்படுகொலை என நீண்ட நெடிய ஒரு வரலாற்று வரிசையினை இத்தலைப்பின் கீழ் அடுக்கலாம்.

இத்தனை இயக்கங்களும் கருத்தியல்களும் ஒன்றுக்கொன்று இயைந்தவை அல்ல என்று எளிதில் சொல்லிவிடலாம். இன்னும் கூடுதலாக, அவற்றுக்கிடையில் தீவிர முரண்களும் உண்டு என்பதை முதலில் பதிவு செய்துகொள்ளுவோம். தொடர்ச்சியும் தொடர்ச்சியின்மையும் கொண்ட போக்குகள் இவை எனலாம். மேற்குறித்த போக்குகளில் சில தமிழ் அடையாள அரசியலை மேட்டுக்குடி சார்ந்ததாக உருவாக்க முயற்சித்துள்ளன. இன்னும் சில அதனை அடித்தள மக்களை நோக்கி இட்டு வந்திருக்கின்றன. இக்கட்டுரையில் தமிழ் அடையாள அரசியலை அதன் உள்ளீடாகத் தொழில்பட்ட எதிரெதிர் போக்குகளாகப் பகுத்து அவற்றிற்கிடை யிலான உறவுகளைக் கண்டறிவதற்கு முயற்சி செய்கிறோம். ஒற்றையாகத் தோற்றமளிக்கும் ஒரு சமூக நிகழ்வை இரண்டாகப் பகுத்து அவ்விரண்டு பக்கங்களுக்கிடையிலான உறவுகளைப் பயிலுவதே இயங்கியல் என்று லெனின் வரையறுப்பார். அத்தகைய ஒரு முறையியலையே இங்கு பயன்படுத்துகின்றோம்.

பண்பாட்டு அரசியல், அடையாள அரசியல் போன்ற சொல்லாடல்கள் தமிழ்ச் சூழல்களுக்கு அந்தோனியோ கிராம்சி மற்றும் பின்னை நவீனத்துவச் சிந்தனையாளர்களின் வழியாக வந்து சேர்ந்தன.

இது ஒருவகைப் பண்பாட்டு அரசியல்

மேலே நாம் வரிசைப்படுத்திய இயக்கங்களும் போக்குகளும் ஒரு வகைப் பண்பாட்டு அரசியலை முன்னிலைப்படுத்தியுள்ளன என்பதைக் கண்டுகொள்வதில் சிரமம் இல்லை எனக் கருதுகிறேன். சாதி, சமயம், மொழி, இனம் போன்ற அடையாளங்களின் வழிப்பட்டவையாக இவை உள்ளன. எனவே தான் இவற்றை அடையாள அரசியல் இயக்கங்கள் என்கிறோம். இவற்றில் சாதி எனும் அடையாளம் அதிக அடிப்படைத் தன்மை கொண்டது என வாதிடவும் இடமுண்டு.

பண்பாட்டு அரசியல், அடையாள அரசியல் போன்ற சொல்லாடல்கள் தமிழ்ச் சூழல்களுக்கு அந்தோனியோ கிராம்சி மற்றும் பின்னை நவீனத்துவச் சிந்தனையாளர்களின் வழியாக வந்து சேர்ந்தன. ஆயின் இப்புதிய சிந்தனைகளுக்கு வெகுகாலத்திற்கு முன்னதாகவே பண்பாட்டு அரசியலும் அடையாள அரசியலும் நமக்கு நன்றாகவே பரிச்சயமாகியிருக்கின்றன எனச் சொல்ல வேண்டியுள்ளது. இந்த வகையில் பண்பாட்டு அரசியல் தமிழில் மூத்தது. (சங்க காலம் தொட்டே தமிழர்களுக்கு மொழி, இலக்கணம், இலக்கியம், அறம், சமயம், சாதி சார்ந்த ஒரு பண்பாட்டு அரசியல் உண்டு எனவும் நிறுவலாம்.) 1848ல் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியான அதே ஆண்டில் இங்கு யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலர் ஒரு சைவ வித்யாசாலையை நிறுவினார் என்பதைக் காண்கிறோம். 1856ல் வெளியான கால்ட்வெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் சமஸ்கிருத/தமிழ் மொழிவழி அரசியலைத் தொடங்கி வைத்தது என அறிகிறோம். அன்றிலிருந்து தொடர்ச்சியாக தமிழ் அடையாள அரசியல் எனத் தலைப்பிடப்பட்டுள்ள இந்த நிகழ்வு இடையீடின்றி நடந்துவந்துள்ளது. எனில் இவ்வகைச் சிந்தனை சுமார் 160 ஆண்டுகளுக்கு மேலானது எனக் கூறலாம்.

சிறிது உற்றுக் கவனித்தால், பண்பாட்டு அரசியல் தமிழ்நாட்டில் மட்டும் தான் செல்வாக்கு பெற்றிருந்தது என்று சொல்வதற்கில்லை. இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இன்னும் ஆசிய ஆப்பிரிக்க லத்தின் அமெரிக்க நாடுகளில் நவீன

காலத்தில் இத்தகைய அரசியல் செல்வாக்குப் பெற்ற ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் வடிவமாக இது இருந்து வருகிறது. மிகப் பழைய சமூகங்கள் வழக்கில் உள்ள உலக நாடுகள் எங்கும் மரபு சார்ந்த சமூகக் குழுக்களை முன்னிலைப் படுத்தி இவ்வகை அரசியல் எளிதில் வேர்கொண்டிருக்கிறது.

தமிழில் பண்பாட்டு அரசியல் நவீன காலத்தில், காலனியச் சூழல்களில் தொடங்கியது என்பதை நாம் அறிவோம். காலனியச் சூழல், ஆங்கிலக் கல்வி, கிறித்தவ மதப் பரவல் போன்றவை அன்றிருந்த தமிழ்ச் சூழல்களில் ஓர் அடிப்படையான பண்பாட்டு மடைமாற்றத்தை *(Cultural Reorientation)* ஏற்படுத்தின எனலாம். அவை தமிழ்ச் சூழல் களில் ஒரு பெரும் தாக்கத்தையும் அதற்கான எதிர்வினைகளையும் தூண்டின. காலனியம் அறிமுகப் படுத்திய மாற்றங்களை தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு சமூக சக்திகள் பல்வேறு விதமாக எதிர்கொண்டன. சமூக அமைப்பு, சாதி, மதம், பண்பாடு, மனித உரிமைகள், மனித மதிப்பு, சமூக நீதி குறித்த தீர்க்கமான பல புதிய அக்கறைகளையும் கேள்விகளையும் காலனியச் சூழல்கள் முன்வைத்தன. காலனியத் தின் அதிகார அமைப்பில் பல்வேறு சமூக சக்திகள் பெற்றிருந்த வாய்ப்புகள், பூர்வீக சமூக அமைப்பில் அவை பெற்றிருந்த இடங்களைப் புதிய சூழல்களில் தக்கவைத்தல் அல்லது மேம் படுத்திக் கொள்ளுதல் போன்ற பிரச்சினைகள் இக்காலத்தில் முனைப்பாக முன்னுக்கு வந்தன.

பழஞ்சமூகங்கள் (காலனியச் சூழல்களில்) நவீனப்படும் ஒரு பிரத்தியேக வடிவமாக பண்பாட்டு அரசியல் மற்றும் அடையாள அரசியல் தொழிற்படுவதாகத் தோன்றுகிறது. பழஞ் சமூகங்கள் ஒற்றை நேர்கோட்டில் நவீனமயமாக்கத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு தம்மைப் புதுப்பித்துக் கொள்வதில்லை. மாறாக, அச்சமூகங்கள் நவீனமயமாக்கம், மரபுமயமாக்கம் என்ற எதிரெதிரான இரண்டு போக்குகளுக்கிடையில் தம்மை மாற்றத்திற்கு உள்ளாக்கிக் கொண்டன. இந்த எதிரெதிர் போக்குகளின் ஒட்டுமொத்த விளைவாகவே அந்நாடுகளில் நவீனமயமாக்கம் நிகழுகிறது. இச்சமூகங்களில் நிகழும் மரபு குறித்த சொல்லாடல்களைக் கொண்டு இவை வரலாற்று வளர்ச்சியைப் பின்னோக்கி இழுக்கின்றன என முடிவு செய்துவிடக்கூடாது. மாறாக, மர பார்ந்த அமைப்புகளோடு உற வாடி அவற்றைத் தகவமைத்து முன்னோக்கிச் செல்வதற்கான முயற்சிகளே அவை. இவ்வகை நவீனமயமாக்கம் ஐரோப்பிய நவீனமயமாக்கத்திலிருந்து வேறுபட்டதாக அமையும் *(Alternative Modernity)* என்று யூகிக்கலாம். நவீனமயமாக்கம் என்பதை முதலாளியப் பரவல் கொண்டது எனக் கொண்டால், ஒரு பழஞ் சமூகம் முதலாளியத்தை ஏற்பதில் தயக்கங்கள் காட்டி மாற்று முயற்சிகளில் ஈடுபடுகிறது என்று கொள்ளலாம்.

அடையாள அரசியல் அகவயமானதா, புறவயமானதா?

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சாதி, மதம், மொழி ஆகிய அடையாளங்களின் வழி தமது காலனிய ஆட்சியை நிலைப்படுத்திக் கொள்வதற்காக இந்தியர்களைப் பிளவு படுத்தினார்கள், எனவே அடையாள இயக்கங்களுக்கு சமூக அடிப்படை கிடையாது என்றொரு வாதம் முன் வைக்கப்படுகிறது. தேசியம் என்பது ஒரு கற்பிதக் குழு *(Imagined Community)* என்ற பெனடிக்ட் ஆன்றர்சனின் கருத்தாக்கத்தைப் பின்பற்றி அடையாளங்களும் கற்பிதமானவையே என வாதிடுவோரும் உண்டு. இந்நிலையில் தான் அடையாளங்கள் அகவயமானவையா, புறவயமானவையா? என்ற கேள்வியை முன் வைக்கிறோம். ஆட்சியாளர்கள் பிரித்தாண்டார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆயின் ஏற்கனவே நமது சமூக வரலாற்றில் இருந்த சமூகப் பிரிவுகளே ஆட்சியாளர்களுக்குப் பயன்பட்டன என்பதைச் சொல்லியாக வேண்டும். ஆசிய உற்பத்தி முறையின் பண்பாக, ஒரு தனிமனிதர் இவ்வகைச் சமூகத்தில் அவர் சார்ந்துள்ள குழுவின் வழியாகவே கணக்கில் கொள்ளப்படுகிறார்

தமிழில் பண்பாட்டு அரசியல் நவீன காலத்தில், காலனியச் சூழல்களில் தொடங்கியது என்பதை நாம் அறிவோம். காலனியச் சூழல், ஆங்கிலக் கல்வி, கிறித்தவ மதப் பரவல் போன்றவை அன்றிருந்த தமிழ்ச் சூழல்களில் ஓர் அடிப்படையான பண்பாட்டு மடைமாற்றத்தை ஏற்படுத்தின எனலாம்.

என்று மார்க்ஸ் குறிப்பிடுவதை இங்கு நினைவில் கொள்வோம். இதுவே அடையாளத்தின் வரையறை. ஆசிய உற்பத்தி முறையின் ஒரு பண்பாக அடையாள உருவாக்கங்களை மார்க்ஸ் எதிர்நோக்கியுள்ளார்.

நவீனமயமாக்கச் சூழல்களில், பழஞ்சமூகங்களில் வர்க்க உருவாக்கங்களை முந்திக்கொண்டு அடையாள உருவாக்கங்கள் நிகழும் என மார்க்ஸ் எதிர்பார்த்துள்ளார். எனவே அடயாளம் என்பது புறவயமா னதாகவும் அகவய மானதாகவும், இயங்கியல் பண்பு கொண்டதாக விளங்குகிறது. ஏற்கனவே சமூகத் தளத்தில் உள்ளடங்கித் தொழில்பட்ட அடுக்குகள் குறிப்பிட்ட ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தில் தம்மை எடுத்துரைக்கத் *(Articulation)* தொடங்குகின்றன. குறிப்பிட்ட அந்த வரலாற்றுச் சந்தர்ப்பமாக பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் அமைந்தது. காலனிய முதலாளியம் ஏற்படுத்திக் கொடுத்த பொது அரசியல் வெளி *(Public Space)* சமூக சக்திகளின் எடுத்துரைப்புக்கு இட்டுச் சென்றன. மரபுரீதியான கூட்டு அடையாள வடிவங்கள் தமது பூர்வீக வேர்களை மீட்டுக் கொணர்ந்து நவீன சமூகத்தின் சனநாயக மற்றும் விடுதலை அரசியல் வடிவங்களை ஏற்கின்றன. அடையாள உருவாக்கங்களில் நில உடமை அல்லது முதலாளியப் பண்பு இல்லை என அறுதியிட்டுக் கூற முடியாது.

தேசியம் என்ற அடையாளத்தை உருவாக்கியதில் முதலாளியத்திற்கு முக்கியப் பங்கிருந்தது அல்லவா! இருப்பினும் அயர்லாந்தின், போலந்தின் விடுதலையை மார்க்ஸ் ஆதரித்தார். தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை லெனின் வரையறுத்தார். அடையாள அரசியலில் செயலூக்கமான பங்கேற்பதின் வழியாகவே மக்களின் சனநாயக மற்றும் விடுதலை மனோபாவங்களைச் சோசலிச மாற்றங்களை நோக்கி இட்டுச் செல்ல முடியும். அடையாள இயக்கங்களைப் பழமைச் சக்திகள்தாம் முன்னெடுத்துச் செல்லுகின்றன என்ற சுருக்கமான நிலைப்பாடு மக்களிடமிருந்து சோசலிச



சக்திகளை அந்நியப்படுத்திவிடும். நில உடமைக் காலத்திய ஆதிக்கங்களைத் தக்கவைக்க அடையாள இயக்கங்கள் உருவாவதுண்டு என்பது உண்மைதான். இதற்கு எடுத்துக்காட்டுக்கள் ஆரிய சமாஜம், இந்து மகாசபை போன்றவை. சிங்களப் பெரும்பான்மை அதன் அடையாள அரசியலை பாசிசப் பண்புகளோடு வெளிப்படுத்தி வருவதையும் அறிவோம். அடையாள இயக்கங்களினுள் நில உடமை, முதலாளிய மற்றும் சோசலிச சக்திகள் தொழில்பட முடியும். எனவே அடையாள இயக்கங்களை அவற்றின் சமூக சந்தர்ப்பங்கள், வேலைத்திட்டங்கள் சார்ந்த அர்த்தப்படுத்தலோடு அணுகவேண்டும்.

பண்பாட்டு அரசியலை ஏற்பதற்கு எது தடையாக உள்ளது?

கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தமட்டில், பண்பாட்டு அரசியலை ஏற்பதற்கு எது தடையாக உள்ளது? என்ற மற்றொரு கேள்வியையும் கேட்டுப்பார்க்க வேண்டியுள்ளது. அறியப்பட்ட மார்க்சியத்தின் வர்க்க அணுகுமுறை அல்லது பொருளாதார அணுகுமுறையை ஒற்றைப்படையாக ஒரு சாராம்சக் கோட்பாடாகப் பயன்படுத்தும்போது அது பண்பாட்டு அரசியல், அடையாள அரசியல் ஆகியவற்றை அங்கீகரிப்பதைத் தடுக்கிறது.

சாராம்சவாதம் (*Essntialism*) என்றால் என்ன? எல்லாவித சமூக முரண்பாடுகளையும் வர்க்க முரண்பாடு அல்லது பொருளாதார முரண்பாடு என்ற ஒற்றைச் சாராம்சமாகக் குறைத்துப் புரிந்து கொள்ளலாம் என்று கருதுதலே சாராம்சவாதம் ஆகும். எல்லாச் சமூக முரண்பாடுகளுமே வர்க்க முரண்பாட்டின் வெளிப்பாடுகளே என்று கூறுவது சாராம்சவாதம்.

ஹெகல் என்ற பிரும்மாண்டமான ஜெர்மன் தத்துவ அறிஞர் உலக நிகழ்வுகள் அனைத்தும் பிரபஞ்ச ஆன்மா என்ற ஒன்றின் வெளிப்பாடு களே என்று கூறினார். இவரது தத்துவம் கருத்துமுதல்வாதம் என அழைக்கப்படுகிறது. மார்க்ஸ் ஹெகலின் மாணவர். ஆயின் அவர் ஹெகலின் தத்துவத்தைத் தலைகீழாக்கினார். மார்க்சிய பொருள்முதல்வாதம் பிறந்தது. அதாவது, உலகின் பொருட்தன்மை கொண்ட அடிப்படையிலிருந்தே ஆன்மீகச் சிந்தனைகள் தோன்றுகின்றன என மேற்குறித்த தலைகீழ்ப் படுத்தலைப் புரிந்துகொள்ளலாம். ஆயின் அல்த்தூசர் என்ற பிரெஞ்சு மார்க்சியர் இந்த விளக்கத்தை ஏற்பதில்லை. ஹெகல் எல்லாமே பிரபஞ்ச ஆன்மாவின் வெளிப்பாடுகள் என்றார், மார்க்சியர் சிலர் எல்லாமே பொருளின் வெளிப் பாடுகள் என்றனர், என்ற புரிதலில் இரண்டுமே சாராம்சவாதங்கள் என்கிறார் அல்த்தூசர். இந்த இரண்டுமே ஹெகலியத் தத்துவங்கள் தாம் என்கிறார். எதுவாக இருந்தாலும், ஒன்றை மற்றொன்றின் சாராம்சமாகச் சொல்லுவதே கருத்து முதல்வாதம் என்கிறார் அவர். ஒன்றின் பிரத்தியட்சத் தன்மையை, ஒன்றின் சமூகச் செயல்பாட்டுத் தன்மையைக் குறைத்து, ஒன்றின் சமூக எதார்த்தத்தைக் குறைத்து அதனை மற்றொன்றின் நிழலாக மாற்றும்போது சாராம்ச வாதம் தோன்றுகிறது. இதுதான் கருத்து முதல்வாதம் என்கிறார் அல்த்தூசர்.

பச்சைப் பசுமரம் ஒன்றை வெட்டி அதன் இலை, கிளைகளை அகற்றி, பலகைகளாக அறுத்து வார்னிஷ் பூசி அதையே மரம் எனக் காட்டுவது கருத்துமுதல்வாதம். பச்சைப் பசுமரத்தின் வாழும் எதார்த்தத்தை இங்கு இழந்து விடுகிறோம். உண்மையில் மார்க்சின் முறையியல் சமூக நிகழ்வுகளை அவற்றின் முழு எதார்த்தத்தோடு, ஒன்றை மற்றொன் றாகக் குறைக்காமல், மற்றதன் வெளிப்பாடாகக் கொள்ளாமல், பிரத்தியட்சமாக அணுகுவது என்று அல்த்தூசர் விளக்கமளிக்கிறார். இந்த அர்த்தத்தில், சமூக வாழ்வை அதன் எல்லாச் சிக்கல்களோடும் பலவகை (பொருளாதார, அரசியல், பண்பாட்டு) அமைப்புகளின் கூட்டுச் செயல்பாடாகக் கருதுவதே மார்க்சியம் என்று அல்த்தூசர் விளக்குவார். சிக்கலான சமூக நிகழ்வுகளைப் பொருளாதாரம் என்ற ஒற்றைப்படுத்தலுக்கு ஆட் படுத்தும் போதே அது அடையாள அரசியலைப் புரிந்துகொள்ளவிடாமல் நம்மைத் தடுக்கிறது.

தமிழ் அடையாள அரசியலின் சில முடிச்சுகள்/ முரண்கள்

நாவலர்: சிக்கல்களின் தொடக்கம்

தமிழ் அடையாள அரசியலின் மிகப் பெரிய சிக்கல் ஆறுமுக நாவலரிடமிருந்தே தொடங்குகிறது. அது சைவசமயம், வேளாளர் தலைமை ஆகியவற்றோடு தொடர்பு கொண்டது. நாவலர் கிறித்துவ மதமாற்றங்களுக்கு எதிர்வினையாக சைவ மீட்டுருவாக்கத்தில் ஈடுபட்டார். கிறித்தவ சமயம் போன்ற நிறுவனத் தன்மை கொண்டதாக அவர் சைவ சமயத்தை உருவாக்க விழைந்தார். கிறித்தவ ஓரிறைக் கொள்கை, கிறித்தவச் சமயப் பிரச்சார முறைகள், கிறித்தவ சமய மற்றும் சமூக நெறி முறைகள் ஆகியவற்றை முன் வடி வாகக் கொண்டு அவர் சைவத்தை வடிவமைக்க முயன்றார். இம்முயற்சி யில் அவர் யாழ்ப்பாண சைவத்தின் வெகுசன வடிவங்களை அப்புறப் படுத்தினார். யாழ்ப்பாணக் கோவில் களிலிருந்து கண்ணகி வழிபாட்டை அகற்றினார். சைவக் கோயில்களில் உயிர்ப்பலியிட்டு வழிபாடுகளில் ஈடுபட்டு சாதாரண மக்களை வெளி யேற்ற வேண்டும் என முனைந்து செயல்பட்டார். வேளாளச் சாதிக்கு முன்னுரிமை வழங்குவனவாக சைவக் கோயில்களை மாற்றினார்.

காலனிய அதிகாரப் பரிமாற்றச் சூழல்களில் யாழ்ப்பாணச் சமூகத்தின் முன்னுரிமையுள்ள குடிமக்களாக அவர் வேளாளர்களை முன்னிறுத்தி னார். அவர் உருவாக்கிய சைவ

ஹெகல் என்ற பிரும்மாண்டமான ஜெர்மன் தத்துவ அறிஞர் உலக நிகழ்வுகள் அனைத்தும் பிரபஞ்ச ஆன்மா என்ற ஒன்றின் வெளிப்பாடுகளே என்று கூறினார். இவரது தத்துவம் கருத்துமுதல்வாதம் என அழைக்கப்படுகிறது.



வித்யாசாலைகள் தமிழ்க் கல்வி வழங்கியதோடு, ஆங்கிலக் கல்வி வழிப்பட்ட வாழ்வாதாரத் தேவைகளையும் நிறைவேற்றின. தமிழர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, அரசுப் பணிகள் என்ற தொடர்ச்சி கொண்ட முக்கியமான வட்டாரம் அது. சைவ சமய மீட்டுருவாக்கம் எனும்போது மரபார்ந்த யாழ்ப்பாண நில உடமைச் சாதிகளின் நலன்களையும், கல்வி - வேலைவாய்ப்பு எனும் போது காலனியத்துடன் தகவமைத்துக்கொள்ளும் புதிய நடுத்தர வர்க்கத்தின் நலன்களையும் நாவலரின் வேலைத்திட்டம் ஒன்றிணையக் கொண்டுள்ளதைக் காணவேண்டும். நாவலரில் காணப்படும் 'மரபார்ந்த நில உடமைச் சாதிகள்/ புதிய நடுத்தர வர்க்கம்' என்ற சேர்க்கை (சைவமும் கல்வியும் என்ற சேர்க்கை) மிகுந்த கவனத்திற்குரியது. காலனியச் சூழலில் புதிதாக உருவாகும் சமூக வர்க்கத்தை மரபுடன் இணைக்கும் *(Transitional Class and Tradition)* வேலைத்திட்டம் இங்கு தொழில்படுகிறது.

வள்ளலார்: அடையாள விரிவாக்கம்

நாவலர் ஆகமச் சைவம், வேளாளர், சைவ மடங்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு தனது செயல்பாடுகளை அமைத்துக் கொண்டார். ஆயின் தமிழ்நாட்டில் இதே காலத்தில் ஆகமச் சைவம், சைவ மடங்கள் ஆகியவற்றின்பால் அதிருப்தி கொண்ட ஒரு சிந்தனையாளர் உருவாகியிருந்தார். அவர் தான் வள்ளலார் ராமலிங்கர், வள்ளலாரின் சமயப் பார்வை சமரச சன்மார்க்கம் எனப்படு கிறது. நாவலர் போல் ஆகமச் சைவம் என தனது அடையாளப் பரப்பைக் குறைத்துக் கொள்ளாமல், அப்பரப்பை விரிவாக்கும் பண்பு கொண்டது சமரச சன்மார்க்கம் எனும் பாதை. நாவலர் ஒரு சைவ சமய நிறுவனவாதி. வள்ளலாரோ தத்துவ விசாலம் கொண்ட சிந்தனையாளர். அவர் சைவ சித்தாந்தத்தின் பதி - பசு - பாசம் என்ற தத்துவப் பரப்பை மிக அடிப்படையாகத் தாண்டிச் செல்ல முற்பட்டார். உயிரின் முதன்மைப் பண்பு கருணை, இறைவனின் முதன்மைப் பண்பு பெருங்கருணை (அருள்) என்று ஒத்த தன்மை கொண்ட இரண்டு கருத்தாக்கங்களின் வழியாக ராமலிங்கர் தத்துவம் செய்தார். இரண்டுமே கருணையின் வடிவங்கள் தாம் என்ற அளவில் ஓர் ஒருமை வாதம் *(Monism)* ராமலிங்கரிடம் உருவாகிறது என்பது கவனிக்கத்தக்கது. ராமலிங்கரின் எழுத்துக்களில் வேளாளர் தலைமை பற்றி எதுவும் கூறப்படுவதில்லை. பசி, கருணை போன்ற கருத்தாக்கங்களின் வழியாக வள்ளலாரின் சமயப் பரப்பு மிக விரிந்து சென்றது. வள்ளலாரின் சிந்தனையில் நடைபெறும் அடையாள விரிவாக்கம் *(Expansion of Identity)* எனற நிகழ்வை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது ஆகமச் சைவம் என்று கருத்தியல் எல்லையையும் சைவ மடங்கள் என்ற நிறுவன எல்லையையும் ராமலிங்கர் மிக லாவகமாகக் கடந்து செல்கிறார். காலனியச் சூழலில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் அடையாள விரிவாக்கம் என்ற ஒன்றைக் கோரின என்பது குறிப்பிடத்தக்கது. மரபுரீதியான சாதி, மதம் போன்ற எல்லைகளைக் கடந்த விரிவாக்கங்களை அக்காலம் கோரியது. சன்மார்க்கம் என்பது அத்தகைய விரிவாக்கத் தன்மை கொண்டது. விரிவடையும் அடையாளத்தில் பசி எனும் சாதாரண மனிதரின் அடிப்படைப் பிரச்சினை உள்ளுக்குள் வருவது ஓர் அற்புதமான நிகழ்வாகும். பசிக்குச் சமமாக, அதனை எதிர்கொள்ள கருணை முன்வைக்கப்படுகிறது. பசியும் கருணையும் பொது மானுடப் பண்பு கொண்டவை. தமிழகத்தின் தென்பகுதியில் தோன்றிய வைகுண்டரின் இயக்கத்திலும் ஓர் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளும் சுயமரியாதையும் முன்னுக்குக் கொண்டு வரப்படுகின்றன. சைவம் என்ற குறுகிய மேட்டுக்குடிப் பார்வையை இவை கேள்விக்குள்ளாக்கக் கூடியவை.

நாவலர்/வள்ளலார் சந்திப்பில் நவீனகால தமிழ் அடையாள உருவாக்கத்தின் இரு சார்பு நிலை கள் தொழில்படுகின்றன. நாவலர் தமிழ் அடையாளத்தை முந்தியகாலச் சாதி அளவு கோல்களைக் கொண்டு மிகவும் குறுகலாக்குகிறார். வள்ளலாரோ தமிழ் மரபில் அது வரையில் இல்லாத ஒரு நவீனப் பண்பின் அடிப்படையில் அதனை விரிவடையச் செய்கிறார். அடையாளம் குறித்த இரண்டு அணுகுமுறைகள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தோற்றம் பெற்றுவிட்டன.

மத அரசியலிலிருந்து மொழி அரசியலுக்கு

கால்ட்வெல் 1856ல் வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்ற நூல் விஞ்ஞான பூர்வமாக எழுதப்பட்ட ஓர் ஆய்வு நூல் என்ற வடிவம் கொண்டது. இது தமிழுக்குப் புதியது. புராணங்களும் மதச் சிந்தனைகளும் ஆதிக்கம் செய்த தமிழ் எழுத்துமுறையில் இந்நூல் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவந்தது. அறிவியல் பூர்வமான ஓர் எழுத்துமுறையைப் பயன்படுத்தி அந்நூல் ஆரியம்/திராவிடம், சமஸ்கிருதம்/திராவிடம் என்ற வேறுபாடுகளை முன்னிறுத்தியது. மொழி என்ற சமயம் சாராத ஒரு புதுத் தளத்தையும் அது முன் மொழிந்தது. அறிவியல், பகுத்தறிவு, சமயச் சார்பின்மை போன்ற விட யங்கள் மொழியின் வழியாகத் தமிழ்ச் சிந்தனையைக் கைப்பற்ற முனைவதை இங்கு பதிவு செய்து கொள்ளலாம்.

கால்ட்வெல்லின் நூல் வெறும் மொழியியல் ஆய்வாக அமையாமல் கூடுதலாக இருவகை நாகரிகங்கள், இருவகைப் பண்பாடுகள், இருவகைச் சமூக அமைப்புகள் என்று பேசியிருந்தது. ஆரியம்/திராவிடம் என்பவையே அவை. அவை இரண்டுக்குமிடையில் வரலாற்றில் ஒரு துவந்த யுத்தம் நிகழ்ந்து வந்துள்ளது என்ற நிலைப்பாட்டிற்கு அது இட்டுச் சென்றது. தமிழில் அறுபடாத தொடர்ச்சியுடன் ஓர் எழுத்திலக்கிய வரலாறு உள்ளது என அது கூறியது. மொழி, இலக்கியம், பண்பாடு, சமூக அமைப்பு என்ற தொடர்புபடுத்தல் வலுவாகவே பதிவாகியிருந்தது. தமிழ் மரபில் பிராமண எதிர்ப்பு ஆரம்பகாலங்களிலிருந்தே வேரூன்றியுள்ளது என அந்நூல் நிரூபிக்க முயன்றிருந்தது. இவை எல்லாமே பின்னால் தமிழ் அடையாள அரசியலின் முக்கிய அடிப்படைகளாகின என்பது குறிப்பிடத்தக்கது.

கால்ட்வெல் தனது நூலில் பறை யர்கள் இந்துக்களா? பறையர்கள் தமிழர்களா? என்ற கேள்விகளையும் எழுப்பிப் பதில் கூறுகிறார். இக்கேள்விகளை அவர் எழுப்பியதன் பின்புலத்தை யூகிக்க முடிகிறது. தமிழ் என்ற விரிந்த அடையாளத்திற்கு வந்து சேரும்போது அதிலிருந்து அடித்தள மக்களை அந்நியப்படுத்தும் முயற்சி தொடர்ந்து நடந்து வந்தது என்பதைக் கால்ட்வெல்லின் கேள்விகளும் விவாதங்களும் எடுத்துக்காட்டுகின்றன. மொழி எனும் அடையாளத்தினுள் சாதியைப் புகுத்தா தீர்கள் என்ற எச்சரிக்கையைக் கால்ட்வெல் வழங்குவதாகத் தெரிகிறது.

> **காலனியச் சூழலில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் அடையாள விரிவாக்கம் என்ற ஒன்றைக் கோரின என்பது குறிப்பிடத்தக்கது. மரபுரீதியான சாதி, மதம் போன்ற எல்லைகளைக் கடந்த விரிவாக்கங்களை அக்காலம் கோரியது. சன்மார்க்கம் என்பது அத்தகைய விரிவாக்கத் தன்மை கொண்டது.**

தமிழில் அச்சு எந்திரப் பயன்பாடும் அது ஏட்டிலக்கியங்களை நூல் வடிவம் பெறச் செய்தன என்பதும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காத்திரமான நிகழ்வுகளாகின. அச்சு எந்திரம் 1000, 2000 என்ற எண்ணிக்கையில் ஒரே நூலைப் பல பிரதிகளாக்கி அவற்றை வாசிப்பவர்களையும் உண்டாக்கியது. வாசிப்பவர்களுக்கிடையில் ஒத்த மனநிலையை உருவாக்கி நேரடித் தொடர்பே இல்லாதவர்களுக்கிடையிலும் ஒரு குழும உணர்வை அந்நூல்கள் ஏற்படுத்தின. இந்த கூட்டு உணர்வு உருவாக்க நிகழ்வினைத்தான் பெனெடிக்ட் ஆன்றர்சன் கற்பிதக் குழுமங்கள் என்றார். இது நூல், பத்திரிக்கை மற்றும் காணொளி ஊடகங்களின் பண்பு. நவீனகாலம் உருவாக்கிய பொதுவெளியின் பண்பு. குழும உணர்வுகளே கற்பிதமானவை என்று இதற்குப் பொருளில்லை.

தமிழில் அச்சு நூல்களின் பதிப்பு தமிழ் மரபு, இலக்கிய வரலாறு, சமூக வரலாறு ஆகியவை பற்றிய மிகப் பெரிய விவாதங்களுக்கான தயாரிப்பினைச் செய்தது. படிப்பறிவு பெற்ற அறிவுத் துறையினரையும் பொது அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளப்படும் பொது வெளியையும் அது உருவாக்கியது. பதிப்பு என்பது நூல் தேர்வு, பாடபேதங்கள், முன்னிலைப் படுத்து வது *(Focus)* போன்ற பல விடயங்களோடு தொடர்பு கொண்டது எனினும் பண்டைத் தமிழின் பன்முகப் பரிமாணங்களை அது வெளிக் கொணர்ந்தது. விவாதிப்பதற்கும் விளக்கமளிப்பதற்கும் ஏராளமான விடயங்கள் உள்ளன என்ற நிலையை உருவாக்கியது. அடையாளப் பொருள் கோளியல் *(Hermeneutics of Identity)* என்ற ஒரு புது முயற்சி தமிழில் இக்காலத்தில் தோன்றி நிலைகொண்டது. பலவகை வாசிப்புகளுக்கான வாய்ப்புகளும் தோன்றின. அவ்வகை வாசிப்புகள் நடுத்தர வர்க்கத் தளத்தினுள் நுழையத் தொடங்கிவிட்ட சமூகக் குழுக்களை அடையாளம் காட்டின.

அடையாளப் பொருள்கோடல்களில் வேளாளர் வாசிப்புகளே அதிகமாக இருந்தன என்பது அமைந்திருந்தது. வருண வரிசையில் வேளாளர் சூத்திரரே என்ற பிராம்மணரின் மதிப்பீட்டை தமிழ் நூல்கள் வாசிப்பின் மூலம் மாற்றியமைக்க அவர்கள் முயன்றனர். தமிழில் வருண வரிசை வேறுவிதமாக அடுக்கப்பட்டிருந்தது என்பதற்கு அவர்கள் தமிழ் நூல்களில் ஆதாரங்களைத் தேடிக் கண்டடைந்தனர். தமிழ்ச் சமயம் என்பதே வைச சமயம்தான் என அவர்கள் நிருவ முயன்றனர். தென்னாடுடைய சிவன் பிரபலம் அடைந்தார். சமண பௌத்தம்/ சைவம் என்ற பழைய மோதலை அவர்கள் மீண்டும் உயிர்ப்பித்தனர். இருப்பினும் வேளாளர் விருப்புகளை மீறி சைவத்திற்கு முந்திய சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் சமண பௌத்த காப்பியங்களும் அறநூல்களும் பதிப்பாகின. அவை சுயமான செல்வாக்கை ஈட்டவும் செய்தன. இந்நூல்களை 18ஆம் நூற்றாண்டு வரை சைவ மடங்கள் வாசிக்கத் தடை விதித்திருந்தன. அவை இப்போது சுதந்திரமாக பதிப்பாகி வெளிவந்தன. சைவமல்லாத, வேளாளரல்லாத பிரதிகள் மற்றும் வாசிப்புகளுக்கான வெளி உருவாகியது. இந்த வெளியை உருவாக்கியது 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலான தமிழ்ப் பதிப்பியக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச் சூழல்கள் இக்காலத்தில் மத அரசியலிலிருந்து மொழி அரசியலுக்கு மாறிச் சென்றன என்பது அடிப்படையான ஒரு விடயமாகும். மொழி என்பது மதத்தை விட விரிந்த அடையாளமாகவும் சமயம் சாரா அடையாளமாகவும் இங்கு உருப் பெற்றது குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருத மொழி அதன் வரலாற்றில் எப்போதுமே சமயம் நீங்கிய வடிவில் தன்னைக் காட்டிக் கொண்டதில்லை. அதன் சமயச் சார்புகள் அடிப்படையானவை, பிரிக்க முடியாதவை. தமிழும் கூட வைசத் தமிழ் என்று குறைந்து போவதற்கு அன்று வாய்ப்புகள் இருந்தன. ஆயின் தமிழ் பெருமளவில் மதத்திற்குள் மாட்டிக்கொள்ளவில்லை என்பது மொழி சார்ந்த அடையாள உருவாக் கத்தை உறுதிப் படுத்தியது. சமஸ்கிருதத்தின் அடிப்படையான சமயச் சார்பும் தமிழின் சமயச்

அடையாளப் பொருள்கோடல்களில் வேளாளர் வாசிப்புகளே அதிகமாக இருந்தன என்பது அமைந்திருந்தது. வருண வரிசையில் வேளாளர் சூத்திரரே என்ற பிராம்மணரின் மதிப்பிட்டை தமிழ் நூல்கள் வாசிப்பின் மூலம் மாற்றியமைக்க அவர்கள் முயன்றனர்.

சார்பின்மையும் எதிரெதிர் பண்பாட்டு அரசியல் வாதங்களாக உருவாக முடிந்தது. சமயச் சார்பற்ற தமிழ், சைவத்திற்கு முந்திய தமிழ் இலக்கியங்கள் என்ற வேளாளரல்லாத தளத்தை உருவாக்கிய சமூக சக்திகள், அவற்றின் பிரதிநிதிகள் ஆகியவை குறித்து சில ஆய்வு கள் இன்னும் தேவையாக இருக்கின்றன. இவை கண்டறியப்பட வேண்டும். தமிழ்மொழி சார்ந்த அரசியலின் போக்குகளைப் புரிந்து கொள்வதில் இது முக்கியமான பிரச்சினை யாகும்.



அயோத்திதாச பண்டிதர்: மொழி அரசியலிலிருந்து சமூக அரசியலுக்கு

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து தமிழ் அரசியலில் தலையீடுகளை நிகழ்த்தியதில் அயோத்திதாச பண்டிதருக்கு முக்கியமான இடம் உண்டு. மொழி, இலக்கிய அரசியலில் சைவமல்லாத, வேளாளரல்லாத வெளியினை உறுதிப் படுத்துவதிலும் அன்றைய அடையாள அரசியல் போக்குகளுக்கிடையில் சாதி ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்வைத்ததிலும் அயோத்திதாசருக்கு முதன்மை யான இடம் உண்டு. அயோத்திதாசர் தமிழை அடித்தள மக்களின் நிலைப்பாடுகளிலிருந்து வாசித்தார். கால அடிப்படையில் சைவத்தை விட சமண பௌத்த சமயங்கள் மூத்தவை என தமிழ் இலக்கியச் சான்றுகளின் வழி அவரால் நிரூபிக்க முடிந்தது. பூர்வத் தமிழின் அறம், காப்பிய மரபுகள், இலக்கணம், இலக்கிய மரபுகள் ஆகியவற்றைச் (அதாவது மொத்தத் தமிழ்ப் பண்பாட்டை) சமண பௌத்த மரபுகளே நிலைப் படுத்தின என பண்டிதரால் எடுத்துக் காட்ட முடிந்தது. பூர்வத் தமிழ் மரபு சாதியில்லா சமூக அடிப்படையில் அமைந்திருந்தது என்ற அயோத்திதாச பண்டிதரின் நிலைப்பாடு தமிழ் வரலாறு குறித்த அடிப்படையான தொரு விவாதத்தைத் துவக்கி வைத்தது. வேடதாரி பிராமணர்களும் விவசாயத்திலிருந்து அந்நியப் பட்டுப் போன வேளாளரும் தான் சாதி அமைப் பைத் தமிழில் அறிமுகப்படுத்திப் பாடுபடும் விவசாயச் சாதிகளை இழிவுபடுத்தினர் என்ற வாதத்தை பண்டிதர் முன்வைத்தார். இது மிக அற்புதமான ஒரு வாதம்.

தமிழ் வரலாற்றின் முதல் அடிப் படைகளிலேயே சாதியில்லா சமுதாயம்/சாதிச் சமுதாயம் என்ற பூர்வ முரண்பாடு அமைந்துள்ளது என்று அயோத்திதாசரால் சொல்ல முடிந்தது. பூர்வ பௌத்தம்/ வேடதாரி பிராமணியம் என்ற முரண்பாடு முன்பு குறிப்பிட்ட சமூக முரண்பாட்டின் கருத்தியல் எடுத்துரைப்பாக அமைந்தது. நிலத்திலிருந்து அந்நியப்படாத விவசாயச் சாதிகளை (குறிப்பாகப் பறையர்களை) சமூகமாற்றத்திற்கான சமூக சக்திகளாக பண்டிதர் அடையாளப்படுத்தினார். தமிழ் அடையாள அரசியலினுள் சாதி, மதம் ஆகிய விசயங்களை மிக அழுத்தமாக விதைத்தவர் அயோத்திதாசர். விவசாயச் சாதிகளின் உலகநோக்கை உழைப்பு சார்ந்த அறமாக ஆக்கிக் காட்டியவரும் அவரே. பிராமணர், வேளாளர் ஆகிய மரபான மேட்டுக்குடிகள் தமது சாதி அதிகாரத்தையும் ராஜாங்க அதிகாரத்தையும் ஒன்றுபடுத்தி நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே பிரிட்டிஷ் ஆட்சியாளரை அண்டிச் சென்று அரசியல் நடத்தி வருகின்றனர் என்ற கருத்தை அயோத்திதாசர் முன்வைத்தார். காலனியச் சூழல்களில் அடையாள அரசியலின் சமூகவியல் பின்புலத்தை இக்கருத்து எடுத்துரைக்கிறது. இன்னும் கூடுதலாக, மேற்படி அரசியலைப் புரிந்துகொண்டு அடையாள அரசியலை அடித்தளமக்கள் எந்த நோக்குகளிலிருந்து நடத்திச் செல்ல வேண்டும் என்பதையும் அயோத்திதாசரின் நிலைப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

சாதி அமைப்பிற்கும் இந்து மதத்திற்கும் இடையிலான உறவைச்

> தமிழ்ச் சூழல்கள் இக்காலத்தில் மத அரசியலிலிருந்து மொழி அரசியலுக்கு மாறிச் சென்றன என்பது அடிப்படையான ஒரு விடயமாகும். மொழி என்பது மதத்தை விட விரிந்த அடையாளமாகவும் சமயம் சாரா அடையாளமாகவும் இங்கு உருப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

சுட்டிக் காட்டியதிலும் அயோத்திதாசரின் பங்கு முக்கியமானது. இந்தியச் சூழல்க ளில் சாதிக்கும் மதத்திற்கும் இடையில் இறுக்கமான பிணைப்புக்கள் உள்ளன என்ற கருத்து 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்று அடுத்து வந்த காலங்கள் முழுவதும் தொடர்ந்து வருகிறது. இந்த வாதத்தை அம்பேத்க ரும் பெரியாரும் எடுத்தாண்டார்கள். இந் தக் கருத்தை உருவாக்கியதில் காலனி யக் காலத்திய கிறித்தவப் பாதிரி மார்களுக்கு ஒரு முக்கியப் பாத்திரம் உண்டு. எனினும், அது அவர்களைத் தாண்டி சாதிச் சமூகம் குறித்த ஒரு விமரி சனப் போக்கை இங்கு உசுப்பிவிட்டி ருக்கிறது என்பதை மறுக்க முடியாது. மதத்தின் சிக்கலான சமூகப் பாத்திரத்தை உணர்ந்து கொண்ட அயோத்திதாசர் இறைக் கருத்துக்கு இடமில்லாத பௌத் தத்தைத் தனது குறியீடாக்குகிறார். சாதிக ளற்ற பூர்வச் சமூகத்தின் வித்தை, ஈகை, கருணை விரிகிறது. சாதிகளற்ற சமூகம் பற்றிய ஓர் ஏக்கம் தமிழ் மரபில் எப்போ துமே இருந்து வந்திருக்கிறது என்ற ஒரு வாதம் இக்காலத் திலிருந்து தமிழில் நிலைபெறுகிறது.

> சாதி அமைப்பிற்கும் இந்து மதத்திற்கும் இடையிலான உறவைச் சுட்டிக்காட்யதிலும் அயோத்திதாசரின் பங்கு முக்கியமானது. இந்தியச் சூழல்களில் சாதிக்கும் மதத்திற்கும் இடையில் இறுக்கமான பிணைப்புக்கள் உள்ளன என்ற கருத்து 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்று அடுத்து வந்த காலங்கள் முழுவதும் தொடர்ந்து வருகிறது.

தனித்தமிழ் இயக்கம்: மொழிவழி தராதரப்படுத்துதல்

நாவலரின் வேளாளச் சைவச் சமய அடையாளம் ஓரங்கட்டப்பட்டு மொழி என்ற விரிவாக்கம் பெற்ற, சமயம் சாராத அடையாளம் முன்னுக்குக் கொண்டுவரப் பட்டு விட்டதில் வேளாளருக்கு சில நட்டங்கள் உண்டு. இனி, மொழியை மீட்டுக் கைப்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அவர்க ளுக்கு ஏற்பட்டுவிட்டது. சைவமும் தமிழும் என்று இணைத்துப் பேச அவர்கள் முன் வந்தார்கள். செந்தமிழால் இசைபாடும் ஞானசம்பந்தன், தமிழால் வைதாலும் கூட மகிழும் சிவன் என்பது போன்ற வரிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் உண்டாயின.

தனித்தமிழ் என்ற சொல்லாடல் தமிழின் செம்மொழித் தகுதியைக் குறித்து நிற்கிறது. பேச்சுமொழி அல்ல, தரமான மொழி, இயல் - இசை - நாடகம் எனும் முத்தமிழ் மொழி, கலப்பில்லாத மொழி போன்ற கோஷங்களைத் தனித் தமிழ் இயக்கம் முன்வைத்தது. செம்மை என்ற (சிவனுடன் தொடர்புடைய) சொல்லுக் குத் திரிபின்மை, மாறாத தன்மை, நிரந்தரத் தன்மை என்ற பொருட்களைச் சைவ சித்தாந்த உரையாசிரியர்கள் வழங்குவர். கிட்டத்தட்ட இதே பொருளைத் தமிழுக்கு வழங்கி தனித்தமிழ் இயக்கம் செயல்பட்டது. திரிபற்ற மாறாத தமிழ்ப் பண்பாட்டு அடிப்படை ஒன்று நிலவுகிறது என்று தனித்தமிழ் இயக்கம் வலியுறுத்தத் தலைப்பட்டது. மொழியினுள் மொழிவழியாகவே தராதரப் படுத்துதல் என்ற விடயத்தைத் தனித்தமிழ் இயக்கம் குறிக்கிறது. நாவலரின் ஆகமச் சைவம் போலவே சாதாரண மக்களை அந்நியப்படுத்தும் போக்கு இதில் இருந்தது. 'கலப்பற்ற', 'தூய' போன்ற சொல்லாடல்கள் என்னவோ சாதி அமைப்பையே நினைவுக் குக் கொண்டு வருகின்றன. சாதியில் கலப்பு நிகழக்கூடாது என்பதை மொழிவழியாக இவர்கள் சொன்னார்களோ என்று தோன்று கிறது. மேட்டுக்குடித் தமிழை உயர்தனிச் செம்மொழியாக்கும் முயற்சி தனித்தமிழ் இயக்கத்தில் இருப்பதாகவே தோன்றுகிறது. பண்டைத் தமிழின் எழுத்தி லக்கிய மொழியை, அதனைச் சுவீகரித்துக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் சமூகப்பகுதியினரைச் சார்ந்தே இந்த இயக்கம் கட்டப்பட்டது. 'தரமான' மொழி என்ற ஓர் அளவுகோல் இங்கு தொழில்படுவதும் கவனிக்கத்தக்கது.

நீதிக்கட்சி: பிராமணரல்லாதார் என்ற சொல்லாடல்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முழுவதும் தமிழ்ச் சூழல்களில் நிகழ்ந்து வந்த பண்பாட்டு அசைவுகள் நீதிக்கட்சியில் (1916) ஒன்றுபட்டன. அது பிராமணர் அல்லா தார் என்ற சொல்லை மிக அழுத்தமாகப் பதியவைத்தது. பிராமணர் அல்லாத எல்லாச் சாதிகளையும் ஓரணியில் ஒன்றுபடுத்தும் முயற்சி இது. இது வெற்றி பெற்றது. தமிழ் என்ற அடையாளத்தை விட பிராமணரல் லாதார் என்ற அடையாளம் எதிராளி யைக் குறிப்பிட்டுச் சொல்கிறது. ஒன்றுபட வேண்டியவர்களையும் குறிப்பிட்டுச் சொல் கிறது. முன்பு குறிப்பிட்ட மரபான சமூக சக்திகளும் கல்வி, வேலை வாய்ப்பு நோக்கி

நகரும் புதிய நடுத்தர வர்க்கத்தினரும் *(Traditional and Transitional Classes)* ஒன்றுபடும் தளமாக பிராமணரல்லாதார் என்ற தளம் அமைந்தது.

காலனியச் சூழலில் பிராமணர் மிக வேகமாக ஆங்கிலக் கல்வி, அரசுப் பதவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். அயோத்திதாசர் குறிப்பிட்ட 'சாதி அதிகாரமும் ராஜாங்க அதிகாரமும்' சேர்ந்த நிலை இது. பிராமணரை அடுத்து இருந்த சாதியினரும் அதே பாதையில் சென்று அதிகாரத்தை ஈட்ட விழைந்தனர். இருப்பினும் எல்லாச் சாதிகளுக்கும் ஓர் உறுதிமொழியை வழங்குவது போல பிராமணர் அல்லாதார் என்ற பொதுப் பெயரைச் சூட்டிக் கொண்டனர். சாதி அமைப்பின் உள்ளீடாக அமைந்துள்ள படிநிலை வரிசை மேற்குறித்த உறுதிமொழி நிறைவேற்றப்படுவதற்கான வரிசையையும் குறித்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. நீதிக்கட்சியின் தலைவர்களாக பல ஜமீன்தார்கள் அமைந்திருந்தது ஓர் உறுத்தலான விசயமாகும். தமிழ்ச் சமூகத்தின் நில உடமை எதிர்ப்பு அவர்களால் மிதப்படுத்தப் பட்டது என்றே கருத வேண்டும். நீதிக்கட்சியினர் தமிழ்மொழி வழிச் சொல்லாடலை விட சாதிச் சமூகம் என்ற சொல்லாடலைத் தீவிரப் படுத்தினர் என்பது உண்மைதான். இருப்பினும் சாதி ஒழிப்பு அவர்களது திட்டமாக இருக்கவில்லை. பிராமணரை விலக்கிய சாதி அனுசரிப்பு அவர் களது திட்டமாகத் தெரிகிறது.

அயோத்திதாசர் விவசாய உழைக்கும் சாதிகளை முன்னிலைப்படுத்தியதோடு ஒப்பிடும்போது, நீதிக்கட்சி அதற்கு எதிர்நிலையிலிருந்து மீண்டும் வேளாளர், ஜமீன்தார்கள், நகர்ப்புற பணக்காரர்கள் ஆகியோரின் தலைமையை முன்னிலைப்படுத்தியது. இருப்பினும், பிராமணரல்லாதோர் என்ற பொதுத்தளம் ஒரு கருத்தியல் மேலாண்மையைச் *(Hegemony)* சாதிக்கும் தன்மை கொண்டதாக இருந்தது. பிராமணரல்லாத தமிழ்நாட்டுச் சாதிகளின் பொது ஒப்புதலை நோக்கியதாக அது அமைந்தது. சாதி எண்ணிக்கையை ஒத்த விகிதாச் சாரத்தில் கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சட்ட சபைகளில் இட ஒதுக்கீடு என்ற முன்மொழிவு எல்லாச் சாதிகளையும் திருப்திப்படுத்துவதாக அமைந்தது. அமெரிக்காவில் கறுப்பின மக்கள் அடிமை முறை ஒழிப்புக்காகப் போராடியபோது (1860), புரட்சிகரமான போராட்டங்கள் தேவைப்படும் சூழல்களில் சட்டபூர்வமான முறைகள் முன்வைக்கப்படுகின்றன என்று மார்க்ஸ் குறிப்பிடுவார். கிட்டத்தட்ட தேவிதமான அரசியலே தமிழிலும் நிலைகொண்டது. நீதிக்கட்சி தமிழ்மொழி பற்றியோ இந்துமதம் பற்றியோ கறாரான நிலைப்பாடுகள் கொள்ளவில்லை. நீதிக்கட்சியாரிடம் இந்து மத அபிமானம் தொழில்பட்டது. ஆனால் தமிழ்ச் சூழல்களில் சாதிக் கட்டமைப்பு அவர்களால் தீவிரமாகக் கவனத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

நீதிக்கட்சியின் வருகைக்கு முன்னதாக தமிழ் எனும் மொழி அடையாளம் நிலைகொள்ளத் தொடங்கிவிட்டது என முன்னர் குறிப்பிட்டோம். ஆயின் நீதிக் கட்சி அந்த விரிவாக்கத்தை அப்படியே முன்னெடுத்துச் செல்லவில்லை. அது பிராமணரல்லாதார் என்ற சாதி ரீதியான அடையாளத்தைத் தான் முன்னிலைப்படுத்தியது. தமிழ் என்பதற்குப் பதிலான ஒரு மாற்று விரிவாக்கம் நீதிக் கட்சியினரிடம் உள்ளது. பிராமணரல்லாதார் அனைவரும் திராவிடர் என்ற கணிப்பும் நீதிக்கட்சியிடம் உள்ளது. இந்த மடைமாற்றம் சிக்கலானது. நீதிக் கட்சியார் பிராமணரல்லாதார் என்று பேசியதில் மொழியை விட சாதி அதிக அடிப்படைத்தன்மை கொண்டது என்ற அங்கீகாரம் உள்ளது.

அயோத்திதாசப் பண்டிதர் பறையர் சாதியை முன்னிலைப் படுத்தி விவசாயச் சாதிகள், தமிழ், பௌத்தம் போன்றவற்றை மையப் படுத்தி உருவாக்கிய சிந்தனையை நீதிக் கட்சி ஒரு விதத்தில் பின்னுக்குத் தள்ளுகிறது. அடித்தளத்திலிருந்து உருவாகும் சமூகத் திரட்சிக்கு மாற்றாக நீதிக் கட்சியினர் பிராமணரல்லாதார் என்ற திரட்சியை முன்வைக்கும் போது, அது கீழிருந்து உருவாகும் திரட்சியாக இருப்பதற்குத் தேவையில்லை என்ற தருக்கவியல் தொழில்படத் தொடங்கி விடுகிறது. அயோத்திதாசர்

காலனியச் சூழலில் பிராமணர் மிக வேகமாக ஆங்கிலக் கல்வி, அரசுப் பதவிகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். அயோத்திதாசர் குறிப்பிட்ட சாதி அதிகாரமும் ராஜாங்க அதிகாரமும் சேர்ந்த நிலை இது. பிராமணரை அடுத்து இருந்த சாதியினரும் அதே பாதையில் சென்று அதிகாரத்தை ஈட்ட விழைந்தனர்.

பிராமணரல்லாதார் என்ற சொல்லாக்கம் தோன்றிய அந்த ஆரம்ப நாட்களிலேயே அச்சொல்லாக்கத்தைக் கேள்விக்குள் ளாக்கியுள்ளார். பிராமணரல்லாதார் என்போர் சாதியில்லாதவர்களா? என்ற கேள்வியை அவர் எழுப்பியுள்ளார். இது முக்கியமான கேள்வி. நீதிக்கட்சி அடித் தளத் திரட்சிக்கு மாற்றாக பிராமணரல் லாத மேட்டுக் குடிகளின் திரட்சிக்கு முயலுகிறது என்பதை அயோத்திதாசர் உணர்ந்திருக்க வேண்டும். மேட்டுக்குடித் திரட்சியாக மட்டுமல்லாமல், மேட்டுக் குடித் தலைமைக்கான எத்தனிப்பே அது என்பதையும் இங்கு உணர முடியும். அயோத்தி தாசரிடமும் பிராமண எதிர்ப்பு இருந்தது. ஆனால் நீதிக் கட்சியாரிடம் பிராமண எதிர்ப்போடு, அதற்கு மாற்றாக பிராமணரல்லாத மேட்டுக்குடித் தலைமை குறித்த பிரக்ஞை இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பிராமணரல்லாத மேட்டுக்குடித் தலைமை குறித்த பிரக்ஞை இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. பிராமணரல்லாதார் என்று பொதுவாகப் பெரிட்டதன் மூலம் இடை நிலை மற்றும் அடித்தளச் சாதிகளும் அப்பெயரை நிராகரிக்க முடியாத நிர்ப் பந்தத்தையும் அது கொண்டிருந்தது. அடுத்து வந்த தமிழ்நாட்டு அடையாள அரசியலை இந்நிர்ப்பந்தம் நீண்ட காலத்திற்குக் கைப்பற்றிக் கொண்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பெரியார்: அறிவும் சமூக மாற்றமும்

பிராமணரல்லாதார் அரசியல் ஓரளவு நிலைப்பட்டுவிட்ட தறுவாயில் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். பெரியார் நேரடியாக நீதிக்கட்சியில் போய் இணைய வில்லை என்பது முக்கியமானது. சாதி, மதம் ஆகியவற்றிற்கெதிரான நிலைப்பாடு களும் ஒடுக்கப்பட்ட மக்களின் சுயவிழிப் புணர்வும் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தீர்மானகரமானவை. நீதிக்கட்சியாரின் ஜமீன்தார் மனோபாவங் களையும் இந்துமத அபிமானம், மேட்டிமைச் சாதியம் ஆகியவற்றையும் பெரியார் விமரிசித்தார். காங்கிரசுக்கும் நீதிக்கட்சிக்கும் நடுவே ஒரு மூன்றாவது பாதையை அவர் உருவாக்க முனைந்தார். அது சிங்கார வேலர், ஜீவா ஆகியோர் உருவாக்கிய சுயமரியாதைச் சமதர்மமாகப் பரிணமிக்க வாய்ப்புகள் இருந்தன. ஆயின் பிராமணரல்லாதார் அரசியலின் காரியார்த்த மான நடைமுறைத் தன்மைகளிலிருந்து பெரி யாரால் தப்பிக்க முடியவில்லை. அத்தகை யச் சூழல்களிலும் பிராமணரல்லாதார் அரசியலில் சில தீவிர நிலைப்பாடுகளை அவரால் உண்டாக்க முடிந்தது. நாத்திகம், பெண் விடுதலை, சுயமரியாதை, பொது உடமை போன்ற கூறுகளை அவர் பிராமண ரல்லாதார் அரசியலில் ஏற்படுத்தினார். சாதிக்கட்டமைப்பு பற்றிய சொல்லாடல்க ளைப் பெரியார் பார்ப்பனியத்தோடு மட்டுமின்றி இந்து மதத்தோடு இறுக்கமாக இணைத்துக் காட்டினார். அவரைப் பொறுத்தமட்டில் அது சாதிக்கட்டமைப்பு மட்டுமல்ல, சாதி மதக் கட்டமைப்பு. இந்த நிலைப்பாடு அயோத்திதாசரி லும் அம்பேத் காரிலும் உண்டு. ஆயின் அயோத்திதாசரும் அம்பேத்கரும் இந்து மதத்திற்கு மாற்றாக பௌத்தத்தை முன்மொழிய பெரியார் நாத்திகத்தை முன்மொழிந்தார். அது பௌத்தத்தை விட தீவிரமான நிலைப்பாடு போன்ற தோற்றம் பெற்றது.

பிராமணரல்லாதார் அரசியல் ஓரளவு நிலைப்பட்டுவிட்ட தறுவாயில் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். பெரியார் நேரடியாக நீதிக்கட்சியில் போய் இணையவில்லை என்பது முக்கியமானது.

பெரியாரின் சிந்தனையில் தமிழ்மொழி அரசியலுக்கு குறிப்பான இடம் கிடையாது. தமிழ்மொழி அரசியலை அதிகம் பேசிய அண்ணா முதலான இளந்தலைமுறையினர் குறித்த எரிச்சல் அவரிடம் எப்போதுமே காணப்பட்டது. மொழி விடயத்தில் பெரியார் ஆங்கில மொழியை அமோகமாக ஆதரித் தார். இது பெரியாரின் ஒரு பலவீனமான புள்ளியாகக் கூடத்தென்படுகிறது. தாய்மொழிக் கல்வி என்ற திட்டமே அவரால் அங்கீகரிக்கப்படவில்லை. பழந்தமிழ் பெரு மிதங்களை அவர் வெளிப்படையாகவே மறுதலித்தார்.

பெரியாரின் சுயமரியாதை என்ற நிலைப்பாடு காங்கிரசால் முன்வைக்கப்பட்ட சுயராஜ்யம் என்பதற்கான மாற்றாக அமைந் தது. பெரியாருக்கு முந்தி சுயாக்கினியர் கள் சங்கம் என்ற ஒன்று சென்னைப் பட்டினத்தில் அறியப் பட்டிருந்தது. இது சுயசிந்தனைக்காரர்கள் *(Free Thinkers)* என்ற

அர்த்தத்தில் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. இருப்பினும் பெரியாரில் அது இன்னும் கூடுத லாக ஒடுக்கப்பட்ட மக்களின் விழிப்புணர்வு என்ற கருத்தியல் மற்றும் உளவியல் வேலைத் திட்டத்தைக் கொண்டிருந்தது. பெரியாரின் பகுத்தறிவு என்ற மற்றொரு நிலைப்பாடு ஐரோப்பாவின் புலனுணர்வுத் தத்துவத்தைத் தமிழ்ச் சூழல்களில் முன்வைத்தது. சுயமரியாதை, பகுத்தறிவு என்ற நிலைப்பாடுகள் தொடர்ந்து செழுமையடைவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருந்தன. இறுக்கமான இந்தியச் சமயச் சடங்காச்சாரச் சூழல்களில் சுயமரியாதையும் பகுத்தறிவும் சமூக விழிப்பு ணர்வுக்கான கட்டுடைப்பு ஆற்றலைக் கொண்டிருந்தன. இன்றுவரை தலித்தியர்கள், பெண்ணியவாதிகள் எடுத்தாளும் சமூக விமரிசன உள்ளடக்கம் கொண்டவையாக அவை அமைந்துள்ளன. அறிவின் சமூக மாற்ற ஆற்றலைப் பெரியாரின் சிந்தனை குறித்தது. இறுக்கமான நில உடமை மற்றும் ஆணாதிக்கப் பிடிமானங்கள் இன்னும் நெகிழாத சூழல்களில் பெரியாரின் கட்டுடைப்புக் கருவிகள் தொடர்ந்து மறு உயிர்ப்பு செய்யப்பட வேண்டியவையாகத் தங்கி வருகின்றன. சமீபத் தில் பின்னை நவீனத் துவவாதிகள் பெரியாரின் குறிப்பிட்ட இந்த ஆற்றலை மறு உயிர்ப்பு செய்ததை நினைவூட்டுவோம்.

தமிழ் அடையாளத்தைத் திராவிட அடையாளம் எனப் பெரியார் விரிவுபடுத்தினார். பூகோள ரீதியாக அதன் அரசியல் சாத்தியப் பாடுகள் தோல்வியடைந்தன. எனினும் தமிழ் மொழி எல்லைகளுக்குள்ளேயே உள்ளீடான சனநாயகப்படுத்தலுக்கு இன்றும் அது துணை நிற்கிறது என்ற கருத்தை நாம் ஏற்கலாம்.

சிங்காரவேலர்:
தமிழ் அடையாளத்தின் வர்க்கச் சார்பு நோக்கி

அயோத்திதாச பண்டிதர், பெரியார் ஆகியோருடன் சில பொது நிலைகளும் சில அடிப்படையான வேறுபாடுகளும் கொண்ட வடிவில் சிங்காரவேலரைச் சந்திக்கிறோம். அந்த இரு ஆளுமைகளுடன் சிங்காரவேலர் தொடர்பு கொண்டிருந்த போதிலும் தமிழ் அடையாளத் திற்கான சமூகப் பொருளாதார உள்ளடக்கத்தை வழங்கியவர் என்ற முறையில் சிங்காரவேலரின் ஆளுமை தனித்துவம் கொண்டது. மார்க்சின் அரசியல் பொருளாதாரச் சிந்தனை கோட்பாட்டு ரீதியாக இன்றுவரை எளிதில் நிராகரிக்க முடியாதது. அது அப்போதுதான் தமிழுக்கு அறிமுகமா கிக் கொண்டிருந்தது. பௌத்தம், சுயமரியாதைச் சிந்தனை ஆகிய வற்றில் சிங்கார வேலர் ஈடுபாடு கொண்டிருந்தபோதும், மார்க்சின் அரசியல் பொருளாதாரச் சிந்தனை யால் முடிவாக ஆகர்ஷிக்கப்பட்டார். பண்டிதர், பெரியார் என்ற இருபெரும் கருத்து நிலைகளோடு ஊடாடி, அவற்றை நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கத்தோடும் மார்க்சி யத்தோடும் இணைத்த மாபெரும் ரசவாதத்தைத் தமிழ்ச் சூழல்களில் செய்தவர் சிங்காரவேலர். தமிழ் அடையாளம் என்ற பிரதேசவெளியினுள் மார்க்சி யம் என்ற மாபெரும் கோட்பாட்டுப் பரப்பைச் சிங்காரவேலர் சேர்ந்தி ணைத்தார். அதுவரையில் தமிழ் அடையாளம் அறிந்திராத கோட்பாட் டுப் பரப்பு அது. இனி எப்போதுமே தமிழ் அடையாளம் குறித்த விவாதங் களில் புறக்கணிக்கப்பட முடியாத பரப்பு அது.



எல்லாவிதமான சூத்திரவாதங்க ளையும் கடந்து செல்லும் படைப்புத் தன்மை கொண்ட பரப்பு அது. சர்வ தேச அளவிலான மிக அகலமான அறிவுப் பரப்பையும் அனுபவப் பரப் பையும் சேகரித்து அவற்றை தமிழ் அடையாளம் குறித்த விவாதங்க ளுக்குள் செலுத்தும் வல்லமை கொண்டதாக மார்க்சியம் உள்ளது.

இந்த மாபெரும் நிகழ்வுக்கான விரிந்த களங்களை நோக்கிய முதல் வரைவினை இட்டவர் சிங்காரவேலர், நாட்டு விடுதலையோடு, சாதி, மதப், பொருளாதார முரண்பாடுகளை எதிர் கொள்ளுதல் என்ற வேலைத் திட்டத் தைச் சிங்காரவேலர் ஒன்றிணைய உருவாக்கினார். சுயமரியாதைத் தத்துவம், பகுத்தறிவு, விஞ்ஞானச் சிந்தனை ஆகியவற்றின் கருத்தியல் ஆற்றலை சிங்காரவேலர் வலுவாக அங்கீகரித்தார்.

எதற்குமே அடங்காத துடுக்குத் தனம் கொண்ட பெரியாருக்கு மார்க்சியத்தில் நியாயமான ஈர்ப்பு

ஏற்படும்படி செய்தவர் சிங்காரவேலர். பெரியாரிடம் மட்டுமல்ல, அவர் வழியாகத் திராவிட இயக்கத்தினுள் மார்க்சியம் சார்ந்த ஒரு சவால் நிரந்தரமாகத் தொழில்படுவதற்கான முதல் புள்ளிகளை இட்டவர் சிங்காரவேலர். தமிழ் அடையாள அரசியலின் வலுவான ஒரு சிந்தனைப் பாரம்பரியம் மார்க்சியத்தை ஏற்றுப்பேசு வது என்ற நிலை அன்றிலிருந்தே உருவானது. இன்றுவரை ஒலித்து வரும் திராவிடப் பொது உடமை, தமிழ் தேசியப் பொது உடமை என்ற சொல்லாடல்கள் தற்செயலானவை அல்ல.

அண்ணா முதலானோரின் மொழி மற்றும் இலக்கிய அரசியல்

1935களில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் மொழி அரசியலைத் தமிழ்ச் சூழல்களில் அழுத்தமாகப் பதிவு செய்துவிட்டன. பல மொழிகளைக் கொண்ட இந்திய நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் மொழியே ஆட்சிமொழி யாகவும் கல்வி மொழியாகவும் இருக்க முடியும் என்ற கணக்கு சனநாயக விரோதமானது. 1935களின் இந்தித் திணிப்பு வெற்றி பெற்றிருக்குமாயின் இலங்கையில் உருவான சூழல் போன்ற ஒன்று இங்கும் அப்போதே உருவாகியி ருக்கும். 1947க்குப் பிறகு, மொழிவழி மாநிலங்கள் என்ற ஏற்பாடே அரங்கிற்கு வராமல் போயிருக்கலாம்.

1935களின் இந்தி எதிர்ப்புப் போராட் டங்கள் இந்தித் திணிப்பை நிறுத்திய தோடு தமிழ்மொழி இலக்கியம் சார்ந்த சொல் லாடல்களைத் தீவிரப்படுத்தின. பல மரபார்ந்த தமிழ் அறிஞர்கள் பெரி யார் தலைமையேற்றிருந்த நீதிக்கட்சி யோடு அணி சேர்ந்தனர்.தமிழ் அறிஞர் கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற அணிசேர்க்கை திராவிட அரசியலுக்குக் கிடைத்தது இக்காலத்தில் தான். அண்ணாவின் தலைமையிலான நீதிக் கட்சியின் இளம் தலைமுறை தமிழ் அடை யாள அரசியலின் இலக்கிய வழிப் பண்பாட்டு அரசியலை முனைப்பாக்கி யது. அண்ணா முதலான அணியினர் எழுத்தாளர்களாகவும் மேடைப் பேச்சா ளர்களாகவும் திரைப்படம் போன்ற நவீன ஊடக வியலாளராகவும் இருந்தனர். ஒரு புதிய தொழில் நுட்பத்தைக் கைப்பற்றுவது போல, வெகுசனப் பரப்புரைச் சாதனங்களை அவர்கள் கைப்பற்றினர். தேர்வு செய்யப் பட்ட பண்டைத் தமிழ் இலக்கியத் தகவுகளை ஜனரஞ்சக வடிவில் வெகுமக்களிடையில் அவர்கள் பரப்பினர். ஆரியர்/திராவிடர், பார்ப்பனர்/அல்லாதவர் வேறுபாடுகளை, மோதல்களை நாடகப்பாங்கான மக்கள் உணர் வாக அவர்களால் மாற்ற முடிந்தது. பண்டைத் தமிழ்ச் சமூகம் குறித்த ஒரு பிரும்மாண்டத்தை அவர்களால் உருவாக்கிக் காட்ட முடிந்தது.

அண்ணா முதலியோரின் இலக்கிய வழி அணுகுமுறை, அவர்தம் விருப்பு, வெறுப்புகட்கு அப்பாற்பட்டு, மதம் இருந்த இடத்தில் மொழி யையும் இலக்கியத்தையும் அமர வைத்தது. மதம் எவ்வகையான மேட்டுக்குடித் தகவுகளைச் சார்ந்திருக்குமோ அவ்வகையான தகவுகளின் அரசியலை இலக்கியச் சொல்லாடல்கள் மூலம் நிகழ்த்த முடிந்தது. அதாவது, பிராமணரல்லாத மேட்டுக்குடித் தகவுகளை மொழி, இலக்கியம் மூலம் நிலைநிறுத்த முடிந்தது. இந்த அரசிய லுக்குத் திராவிட இயக்கத்தின் இரண்டாம் தலை முறையினர் தலைமை தாங்கினர். தனித்தமிழ், செவ்வியல், செம்மொழி, வீரம், மானம், மூவேந்தர் மரபு, சோழர் காலத் தமிழின் பொற்காலம், கொஞ்சம் கூடுதலாக, முடியுமெனில் சைவ சமயப் பெருமை

பௌத்தம், சுயமரியாதைச் சிந்தனை ஆகியவற்றில் சிங்காரவேலர் ஈடுபாடு கொண்டிருந்த போதும், மார்க்சின் அரசியல் பொருளாதாரச் சிந்தனையால் முடிவாக ஆகர்ஷிக்கப்பட்டார்.

போன்றவை தமிழர் அடையாள அரசியலின் மையப் புள்ளிகளாகின.

திராவிட இயக்கத்தின் இரண்டாம் தலைமுறையினரே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள் ஆனார்கள். விடுதலை பெற்ற இந்தியாவில் அரசியல் அதிகாரத் திற்கான போட்டியில் திராவிட இயக்கத்தார் ஈடுபட வேண்டும் என்பது முன்னேற்றக் கழகத் தின் ஒரு முக்கிய நிலைப்பாடு. அரசியல் அதிகாரத்தில் பங்கேற்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தவறென்றுக்கொள்ள முடியாது. ஆனால் எந்த வர்க்கத்தின் பிரதிநிதி களாக அவர்கள் அதிகாரத்தில் பங்கேற்க விரும்பினர் என்பதே பிரச்சினை. தமிழ் அடையாளத்தின் பெயரால் அவர்கள் அரசியல் அதிகாரத்தை நாடினர். ஆனால் அரசியல் அதிகாரத்திற்கானப் போட்டியில் சாதி, வர்க்கம் போன்ற பிரச்சினை களைத் தவிர்த்தல் இயலாது.

சாதியும் வர்க்கமுமாக நிலை பெற்றிருக் கும் தமிழ்ச் சமூகத்தில், இனம் என்ற ஒன்றை வர்க்க, சாதி எல்லைகளுக்கு வெளியில் வைத்துப் பார்க்க முன்னேற்றக் கழகம் விழைந் தது. தமிழின அரசியலையும் தமிழ்ச் சமூகத்தின் சாதி, வர்க்க முரண்பாடுகளையும் ஒன்றிணைந்தி ருந்தால் முன்னேற்றக் கழகம் முற்போக்கு அரசியலின் முன்னோடிச் சக்தியாக ஆக முடிந்திருக்கும். மாறாக அடையாள அரசியலின் தளங்களுக்குள் தொழில்பட்ட மரபு ரீதியான சாதி மேட்டிமைகளை முன்னேற்றக் கழக அரசியலால் அப்புறப்படுத்த முடியவில்லை. அது போடிலவே அடையாள அரசியலி னுள் தாழில்படத் துவங்கிய முதலாளியச் சக்திகளி னின்றும் அது தன்னை அப்புறப்படுத்திக் கொள்ள வில்லை. தமிழ் அடையாள அரசிய லினுள் தொழில்படும் நில உடமைச் சாதிய சக்திகள் மற்றும் அவற்றின் ஊடாக உருவாகி வந்த முதலாளியச் சக்திகள் பற்றிய தன்னு ணர்வே முன்னேற்றக்கழக அரசியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுடன் விருப்புடன் இயைந்து செல்வதே முன்னேற்றக் கழக அரசியலாயிற்று.

ஜீவாவின் பண்பாட்டு அரசியல்

சிங்காரவேலர், பெரியார் ஆகி யோருடன் தமிழ் அடையாள அரசியலினுள் தோழர் ஜீவா பிரவேசித்தார். சிங்காரவேலரிடம் காணப்பட்ட சுயமரியாதை, பகுத்தறிவு, மார்க்சியம் என்ற



ஒன்றிணைந்த நிலை ஜீவாவிடமும் ஆரம்பக் காலத்தில் இருந்தது. இருப்பினும் ஜீவாவின் வாழ்க்கைக் காலம் அவருக்கு சில கூடுதல் வாய்ப்பு களை வழங்கியது. திராவிட இயக்கத் தாரின் இரண்டாம் தலை முறையினர் முன்னெடுத்த தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்த பண் பாட்டு அரசியலை ஜீவா நேரடியாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய வற்றின் தொன்மை, தொடர்ச்சி, செழுமை குறித்த தன்னுணர்வு ஜீவாவிடம் இருந்தது. சங்க இலக்கி யங்கள், தொல்காப்பியம், ஐம்பெரும் காப்பியங்கள், கம்பன் காவியம், பாரதி, பாரதிதாசன் எனத் தமிழ் இலக்கியத்தின் முழுப் பரப்பை ஜீவா தழுவி நின்றார். ஆயின் அவ்விலக் கியங்களை அண்ணா முதலானோர் அணுகியதிலிருந்து குறிப்பிடத்தக்க வேறுபாட்டுடன் ஜீவா அணுகினார். தமிழிலக்கியங்களினுள் மேட்டுக்குடி மரபுகளையோ மூவேந்தர் மாண்பு களையோ கண்டு ஜீவா சிலாகிக்க வில்லை.

சங்ககாலம் தொட்டு பாரதி, பாரதிதாசன் வரையிலான இலக்கி யங்களினுள் தொட்டுத் தொடர்ந்து வரும் மானுட மாண்புகளை, சனநாய கப் பண்புகளை, சமத்துவ ஏக்கங் களை ஜீவா வெளிக்கொணர்ந்தார். அவை வெறு மனே கடந்த காலப் பெருமைகளாக முடிந்து போய்விடா மல் புதிய காலப் பரப்பை நோக்கி

பல மரபார்ந்த தமிழ் அறிஞர்கள் பெரியார் தலைமையேற்றிருந்த நீதிக்கட்சியோடு அணி சேர்ந்தனர். தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற அணிசேர்க்கை திராவிட அரசியலுக்குக் கிடைத்தது இக்காலத்தில் தான்.

முன்பை விடப் பாய்ச்சலாக முன்னேற வேண்டும் என அவர் வகுத்து ரைத்தார். புதியவை நோக்கியப் பாய்ச்சலுக்குப் பாரதி அவருக்குச் சிறந்த எடுத்துக்காட் டாக அமைந்தார். ஜீவாவின் இலக்கியம் குறித்த அணுகு முறையில் தமிழ்ப் பண்பாடு, உழைக்கும் மக்களின் நலன், மானுடநேயம் ஆகியவை ஒன்றிணைந்தி ருந்தன.

தமிழ்மொழி குறித்த அரசிய லிலும் தோழர் ஜீவா கிட்டத்தட்ட இதே அணுகு முறையைத்தான் கொண்டிருந்தார். நீதிக் கட்சிக்காரர்கள் தொட்டு இங்கு வளர்க்கப் பட்டிருந்த ஆங்கில மோகத்தை ஜீவா கேள்விக்குள்ளாக்கினார். தமிழின் பழம்பெரு மைகள் பேசியவர்களால் கூட முன்வைக்கப்படாத ‘தமிழே ஆட்சிமொழி, தமிழே பயிற்று மொழி, தமிழே நிர்வாக மொழி’ என்ற முடிவான திட்டத்தை ஜீவா முன்வைத்தார். இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தை அரியணையில் ஏற்ற வேண்டும். அப்போது தான் தமிழன் உலகத்தரத்திற்கு உயர்வான் என்ற பம்மாத்து ஜீவாவிடம் இருந்த தில்லை. உழைக்கும் மக்களுக்கான கல்வி அவர் களது தாய்மொழியிலேயே கிடைக்க வேண்டும் என்ற மிகச் சர்வசாதாரண அணுகு முறையே ஜீவாவிடம் இருந்தது.

தமிழ்ச் சூழல்களில், சிங்காரவேலர் பகுத்தறிவும் புரட்சியும் இணையும் ஓர் தளத்தில் மார்க்சியத்தை முன்வைத்தார் எனில் பேராசான் ஜீவா அவர்கள் பண்பா டும் புரட்சியும் இணையும் ஓர் தளத்தில் மார்க்சியத்தை முன்வைத்தார் எனலாம். தமிழ்ப் பண்பாடு எனும் மிகச் செழுமை யான பரப்பினுள் புதைந்து கிடக்கும் புராதனப் பொது உடமைக் கனவுகள், சாதி எதிர்ப்புக் கூறுகள், சனநாயகக் கருத்தாக்கங்கள் ஆகியவற்றை இன் றைய உழைக்கும் மக்களின் போராட்ட ஆயுதங்களாக்கும் பண்பாட்டு அரசியலுக் கான அடிப்படைகளை ஜீவா வழங்கி னார். பண்பாட்டு அரசியலை விவசாயிகள், தொழிலாளிகளின் வர்க்கப் போராட்ட அரசியலுடன் இணைத்துச் செல்லும் ரசவா தத்தில் கம்யூனிஸ்டுகள் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தோழர் ஜீவா எதிர்பார்த்தார்.

> தமிழ்ப் பண்பாடு எனும் மிகச் செழுமையான பரப்பினுள் புதைந்து கிடக்கும் புராதனப் பொது உடமைக் கனவுகள், சாதி எதிர்ப்புக் கூறுகள், சனநாயகக் கருத்தாக்கங்கள் ஆகியவற்றை இன்றைய உழைக்கும் மக்களின் போராட்ட ஆயுதங்களாக்கும் பண்பாட்டு அரசியலுக்கான அடிப்படைகளை ஜீவா வழங்கினார்.

பேராசிரியர் நாவா: நாட்டுப்புறப் பண்பாட்டை நோக்கி

தோழர் ஜீவாவிற்குப் பிறகான தமிழ்ப் பண்பாட்டு அரசியல் மிக விரிந்த பரப்பைக் கொண்டது. திராவிட முன்னேற் றக் கழகம் ஆட்சிக் கட்டிலேறி தன்னிச்சையான முதலாளியத்தைப் பரப்பியது. அரசு நலத் திட்டங்களின் மூலம் ஏழை எளிய மக்களை தனக்கு ஆதரவாகத் தக்கவைத்துக் கொள் ளும் கலையில் அது தேர்ச்சி பெற்றது. ஏழை எளிய மக்களுக்கான அரசு நலத்திட்ட ஒதுக்கீடுகளின் வழி அது உண்மையில் தனது இரண்டாவது, மூன்றாவது மட்டத் தலைவர்களின் வாழ் வைச் செழிப்பாக்கி யது. அரசியல் அதிகாரத்தின் வழியாக வட்டார அளவிலான மேட்டிமைச் சாதி களை அது பலப்படுத்தியது. முதலாளிய வளர்ச்சியின் தற்காலிக ஆதாயங்களைக் கொண்டு கிராமப்புறங்களில் சாதியம் முன்பை விட அதிகமாக வலுவடைந்தது. ஒடுக்கப்பட்ட சாதிகள் தாம் திராவிடக் கட்சி களால் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்று தன்னுணர்வினைப் பெற்று மாற்றுவழிக ளைச் சிந்திக்கத் தொடங்கினர்.

பேராசிரியர் நாவாவின் தலைமையி லான ஆராய்ச்சிக் குழு தனது மார்க்சியப் பார்வையைக் கிராமங்களை நோக்கி, நாட்டுப்புறக் கலை இலக்கிய வாய்மொழி வடிவங்களை நோக்கிப் பரப்பியது. நாட்டுப்புற வழக்காறுகள் தொகுக்கப்படு தல், அவற்றின் பண்பாட் டுப் பொருண்மை அறியப்படுதல் என்ற செயல்பாடு துவங்கியது. தோழர் ஜீவா அவர்களின் பண்பாட்டு அரசியலின் பண்புகளை இது கொண்டதே எனினும் முன்னை விட உணர்வு பூர்வமாக இது உழைக்கும் மக்களின் பண்பாட் டைத் தேடி அடைவதாக அமைந்தது. எழுத்திலக்கி யங்களின் வழியாக மட்டுமே தமிழ்ப் பண்பாட்டை அணுகுதல் என்ற முறையிலி ருந்து அடிப்படையாக இது வேறுபட்டு நின்றது. வாய்மொழி வழக்காறுகள் மூல மாகப் பாடுபடும்மக்களின் பண்பாட்டு அனுபவங்களைப் பதிவு செய்யும் முறையி யலுக்கு அது முன்னுரிமை கொடுத்தது. சாதாரண மக்களின் உழைப்பு, அழகியல், அறம், துயரங்கள், எதிர்ப்புணர்வு ஆகிய வற்றை அது மையப்பட்டிருந்தது.

கொச்சையானது, தாறு மாறானது, ஒழுங்கற்றது, தரமற்றது, வரை முறையற்றது என்றெல்லாம் ஓரங்கட்டப்பட்டிருந்த மக்கள் பண்பாட்டின் நியாயமான சமூக அந்தஸ்தை நிறுவும் முயற்சி பேராசிரியர் நாவாவின் நாட்டுப் புறவியல் ஆய்வுகளில் அமைந்திருந்தது. வர்க்க சமூகத்தில் பண்பாடு என்பது ஒருபடித்தானது அல்ல, அது ஆளும் வர்க்கத்தாரின் பண்பாடு எனவும் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாடு எனவும் பிளவுபட்டே நிலவும் என்ற லெனினின் கருத்தைத் தமிழ்ச் சூழல்களில் எடுத்துரைப்பதாக இது அமைந்தது. பேராசிரியர் நாவாவின் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் பண்பாட்டில் வர்க்கப் போராட்டம் என்ற கருத்தாக்கத்தைப் பின்புலமாகக் கொண்டிருந்தது எனலாம். தமிழ் அடையாள அரசியலில் உழைக்கும் மக்களின் தரப்பை அது வலுவாக்கியது.

பேராசிரியரின் நாட்டுப்புறவியலின் வழியாக மானுடவியலும் இன வியலும் அறிஞர் உலகினுள் நுழைந்தன. தமிழ்ச் சூழல்களில் நாட்டு புறவியல் ஆய்வுகள் வெறுமனே மானுடவியலாகவும் இனவியலாகவும் மட்டும் நின்றுவிடவில்லை. அது தமிழ்ச் சமூகத்தில் வேரோடிப் போயுள்ள சாதிய எதார்த்தத்தை முன்னுக்குத் தள்ளியது. லெனின் கூறியதுபோல பண்பாடு என்பது இங்கு இரண்டாக அல்ல, பல படித்தான சாதி அடுக்குகளாகத் துண்டுபட்டுக் கிடக்கிறது என்ற உண்மையை அது வெளிப்படுத்தியது.

பேராசிரியர் நாவா தொடங்கி வைத்த நாட்டுப்புறவியலின் அடுத் தடுத்த அரசியல் வெளிப்பாடுகள் மிகத் தீவிரமானவை. வாய்மொழி வரலாறு, அடித்தள மக்கள் வரலாறு, இனவரைவியல், வெகுசனக் கலாசாரத்தில் நாட்டுப்புற வழக்காறுகள், பகடி செய்தல், கட்டுடைப்பு, பலவீன மானவர்களின் போராட்ட உத்திகள், மாற்றுப் பண்பாடு, மாற்று மருத்துவம், எதிர்ப் பண்பாடு, கலகப் பண்பாடு, பன்மீயப் பண்பாடு, தலித்பண்பாடு, பெண் எழுத்து, பெண் அரங்கு எனப் பல திசைகளில் நாட்டுப் புறவியலின் அரசியல் கிளை பரப்பி வளர்ந்துள்ளது. பேராசிரியர்கள் ஆ.சிவசுப்பிரமணியன், ராஜ்கௌதமன் ஆகியோரின் எழுத்துக்களோடு பரிச்சயம் உள்ளவர்கள் மேற்கூறிய சமகாலப் பண்பாட்டு அசைவுகளை எளிதில் புரிந்துகொள்ள முடியும். அமைப்பியல், பின் அமைப்பியல், பின்னை நவீனத்துவம்,

ஒடுக்கப்பட்டோரின் உளவியல் எனப் பலவகைக் கோட்பாடுகள் மேற்கூறிய பண்பாட்டு அசைவுகளோடு தொடர்பு கொண்டவை எனினும் கோட்பாடுகளைத் தாண்டி நின்று அவை தமிழ்ப் பண்பாடு, தமிழ் அடையாளம் ஆகியவை குறித்த விவாதங்களைச் செழுமைப்படுத்தி வருகின்றன.

முடிவுரை

19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தொடங்கிய தமிழ் அடையாள அரசியலின் செல்நெறிகளில் சிலவற்றை இங்கு வரிசைப்படுத்தியுள்ளோம். கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டபடி, தமிழ் அடையாள அரசியல் என்பது ஒற்றையானது அல்லது என்ற கருத்தை விவரித்துள்ளோம். அதன் இயங்கியல் மிகச் சிக்கலானது என்பதை விளக்கிக் காட்டியுள்ளோம். தமிழ் அடையாள அரசியல் என்பது பெரும் மோதல்களுக்கு உரித்தான ஒரு களமாகவே *(Contested Territory)* இருந்து வந்திருக்கிறது என்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. தமிழ் அடையாளம் என்பது தமிழ் ஆர்வலர்கள் என அறியப்பட்டவர்களின் ஏகபோகச் சொத்தாக இருக்கவில்லை. அது தமிழ்ச் சமூகத்தினுள் தொழில்படும் சாதி - வர்க்க சக்திகள் பொருதிக் கொள்ளும் ஒரு மைதானமாக இருந்து வந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டியுள்ளோம். இந்த போராட்டம் முடிந்துவிடவில்லை, தொடருகிறது. இப்போராட்டத்தில் மார்க்சியர்கள்,



ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் ஏராளமாகப் பங்களித்துள்ளனர், அவர்கள் இன்னும் செய்வதற்கு ஏராளமாக உண்டு.

இதுதான் தமிழ் அடையாளம், இவர்கள் தாம் அதனைச் சரியாகப் புரிந்துகொண்டார்கள் என்றுகூட நம்மால் இங்கு அறுதியிட்டுச் சொல்ல முடிய வில்லை. நாம் தொடர்ந்து, அடுத்தடுத்து தேடிக்கொண்டிருக்கும் சமூக விடுதலை வடிவங்களின் ஒரு குறியீடாகக் கூட அது இருக்கலாம். அது இதுவரையில் நாம் அறிந்த ஒன்றாக இல்லாமல், நாம் அடைய விரும்பும் கனவு தேசமாகக் கூட இருக்கலாம். நாம் அதனைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அதற்காக உண்மை யாகப் போராடிக் கொண்டிருக்கி றோம் என்பதே எல்லாவற்றையும் விட முக்கியமானது.



ஈழத்தமிழரின் அரசியல் கலாசாரத்தில் உயர்குழாமின் எழுச்சி : ஒரு பின்னோக்கிய தேடல்

கே.ரீ.கணேசலிங்கம்

கே.ரீ.கணேசலிங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக பணிபுரிகின்றார். அரசறிவியல் தொடர்பில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வருபவர்.

அறிமுகம்

பிரித்தானியரது ஆட்சி இலங்கை முழுவதும் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்த அறிமுகத்துடன் முடியாட்சி முறையை முடிவுக்கு கொண்டுவந்ததுடன் ஜனநாயக ஆட்சிமுறையை மலரச் செய்தது. அவ்வகை ஜனநாயக ஆட்சி மிதவாத அரசியல் சக்திகளின் எழுச்சிக்கு வழியமைத்தது. சாதிப்பிரிவுகளுக்குள் அகப்பட்டிருந்த ஈழத்தமிழரினிடையே புதிய வர்க்கமாக உயர்குழாத்தினர் இனங்கணப்பட்டனர். உயர்சாதிக் கட்டமைப்பையும், சொத்தையும் கொண்ட பிரிவினர் ஆங்கிலக் கல்வியை தம்முடன் சேர்த்துக் கொண்டதன் நிமித்தம் உயர்வர்க்கம் அரசியலில் மேற்குலகப் பாணியில் உருவாக ஆரம்பித்தது. ஈழத்தமிழரின் முடியாட்சி முறையை கைவிட்டு நவீன மேற்குலக ஆட்சிமுறைக்கு மாறும் கட்டம் ஒன்றிக்கான ஆரம்பத்தினை உயர்குழாம் சார்பாக பிரித்தானியர் ஏற்படுத்தினார்.

இவ்வகை நவீனமயவாக்கல் சிந்தனை பிரதிநிதித்துவ அரசியலை முன்வைத்தது. அரசியல் கட்டமைப்பினை சமூகங்களுடன் இணைத்ததில் பிரதிநிதித்துவ ஆட்சி பெரிதும் உதவியது. அரசியல் சமூக உருமாற்றத்தின் மையமாக உயர்குழாமினர் காணப்பட்டனர்.

இங்கு உயர் குழாமினர் யார் என்பதை புரிந்து கொள்வது. அவர்களின் இயல்புகளை மேற்குலக அரசியல் கலாசாரத்திலிருந்து வேறுபடுத்துதல் மூலம் சுதேச அரசியலுக்கு

முரணாக செயல்பட்டனர் என்பதை விளங்குதல், உயர்குழாமினர் என்கின்ற சமூக பிரிவின் பிரவேசம் சமூகமட்ட மயவாக்கத்திற்கு முன்னோடியாக மிளிர்ந்தது என்பதை செவ்வையாக அடையாளப்படுத்துதல் போன்ற நோக்குடன் இவ்வாய்வு கையாளப்படுகின்றது.

ஆய்வுக்கான முறையியலைப் பொறுத்து இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்படுகிறது. கண்டறிதல் *(Descriptive method)* ஆய்வு முறையிலாக கொள்ளப்படுகின்றது. அதனை மூலத்தரவுகளிலிருந்து விமர்சனம், மதிப்பீடு சார்ந்தும், அவதானிப்பு சார்ந்தும் அவ்வகை ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வின் மூலம் ஈழத்தமிழரின் உயர்குழாமின் நவீனத்துவ அரசியலின் செல்நெறியை இனங்காண உதவுகிறது என்பதை எட்டுவதுடன், அவ்வகைப் பிரிவினர் சமூகமாற்றத்திற்கு அரசியல் ரீதியல் பங்களிப்பினை காணுதல் முக்கியமான முடிவாக உள்ளது. சமூக மாறுதல் தவிர்க்கமுடியாத அசைவியக்கமாகும். அதில் அரசியல் பிரதான வீச்செல்லையாகும். அதனை நிகழ்த்தும் வலிமை உயர்வாக்கத்திடம் காணப்பட்டது.

இங்கு உயர்குழாம், சமூகமாற்றம், அரசியல் சமூகம், சமூகஉருமாற்றம், நவீனமயவாக்கம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உயர்குழாம் பற்றிய வரையறை

ஈழத்தமிழரின் சமூக அடையாளங்களில் பிரித்தானியர் வருகைக்குப் பின்பான கட்டமைப்பில் புதிய வடிவமாக உயர்குழாம் பிரிவினர் *(Elites)* இனங் காணப்பட்டனர். அவர்களின் அடையாளம் ஈழத்தமிழர்களின் சமூகத்தன்மையை விட அரசியல் தன்மையிலேயே அதிகமான செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. பிரித்தானியர் மட்டுமல்ல இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வருகையின் போதும், உயர்குழாம் பிரிவினரின் அடையாளங்கள் சாதி, சமயம். சொத்து, சமூக அந்தஸ்து என்ற அடிப்படையில் பேணப்பட்டு வந்தது. அச் சந்தர்ப்பத்தில் ஒரு சில பரம்பரை அலகினர் ஈழத்தமிழர் மத்தியில் ஆதிக்கம் செலுத்தியிருந்தனர். அதற்கான அடிப்படை நியமமாகச் சாதியம் விளங்கியது. முடியாட்சி முறைமைக்கும் ஆதிக்க சாதியத்திற்குமான நட்பு முதன்மைப் படுத்தப்பட்டது.

உயர்குழாமினர் என்ற சொற்பிரயோகத்தின் பாவனை குடியேற்றவாத ஆட்சியாளரின் ஆக்கிரமிப்புக்கு பின்பாடு அதிகரிக்க ஆரம்பித்தது. அவ்வகை உரையாடல் ஈழத்தமிழரிடம் மேட்டுக்குடியினர், அரசியல் ஆதிக்க சக்திகள், உயர் பிரிவினர் என்ற வர்க்கம் சார்ந்த அடையாளங்களை மேம்பாடடையச் செய்தது. சாதிப்பிரிவுகளுக்குள் அகப்பட்ட ஈழத்தமிழரின் அடையாளம் படிப்படியாக வர்க்கக் கட்டமைப்புக்குள் நகர்ந்தது. குடியேற்றவாத நாடுகளில் காணப்பட்ட வர்க்கக் கட்டமைப்புக்கு நிகரான சமூக, பொருளாதார, அரசியல் தளம் இல்லாத ஈழத்தமிழரிடம் பிரித்தானிய ஆட்சியதிகாரம் வர்க்கக் கட்டமைப்பை ஏற்படுத்தும் மாதிரிகளை அறிமுகப்படுத்தியது. அதில் பிரதான அம்சமாக உயர்குழாம் பிரிவினரை உருவாக்கியதுடன் ஏற்கெனவே சாதியிலும், சொத்திலும் மேல்நிலையடைந்திருந்த ஈழத்தமிழரின் உயர் பிரிவினருக்கு ஆங்கிலக்கல்வியை மேலதிகமாக இணைத்து அவ் உயர்வர்க்கத்தை அடையாளப்படுத்தினர். அது அரசியல் அதிகாரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதுடன், நிலமானிய மாதிரியிலிருந்து முதலாளித்துவ மாதிரிக்கு ஈழத்தமிழரின் பொருளாதார வடிவம் உருமாற்றம்பெற ஆரம்பித்தது. இவ்வாறு மேற்குலக நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதாரக் கூறுகளை ஈழத்தமிழரிடம் பரப்புவதில் கவனம் செலுத்திய பிரித்தானியர் உயர்குழாம் பிரிவினரை தமக்குச் சமமானவர்களாக மதித்துச் செயற்பட்டனர். பிரித்தானியரின் நவீனமயமாக்கத்தின் பிரதான அம்சமாகவும், உயிரோட்டமுள்ள அடையாளமாகவும் உயர்குழாம் காணப்பட்டது. அவ்வகைப் பிரிவினர் சமகால அரசியல்வரை ஆதிக்கம் செலுத்துவதில் முனைப்புக்காட்டி வருகின்றனர். எனவே உயர்குழாமினர் யார் என்பதையும், அதற்கான விளக்கத்தினையும் விரிவாக நோக்குவோம்.

உயர்குழாமினர் என்ற சொற்பிரயோகத்தின் பாவனை குடியேற்றவாத ஆட்சியாளரின் ஆக்கிரமிப்புக்கு பின்பாடு அதிகரிக்க ஆரம்பித்தது. அவ்வகை உரையாடல் ஈழத்தமிழரிடம் மேட்டுக்குடியினர், அரசியல் ஆதிக்க சக்திகள், உயர் பிரிவினர் என்ற வர்க்கம் சார்ந்த அடையாளங்களை மேம்பாடடையச் செய்தது.

உயர்குழாமினர் அரசியலில் ஆட்சி அதிகாரத்தினை செலுத்துபவர்களும், சொத்து, சாதி மற்றும் வர்த்தகக் கட்டமைப்பில் சமூக மட்டத்தில் உயர்பிரிவினராக விளங்கும் ஆதிக்க சக்திகளைக் குறிப்பதாகும். *Veltredo Pareto* என்ற அறிஞர் உயர்குழாம் என்பது மேல்நிலையினரைக் குறிப்பால் உணர்த்துவது என்றார். மேலும் சமூகத்தில் தீர்மானம் எடுப்பவர்கள் அல்லது தீர்மானம் எடுக்கும் நிலையைக் கொண்டிருப்பவர் களைக் குறிப்பதாகும் எனவும் கூறினார். அதிகா ரத்தை மட்டும் பிரதிபலித்துச் செயற்படுவதாக வன்றி சமூகம் சார்ந்த ஒழுங்கமைப்புக்களிலும், பிரிவுகளிலும் தீர்மானங்களை நிறைவேற்றவும், எடுக்கவும் வல்லமையுடைய பிரிவினரை உயர்குழாமினர் என அழைக்க முடியும் என்கிறார் *Pareto.* அவ்வாறே *C.Wright Mills* என்பவர் அதிகாரம், பணபலம், கௌரவம் என்பவற்றினால் சாதாரணமக்களிலிருந்து வேறுபட்டு, சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டு ஒழுங்கு நிலையினை ஏற்படுத்துபவர்கள் உயர்குழாமினர் என்றார்.

எனவே இவர்களின் விளக்கங்களிலிருந்து தெளிவான விளக்கம் ஒன்றினைப் பெறக்கூடிய தாக உள்ளது. ஈழத்தமிழர் மத்தியில் ஒரு குறிப் பிட்ட பிரிவினரே உயர்குழாமினராகக் காணப் பட்டனர். அவர்களில் மொழி, மத, ஒழுக்க நெறிசார்ந்து வலிமையும், சமூக அந்தஸ்தினைக் கொண்டவர்களாகவும், அதிகாரத்திலும், சொத்திலும், சாதியரீதியிலும் மேல்நிலையினர் உயர்குழாம் பிரிவிற்குள் அடக்கப்பட்டனர். அவர் கள் பிறசமூகங்கள் மீது ஆதிக்கமும், செல்வாக் கும் செலுத்தினார்கள். பிரித்தானியரின் குடியேற்றவாதக் கொள்கை உயர்குழாமினரை நவீன பிரிவினராகவும், தமது கொள்கைகளைப் பரவலாக்கம் செய்யும் முகவராகவும் அடை யாளப்படுத்தியது இதனால் உயர்குழாமி னருக்கும், பிரித்தானிய ஆட்சியாளருக்குமிடையே நல்லுறவு நிலவியது.

ஈழத்தமிழரில் உயர்குழாமினர்

ஈழத்தமிழரிடையே உயர்குழாம் பிரிவினர் பிரித்தானியாரின் குடியேற்றவாத காலத்திற்கு பிற்பாடு வளர்ச்சியடைந்தாதென ஏற்கனவே கருதியிருந்தோம். அவ்வகையில் பிரித்தானியரின் அரசியல் முறைமைகளை இலங்கைக்குள் அமுல்ப்படுத்த முயன்றபோது அடையாளப்படுத் தப்பட்ட பிரிவினராக உயர்குழாமினர் விளங்கினர். அவர்களின் அரசியல் அபிலாசையும், மிதவாத

அரசியலை முடியாட்சிக்கு மாறானதாக அமுலாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதும் மிகத் தெளிவாக வும், துல்லியமாகவும் பிரயோகப் படுத்தக் கூடியவர்களாக ஈழத்தமிழரில் ஒரு பிரிவினர் இனங்காணப்பட்டனர். அதாவது, அரசியல் அதிகாரத்தினை மிதவாத அடிப்படையில் அமுல்படுத்து வதும், உயர்குழாமினர் சமூகமாற்றத் தினை அரசியல் முறைமைகளுக் கூடாகவும், அரசியல் அதிகாரம் சார்ந்த வகையிலும் பிரயோகப்படுத் தினர். மிதவாதம் சார்ந்த அரசியல் மாற்றத்தினை அமுலாக்கம் செய்ய முயன்ற பிரித்தானியர் மேற்குலக மாதிரிகளை அதிகம் அரசியல் யாப்பு முறைமைகளுக்குள்ளால் முன்மொழிந் தனர். அவ்வகை முன்மொழிவுகளுக் குள் ஈழத்தமிழ் உயர்குழாம் பிரிவினர் ஈழத்தமிழரின் நவீனமயமாக்கத்தின் வடிவமாகக் கருதினர். அவ்வகை நவீன மயமாக்கல் சிந்தனை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பகுதியில் நிகழ்ந்த தைக் காட்டிலும், பிரித்தானியர் காலத் திலேயே அதிகமாகக் காணப்பட்டது. அவ்வகை வரைபியலுக்குள் ஈழத் தமிழர் மத்தியில் முதலியார், தலையாரி. மணியகாரர், விதானையார் குடும்பம் என்பன முதல்படியிலும். காணியுடமையாளர்களான நெல்

உற்பத்தியாளர்கள் இரண்டாம் படியிலும் நடுத்தர சிறு உடமையாளர்கள் அடுத்த படியிலும் சிற்றுடமை உழுகுடிகள் போன்ற பிரிவினர் மேல்நிலை சக்திகளா கவும் இனங்காணப்பட்டனர். ஈழத்தமி ழரிடையே சில குடும்பங்களும் அவர்களின் சந்ததியினரும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் உந்துதலில் சொத்து, ஆங்கிலக்கல்வி, சாதியம் இணைந்து கொண்டது. இப்பகுதியின் கட்டமைப்பை முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டி யது தவிர்க்க முடியாததாகும். காரணம் ஈழத்தமிழரின் மிதவாத அரசியலின் தோற்றப்பாடு அக்காலப்பகுதியிலேயே ஆரம்பமான தெனக்கூறலாம். இது ஒரு நவீன அரசியலுக்கான முனைப்புப் பெற்ற காலம் எனலாம். இதுவரை முடியாட்சி மரபுக்குளிருந்த ஈழத்தமிழர் மிதவாத அரசியலுக்குள் பிரவேசிக்கின்றனர் என்பது புதியது மட்டுமன்றி தவிர்க்கமுடியாத புறச்சூழலையும் முன் ஆயத்தமற்ற பிரவேசமென்பதும் குறிப்பிடவேண்டிய அம்சமாகும். இதில் மேற்கத்தேச கல்விப் பாரம்பரியம் வலுவான காரணியாகும். ஈழத்தமிழரின் திண்ணைக் கல்வியும் குடியேற்ற நாடுகளின் மிஷனறிக்கல்வியும் புதிய அரசியல் சிந்தனைக்கு களமமைத் தது. இதில் திண்ணைக் கல்விக்கு மெருகூட்டும் விதத்தில் மிஷனறிக்கல்வி பங்காற்றியுள் ளது. ஆங்கிலக் கல்வியின் வருகை ஈழத்தமிழரின் உயர்சாதி கட்டு மானத்தின் இன்னோர் உயர்குழாமிற்கான பரிமாணமாக சேர்ந்து கொண்டது. இது பற்றிய விபரங்கள் மோர்ணிங் ஸ்ரார் மற்றும் கத்தோலிக்க மிஷனறி அறிக் கைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சாதிக் கட்டமைப்பை தகர்க்க முயன்ற மிஷனறிகள் கூட உயர் சாதியினருக்கே முக்கி யத்துவம் கொடுக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந் தன. (5செப்ரெம்பர் 1845 க.மி.அறிக்கை) 1924 ஆம் ஆண்டு அறிக்கையில் அமெரிக்க சிலோன் மிஷன் குறிப்பிடும் போது 108 மொத்த மாணவர்களில் 95 மாணவர்கள் உயர் சாதி வேளாளர் எனக் குறிப்பிட்டுள்ளது.

மிஷனறிகளின் கல்விப் பாரம்பரியத் திற்கான பங்களிப்பு ஈழத்தமிழர் மத்தியில் அதிகமாகவே காணப்பட்டுள்ளது. பாடசாலை கள் கல்லூரிகள் அமைக்கப்பட்டதுடன் அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலுமிருந்தும் சிறந்த ஆசிரியர்களை தருவித்தமை ஆங்கிலக்கல்வியை சிறப்புறக் கற்பித்தமை என்பன கல்வி எழுச்சி பெற காரணமாகியது. கல்வியின் எழுச்சி ஈழத்தமிழரின் அரசியல் சமூக பொருளாதார கட்டமைப்பில் பாரிய மாற்றத்திற்கு வழியமைத்தது. மிஷனறியில் ஏற்படுத்தப்பட்ட அனுபவம் மற்றும் அறி வார்ந்த விடயங்கள் மேட்டுக்குடி அரசியலை பலப்படுத்தியது. ஐரோப்பிய அரசியல் வடிவங்களை ஈழத்தமிழரின் மேட்டுக்குடியினர் பின்பற்ற ஆரம்பித்தனர். சட்டத்தின் ஆட்சியை வலிமைப்படுத்தும் நோக்குடன் பிரித்தானி யரால் உருவாக்கப்பட்ட சட்டத்துறையின் அங்கத்தவரான மேட்டுக்குடியினர் சட்டத் துறையின் முதலீடாக வழக்குரை தொழிலைக் கருதினர். மிஷனறிகளும் கணிதம் மருத்துவம் என்பனவற்றுக்கு நிகராக சட்டத்துறைக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். சட்டத்தரணிகளே சட்டத்துறையையும் பின்னர் 1956 ஆம் ஆண்டுவரை பராளுமன்றத்தையும் நிரப்பீடு செய்தனர். மேலும் ஐரோப்பிய அரசியல் மரபுகளை ஈழத்தமிழர் மத்தியில் விதைத்ததுடன் ஐரோப்பிய அரசியல் சிந்தனைகளுக்கூடாக ஆதிக்கம் செலுத்துவது தலைமை தாங்குவது புரட்சிகரமாக முடிபு களை முன்மொழிவது என பல விடயங்களை மேட்டுக்குடியினர் முன்னெடுத்தனர்.

ஏ.ஜெ.வில்சன் குறிப்பிடுவதுபோல் ஈழத்தமிழர் அரசியலில் சாதியும் அகத் திருமணமும் கிராமங்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகரமான பங்களிப்பை ஏற்படுத்தியி ருந்தன. வெனடிக்அன்டர்ஸன் காரல் டச் போன்றவர்களை ஆதாரப்படுத்தும் வில்சன் வெளியாரின தலையீடும் வர்த்தகப் பொருளா தாரமும் தமிழ்மொழி மூலமான அச்சு இயந்தி ரத்தின் வருகையும் வெகுஜன ஊடகங்களின் விருத்தியும் போக்குவரத்தும் நவீனமயமாகக்க மும் அரசியல் மயவாக்கலையும் ஈழத் தமிழரின் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு காரணமாகின. இதனால் உயர் வர்க்கத்தார் வழி ஏனைய சாதிகளும் வர்க்கத்தினரும் ஒன்று சேர்ந்து ஓர் அரசியல் பிரக்ஞையை கட்டிவளர்த்தனர்.

ஈழத்தமிழரிடையே சில குடும்பங்களும் அவர்களின் சந்ததியினரும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றும் உந்துதலில் சொத்து, ஆங்கிலக்கல்வி, சாதியம் காரணமாகியது. இப்பகுதியின் கட்டமைப்பை முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

அந்த வரிசையில் பிரித்தானிய அரசிய லமைப்பின்கீழ் ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி என்பவர் சட்டசபையின் பிரதி நிதியாக நியமிக்கப பெற்றார். இவர் பருத்தித் துறைப் பிரதேசத்தின் கெருடாவில் கிராமத்தை சேர்ந்தவர். இவரது திறமையால் 1808 இல் மொழிபெயர்பாளராகவும் 1810 இல் பிரதம தமிழ் மொழிபெயர்பாளராகவும் நியமனம் பெற்றார். கொழும்பை மையமாகக் கொண்ட தமிழர் மத்தியில் பண்புமிக்க நடத்தை திறமை வியாபார தந்திரம் என்பவற்றால் பெரும்பான்மை வாக்குகள் பெற்று சட்டசபைக்கு தெரிவானார். அவரது மறைவுக்குப் பின்பு சைமன் காசிச்செட்டி 1838 இல் நியமிக்கப்பட்டார். சேனாதிராயா எதிர்மன்னசிங்கம் சட்டசபை அங்கத்தவரானார். இவரைத் தொடர்ந்து முத்துக்குமாரசாமி ஆகிய குமாரசாமி முதலியா ரின் மகன் சட்டசபையின் அங்கத்துவத்தை நிரப்பினார். ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் அப்பதவியில் கடமை யாற்றியதோடு 'கிழக்கின் வெள்ளி நாக்கு சொற்பொழிவாளர்' என கௌர விக்கப்பட்டார். அத்தோடு அவரே ஆசியாவின் முதல் 'சேர்' பட்டம் பெற்றவராகவும், திகழ்ந்தார். முத்துக்குமாரசாமி பெரியாருக்கு பின்பு அவரது உறவுவழிவந்த பொன்னம்பலம் இராமநாதன் சட்டசபையின் உறுப்பினராகத் திகழ்ந்தார். மேலும் அவருடைய சகோதரர் பொன்னம்பலம் குமாரசாமியும் அவ்வகை செல்வாக்குடைய உயர்குழாமின் அடையாளத்தை ஈழத்தமிழர் மத்தியில் வெளிப்படுத்தியவராகவும், குடும்பமாக வும் அவர்கள் இனங் காணப்பட்டனர். அதன் பின்னர் கிறிஸ்தவ தமிழனான டாக்டர் றொக்வூட்டை தேசாதிபதி நியமித்தமை தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற குமாரசாமிக்கான ஆதரவு இந்துத்துவ அடிப்படைத் தளத்திலிருந்து எழுச்சி பெற்றதோடு தமிழரின் ஐக்கியம் தேசிய மட்டத்தில் வலுப்பெற்றது. உயர்குழாமினர் ஐரோப்பியரை பின்பற்றிய போக்குக்கு முதல்முதலாக பாரிய முறுகலை எதிர்கொண்டனர். இதனை தமிழர்கள் எதிர்பார்க்கவே இல்லை.

ஜனநாயக மரபுகளை சொல்லிக் கொடுத்த பிரித்தானியரே வடக்கு கிழக்கு கொழும்பு வாழ் தமிழர்கள் குமாரசாமிக்கு வழங்கிய ஆதரவை நிராகரித்தமை துயரமிக்க அரசியலாக மாறியது. பின்னர் ஏ.கனகசபையை அப்பதவிக்கு காலம்தாழ்த்தி நியமித்தா லும் தமிழர்கள் விரும்பிய குமாரசாமியை பிரித்தானியர்கள் பிரதி நிதியாக தேர்ந்தெடுக்கவே இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

குமாரசாமி பிரித்தானியருக்கு எதிராக தமிழ் மக்களை அணி திரட்டி னார். பொன்னம்பலம் அருணாசலம் சிங்களத் தலைவர் களுக்கு எதிராக தமிழர்களை ஐக்கியப்படுத்தினார். இரண்டுமே உயர்குழாமினரின் அணி திரட்டல்களே. உயர்குழாம் அரசியலுக் குள்ளால் அவர்கள் முன்வைத்த தமிழர்களுக் கான அரசியல் முதலீடு தோற்றுப் போனதென்றே கூறக்கூடிய தாக உள்ளது.

ஈழத்தமிழரின் சமூக அமைப்பும் மாற்றமும்

ஈழத்தமிழரின் சமூக கட்டமைப்பு மிக இறுக்கமானதாக அமைந்திருந்தது. சாதிவழித்தோன்றலின் பிரதிபலிப் புக்களால் வடிவமெடுத்திருந்த சமூகம் ஐரோப்பியரது வருகைக்குப் பின்பு சற்று மாற்றங்களை எதிர்கொண்டது. அதிலும் பிரித்தானியரின் வருகை அதிகமான சமூக மாற்றத்துக்கான சூழலை ஏற்படுத்தியது. சாதி, சமய கட்டமைப்புக்களைத் தகர்க்கும் வழி முறைகளைப் பிரித்தானியர் அரசியல் அதிகாரத்தினால் ஒரு மாற்றம் செய்ய

உயர்குழாமினர்
ஐரோப்பியரை
பின்பற்றிய போக்குக்கு
முதல்முதலாக
பாரிய முறுகலை
எதிர்கொண்டனர்.
இதனை தமிழர்கள்
எதிர்பார்க்கவே இல்லை.
ஜனநாயக மரபுகளை
சொல்லிக் கொடுத்த
பிரித்தானியரே
வடக்கு கிழக்கு
கொழும்பு வாழ் தமிழர்கள்
குமாரசாமிக்கு
வழங்கிய ஆதரவை
நிராகரித்தமை
துயரமிக்க அரசியலாக
மாறியது.

விரும்பினர். அதனால் இலங்கையில் 'கறவா' (கரையார் சாதியினர்) சாதிக்கட்டமைப்பு உயர்வர்க்க வரம்புக்குள் *(karava elites)* தம்மை அடையாளப்படுத்தியதாக இலங்கையின் வரலாற்றை அதிகம் முதன்மைப்படுத்தும் மைக்கல் றொபேட்ஸ் குறிப்பிடுகின்றார்.

இதேபோன்று ஈழத்தமிழர் பிரதேசத்திலும் உயர்வர்க்க அரசியலில் கரையார் சாதியினர் வெள்ளாளச் சாதியினருக்குச் சமமான நிலையை அடைய முயன்றுள்ளதாகவும் வெள்ளாள சாதிக்கு நிகரானவர்களென்றும் வைத்திலிங்கப் பிள்ளையின் 'சாதி நிர்ணய புராணத்தை' ஆதாரப்படுத்தும் வில்சன் கரையாம் சாதியினர் பிராமணர்களின் வழித்தோன்றல் என்பதையும் மேற்கேள் காட்டுகின்றார். கரையாம் சாதியினர் கடலோடிகள், கப்பல் கட்டுதல், கப்பலோட்டுதல், கடல்சண்டை செய்தல், கப்பல் வர்த்தகத்தில் ஈடுபடுதல் என ஒரு புதிய பலம்படைத்த குழுவாக எழுச்சி பெற்று வந்தனர். ஆறுமுகநாவலர் கரையாம் சாதி செல்வந்தர்களிடம் தமது சமயப்பணிக்காக பொருள் உதவி பெற்றதாக ஏ.ஜெ.வில்சன் குறிப்பிடுகின்றார்.

ஆனால் ஆங்கிலக்கல்வியில் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே(1851-அமெரிக்கசிலோன் மிஷனில் 02பேர் மட்டுமே) பங்கெடுத்தனர். இதனால் கரையாம் சாதியினான் உயர்குழாம் அரசியலில் வலுவான சக்தியாக எழுச்சி பெற முடியவில்லை. தென்னிலங்கையுடன் ஒப்பிடுகின்றபோது ஈழத்தமிழர் மத்தியில் உதிரிகளாக காணப்பட்டனரே அன்றி பெரும் சக்தியாக எழுச்சி பெறவில்லை.

இச்சாதிக்கட்டமைப்பு முறைக்கான சமூகமாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளில் பிரதானமானவற்றைப் பிரித்தானிய ஆட்சிமுறை ஏற்படுத்தியது. கோல்புறூக் முதல் சோல்பரி அரசியல் யாப்புவரை முன்வைக்கப்பட்ட சிபாரிசுகளுக்குள்ளால் ஈழத்தமிழரின் சமூக அடுக்கமைவில் காட்டிய அதேவகையான அம்சங்கள் பெண்களின் சமூகக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது.

அமெரிக்க-சிலோன் மிஷன் முதல் முதலாக தேர்ந்தெடுத்த சிறுமியர்களுக்கு விடுதிப் பாடசாலையை அமைத்துக் கொடுத்தது. அதேபோன்று1834 இல் திருமதி பேசிவலின் தலைமையில் முதலாவது வெஸ்லியன் பெண்கள் பாடசாலை ஒன்றை நிறுவியதாக தெரியவருகிறது. குறிப்பாக அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொடுத்ததன் பின்புலத்தில் பிரித்தானியர் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். பிரித்தானியரது அரசியல் அதிகாரத்திற்கான அவாவினால் மேற்கொண்ட டொனமூர்க்குழுவின் அரசியல் சிபார்சு இலங்கை சமூகக் கட்டமைப்பிலும், ஈழத் தமிழரின் சமூக அசைவிலும் அதிகமான விளைவுகளை ஏற்படுத்தியது.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை குடியேற்றவாத ஆட்சியில் ஆரம்பகாலப் பகுதியில் செல்வாக்குடையவராகக் காணப்பட்டனர். குறிப்பாக 1909ஆம் ஆண்டு பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரியாக விருந்த குறூப் பிரபுவுக்கு இலங்கையின் ஆள்பதியாகவிருந்த கென்றிமக்கலம் 'இலங்கை மக்களின் ஒரு பகுதியினராகிய தமிழர்கள் குடியேற்றவாத ஆதிக்கத்தின் நல்வாழ்வுக்கும், பொருளாதார நலனுக்கும் மிகவும் அத்தியாவசியமானவர்கள்' என எழுதியிருந்தார். இதனால் ஈழத்தமிழரிடையே எழுச்சி பெற்ற மத்தியதரவர்க்கம் படிப் படியாகக் குடியேற்றவாத மனநிலைக்குள் தம்மை வளர்த்துக் கொண்டது.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் குடியேற்றவாத ஆட்சியின் கொள்கைகளைப் பரவலாக்கம் செய்யும் அலுவலராக ஈழத் தமிழர் நியமிக்கப்பட்டமை சமூகமாற்றத்தின் இன்னோர் பரிமாணமாகியது. இவ்வகைக் காரணிகளே ஈழத்தமிழரின் உயர்குழாம் உருவாக்கத்துக்கும், மத்தியதரவர்க்கத்தின் எழுச்சிக்கும் வித்திட்ட அம்சங்களாகும். மேலும் படித்த இலங்கையருக்கான தேர்தலில் சேர். பொன். இராமநாதனின் வெற்றிக்கு (1912) பிரதானமான காரணியாக அமைந்த அம்சம் ஈழத்தமிழரின் கல்வித்தரமாகவே உள்ளது. ஏறக்குறைய ஆறு இலட்சம் தமிழரில்

தேசவழமைச்சட்டத்தினை தயார் செய்த ஒல்லாந்துக்காரர் யாழ்ப்பாணத்திற்கு உரியதும், மட்டக்களப்பிற்கும் உரியதுமான தேசவழமைகளை இனங்கண்டனர். அதன்படி ஈழத்தமிழரின் தேசவழமை அடையாளம் இருகூறுகளாக இனங்காணப்படதென்பதைவிட சொத்து நிலம் சார்ந்தும், அதன் பயன்கள் சார்ந்தும் முதன்மையடைந்திருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

1346பேர் கல்வித் தகைமை அடிப்படையில் வாக்குரிமைக்கு உரித்துடையவராக இருந்தனர். இருபத்தெட்டு இலட்சம் சிங்கள மக்களில் 1748பேர் கல்வித் தகைமை அடிப்படையில் வாக்குரிமை பெற்றவராகக் காணப்பட்டனர். எனவே ஈழத்தமிழரின் கல்வியும், அதன் முக்கியத்துவமும், அவர்களை உயர்வர்க்க அடையாளத்தில் முதன்மைப்படுத்தியது.

தேசவழமைச்சட்டத்தினை தயார் செய்த ஒல்லாந்துக்காரர் யாழ்ப்பாணத்திற்கு உரியதும், மட்டக்களப்பிற்கும் உரியதுமான தேசவழமை களை இனங்கண்டனர். அதன்படி ஈழத்தமிழரின் தேசவழமை அடையாளம் இருகூறுகளாக இனங்காணப்பட்டதென்பதைவிட சொத்து நிலம் சார்ந்தும், அதன் பயன்கள் சார்ந்தும் முதன்மை யடைந்திருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஒரு புறம் நிலத்தை முதன்மை படுத்திய ஈழத்தமிழர் பின்னர் கல்வியை முதன்மை இலக்காகக் கொண்ட அரசியல் அதிகாரத்திற்கான முனைப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கினார்கள். இதுவே உயர்குழாமினரின் இயல்புகளிலும், அடையாளத்திலும் இனங்காண முடிந்தது.

ஈழத்தமிழ் உயர் குழாமினரின் பிரதிமைகள்

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை அரசியல் அதிகாரத்தை எட்டும்போது மிக வலுவான செல்வாக்குடைய சமூகமாகக் காணப்பட்டனர். உயர்குழாம் என்ற மேற்குலக அரசியல் பரிமாணத்தினை அப்படியே அதிகம் பின்பற்றும் வலிமை ஈழத்தமிழரிடம் காணப்பட்டது. ஆனால் ஈழத்தமிழர் தமது உயர்குழாம் அரசியல் அந்தஸ்தினை பேணுகின்றபோது மரபுகளிலிருந்தும், பண்பாட்டுக் கூறுகளிலிருந்தும் வேறுபடாது செயற்பட முனைந்துள்ளனர். குறிப்பாக குமாரசாமியின் பரம்பரையும், பொன்னம்பலம் பரம்பரையும் ஈழத்தமிழரின் அடையாளங்களை ஒருபோதும் நழுவவிடாது பின்பற்றினர். பிரித்தானிய பிரபுத்துவ பிரிவினரே வியக்கும் விதத்தில் அவர்களது அடையாளங்களும், வெளிப்பாடுகளும் அமைந்திருந்தது. சேர் முத்துக்குமாரசுவாமியின் ஆடை அணிகலன்களை வியந்த பிரித்தானியக் கவிஞர்கள்,

His coat was like the show drift
His pants of similar hue ;
His turban shone with diamonds,
And his girdle – it was blue.

என்பது கீழைத்தேச உடையலங் காரத்தை ஆங்கிலேயர் புகழ்வதாக அமைந்திருப்பது மட்டுமல்ல அவர்க ளின் மொழியைக் கற்று அவர்களையே வியக்கவைத்த ஈழத்தமிழரின் உயர்குழாம் அரிச்சுவடியாகும். ஆனால் அவர்களும், அவர்களது அரசியல் சூழ லும், ஈழத்தமிழரின் அடையாளத்தை பேணியது போன்று இலங்கையினது (ஈழத்தின்) தேசிய அடையாளத்தை முதன்மைப்படுத்த ஒருபோதும் தவறவில்லை. இலங்கைத் தேசியம்

ஈழத்தமிழரின் உறுதிமிக்க சுலோகமாக அமைந்திருந்தது. அதனை முதலில் உடைத்துத் தமிழ்த் தேசியத்தை முன் வைத்தவராக சேர்.பொன். அருணாசலம் விளங்கினார். பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தேசியத்திற்குத் தலைமைதாங்கிய ஈழத்தமிழர்கள் இலங்கை முழுவதற்குமான தேசியத்தை வெளிப்படுத்தினார்கள்.

அவ்வகை இலங்கைத் தேசியத்தின் தலைமைக் கும், பெரும்பான்மை சிங்கள தேசிய தலைமைக்கும் மோதல் ஏற்பட்ட போதே தமிழ்த்தேசியம், சிங்களத் தேசியம் என இரு அடையாளம் இலங்கைக்குள் உயர்குழாமினால் இனங்காணப் பட்டது. இருபிரிவினரும் மொழி, மதம், இனம் என்ற அடிப்படைக்குள் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை நிறுவ ஆரம்பித்தனர்.

ஈழத்தமிழரின் உயர்குழாமினரின் இன்னோர் பிரதான இயல்பான இலங்கைத் தேசியத்தை மதித்ததுபோல் பௌத்தத்தினை மதிக்கும் இயல்பும், பின்பற்றுவதும், பேணுவதும் ஓரம்சமாக விளங்கியது. பௌத்தத்தையும், பௌத்தர்களையும் முதன்மைப்படுத்துவதில் பிரித்தானியர் கால ஈழத்தமிழ்சார் உயர்குழாமினர் காணப்பட்டனர். மேலும் உயர்குழாமினர் என்ற அடிப்படையில் சிங்கள உயர்வர்க்கத்துடன் நல்லுறவையும், நட்பினையம் பேணிவந்தனர். அது அவர்களது தேசிய அடையாளத்தினை மேலும் மெருகூட்டுவதாக அமைந்திருந்தது.

ஈழத்தமிழரின் உயர்குழாமினர் நவீனத்துவப் பரிணாமமாக இனங்காணக் கூடிய அம்சமாக ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொண்டது மட்டுமன்றி அதில் பாண்டித்தியம் பெறுமளவிற்கு விளங்கினர். இதனால் ஆங்கிலேய உயர்வர்க்கத்திற்கு நிகராக ஆக்கிக் கொள்ளவும், இலங்கைக்குள் தலைசிறந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவும், உதவியது. அத்துடன் ஆங்கிலேயரின் நெளிவு சுளிவுகளை இனங்கண்டு பணியாற்றவும், சேவைபுரியவும் அவர்களால் முடிந்தது. இதனால் அரசியல் அதிகாரத்தை இலகுவாக நிலைநாட்டக் கூடியவர்களாகக் காணப்பட்டனர். உள்நாட்டுக் கலவரத்தை அடக்க இராணியிடம் சென்று ஒப்புதல் பெற்று உள்நாட்டு விவகாரங்களைக் கையாளும் தந்திரம் அன்றைய ஈழத்தமிழ் உயர்குழாமிடம் காணப்பட்டது.

ஈழத்தமிழரின் உயர்குழாமினர் நவீனத்துவப் பரிணாமமாக இனங்காணக்கூடிய அம்சமாக ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொண்டது மட்டுமன்றி அதில் பாண்டித்தியம் பெறுமளவிற்கு விளங்கினர். இதனால் ஆங்கிலேய உயர்வர்க்கத்திற்கு நிகராக ஆக்கிக் கொள்ளவும், இலங்கைக்குள் தலைசிறந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவும், உதவியது.

அரசியல் அதிகாரத்தில் இருக்கும் போதும், புலமையாளராகவும், விற்பன்னர்களாகவும், படைப்பாளிகளாகவும் விளங்கினர். இது அவர்களது உயர்குழாம் அரசியலை வழிநடத்த உதவியது. மேலும் ஈழத்தமிழரின் மத்திய வர்க்கத்தினை தமது அரசியல் அதிகாரத்தினால் அடிமைப்படுத்தாது அரவணைத்துக் கொண்டதுடன் மத்தியதர வர்க்கத்தினர் உயர்குழாமினருக்குப் பக்கபலமாக வழிகாட்ட உதவியது. அவ்வகைப் புலமையாளர்களையும், அவர்களது அறிவுரைக்கு அமைவாகவும் செயற்பட்ட ஈழத்தமிழ் உயர்குழாமினர் செவ்வையான அரசியல் ஒழுக்கத்தினைக் கடைப்பிடித்தனர். இது இன்றைய அரசியல் தலைமைகளுக்கும், உயர்குழாமினருக்கும் அவசியமான ஓரம்சமாகவே உள்ளது.

முடிவுரை

ஈழத்தமிழரின் நவீன அரசியலுக்கு முன்னோடியாக உயர்குழாமினரே காணப் பட்டனர். ஈழத்தமிழர் முடியாட்சி முறைக்குள் இருந்தும், அடிமைத்தனத் துக்குள் இருந்தும் விடுபடுவதற்கு முன்னோடிகளாக பிரித்தானியரும் அவர் களது அரசியல் முறைமையும் காரணமாகியது. உயர் குழாமினரின் செல்வாக்கு படிப்படியாக மிதவாத அரசியலை வளர்த் தெடுக்க உதவியது. அதனால் சாதி ரீதியிலும், பால்ரீதியிலும் அடிமைப்பட்டிருந்த நிலையி லிருந்து விடுபட்டதுடன் மாற்று உயர்குழாமி னரின் தோற்றம் தவிர்க்கமுடியாத நிலையை சாத்தியப்படுத்தியது. ஈழத்தமிழரிடையே கரையாம் சாதி சார்ந்த உயர்வர்க்கம் பெரியள வில் எழுச்சி பெறாதபோதும் செல்வாக் குடைய ஒரு பிரிவினராக அரசியலில் பிற்காலத்தில் இடம்பிடித்தனர்.

எனவே ஈழத்தமிழரின் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் பிரித்தானியர் உருவாக்கிய உயர்குழாமினர் கணிசமான செல்வாக்கினை எட்டியுள்ளார். அந்த வகையில் நவீனத்துவ பரிமாணத்துக்கான அடிப்படையாகப் பிரித்தானிய ஆட்சியாளரின் சிபார்சுகளும், அணுகுமுறைகளும் அமைந்தன. அரசியல், சட்டம், நீதி, நிர்வாகம் என்ற சமூகத்தின் ஒவ்வொரு அங்கங்களையும் சரிப்படுத்தி வழிப்படுத்தலில் பிரித்தானியர் மூலகாரணமாகினர். அவர்களது அணுகுமுறையில் குடியேற்றவாத அடக்குமுறைகள் கொடுமையானவை யாக அமைந்தபோதும், அரசியல், சமூகத்தளத்தில் அவர்களின் மாறுதல் களே இன்றைய உலகமாறுதலுக் கான அடிப்படைகளாக விளங்கு கின்றன.

உதவிய நூல்கள்

Hari Hara Das B. C. Choudhury: introduction to political sociology, Vikas Publishing House Pvt. Ltd, India, 1997.

Patrick Peebles : Social Change in Nineteenth Century Ceylon. N. Vrang , New Delhi, 1995.

.A.J.Wilson,Sri Lankan Tamil Nationalism;Its Oregins and Development in the Ninteenth and Twentith Century ,London,2000.

Michal Roberts,Elites,Nationalism and the Nationalist Movement in British Ceylon,in Ceylon Nationalism,Colombo,vol;1,1977.

ச. ஹன்டி பேரின்பநாயகம், ஆட்சி இயல், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2010, (இரண்டாம் பதிப்பு).

க. சி. குலரத்தினம், 'நோத் முதல் கோபல்லாவரை', சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2008, (இரண்டாம் பதிப்பு).

கே. ரி. கணேசலிங்கம், தென்னாசியாவின் அரசியல் கலாசாரம், சேமமடு பதிப்பகம், கொழும்பு, 2008.

க. சண்முகலிங்கம், இலங்கையின் இனவியலும், மானிடவியலும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2011.

முருகர் குணசிங்கம் இலங்கை தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பத்தோற்றம் பற்றிய ஆய்வு எம்.வி. சிட்னி 2003.

குமாரி ஜெயவர்தனா (மொ.பெ), டாக்டர் மேரி ரட்ணம், சமூக விஞ்ஞானிகள் சங்கம், 2006.

புவிசார் அரசியலில் மாற்றம்:
புவிசார் அரசியல் இடைவெளியில் ஒரு கலைத்துவமான குறுக்கீடு

எலன் ஆர் இன்ங்ரம்

தமிழில்:பாலகம்சத்வனி

பாலகம்சத்வனி

யாழ்பல்கலைக்கழகத்தில் புவியியல், ஆங்கிலமொழி கற்பித்தல் (ELT) துறைகளால் பொதுக்கலை பயின்றவர். மொழிபெயர்ப்பு கவிதை சிறுகதை போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவர்.

இக்கட்டுரையானது, சமகால கலைஞர்கள் 2011 செப்.11 இலிருந்து எவ்வாறு, அரசாங்க மயமாக்கல் மற்றும், இராணுவ மயமாக்கல் செயற்பாடுகளுடன் ஈடுபடுகின்றனர் என்பதை விளக்குகிறது. இங்கு சமகால கலைகள், எவ்வாறு சமகால அரசியல் புவியியலை ஊடறுத்துச் செல்கின்றது என்ற ஒரு விமரிசனக் கருப்பொருளை அடிப்படையாக கொண்டு அதனை மூன்று பிரிவுகளாக அடையாளப்படுத்தி விளக்கப்படுகிறது. இக்கருத்தியலின் வடிவம் பற்றிய வினாக்கள், தொழில்நுட்பம், மற்றும் அதற்கு அப்பாற்பட்ட விடயங்களைக் கூறுவதுடன் அவை தொடர்பான செயற்பாடுகளும், விளைவுகளும் விமரிசனம் கவனத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதனையும் சமகால கலையானது புவிசார் அரசியலில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் சாத்தியக் கூறுகளிற்கான ஒரு களமாகக் காணப்படுகிறது என்பதனையும் விளக்குகின்றன.

எலன் ஆர் இன்ங்ரம்
தமிழில்பாலகம்சத்வனி

அறிமுகம்

மேலாதிக்க சக்திகளாக தங்களை பிரதிப லிக்கும் ஐக்கிய அமெரிக்கா அதைபோன்ற ஏனைய இராஜ்ஜியங்களும், 2011 செப்,11 தாக்குதலிலிருந்து பயங்கரவாதத்தின் மீது ஒரு உணர்வுபூர்வமான குற்றச்சாட்டை முன்வைத் துள்ளதுடன் அதற்கான தீர்வுகள் இராணு வத்துடனும், அரசாங்கத்துடனும் பின்னிப் பிணைந்ததாக இருக்க வேண்டும் எனவும் விவரிக்கப்படுகிறது. இராணுவ நிலையங்களின் முக்கிய நடிபங்காக பேச்சுவார்த்தை மற்றும் பயிற்சிகள் மூலம் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கை வடிவத்தில் ஒரு அபிவிருத்தியை ஏற்படுத்துவதே ஆகும். பொதுவாக பயிற்சிகள் யுத்தம், அவசரகாலத்துவம், மற்றும் அதிகாரத் துவத்துடன் தொடர்புபடுவதுடன், இவற்றை ஒரு வழக்கமான செயற்பாடாக உருவாக்கு கிறது. இவற்றில் மட்டுமல்லாது இந்தத்தலை யீடுகள் மிதவாத சமூகம் (தாரளவாதம்) மீதும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி ஆராயும்போது, 11,செப் இலிருந்து தொடர்ந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் கலாசார மற்றும் அரசியல் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்கு நான் கருதுவது, அவர்கள் எவ்வாறு சமகால கலையை எதிர்த்ததுடன் மீள்கற்பனைக்குட்படுத்தினர் என்பதாகும். இவ் எண்ணக்கரு ரீதியான கலை பயிற்சிகள் வெறுமனே எதிர்ப்பு, நிராகரிப்பு மற்றும் விமரிசனம் என்பவற்றை உருவாக்கு வதில்லை. மாறாக அரசியல் மற்றும் இடம்சார் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு பங்காளியாகவே கருதப்படுகிறது.

இங்கு *Iacques Ranciere (2006)* என்ற அறிஞரின் கருத்தை பின்பற்றுகையில் இக்கலைத்துவ செயற்பாடுகள் அரசியல் மற்றும் கலைகளுக்கான ஒரு உந்து சக்தியாகவும், அறிவுப் பகிர்தலிற்கு *(Distrivution of Sensible)* ஒரு தடையாகவும் அல்லது இடைவெளி, காலம், நேரம், மனிதர்கள், காட்சி, ஒலி மற்றும் அறிவு, உணர்ச்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் யாப்பின் வடிவமாகவும் காணப்படுகிறது.

கலை மற்றும் யுத்தத்திற்கிடையிலான தொடர்பானது நவீனத்திலிருந்து சற்று தள்ளியே உள்ளது. கடந்த தசாப்தங் களில் பல அறிஞர்களின் கவனம், புவிசார் அரசியலில் ஊடறுக்கும் விடயங்களை உருவாக்குதல், தொடர்பாடலில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், கடுமையான மேற் பார்வை, தொழில்நுட்ப உபகர ணங்கள், இட அமைப்பு பற்றிய கேள்விகள் என்பவற்றிற்கு உருக் கொடுத்தலிலேயே தங்கியுள்ளது.

விமரிசனத் தலையீடுகள் மூலம் கல்விசார் புவியியல், கலை மற்றும் அரச செயற்பாடுகளுடைய பயிற்சி கள் என்பவற்றிற்கிடையில் ஊடறுக்கும் விடயங்கள் பற்றிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்படுகிறது *Paglen (2008) Paglen and Solnit (2010)* என்ற அறிஞர்கள் புவி அரசியலில் சமகால கலைகளின் தொடர்புபற்றி கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். 2011.செப். 11இலிருந்து கலைத்துவமான குறுக்கீடுகளின் தொடர்ச்சிகள் எவ்வாறு, வடிவம், தொழில்நுட்பம், மற்றும் புவியியல் இடைவெளி களுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது என்பதை நான் முன்வைக்கின்றேன். இதன் மூலம் புவிசார் அரசியலை எவ்வாறு வித்தி யாசமான முறையில் சட்டகமாக்க முடியும் என்பதை அறியலாம்.

புவிசார் அரசியல் வடிவம்

கடந்த தசாப்தங்களில் பல பெண்ணிய *(feminist Geographers)* புவியியலாளர்களின் பெருமளவான கவனம், புவிசார் அரசியலில் ஒரு புதிய வடிவத்தை உருவாக்குவதி லேயே தங்கியுள்ளது. உண்மையில், இவ் புவிசார் அரசியல் பெரும்பாலும் நகரத்திற்கே உரிமையுடையதாக காணப்படுகிறது *(Graham 2004)*. 2011.செப் இன் பின்னர் இக்கலை வடிவம் பற்றிய பேச்சுக்களே பாது காப்பு செயற்பாடுகளை முன்னெடுத் துச் செல்ல அடிப்படையாக அமைந் தன. விமான கடத்தல்காரர்,

விமான கடத்தல்காரர், தற்கொலை குண்டுதாரிகள், பயணிகளை இடையூறு செய்தல், எரிகின்ற கட்டடங்களிலிருந்து மக்கள் தப்பிக்க முயற்சி செய்தல், நேரடியாக பாதிப்படைபவர்கள், சேதத்திற்கு அருகில் நிற்பவர்கள் போன்ற பாதுகாப்பு பிரச்சனைகளால் 2001செப்.09 இன் பின்னர் அரசியல் புவியியல் பற்றிய கேள்விகளை ஏற்படுத்தியது.

தற்கொலைக் குண்டுதாரிகள், பயணிகளை இடையூறு செய்தல், எரிகின்ற கட்டடங்களிலிருந்து மக்கள் தப்பிக்க முயற்சி செய்தல், நேரடியாக பாதிப்படைபவர்கள், சேதத்திற்கு அருகில் நிற்பவர்கள் போன்ற பாதுகாப்பு பிரச்சனைகளால் 2001செப்.09 இன் பின்னர் அரசியல் புவியியல் பற்றிய கேள்விகளை ஏற்படுத்தியது. எனவே இச்சிக்கலான வினாக்களை தீர்க்கும் முகமாக சொந்தநாட்டு (தாய்நாடு) பாதுகாப்பினை *(Homeland Security)* உருவாக்குதலே இவ்வடிவத்தின் நோக்கமாகும். கடத்தப்பட்டவர்கள், சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதை செய்தல், தூரம்போய் மரணிக்கச் செய்தல், அந்திரக்ஸ் *(andthrax)* மற்றும் பெரியம்மை *(Smalpox)* போன்ற நோய்களிலிருந்து பாதுகாக்கும் உத்திகள், பெண்களின் உடல்களை பாதுகாத்தல் என்பவற்றிற்கு ஒரு நவபழமையான இராணுவ சக்தியானது குறிப்பிட்ட சமூகத்தினரால் வேண்டப்படுகிறது. எனவே இத்தகைய விடயங்களை மேற்கொள்ள ஒரு வடிவம் அவசியம்.

அதேவேளை, இக்கலைத்துவ குறுக்கீட்டின் வடிவம் நீண்டகாலமாக பிரச்சனைக்குட்படுத்தப்பட்ட ஒன்றாகவும் சமகால கலையில் இலகுவாக பிரதிபலிக்கவோ, ஏற்றுக் கொள்ளப்படவோ முடியாததாகவே காணப்பட்டது. 1960களில் பெண்ணிலையவாத அமைப்புக்கள் இவ்வடிவத்தின் மரபு பற்றிய விமரிசனங்களை முன்வைத்தனர். *Mierle Ukeles* என்பவரது செயற்பாடுகள் வீதியோர (தாழ்வார) தொழிலாளர்களை, மீளமைத்தல், வகுப்பு மற்றும் பால்நிலை பாகுபாடுகளை பலவீனப்படுத்தல் என்பவற்றில் தங்கியுள்ளது. இச்செயற்பாடுகள் கலை மற்றும் தொழிலையோ அல்லது இருப்பிட வேறுபாடுகளையோ, நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர் வாழ்க்கை முறையையோ மையப்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

1960களில் பெண்ணியவாத நிறுவனங்கள் இவ்வடிவத்தின் மரபு பற்றிய விமரிசனங்களை முன்வைத்தனர். *Mierle Ukeles* என்பவரது செயற்பாடுகள் வீதியோர தொழிலாளர்களை, மீளமைத்தல், வகுப்பு மற்றும் பால்நிலை பாகுபாடுகளை பலவீனப்படுத்தல் என்பவற்றில் தங்கியுள்ளது.

Martha Rosler என்பவர் படவரைகலை தொழில்நுட்பம் மூலம் யுத்த அழிவுகள், முரண்பாடுகளின் படக்காட்சிகள், வியட்நாம் தொடக்கம் ஐக்கிய அமெரிக்க நுகர்வோர் முதலாளித்துவம், மற்றும் வன்முறைகளிற்கெதிரான செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்புகளை அதிகரித்தல், தாய்நாட்டை மீளமைத்தல் முதலானவற்றை வரைபடம் பிடித்துக் காட்டினார்.

Marina Abramovic என்ற கலைஞர் தனது சிறுபராயத்தின் போது, *12 Ultra Military* விமானங்கள் பெரும் சத்தத்துடன் மேலே பறப்பதையும் அதனால் வானத்தில் அழகான கோடுகள் உருவாகுவதையும் அவதானித்துள்ளார். *O'Hagan 2010* என்ற அறிஞர், வன்முறை மற்றும் துன்பப்படுதல் என்பவற்றின் தீர்வுக்கு ஒரு கலைத்துவம் அவசியமென கூறுகிறார். *Santiago Sierra* என்பவர், கூறுகையில் *Chechen* அகதி மக்களிற்கான வேலைகளில் ஈடுபட்டிருந்த பொழுது, குறைந்தளவு கூலியே அவர்களின் வேலைக்கு கொடுக்கப்பட்டது. எனவே இத்தகைய சரண்டல் பிரச்சினைகளை குறைப்பதற்கு இக்கலைத்துவ கொள்கை பற்றிய கேள்விகள் அவசியமானதாகும்.

Thomas Hirschhorn என்ற கலைஞரால் கூறப்பட்ட இக்கொள்கை பற்றிய கருத்துக்கள் *(Bishop 2006)* இக்கொள்கை மூலம் ஒரு முற்போக்கான இயங்குவிசை தளப்படுத்தப்பட்டிருக்கும் என கூறினார். அவருடைய இவ் செயற்பாடு உடலியல் ரீதியான இருப்புகளில் கேள்வியை எழுப்பியதுடன் 11செப் இலிருந்து வன்முறை மற்றும் யுத்தத்தின் விளைவுகளுடனும் தொடர்புபடுகிறது. முதல் தடவையாக 2008 *Brighton Photo Bienniale* (ஒளி கற்றைகளின் பயன்பாடு பற்றிய கற்கை) இன் ஒரு பகுதியை பார்க்கும் போது, இப்பெரிய அளவிலான வேலைத் திட்டமானது (18 *Meters* ஆழமானது) மத்திய கிழக்கு நாடுகள், மற்றும் ஆப்கானிஸ்தான் மீது நவீன ஆயுத பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட உடல்களின் பிரதிகளால் ஒழுங்கமைக்கப்பட்டது. இப்பயங்கர செயற்பாடுகளை பார்க்கிலும் அதன் விளைவுகள் நேரடியாக அளவிடப்பட முடியாதவையாகும். இவ்வேலைத் திட்டத்தின் வெளிப்படையான வாசிப்புகள்,

மனிதத் தன்மையற்ற யுத்தத்தின் கொடுமைகளை வெளிப்படுத்துகிறது.

எவ்வாறாயினும் இக்கொள்கையானது, *Goya*விலிருந்து, லைபீரியாவில் நெப்போலியனது போர்க்காரியங்களின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுமைகள், அக்கிரமச் செயற்பாடுகள் வரை வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே இதன் மூலம் மக்கள், கலைத்துவ வடிவம் யுத்தத்தை எவ்வாறு உடனடியாக நிறுத்த உதவும் என்ற வெளிப்படையான வினாக்களை எழுப்புகின்றது. எனவே கலைத்துவமான தலையீடுகள் ஆட்சிப் பரிபாலனங்களில் ஒரு நிதர்சனமான அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன் ஒரு மாற்றீடான பயன்படுத்தலாக அல்லது உபயோகமாக காணப்படுகிறது. இவை எவற்றுடன் தகுதிப்படுத்தப்பட்டுள்ளது என நாம் கேள்வியை கேட்க முடியும். இது யுத்தத்தின் யதார்த்தங்களை பிரதிபலிக்கிறதா? அல்லது மக்கள் தம் உறவினர்கள், நண்பர்கள் அல்லது தாம் நேசிக்கும் ஒருவரை எண்ணி துயர்படுவதையா? அல்லது எரிந்தவர்கள், உறுப்பு துண்டிக்கப்பட்டவர்கள், குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் யுத்தம் பற்றிய மிதவாத பேச்சுக்களுடன் முடிந்துவிடுமா?

இதன்மூலம் நாம் அறியக்கூடிய ஒன்று உருவங்கள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட இவ் வேலைத்திட்டமானது ஐரோப்பிய ஊடகங்களிற்கு வெளியான செயற்பாடுகளை கொண்டுள்ளது. ஏனெனில் ஐரோப்பியர்கள் இக்கலைத்துவ செயற்பாடு ஒரு பயனற்ற தீர்மானம் எனவும் மிதவாத தணிக்கை அல்லது யுத்தத்திலிருந்து பாதுகாக்கும் கருத்துக்கள், அக்கொள்கைக்கான ஒரு கருவியாகவே வளர்ச்சியடைகிறது என கூறுகின்றார். இருப்பினும் இவ்பதாதைகள் *(Banner)* சில நிதர்சனமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. சமகால அரசியல் புவியியல் மற்றும் கண்ணிற்கு புலப்படும் யதார்த்தத்தின் தொடர்பு பற்றிய கருத்தாழம் கொண்ட வினாக்களை எழுப்புகிறது.

ஈராக்கிய கலைஞரான *Wafaa Bilal* cila *Dog? or Iraqi?* (நாயா? அல்லது ஈராக்கியனா?) என்ற நூலில் சமகால அரசியற் புவியியலில், கலைத்துவ வடிவத்தின் நிலை பற்றி பல வினாக்களை எழுப்பியுள்ளார். அவர் கூறுகையில் *www.dogoriragl.com* என்ற வலைப்பின்னலில் அறியமுடியும்.

இருப்பினும் இவ் வலைப்பின்னலானது, 'மிருக உரிமை செயற்பாடுகளிலிருந்து' ஒரு எதிர்ப்பான பிரதிபலிப்பையே எதிர்கொண்டது. அதாவது மிருக உரிமைகளிற்கு புறம்பானது என கூறப்பட்டது. இருப்பினும் ஐக்கிய அமெரிக்க மனிதாபிமான அமைப்புக்கள், இக்கலைதுறையை ஒரு சமாதானத்திற்கான அடிப்படை நிலையாக அல்லது ஆரம்ப நிலையாக குறிப்பிடலாம். மேலும் *Bilal* கூறுகையில் மிருக உரிமை செயற்பாட்டாளர்கள் சுயமாக பொறுப்பை எடுப்பதாகவோ அல்லது தேசிய பாதுகாப்பை எடுப்பதாகவோ கூறலாம். இதனால் அந்த நாய் அவர்களால் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆகவே இங்கு அந்த நாய் ஒரு பெறுமதி மிக்க கருத்தை வெளிப்படுத்துகிறது. இது அனைத்தும் தேசிய பாதுகாப்பினையே வேண்டி நிற்கின்றன. ஆயினும் இது ஒரு சித்திரவதை இல்லை என ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் கூறலாம். *(Bilal and Lydersens 2008, 174)*

*Dof or Iraqi?*இல் கலைஞர் விவரிக்கையில் 'இது ஒரு அபத்தமான தந்திரோபாய திட்டம்' ஆனால் மனித அடக்குமுறைகளின் எல்லைகள், ஒற்றுமை, பற்றிய முக்கியமான வினாக்கள் பலவற்றை எழுப்புகிறது. 'இது ஒரு பாலியலுடைய வரலாற்றின் ஒரு பரிமாணம், *Foucault (1998)* அதாவது சனத்தொகை மற்றும் கலைவடிவத்தின், உயிரியல் ரீதியான பண்புகளை ஊடுபுகுத்துவம் அம்சமாகவும், மனிதனுடைய மிருகமயமாக்கலின் புதிய அரங்கத்தை கட்டமிட்டுக்காட்டுவதுடன், அரசமைப்பு பற்றிய அளவீடுகளையும் பறைசாற்றுகிறது. சமகால அரசியல் புவியியல் செயற்பாடுகளை நிலைநிறுத்தல், பால்நிலையில் மட்டுமல்ல, அது மானுடவியலையும் மையப்படுத்திய விடயம் என்பதை *Dof or Iraqi* நினைவுபடுத்துகிறது. நவபழமைவாதிகளின் பேச்சுக்களை

ஐரோப்பியர்கள் இக்கலைத்துவ செயற்பாடு ஒரு பயனற்ற தீர்மானம் எனவும் மிதவாத தணிக்கை அல்லது யுத்தத்திலிருந்து பாதுகாக்கும் கருத்துக்கள், அக்கொள்கைக்கான ஒரு கருவியாகவே வளர்ச்சியடைகிறது என கூறுகின்றார்.



விவரிக்கும் இவ் வேலைத்திட்டம் பிரரேரணை, நாயின் மீதான வெறுப்பு அனுதாபமின்மை என்பன அராபிய நாகரிகத்துடன் பொருந்துவதுடன், US இன் அதிகாரம்சார் செல்லப் பிராணிகள் கலாசார நிலையையும் காட்டி நிற்கிறது. கீழைத்தேய அரசியல் புவியியலில் அரபிய வடிவம், இளைஞர்கள் சிக்க லான நிலைமைகளை மேற்கோள் காட்டுவதுடன் *Bilal* ஏற்கனவே அரசியல் புவியியலின் வடிவம் பற்றிய கேள்விகளையும் விரிவுபடுத்தியுள்ளார். *(Haraway 2003)* அத்துடன் இனவேறு பாடுகளிற்கான காரணங்களையும் நினைவுபடுத்துகின்றார்.

பாதுகாப்பு தொழில்நுட்பம்

Haraway (1991) என்பவரின் புகழ் பெற்ற விவாதத்தினூடு நோக்குகையில், மனித உடலை தொழில்நுட்பத்திற்கு எதிரான நிலையில் பார்க்காமல் மிருகங்களிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இடையிலான சிக்கலான ஏற்றத்தாழ்வுகளை அடையாளப் படுத்துகின்றார். மனிதனுடைய கருவிகளை கையாளும் திறன் அதிகரிப்பானது மனித உடலின் பரிணாமத்தை வடிவமைத்துள்ள தாக கூறப்படுகிறது. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொழில்நுட்பம், மற்றும் மனித உடல்களிற்கிடையான ஒப்பந்தங்கள் விவரிக்கப்படுவதுடன் இவ் ஒப்பந்தமே சமகால பாதுகாப்புச் செயற்பாடுகள் பற்றிய பல வினாக்கள் உருவாகுவதற்கான அழுத்தப்பாடாகவும் அமைந்தது.

விமான நிலையங்களில் உடலை படம்பிடிக்கும் இயந்திரம் ஒரு உயிரியல் விஞ்ஞானத்தின் அடையாளமாகும். உயிரியல் இயந்திரவியல், ஆரோக்கியத்தை ஈடுசெய்யும் அறுவைச் சிகிச்சைகள், உட லியல் வசீகரிப்பு என்பனவும் குறிப்பிடத் தக்கவை. உண்மையில் தொழில்நுட்ப வளர்ச்சியானது மேற்பரப்பில் ஊடுபுகும் ஒளிக்கற்றைகளின் பாதுகாப்பு சிக்கல்கள் மற்றும் பாதுகாப்பு பிரயோகங்கள், சிக்க லான செயற்திட்டங்களை மேற்பார்வை செய்தல், தரவுசேகரித்தல் மற்றும் சிக்கலான முகாமைத்துவம், அச்சுறுத்தல் போன்ற வற்றை தீர்த்து தாய்நாட்டை பாதுகாக்கப் படுவதற்காக கடன்வாங்கப்பட்ட ஒரு கொள் கையாகவே பாதுகாப்பு தொழில்நுட்பம் கருதப்படுகிறது.

அரசினால் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்படக்கூடிய பாதுகாப்புச் செயற்பாடுகள், தொழில்நுட்பங்கள் என்பன சமகால கலைவடிவம் மூலம் அடையாளப் படுத்தப்பட ஆரம்பித்துள்ளது. குறிப்பாக அறிஞர்கள் பிரச்சனைகள் தொடர்பான அவதானிப்புகளை அதிகரித்துள்ளனர். *Boris Groys, Walter Benjamin* போன்றோர் கலைத்துவ செயற்பாடுகளை 'உயிரியல் அரசியலின் மீள்உற்பத்தியுடைய காலம்' என அழைக்கின்றனர். தந்திரோபாயமான மற்றும்

ஆவண ரீதியான பயிற்சிகள் மக்களுடைய வாழ்க்கையை கைப்பற்றிக் கொள்வதுடன், அளவிட்டு, முகாமை செய்வதுடன், வித்தியாச மான அதாவது வன்முறையற்ற மரணத்தையும் அனுமதிக்கின்றது.

Groys இனுடைய ஆராய்ச்சிகள் மூலம் கருதப்படுவது *Alfredo Jaar* மன்னர்களால் மேற்கொள்ளப்பட்ட *Ruwandan* 'இனப்படு கொலை'யானது, அதற்கான அடிப்படை காரணங்கள் மற்றும், அரசினால் மேற்கொள் ளப்பட்ட தொழில்நுட்ப நடவடிக்கைகள் என்பன தொடரும் வன்முறைகளின் விளைவுகளிற்கான ஒரு நிரூபணமாக அமைகிறது. *Walid Raad* என்பவர் *Atlas Group* உடன் செயற்படும் போது லெபனானின் முரண்பாடுகள் பற்றி குறிப்பிட்ட துடன், அவ்வலைப் பின்னலினூடாக ஆவணங் கள் பற்றிய விசாரணைகள், உண்மையை கூறுவதற்கான இராணுவப் பயிற்சிகள் ஊடாக பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனவே குறிப்பிடப்பட்ட அனைத்து கலை ஞர்களும் இடம்சார் அரசியல் மற்றும் அதனை மேற்கொள்வதற்கான பயிற்சிகள் பற்றிய கவனத்திலே ஈடுபட்டுள்ளனர். அநேகமாக *(Heath Bunting)* தரிசு நிலங்களை வழங்குதல் சமகால பாதுகாப்பிற்கான தொழில்நுட்பத்திற்கு ஒரு பெரும் தடையாக குறிப்பிடப்படுகிறது. *British,* ஐரோப்பிய நாடுகளில் குறிப்பிட்ட இனங்களுக்காகவே காணப்பட்ட உழுதல், கப்பலோட்டல் போன்ற தொழில்கள் இன்று தொழில்நுட்ப பிரயோகம், மேற்பார்வை காரண மாக பூரணத்துவம் அடைந்துள்ளது.

இவர்களது பெருமளவான வேலைத்திட் டங்கள், அரசியல் மற்றும் சூழலியல் எல்லை களுடைய ஆராய்ச்சிகளைச் சுற்றியே காணப் படுகின்றன. *Christian - Phillip Muller* இல் மேற்கொள்ளப்பட்ட குறுக்கீடுகளை பிரதிபலிக் கும் செயற்பாட்டில் சட்டவிரோதமாக எல்லை களை கடத்தலே நாடுகளிற்கிடையிலான எல்லைகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடு களை ஆராய்வதற்கான வழி என கூறுகின்றார். *Bunting* ஆராய்ச்சிகள் வகுப்பு, குடியுரிமை, மனிதத்துவம் என்பவற்றின் பண்புகளால் வேறு படுத்தப்பட்டுள்ளது. *(http:.status.irational.org)*

இங்கு மனித இயல்புகளை இயற்கை சார்ந்தவர்கள் (உரிமைகளையும், கொள்கைக ளையும் மாற்றக்கூடியவர்கள், 'துரும்ப மனிதன்') செயற்கை சார்ந்தவர்கள் (ஒத்து நிற்கக் கூடியவர்கள்) என வேறு படுத்தலாம். அதாவது ஒரு கீழ் வகுப்பு மனிதத்தை பல வழிகளில் நிர்ப்பந்திக்க முடியும். மற்றும் செயற் கையான நபர்களிற்கு கட்டுப்பாடுகள் இல்லை. உயர்வகுப்பு மனிதனது இயல்புகள் பல்வேறு இயற்கையான நபர்களை உருவாக்குவதுடன் எண்ணற்ற செயற்கை சார்ந்த நபர் களை 'தனித்திறன் உள்ளவர்களாக' உருவாக்குகின்றது. இவ் *Bunting* செயற்திட்டத்தின் ஒரு பகுதியாகவே *(Maps of influence)* அதாவது விருத்தியின் பட தோற்றம் உருவாக் கப்பட்டதுடன் (உதாரணமாக *Schengen* குடியரசின் தனிநாட்டு ஒப்பந்தம்) மனிதக் கட்டமைப்பில் காணப்படும் வகுப்பு வித்தியாசங் களை காட்டும் சுய அம்சங்கள் *(Personal Portraits)* உருவாக்கப்பட்டன.

இவ்வேலை திட்டங்களில், கலைத்துவ பயிற்சிகளிற்கிடையிலான எல்லைகள் மற்றும் அரசியலமைப் பின் உடைவிற்கான ஒரு பொறியாக காணப்படுகிறது. இவ் *Bunting* இன் விஸ்தீரணம் சமகால கலை பயிற்சி களின் எல்லைகளில் மட்டும் தொழிற் படாது அரசாங்க பிரதிநிதித்துவத் திற்கான அலோசகராகவும், கடவுச் சீட்டு மற்றும் ஏனைய உயிரியல் அளவீட்டு கருவிகள் பற்றியும் கவனம் செலுத்துகிறது.

Ploeg (1999) என்பவரின் விவாதப்படி, புகலிடம் தேடுபவர்க ளின் தரவு சேகரிப்புகள் அவர்களை அடையாளம் காண்பதற்கான அம்சம் என கூறப்படுகிறது. *Agamben (2004)* என்ற விமரிசகர் சில அபிவிருத்தி களை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். அதற்கு பதிலாக அவை பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் ஆக்கபூர் வமானதாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

இதற்கு அப்பாற்பட்ட கற்பனைகள்

விமரிசன ரீதியான புவிசார், அரசியலில் *(Critical Geo Politics)*

ஒரு கீழ் வகுப்பு மனிதத்தை பல வழிகளில் நிர்ப்பந்திக்க முடியும். மற்றும் செயற்கையான நபர்களிற்கு கட்டுப்பாடுகள் இல்லை. உயர்வகுப்பு மனிதனது இயல்புகள் பல்வேறு இயற்கையான நபர்களை உருவாக்குவதுடன் எண்ணற்ற செயற்கை சார்ந்த நபர்களை தனித்திறன் உள்ளவர்களாக உருவாக்குகின்றது.

புவியியல் *(imaginative Geography)* எண்ணக்கருவானது ஆராய்ச்சிக்கான ஒரு திறவுகோலாக காணப்படுகிறது என *Edward* என்ற அறிஞர் கூறுவதாக *Derek Gregory* மற்றும் *Simon Dalby* உடைய கருத்துகள் கூறுவதுடன் *Stephen Graham* என்ற எழுத்தாளரால் ஒழுங்கமைக் கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ் அரசியல் புவியியல் 'கவனிப்பு' மற்றும் 'வெறுப்பு' என்ற இடரீதியான பிரிவு களின் சுருக்கங்களின் படியான எண்ணக் கருவாகவும் அதுவே 'எமது இடைவெளி'யில் பாதுகாப்பாகவும் அதிகரிக்கப்படுகிறது. அவர்களது வெளியில் மறுக்கப்படுகிறது. அப்போதுதான் 'எங்களுடைய' என்பது 'அவர்களை' முகாமை செய்யவும் அதிகாரம் செலுத்தவும் முடியும். அவரது கருத்துப்படி கற்பனாவாத புவியியல் சமகால அரசியல் புவியியலில் கீழைத்தேய பண்புகொண்ட மாதிரியாக கூறப்படுகிறது. *Graham (2004)* என்ற அறிஞர், புவிசார் அரசியலை ஒரு நகரம்சார் கொள்கை, *(Urban theory)* மற்றும் தந்திரோபாயமான கொள்கை என விவரிக்கின்றார். புவியியல் ரீதியில் பயங்கரவாதமானது தாய்நாடு *(Home land)* மற்றும் இலக்கு பகுதிகளிற்கிடையிலான பகுதிகளிலேயே ஈடுபடுத்தப்படுகிறது.

இங்கு நாம் படவரைகலை நுட்பத்தை ஒரு அரசியல் புவியியல் பயிற்சியாக *(Geo-political Practice)* மீள நோக்குகின்றோம். ஈராக் மீதான படையெடுப்பு, *Martha Rosler* என்பவர் தன்னுடைய *"Bringing the war home"* என்ற தொகுப்பில் ஐக்கிய அமெரிக்காவின் அதிகாரத்துவம் மற்றும் நுகர்வோர் பண்பாடுகளுடன் ஈராக்கின் யுத்த அழிவுகளின் படக்காட்சிகளையும் இணைத் துள்ளார். *Peter Kennard* ஆல் உருவாக்கப் பட்ட ஒரு பிரபல்ய மான படவரைகலை யா்க, 1980களில் 2ம் பனிப்போர் காலப் பகுதியில் கப்பலில் பொருத்தப்பட்ட அணுஆயுதங்களின் சேதத்தால் மாற்ற மடைந்த நிலத்தோற்ற வடிவங்களை படவரைபிற்கு உட்படுத்தினார்.

Sam Durant's உடைய *Sumbolic Tranposition* என்ற வேலைத்திட்டம், ஈராக்



யுத்தத்தின் ஞாபகார்த்த கண்காட்சி யாக 2007இல் லண்டனின் சமகாலத்தில் கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. இதில் ஐக்கிய அமெரிக்காவின் யுத்த நடவடிக்கைகளால் அழிவடைந்த வாகனங்களின் குவியல்கள் காட்சிப்படுத் தப்பட்டன. இத்தகைய படவரைகலையியல் பயிற்சிகள் அரசியல் இராஜ தந்திரங்களை பட்டைத்தீட்டும் ஒரு உத்தியாக காணப்படுகிறது. *Ranciere* என்பவரது விவரணப்படி, முன்மாரி யான ஒரு உலகை உருவாக்குவதற்கான கட்டுமான செயற்பாடுகள் இரண்டு தனித்தனி உலகை ஒன்றுபடுத்தும் என கூறினார். எவ்வா றாயினும் சில தந்திரோபாயங்கள் படவரை கலை நுட்பத்திற்கு போதுமானதாக இல்லை.

2008இல் *Jeremy Delle* என்ற கலைஞரால் *Trafalgar Square* என்ற இடத்தில் மேற்கொள் ளப்பட்ட *"Fourth Plinth"* என்ற கண்காட்சி 2007இல் பக்தாத்தில் நடைபெற்ற குண்டுவெடிப் பின் போது தாக்கப்பட்ட காரின் சேதங்களை காட்டியுள்ளார். இக்கார் ஐக்கிய அமெரிக்கா வின் ஒரு தொல் பொருள் காட்சிச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் *Deller* இனால் ஐக்கிய அமெரிக்க நகர்கள் முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவை சேர்ந்த, தொல்லியல் ஆய்வாளர், இராணுவ வீரர், ஈராக்கிய மொழிப்பெயர்ப்பாளர், கலைஞர் எனப்பல முகங்களைக் கொண்ட *Deller,* ஐக்கிய அமெரிக்காவின் தொல்பொருள் காட்சிசாலைகள், பொது இடங்கள் என்பவற்றில் விமரிசனத்திற்காக வைக்கப்பட்டது. அதன் மூலம் ஈராக்கில் இடம்பெற்ற வன்முறைகள் பற்றிய மக்களின் எண்ணங்களை ஆராய்ந்தார். ஒரு நீண்டகால பேச்சுவார்த்தையின் பின்னர் லண்டனின் *Imperial war Museum* இல் இக்கார் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் இப்போது அங்கு நிரந்தரமான இடத்தையும் பிடித்துக் கொண்டது.

*11.*செப் இன் பின்னர் இக்காரின் பயணத் தினூடாக பெரும் பணவசூலை ஈட்டியதுடன் பெரும் எதிர்ப்புகளையும் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. *Deller* உடைய ஐக்கிய அமெரிக்க வேலைத்திட்டமானது சமகால அரசியல் புவியியலில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், ஒளிவு மறைவற்ற வெளிப்படையான கருத்துக்களை உள்ளடக்கிய போதிலும் அது ஒரு கொள்கை அல்லது கருது கோள்களை உருவாக்கவில்லை. இக்கருத்து களில் ஏற்பட்ட மாற்றமானது எமது கவனத்தை, சிந்தனை மற்றும் செயல்சார்ந்த அவதானிப் புகளை நோக்கி திசைதிருப்பியதுடன் கலை ரீதியான செயற்பாடுகளிற்கும் நடுவு நிலைமை வகிக்கின்றது. அரசியல் புவியியலில் ஒரு குறிப்பிட்ட கலைத்துவ தலையீடு தாக்கத்தை ஏற்படுத்துமே தவிர முடிவை தீர்மானிப்பதோ அல்லது மேற்கொள்வதோ இல்லை. மாறாக ஒத்த செயற்பாடுகளை கொண்டு ஊர்ஜிதம் மட்டுமே செய்ய முடியும்.

முடிவுரை

*2011*செப்.*11* தாக்குதலானது பல அவதானிப்புகளை அல்லது கவ னிப்புகளை ஏற்படுத்தியதுடன் கலைரீதியான அரசியலில் ஒரு தளர்வையும், மீளமைவினையும் ஏற்படுத்துகிறது. யுத்தத்தினுடைய ஏனைய நிலைப்பாடுகளான அவசர காலம், அதிகார பரவல், வன்முறை என்பன கலை மற்றும் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு களம் அமைத்து கொடுக்கின்றது. இப்பிரச்சினை களை திசைதிருப்புதல், எதிர்த்தல், கண்டனம் செய்தல், புதுமைகளை உருவாக்கல் என்பவற்றிற்கும் வழிவகுக்கின்றது.

பல அறிஞர்களின் அவதானிப்பு கள் பலவிதமாக காணப்பட்ட போதி லும் பின்தங்கிய சமூகங்கள், ஏற்றத்தாழ்வுகளிற்கான அடிப்படை காரணங்களை அவதானிக்காமை, வன்முறை, பாகுபாடுகள் போன்றவற் றிற்கான ஒரு மருத்துவ ரீதியான தீர்வாகவே இக்கலைத்துவ தலையீடு கருதப்படுகிறது.

அரசியல் புவியியலில் ஒரு குறிப்பிட்ட கலைத்துவ தலையீடு தாக்கத்தை ஏற்படுத்துமே தவிர முடிவை தீர்மானிப்பதோ அல்லது மேற்கொள்வதோ இல்லை. மாறாக ஒத்த செயற்பாடுகளை கொண்டு ஊர்ஜிதம் மட்டுமே செய்ய முடியும்.

REFERENCE

Agamben G *2004 No to biopolitical tattooing* ***Murray S J*** *trans communication and Critical/ Cultural Studies 5 201-2*

Amoore L 2006 *Biometric governing mobilities in the war on terror Political Geography 25 336-51*

Bilal W and Lydersen K *2008 Shoot an Iraqi: art, lige and resistance under the gop City lights, San Francisco CA*

Bishop 2006 The social turn: collaboration and its discontents Artforum 2 178-83.

Drucker J *2008 Making space: image events in an extreme state Cultural Politics 4 25-45.*

Foucault M *1998 The history of sexuality volume one: the will to knowledge Penguin, London.*

Graham S *ed 2004 Cities, war and terrorism: towards an urban geopolitics Blackwell Oxford.*

Graham S *2010 Cities under siege: the new military urbanism Verso, London.*

Gregory D *2004 The colonial present: Afghanistan, Palestine, Iraq Blackwell, Oxford.*

Gregory D *2010 War and peace Transactions of the Instituteof British Ceographers 35 154-86.*

Groys B *2008 Artpowe MIT Press, Cambridge MA.*

Haraway D *1991 A cyborg manifesto: science, technology and socialist - feminism in the late twentieth century in* ***Haraway D*** *Simians, cyborgs and women: the reinvention of nature Routledge, New York 149-81.*

Haraway D *2003 Thecompanion species manifesto: dogs, people and significant otherness Prickly Paradigm Press, Chicage IL.*

Ingram A *2009 Art and the geopolitical: remapping security at Green zone/red in* ***Ingram A and Dodds K*** *eds Spaces of security and insecurity: geographies of the war on terror Ashgate, Aldershot 257-77*

Lee I *nd Thomas Hirschhorn: the incommensurable banner (http://www.a-n.co.uk/intergace/reviews/single/487362) Accessed 21 December 2010)*

O'Hagan S *2010 Interview: Marina Abramivec The Observer (http:/ www.guardian.co.uk/artanddesign/2010/oct/ 03 interview - marina -abramovic- performance - artist) Accessed 21 December 2010.*

Paglen T *2008 Experimental geography: from cultural production to the production of space in* ***Thompson N and Independent Curators International*** *eds Experimental geography: radica approachesto landscape, cartography and urbanism Melville House, New York 27-33.*

Paglen T and Solnit R *2010 Invisible: covert operations and classified landscapes Aperture, New York.*

Rancier J *2006 The politics of aesthetics: the distribution of the sensible Continum, London.*

Ranciere J *2010 Dissensus: on politics and aesthetics* ***Corcoran S*** *trans Continum, London.*

RETORT *2005 Afflicted powers: capital and spectacle in a new age of war Verso, London.*

Van der Plog I *1999 The illegal body: 'Eurodac' and the politics of biometric identificatio Ethics and Information Technology 295-302.*

Zizek S *2002 Welcome to the desert of the real! Five essays on September 11 and related dates Verso, London.*



மேலே பூதம் கீழே ஆழ்கடல் சிவில் சமூகமும் அரசுசாரா சமூகமும்

ஜமாலன்

"உண்மைக்கு மாபெரும் எதிரியாக இருப்பது - வேண்டுமென்றே திட்டமிட்ட நேர்மையற்ற - பொய்ய அல்ல ஆனால் - தொடர்ந்த போலியான மற்றும் யதார்த்தமற்ற ஒரு புராணம்." - **ஜான் எப்.கென்னடி**

ஜமாலன்

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அரபு நாடொன்றில் தற்போது தொழில் புரிந்து வருபவர்.

இவர் அரசியல், இலக்கியம், பண்பட்டியல், கோட்பாட்டியல் தொடர்பில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை, நூல்களை எழுதி வருபவர்.

காட்சி: 1 கண்ணாடி சரிசெய்பவனும் அவனால் வளர்க்கப்படும் ஓர் அனாதைச் சிறுவனும் சாலையில் நடந்து வருகிறார்கள். சிறுவன் ஒரு குறிப்பிட்ட தெருவிற்குள் போய் தனது கால்சராயில் வைத்துள்ள கற்களால் கண்ணில்படும் முதல் வீட்டின் சன்னல் கண்ணாடியை உடைத்துவிட்டு ஓடி விடுகிறான். கண்ணாடி உடைந்தவுடன் வீட்டுக்காரப் பெண்மணி வந்து இப்படி ஆகிவிட்டதே என்று பார்த்துக் கொண்டு இருக்கிறார். அச்சமயத்தில் உடைந்த கண்ணாடிகளைச் சரி பார்ப்பவன் அவ்வழியாக வந்து அந்தக் கண்ணாடியைப் பேரம் பேசி சரிசெய்து கொடுக்கிறான். இது 1921இல் சார்லி சாப்ளினால் எடுக்கப்பட்ட *த கிட்ஸ்* படத்தின் ஒரு காட்சி. இரண்டு பேரும் அனாதைகள், வருமானத்திற்காக இப்படிச் செய்வதாகக் காட்டப்படும் ஒரு காட்சி இது.

கதை:1. செருப்பு தயாரிக்கும் நிறுவனம் ஒன்று குறிப்பிட்ட ஒரு தீவில் தனது நிறுவனத்தைத் தொடங்கினால் எப்படி இருக்கும் என ஆராய இரண்டு நபர்களைத் தனித்தனியாக அனுப்புகிறது. ஆராய்ச்சி முடிந்தபின் ஒருவன் சொன்னான் அந்தத் தீவில் யாரும் செருப்பு அணிவதில்லை. அதனால் அங்கு செருப்புத் தயாரிப்பு நிறுவனம் தொடங்குவது புத்திசாலித்தனம் இல்லை என்று. ஆனால் மற்றொருவன் சொன்னான்

அந்தத் தீவில் யாரும் செருப்பு அணிவதில்லை. அதனால், அங்கு செருப்புத் தயாரிப்பு நிறுவனம் தொடங்குவது புத்திசாலித்தனம் இல்லை என்று. ஆனால் மற்றொருவன் சொன்னான் அந்தத் தீவுதான் செருப்புத் தயாரிக்கும் நிறுவனம் தொடங்க சரியான இடம். அங்கு யாருமே செருப்பு போடவில்லை. நாம் செய்ய வேண்டியது, செருப்பு போடும் கலாசாரத்தை அவர்களிடம் பிரச்சாரம் செய்து உருவாக்குவதுதான். அப்படி ஒரு கலாசாரம் உருவாகிவிட்டால் செருப்பு வியாபாரம் நன்றாக நடக்கும். நிறுவனத்திற்கும் கொள்ளை லாபம் என்றான்.

காட்சி -1

காட்சி -1 இல் உள்ளபடிதான் அமெரிக்கா 'தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம்' என்ற பெயரில் ஈராக், ஆப்கானில் யுத்தத்தை நிகழ்த்தியது. த கிட்ஸ் படத்தில் வரும் அந்த சிறுவனின் பணியைப் போல அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ஐக்கிய நாட்டு சபை அனுமதியுடன் ஈராக், ஆப்கான் யுத்தத்தை நடத்தின. யுத்தம் நடப்பதற்கு முன்பே மறுநிர்மாணம் என்ற பெயரில் பெரும் கட்டுமான நிறுவனங்கள் தங்கள் ஒப்பந்தங்களைத் தயாரித்துக் கொண்டு களமிறங்கின. 1997இல் உருவாக்கப்பட்ட புதிய அமெரிக்க சகாப்தம் *(Project for the New American Century (PNAC)* என்கிற திட்டத்தின் அடிப்படையில் அமெரிக்க தாராளவாத ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தி எதேச்சதிகார ஆட்சிகளைத் தூக்கி எறிவதற்காக ஈராக், சவுதி அரேபியா, சிரியா, பாலஸ்தீனம் போன்ற இலக்குகளை தீர்மானித்துத் தங்கள் செயல்திட்டத்தைத் தொடங்கினார்கள். உண்மையில் 9/11 அதன் பிறகே நடந்தது. அந்த நிகழ்விற்கு முன்பாகவே அந்த நிகழ்விற்கானப் போக்கை உருவாக்கியது சர்வதேச அமைப்புகளும் அமெரிக்காவும். பால்கிரேக் அறிக்கையின் படி அமெரிக்காவின் 'தீவிரவாதத்திற்கு எதிரான போர்'என்பது உண்மையில் ஹாலிபர்டன், பெக்டல் போன்ற முதலாண்மை நிறுவனங்களின் எண்ணெய் மற்றும் எரிவாயு தொழிலுக்காகவே நடத்தப்பட்டது. 2003 மார்ச்சில் ஈராக்கிற்குப் படைகளை அனுப்புவதற்கு முன்பாக, அமெரிக்க பாதுகாப்புச் செயலராக இருந்த ராம்ஸ்பெல்ட் உலகின் மிகப் பெரும் எண்ணெய் நிறுவனமான ஹாலிபர்டன் நிறுவனத்திடம் ஏழு பில்லியனுக்கு ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்.

அல்கொய்தா தீவிரவாத அமைப்பு என்கிற ஒன்றே இல்லை என்பதும் அது ஆப்கானில் சோவியத்தை வீழ்த்த உருவாக்கப்பட்ட முஜாஹிதீன்கள் அமைப்பிற்கான ஒரு 'தகவல் தொகுப்பாக' *(database)* அமெரிக்க வெளிஉறவுக் கொள்கையை அமுல்படுத்தவென அமெரிக்க உளவு நிறுவனம் மற்றும் அதன் துணை அமைப்புகளான சர்வதேச உளவு நிறுவனங்கள் உள்ளிட்ட வலைப்பின்னலில், பனிப்போருக்கும் பனிப்போருக்குப் பிறகான 'புதிய உலக ஒழுங்கு' என்பதை நிலைநிறுத்தவும் உருவாக்கப்பட்டது. உண்மையில் அப்படி ஓர் இஸ்லாமிய படையோ அல்லது பயங்கரவாத குழுவோ இல்லை. அது பொதுமக்களை நம்ப வைப்பதற்காக அடையாளப்படுத்தப்பட்ட ஒரு 'பேய்'. அது தொலைக்காட்சிப் பார்வையாளர்கள் பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் தலைமையை ஏற்றுக்கொள்வதற்காக நடத்தப்பட்ட ஒன்று. அதை நடத்தியது அமெரிக்கா மற்றும் அமெரிக்க சார்புநாடுகளின் பணவெறி கொண்ட ஆர்வலர்கள் என்கிறது *குளோபல் ரிசர்ச்* என்கிற வலைதளம். *(The Imperial Anatomy of Al Qaeda. The CIA's Drug&Running Terrorists and the "Arc of Crisis" Part 1 byAndrew Gavin Marshall <http://globalresearch.ca/index.php?context=va&aid=20907>)* மேலும் சர்வதேச போதைப் பொருள் வலைப்பின்னல் அரசியலுடன் இது தொடர்பு கொண்டுள்ளதையும் அமெரிக்கா, பிரான்ஸ், சவுதி அரேபியா, பாகிஸ்தான் உள்ளிட்ட உளவு நிறுவனங்கள் உருவாக்கிய த ஸபாரி கிளப் *(The Safari Club)* என்பதே இத்தகைய தீவிரவாத அமைப்புகளுக்குப் பின்புலமாகச் செயல்பட்டதை விவரிக்கிறது இக்கட்டுரை.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை நடத்தக் காரணமாக அமைந்த இரட்டைக் கோபுரத் தாக்குதல் நிகழ்த்துவதற்கான நிதி ஆதாரம் எப்படி அவர்களுக்கு வந்தது என்பதைப் பற்றி உளவுத்துறை எதையும்

உண்மையில் மக்கள் வறுமையால், அதுவும் பேரரசுகளின் ஆசைக்கனவுகளால் ஏற்பட்ட வறுமையால், பஞ்சத்தால், பட்டினியால் பசி, ஏழ்மை, இல்லாமை எனக் கண்ணிற்குத் தெரியாத அதிகாரத்தின் வெடிகுண்டுகளால் கொத்துக் கொத்தாகச் சாகடிக்கப்படுகிறார்கள்.

அறிவிக்கவில்லை. இந்தப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது அமெரிக்க உலகத் தலைமையை நிலைநாட்ட நிகழ்த்தப்பட்ட ஒன்று என்பதும், அதற்குக் காரணமாக அமைந்தது இந்தத் தாக்குதல் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. சோவியத் பனிப்போருக்கு பிறகு அமெரிக்கா தன்னை உலகத் தலைமையாக நிறுவிக்கொள்ள நிகழ்த்தப்பட்டதே வளைகுடா யுத்தம். இந்த யுத்தத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட சதாம் உசேன், ஈரானிற்கு எதிராக அமெரிக்காவால் உருவாக்கப்பட்டவர் என்பதும் வளைகுடா யுத்தம் எண்ணெய்க்காக நடத்தப்பட்ட போர் என்பதும் உலகறிந்த உண்மை.

ஆனால் அது உலகில் பேரரசு தனது எதிரியை அமைப்பாக்கம் செய்த ஒரு யுத்தம். தனது எதிரியை பலம் மிக்கவனாகக் காட்டி, அவனைவிடத் தனது பலத்தை அதிகமாகக் காட்டிய ஒரு நாடகம் அது. அமெரிக்க மற்றும் உலக மக்கள் மனதில் பயத்தை உருவாக்கவே தீவிரவாதம் பற்றிய சொல்லாடல்கள், காட்சிகள், கதையாடல்கள் பெருக்கப்பட்டன. உண்மையில் மக்கள் வறுமையால், அதுவும் பேரரசுகளின் ஆசைக்கனவுகளால் ஏற்பட்ட வறுமையால், பஞ்சத்தால், பட்டினியால் பசி, ஏழ்மை, இல்லாமை எனக் கண்ணிற்குத் தெரியாத அதிகாரத்தின் வெடிகுண்டுகளால் கொத்துக் கொத்தாகச் சாகடிக்கப்படுகிறார்கள். ஆனால் தீவிரவாதத்தால் கொல்லப்படும் மக்களையே வண்ணவண்ணமாகக் காட்சிப்படுத்துவதன் மூலம் நிச்சயமற்ற வாழ்வு பற்றிய பயத்தை உருவாக்குகிறார்கள். பேரரசு தனக்கு எதிராக இப்போது நாடுகளை உருவாக்காமல், உலக - தீவிரவாதம் என்கிற கண்ணிற்குத் தெரியாத கருத்தியல்சார் எதிரிகளை உருவாக்கிக் கொண்டுள்ளது. உலகமயமாதல் வழியாக தனது அதிகாரத்தையும் - உலக - தீவிரவாதத்தை எதிரியாகச் சித்திரித்து எதிர் - இருப்பையும் கொண்டு தன்னைக் தகவமைத்துக் கொண்டு உள்ளது. தீவிரவாதத்தையும் ஜனநாயகத்தைப் போல உலகமயமாக்கி விட்டது.

உலகமயமாதல் என்பது இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு, உருவான தேசிய எழுச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து நாடுகள் பல உருவானதன் வழியாக, பரஸ்பர ஒப்பந்தங்களின் வழியாக, உலக மூலதனச்சந்தையைத் திறந்தால் உருவானது. அதற்காக உலக அமைப்பில் உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்புகள், உலகை வழிநடத்துவதாக மாறியது. அந்தச் சர்வதேச அமைப்புகளைத் தங்களது கைப்பாவைகளாக அமெரிக்க - ஐரோப்பிய அரசுகள் பயன்படுத்திக் கொண்டு வந்துள்ளன. உலக ஒழுங்கு என்கிற சொல்லாடல்வழி அமெரிக்க - சோவியத் பனிப்போர் முடிவிற்குக் கொண்டு வந்த பின், வளைகுடாப் போரைத் தொடங்கி, மத்திய - கிழக்கு நாடுகளையும் இஸ்லாமிய - அடிப்படை வாதத்தையும் தனது எதிரியாக மாற்றிக்கொண்டது அமெரிக்கா. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய இன்றைய உலக வரலாற்றினை மாற்றியமைத்தவர்கள் மூன்றுபேர். சோவியத் பனிப்போரை முடிவிற்குக் கொண்டு வந்த மிகைல் கோர்பச்சேவ், வளைகுடா யுத்தத்தைத் தொடங்கி மத்திய கிழக்கு அரேபிய நாடுகளைப் போர்க்களமாக்கிய சதாம் உசைன், இரட்டைக்கோபுரத் தாக்குதலை நடத்திப் பயங்கரவாதத்தின் உலகப் பேரரசை நிறுவிய ஒசாமா பின்லேடன். இவர்கள் அமெரிக்கா நிகழ்த்திய தனது மேலாண்மை நாடகத்தில் கதாநாயகர்களாக அறிமுகமாகி இறுதியில் கட்டமைக்கப்பட்ட வில்லன்களாக மாற்றப்பட்ட வர்கள்.

இந்த உலக மேலாண்மை நாடகத்தைப் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாக நடத்திய அமெரிக்கா ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் போர்களுக்காகச் செலவழித்த தொகை 3.2 டிரில்லியன் டாலர்கள் *(The Costs of War since 2001. Eisenhower Study Group, June (2011)* மாதத்திற்கு 10 மில்லியன் டாலர் செலவழித்து உள்ளது. அதேசமயம் இத்தகைய யுத்தங்களால் தாலிபான் போன்ற அமைப்புகள் உளவியல் ரீதியாக வலுவான நிலையை அடைந்துள்ளன *(Financial Times, 30 June 2011, p8)*. இதனால் அமெரிக்காவில் 1993-2006 வரை 7 சதவீதத்திற்கு மேலான மிதமான வருமானம் தரும் பணிகள் மறைந்தொழிந்துவிட்டன. *(Financial Times, 30 June 2011, p4)*. சமத்துவ

அல்கொய்தா தீவிரவாத அமைப்பு என்கிற ஒன்றே இல்லை என்பதும் அது ஆப்கானில் சோவியத்தை விழ்த்த உருவாக்கப்பட்ட முஜாஹிதீன்கள் அமைப்பிற்கான ஒரு "தகவல் தொகுப்பாக" அமெரிக்க வெளிஉறவுக் கொள்கையை அமுல்படுத்தவென அமெரிக்க உளவு நிறுவனம் மற்றும் அதன் துணை அமைப்புகளான சர்வதேச உளவு நிறுவனங்கள் உள்ளிட்ட வலைப்பின்னலில் உருவானது.

மின்மை என்பது உலகிலேயே அதிகமாக உள்ளது. அமெரிக்காவில்தான் என்கிறார் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர் ஜேம்ஸ் பெட்ராஸ் *(Multi Billion Dollar Terroriests and the Disappearing Middle Class, James Petras Economic & Political Weekly EPW, October 1,2011 xlvi no 40).* அமெரிக்கா இந்த யுத்தவ் செலவீனத்தால் மத்தியதர வர்க்கத்தின் வாழ்வைப் படுகுழிக்குள் தள்ளியதை விவரிக்கிறது இக்கட்டுரை. ஒரு சில முதலாண்மை நிறுவனங்கள் தங்கள் வருவாயைப் பெருக்க ஒட்டு மொத்த தேசத்தையும் அதன் அரசையும் பயன்படுத்தும் இந்த முறைதான் தற்போதைய பேரரசு உருவாக்கத்தில் கவனிக்க வேண்டிய அம்சம். அரசு முதலாண்மை நிறுவனங்களைக் காப்பதற்கு என்கிற கோட்பாடுகள் மாறி, அரசை முதலாண்மை நிறுவனங்கள் பொறுப்பேற்று நடத்தும் (ஸ்பான்ஸர்) நிலைக்கு வளர்ந்துவிட்டன. முதலாண்மையாளர்களுக்கு தேசம், நிறம் எல்லை எதுவும் இல்லை. அவர்கள் உலகளாவிய வர்கள். அதனால் உலகமயத்துடன் உலகை ஓரமை வாக்கத்திற்குள் கொண்டுவந்துவிட்டனர்.

இது முதலாளித்துவத்தின் மிகச் சாதாரண நுட்பம் மட்டுமல்ல. முதலாண்மை (கார்பரேட்) எப்படிப் பிறநாடுகளைச் சூறையாடித் தன்னை நிர்மாணித்துக் கொள்கிறது என்ற உத்தியும் கூட. காட்சி 1இல் சாப்ளின் செய்யும் குற்றம் படத்தில் குற்றமாகவே பதிவாகும். ஆனால் இன்றைய இயல் உலகில் முதலாண்மை நிறுவனங்கள் இதனை தேசபக்தி, சமூகப் பாதுகாப்பு, தீவிரவாதத் திற்கு எதிரான போர், சிவில் சமூகத்தைக் காப்பது, ஜனநாயகத்தை உருவாக்குவது என்கிற பெயரில் நிகழ்த்துகின்றன. இவற்றை அவை குற்றமாகச் செய்வதில்லை. இதுதான் நீதியாகப் பறையறிவிக் கின்றன. நீதியை மேலிருந்து இறக்குமதி செய் கின்றன. நீதியை வழங்குவதன் வழியாக, தங்களை நீதிமான்களாக உயர்த்திக் கொள்கின்றன. உலகநீதி என்கிற ஒன்றை இதன் வழியாக உருவாக்கி நிலை நிறுத்துகின்றன.

மனிதர்களைக் கலாசாரத்தின் வழியாக நுகர்வாளர்களாக உருவாக்க முனைகிறான். முதலாண்மை வாழ மனிதர்கள் தேவையில்லை. நுகர்வாளர்கள்தான் தேவை. அந்த நுகர்வை உருவாக்கக் கலாசாரக் கட்டுமானம் தேவை. அதை உருவாக்க வேண்டியது முத லாண்மை நிறுவனங்களின் முதல் பணியாக உள்ளது.

காட்சி-1 உருவகிக்கும் பிம்பம் பல தளத்திலானது. குறிப்பாக, முதலாளியம், ஏகாதிபத்தியம் உள்ளிட்ட பலவும் செய்யும் சித்து வேலை இதுதான். அதாவது பிள்ளையைக் கிள்ளிவிடுவது, தொட்டிலை ஆட்டுவது. இங்குப் பிள்ளையை உலக நிதிநிறுவனங்கள் கிள்ளிவிட, தொட்டிலை ஆட்டும் பணியைச் செய்வது இந்த அரசுசாரா நிறுவனங்கள். உலக நிதி நிறுவனங்களின் வழியாக கடன்சுமையை ஏற்றி, ஒருபுறம் மக்கள் நலத்திட்டங்களை நிறுத்துவது, மற்றொருபுறம் இத்தகைய நிறுவனங்கள் வழியாக மக்கள் நலத்திட்டத் திற்குச் சார்பாக அரசை எதிர்த்துப் போரிடு வது. இதுதான் பிள்ளையைக் கிள்ளித் தொட்டிலை ஆட்டும் வேலை.

கதை-1

கதை-1 இல் உள்ள முதலாவது ஆராய்ச்சியாளன் பொதுப்புத்தி அடிப்படையில் இயங்குபவன். உலகம் இப்படி இயற்கையாக இருப்பதாக நம்புபவன். இரண்டாமவன் முதலாண்மை கல்வி நிறுவனங்களில் மேலாண்மைப் படிப்புகளைக் கற்றவன். ஒன்றை உருவாக்கி அதற்குத் தீனிபோடும் கலாசாரக் கட்டுமானம் பற்றி அறிந்தவன். மனிதர்களைக் கலாசாரத்தின் வழியாக நுகர்வாளர்களாக உருவாக்க முனைகிறான். முதலாண்மை வாழ மனிதர்கள் தேவையில்லை. நுகர்வாளர்கள்தான் தேவை. அந்த நுகர்வை உருவாக்கக் கலாசாரக் கட்டுமானம் தேவை. அதை உருவாக்க வேண்டியது முதலாண்மை நிறுவனங்களின் முதல் பணியாக உள்ளது. அப்பணிகளைச் சர்வதேச அளவில் செவ்வனே நிறைவேற்றுபவைதான் கலாசார நிறுவனங்களான ஊடகங்கள், நவீன இலக்கியங்கள், நவீன கலைகள் மற்றும் என்.ஜி.ஓ.க்கள் எனப்படும் அரசுசாரா நிறுவனங்கள்.

செவ்வியல் முதலாளித்துவம் மறைந்து அந்த இடத்தில் உலக முதலாண்மை நிறுவனங்கள் அதிகாரம் பெற்றுவிட்ட ஒரு சூழல்தான் உலகமயமாதலின் வெளிப்பாடு. (நண்பர் ராஜன்குறை இந்த வகை முதலாளியத்தின் பண்பியல் மாற்றத்தைக் குறிக்க முதலீட்டியம் என்கிற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். முதலீட்டியம் என்பது உலகளாவியது, அது தனிமுதலாளிகளைக் குறிப்பது அல்ல. உலகில் 'பேரரசு' ஒன்றின் செயல்பாட்டிற்கான

பின்புலமாக முதலீட்டியத்தைக் குறிக்கிறார் என்று நினைக்கிறேன். இது குறித்து அவரது *முதலீட்டியமும் அதன் பிறகும்* என்கிற நூலில் முதன்நிலையான ஓர் அறிமுகம் உள்ளது. நான் முதலாண்மை நிறுவனங்கள் என்பதற்கு கார்பரேட் கம்பெனி கள் என்பதற்கானத் தமிழ்ச் சொல்லாகவே பாவிக்கிறேன்) இந்நிறுவனங்கள் தனக்கான உலகைக் கட்டமைக்கப் பல அரசாங் கங்களை நடத்திக்கொண்டுள்ளன. அவ்வரசாங் கங்கள் சர்வதேச நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் வழியாக ஓர் உலக ஆட்சியை நிறுவி யுள்ளன. இந்த உலக ஆட்சிக்கான சிவில் சமூ கங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டி ருப்பதே உலக கார்பரேட் மற்றும் அரசுகளின் நிதிஉதவி பெற்று இயங்கும் என்.ஜி.ஓ.க்கள்.

இவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் சிவில் சமூகங்கள் பற்றிய ஆய்வும் இடையீடும் பணி களும் செய்து அதைச் சர்வதேச சிவில் பண்புக ளாக உருவாக்கப்பட்டுள்ள 'ஜனநாயகம்', 'சுதந்திரம்', 'சமத்துவம்', 'சகோதரத்துவம்', 'மனிதநேயம்' உள்ளிட்டவற்றிற்கான கருத்தி யல்சார்ந்த மனித குழுக்களைக் கட்டமைப்பதும் மனிதர்களை நுகர்வாளர்களாக உருவாக்கு வதையும் செய்கிறார்கள். கருத்தியல் பண்டங் களை இறக்குமதி செய்து விநியோகிப்பதும் அதை நுகரச் செய்வதும் இவர்களது முக்கிய பணி. சமீபத்திய அரேபிய புரட்சிகள் தொடங்கி இந்தியாவில் அண்ணா ஹசாரேவின் ஊழல் எதிர்ப்பு 'இரட்சக அரசியல்வரை' சிவில் சமூகம் பற்றிய பேச்சு உலகளவில் அதிகமாகியுள்ளது. இந்த 'இரட்சக அரசியல்' மனநிலை அதிகா ரத்தைத் தூக்கி எறியும் அளவிற்கு அரேபிய நாடுகளில் பாலைவனப் புயற்காற்றைப் போலச் சுழற்றி அடித்தது. அரேபிய புரட்சி மற்றும் இந்திய சிவில் சமூகக் கட்டமைப்பில் இச்சுழல் காற்றை உருவாக்கிய என்.ஜி.ஓ.க்களின் இடை யீடு பற்றிய ஒரு கவனத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைவது அவசியம்.

உண்மையில், இந்தியாவில் சிவில் சமூகம் உள்ளதா? இல்லையா? என்கிற விவாதங்கள் ஒருபுறம் உள்ளன. அரசியல் சார்ந்த சிவில் சமூகம் உருவாகும் முன்பே, பிராமண அல்லது ஆரிய தர்மாவை அல்லது வரணாசிரம - தர்மத் தைப் பின்பற்றும் சாதியக் குழுக்களை அடிப்படை யாகக் கொண்ட தர்ம சமூகம் உருவாகிவிட்டது. பழங்குடிகளின் கூட்டாட்சியை, சம-தர்ம சமூகத்தை உருவாக்க முனைந்த பௌத்தம் கூட பின்னாளில் இந்த வர்ண-தர்ம-சமூகத் தால் உள்வாங்கப்பட்டது. காரணம், தர்ம-சமூகம் அரசியலின் இடத்தில் தர்மத்தை வைத்தது. உரிமையின் இடத்தில் கடமையை வைத்தது. நிர்வாகத்தின் இடத்தில் குடும்பத்தை வைத்தது. அமைப்புகளின் இடத்தில் விசுவாசத்தை வைத்தது. தனி மனித னின் இடத்தில் குழுமனிதனை வைத்தது. உள்ளுணர்வின் இடத்தில் கண்கா ணிப்பை வைத்தது. மனத்தின் இடத்தில் மனசாட்சியை வைத்தது. அறிவின் இடத்தில் உணர்வை வைத்தது. அறத் தின் இடத்தில் குழு - தர்மத்தை வைத்தது. சுதந்திரத்தின் இடத்தில் மோட்சத்தை வைத்தது. சிவில் சமூகத்தின் இடதத்தில் சாதிய - தீண்டா மையைக் கொண்ட வர்ண - தர்ம - சமூகத்தை வைத்தது. அரசிய லின் - தர்மத்தை, அரசியலின் அறத் தைத் தர்மத்தின் அரசியலாக மாற்றி யது. தர்மா வர்ணங்களால் ஒழுங்கமைக் கப்பட்டது. புராணங்களில், கதையாடல் களின் வழியாக ராஜதர்மம் கூட வர்ண தர்மத்தைக் காப்பதற்கானதாக உரு வானது. வர்ண - தர்மத்திற்கு அப்பால் சிவில் சமூகம் என்கிற பொதுவெளி சாத்தியமற்ற நிலையில், சிவில் சமூகம் பற்றிய நிறைய பேச்சுகள் சமீப காலங்களில் பெருக்கப்படு கின்றன. இந்திய சிவில் சமூகத்தில் சாதியத் தின், சாதியக் குழுக்களின் பங்கு என்ன என்பதைத் தீர்க்காமல், சிவில் சமூகம் என்கிற குடியாண்மைச் சமூகத்தை உருவாக்க முடியாது.

இப்படிப் பெருக்கப்படுவதற்குக் காரணமாக இந்திய அரசு மாறிவரும் உலகமயமாதலில் சிவில் சமூக உரு வாக்கத்தைத் தனது அதிகார அமைப்பிற்கு ஏற்ப ஒருவகை அதிர்ச்சி - உறிஞ்சியாக உருவாக்க முனைகிறது. அதற்கான முயற்சியில் அரசுசாரா நிறுவனங்களின் பணிகளை அரசே நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன் படுத்துகிறது. சிவில் சமூக உருவாக் கத்தில் என்.ஜி.ஓக்கள் எனப்படும் அரசுசாரா நிறுவனங்களின் பணியும் பங்கும் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

சமீபத்திய அரேபிய புரட்சிகள் தொடங்கி இந்தியாவில் அண்ணா ஹசாரேவின் ஊழல் எதிர்ப்பு "இரட்சக அரசியல்வரை" சிவில் சமூகம் பற்றிய பேச்சு உலகளவில் அதிகமாகியுள்ளது.



எகிப்தில் நிகழ்ந்த புரட்சி தொடங்கி அரேபியா முழுவதும் பரவிய அரேபிய புரட்சிகளுக்குப் பின்னுள்ள அரசுசாரா நிறுவனங்களின் பங்களிப்பு முக்கிய மானது. இந்நிறுவனங்கள் சமூகத்தின் மைக்ரோ லெவல் எனப்படும் மிகச் சிறிய அளவிலான ஒரு குழுவிற்குள் தொடங்கி விரிந்து பரவுகிறது. வேர்க் கால்மட்ட அரசியலே இக்குழுக்களின் அடிப்படைச் செயல்களமாக உள்ளது. இந்தியாவில் அண்ணா ஹசாரே போன்ற நடுத்தர வர்க்கத்தின் புதிய அதிகாரத்தை பங்கிடத் துடிக்கும் சிவில் சமூகம் 'மெசையாக்'களை உருவாக்குவது இத்தகைய அரசுசாரா நிறுவனங்களின் முக்கியப் பணியாகும். அதற்காக முதலாளிய அரசுகள் நிறைய நிதிகளை அளிக்கிறது. உலகம் இன்று ஒரு வகையில் இந்தக் கண்ணிற்குத் தெரியாத சிறுசிறு நிறுவனங்களின் வழி யாக பேரரசின் அதிகார முகவர்களாகச் செயல்படுகிறது. இந்நிறுவனங்கள் என்ன செய்கிறது எப்படித் தங்கள் வலைப் பின் னலை விரிக்கிறார்கள் என்பதை இவற் றின் அசுர வளர்ச்சியிலிருந்து அறியலாம்.

2009ஆம் ஆண்டு கணக்கின்படி சர்வதேச அளவில் இயங்கும் அரசுசாரா நிறுவனங்கள் சுமார் 40,000 வரை உள்ளது என்கிறது ஓர் அறிக்கை. தேசிய அளவில் பார்த்தால் அதன் எண்ணிக்கை இதைவிட அதிகம். ரஷ்யாவில் மட்டும் 2,77,000 அமைப்பு களும் இந்தியாவில் 33,00,000 அமைப்புகள் இயங்கி வருவதாக அந்த அறிக்கை குறிப் பிடுகிறது. அதாவது 400க்கும் குறைவான இந்தியர்களுக்கு ஆரம்பக் கல்வி, ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கணக்கில் ஓர் அரசுசாரா நிறுவனம் இயங்கி வருகிற தாம். அதாவது இந்நிறுவனங்கள், அரசின் பொதுநிறுவனம், அரசிற்கு வெளியில் உள்ள தனியார் நிறுவனம் இரண்டையும் போல ஒரு மூன்றாவது நிறுவனமாகச் செயல்படுகிறது. அரசையும் மக்களையும் இணைக்கும் கண்ணியாக இது செயல்படுகிறது.

அரசு இரண்டு வடிவங்களில் தனது அதிகாரப் பரவலைச் செயல்படுத்துகிறது. காவல்துறை, இராணுவம், நீதிபரிபாலன சட்ட அமைப்பு உள்ளிட்டவற்றைக் கொண்ட வன்முறை சார்ந்த கருவிகளை வெளிப்படையானதாக வைத்து உள்ளது.

அரசு இரண்டு வடிவங்களில் தனது அதிகாரப் பரவலைச் செயல்படுத்துகிறது. காவல்துறை, இராணுவம், நீதிபரிபாலன சட்ட அமைப்பு உள்ளிட்டவற்றைக் கொண்ட வன்முறை சார்ந்த கருவிகளை வெளிப்படை யானதாக வைத்து உள்ளது. குடும்பம், கல்வித் துறை, தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட குடியாண்மைச் சமூகம் கருத்தியல் வழியாக இணக்கமான மனநிலையை உருவாக்குவதாக உள்ளது. ஓர் அரசமைப்பு வன்முறைக்

கருவிகளைக் கொண்டு மட்டுமே ஆள முடியாது, அதிகாரம் செலுத்த முடியாது. தனது ஆளுகையை ஏற்கக்கூடிய தன்னிலைகளை உருவாக்க வேண்டும். அதற்கு இந்த அரசுசாரா, தன்னார்வ, தொண்டு நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. சீர்திருத்தம், அடிப்படை மாற்றம் என்கிற இரு சொல்லாடல்களுக்குள், சீர்திருத்தம் என்பதை முன்வைப்பதன் மூலம், அடிப்படை மாற்றத் தைப் பற்றிய அக்கறையின்மையை உருவாக் கக்கூடிய தாக உள்ளது. தன்னிலைகளைத் திருத்தம் செய்து சீர்திருத்தி அரசின் ஆளுகைக்குள் நிலைநிறுத்துவதாக உள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய என்.ஜி.ஓ என்றால் அது மதம் சார்ந்த இயக்கங்கள்தான். சான்றாக, இந்திய தேசியத்தின் பாதுகாவலனாக, மரபின் மைந்தனாகத் தன்னை அறிவித் துக் கொண்டு, தேசிய சுயசேவகர்கள் என்று சொல்லும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சொல்லலாம். இவ்வமைப்பு அரசுசாரா நிறுவனங் களுக்கு, சிவில் சமூகச் சேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட அமெரிக்க நிதி ஆதாரங்களைக் கொண்டு இயங்குவதைப் பெரியார் தளத்தில் உள்ள இக்கட்டுரை விவரிக்கிறது. *(<http://www.periyarthalam.com/2011/12/09/rss&run&by&american&money/>).*

இந்தியாவில் 1.5 மில்லியன் என்.ஜி.ஓ. அமைப்புகள் உள்ளன. 26.5 சதவீதம் என்.ஜி. ஓக்கள் மதநடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள். 21.3 சதவீதம் சமூகச் சேவை இயக்கங்கள் ஐந்திற்கு ஒன்று கல்வியிலும் 17.9 சதவீதம் விளையாட்டு மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள னர். *(Overview of civil society organizations india & Asian Development Bank)* இத்தகைய வேர்க்கால்மட்ட நடவடிக்கைகளால் தான் இந்தி யாவில் சிவில் சமூக உருவாக்கம் நிகழ்கிறது. இத்தகைய பணிகளால், மக்களின் மனசாட்சி என்பது சிவிக் பண்புகளால் கட்டப்படுகிறது.

சிவிக் பண்புகளாக மேற்கத்தியம் முன்வைக் கும் அடிப்படையான ஒன்று ஜனநாயகம். ஆனால் இந்தியாவில் ஜனநாயகம் என்பது பிரதிநிதித்துவ அரசியலாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறதே யொழிய, பங்கேற்பின் அரசியலாக அல்ல. ஜனநாயகம் என்பது சமத்துவப் பண்பை அடிப் படையாகக் கொண்டது. அது மற்றமையுடன் பங்கேற்பதன் வழியாக ஒரு சமத்துவ நிலையை உருவாக்கக்கூடியது. ஆனால் இந்திய தர்மா-வர்ணப் பண்புகளால் கட்டப்பட்ட மனதில், ஜனநாயகம் என்பது பிரதிநிதித்து வமாக மட்டுமே புரிந்துகொள்ளப்பட் டுள்ளது. அதன் அடிப்படையில் குழு வின் பிரதிநிதியாக ஜனநாயகம் கையாளப்படுகிறது. தனிமனிதனின் பண்பாக ஜனநாயகம் இங்கு வளர்த் தெடுக்கப்படவில்லை. காரணம் இந்தி யாவின் அடிப்படை அலகாகத் தனி மனிதன் இல்லை. குழுக்களே உள் ளன. அந்தக் குழுக்கள் சாதிகளாக, இனமாக, பாலினமாக இப்படி ஏதோ ஒரு நிலையான அடையாளம் (மோலார் அடையாளம்) கொண்டதாக உள்ளது. அடையாளத்தின் ஜனநாயகம் மட்டுமே அரசியல் கோரிக்கையாக உள்ளது. தனி உடலின் ஜனநாயகம் என்பது சிந்தனை அளவில்கூட சாத்தியமற்ற தாக உள்ளது. தனக்கும் மற்றமைக் கும் குறைந்தபட்சம் சகமனிதனுக்கும் இடையில் கூட ஒரு சமநிலையை தரும் சமத்துவத்தைத் தரும் ஜனநாயகப் பண்பு இல்லை. எப்போதும் தன்மோ கத்தின் உச்சியில் நின்று, தன்னை உயர்வாகக் கருதும் ஒரு 'புனித தெய்வீக' தன்மையவாத பிம்பமே மேலோங்கி உள்ளது. அதனால்தான் ஜனநாயகம் என்பது எப்போதும் ஒரு பிரதிநிதித்துவ அரசியல் சொல்லாட லாக உள்ளதே தவிர, பங்கேற்கும் கலா சாரச் சொல்லாடலாக மாறவில்லை.

கதை-1 இல் கூறியபடி நுகர்விற் கானவர் களாக மக்கள் திரளைப் படைப்பது. சிவில் சமூகம் என்பது நாகரிகப்படுத்துதல் என்பதுடன் உறவுகொண்டதாக உள்ளது. இது உலக ளாவிய ஒரு பொது அமைப்பைக் கட்டு வதாக உள்ளது. குடிமக்கள் உருவாக் கமே இதன் அடிப்படையாக உள்ளது. சிவில் சமூகம் என்பது அரசியலற்ற தாகக் கருதப்படுகிறது. காரணம், சிவில் சமூகம் என்கிற கருத்தாக்கமே வணிகமயமாக மக்கள் திரளை மாற்றும் ஒன்று. அரேபியா போன்ற மதவாத நாடுகளில் முதலில் செருப்பு போடும் கலாச்சாரத்தைப் பரப்பும் கதையாக ஜனநாய கத்தை, சுதந்திரத் தைப் பரப்புவதுதான் என்.ஜி.ஓ.க்கள்

இந்தியாவில் 1.5 மில்லியன் என்.ஜி.ஓ. அமைப்புகள் உள்ளன. 26.5 சதவீதம் என்.ஜி. ஓக்கள் மதநடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள். 21.3 சதவீதம் சமூகச் சேவை இயக்கங்கள் ஐந்திற்கு ஒன்று கல்வியிலும் 17.9 சதவீதம் விளையாட்டு மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மற்றும் ஊடகங்களின் பணி. பரப்பப்பட்டவுடன் மக்கள் திரள் தான் உணர்ந்த சிவிக் பண்பு களின் அடிப்படையில் புரட்சிக்கான உந்துதலைப் பெறுகிறார்கள். இதன் பொருள் அரேபிய அரசுகள் மக்கள் நலன் கொண்ட அரசுகள் என்று பொருளல்ல, அவை அடிப்படையில் எதேச்சதிகார, பாரம் பரிய மன்னராட்சி அரசுகள் மட்டுமல்ல புதிதாக உருவாகிவரும் முதலாண்மை அரசியலில் ஊறித்திளைத்து வெளிப்படும் ஊழலின், மனிதத்தன்மையற்ற அடக்குமுறைகளின், பணம் மட்டுமே, சொத்து மட்டுமே குறி என்கிற நுகர்வின் ஆகப்பெரும் சீரழிவைக் கொண்ட அரசுகள்தாம். இத்தகைய அரசுகளின் கீழ் மக்கள் பெறும் தன்னெழுச்சியான எதிர்ப்பை இத்தகைய அரசுசாரா நிறுவனங்கள் நெகிழ்வான போக்கிற்கு மாற்றியமைக்கின்றன. அந்நெகிழ்வுப் போராட்டத்திற்குப் பிறகு வழிகாட்டுதலற்ற திக்கற்ற நிலைக்கு ஆளாக்குவதாக உள்ளது.

அரேபிய புரட்சிகளுக்குப் பின்புலமாக அமெரிக்க ஆதரவு என்.ஜி.ஓ.க்கள் பங்கு முக்கியமானது. குறிப்பாக சோவியத் ரஷ்யாவின் கம்யூனிச வீழ்ச்சியில் பொருளியல் பண்டங்களை விட, கருத்தியல் பண்டங்களான ஜனநாயகம், சமத்துவம், மனித உரிமை போன்றவை முக்கியப் பங்காற்றின. மேற்கத்தியத்தின் இக்கருத்தியல் பண்டங்களை விற்பனை செய்யும் முகவர்களாகச் செயல்பட்ட என்.ஜி.ஓ.க்கள் சோவியத் ரஷ்யாவிற்குப் பின் அரேபிய பகுதிகளை நோக்கித் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள். கடந்த 20 ஆண்டுகளாக என்.ஜி.ஓ. க்களின் பரவலாக்கம் அரேபிய நாடுகளில் மேற்கத்திய பாணியிலான சிவில் சமூகத்தை உருவாக்கப் பணியாற்றி வருகின்றன. அதன் உச்ச விளைவுதான், இறுகிய அரேபிய இஸ்லாமிய சமூக அமைப்பை இளக வைத்து, புரட்சியை உருவாக்கியது. 2003நவம்பர் 6இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜார்ஜ்புஷ் இதனைப் பிரகடனம் செய்தார். '60 ஆண்டுகளாக மேற்கத்திய தேசங்கள் மத்திய - கிழக்கு நாடுகளின் விடுதலையின்மையைப் பொறுத்துக் கொண்டுவிட்டன, அது நம்மைப் பாதுகாப்பற்ற நிலையில்தான் வைத்துள்ளது. மத்தியகிழக்கு நாடுகளின் விடுதலைக்காக அமெரிக்கா புதிய திட்டத்தை (நியு பாலிசி) முன்னெடுக்க வேண்டும்.' இதன் பொருள் அந்தப் புதிய பாலிசியில் ஒன்றுதான் போர் மற்றும் சமூக நலப்பணிகளின் வடிவில் உருவாக்கப்பட்ட என்.ஜி.ஓ. வலைப்பின்னல்.

இது நேரடியாக அமெரிக்க ஆதரவு நிலையில் செயல்படாது. இன்னும் குறிப் பாக எதிரான நிலையில்தான் செயல்படும். அமெரிக்காவிற்கு எதிராக இது மக்களைத் திரட்டும். ஆனால் அரசு என்கிற அமைப்பிற்கு எதிராக இது செயல்படாமல், அதன் திட்டவடிவிற்குள்தான் இது செயல்படும். அமெரிக்கா மக்கள் ஆதரவை விட அரசு ஆதரவில்தான் தனது வெளிஉறவுக் கொள்கைகளை உருவாக்குகிறது. ஆனால் இந்த என்.ஜி.ஓ.க்கள் மக்கள் மனநிலையை சிவிக் பண்புகள் என்பதாக, அமெரிக்க அரசின் முன்மாதிரி பற்றிய ஆழ்மன கனவை உருவாக்கி விடுபவை. வெளியில் அமெரிக்காவை எதிர்ப்பதும், மனதளவில் சுதந்திர - ஜனநாயக - மக்கள் நல்வாழ்வு அரசின் முன்மாதிரியாக அமெரிக்க அரசை கருதிக்கொள்வதும் செயல்படுத்தப்படு கிறது. அதாவது அமெரிக்க ஆதரவுநிலை பரவலாகவும் மேலோட்டமாகவும் பார்த்தால் அரேபிய மக்களிடம் இல்லை என்பதால், அமெரிக்கா தனது அரசு பற்றிய கனவை அகநிலையில் வளர்த்தது. அரேபியர்கள் அமெரிக்காவை எதிர்த்தனர், பின்லேடன் உள்ளிட்ட இஸ்லாமிய அடிப்படைவாதிகளை ஆதரித்தனர். புஷ்ஷும் பின்லேடனும் நாணயத்தின் இரண்டு பக்கங்களாக உள்ளவர்கள். இவர்களது செலாவணி என்பது ஒரே நாணயத்தின் செலாவணிதான். சான்றாக, பின்லேடன் விரும்பியபடி, அமெரிக்கப் பொருளாதாரத்தை நடுவீதிக்குக் கொண்டுவந்தவர் புஷ். பின்லேடன் உலக வணிக மையத்தை, உலக முதலாண்மை நிறுவனத்தின் குறியீடாக நின்ற இரட்டைக் கோபுரத்தைத் தகர்த்து, உலகப் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தவே. அதை வளைகுடா ஆப்கான் ஈராக் போரின் மூலம் நடைமுறைப்படுத்தினார் புஷ். இந்த அதிகாரத்தின் ஆணவமிக்க விளையாட்டில், பாதிக்கப்பட்டிருப்பது உலகின் வாழ வழியற்ற மக்கள் கூட்டம்தான். ஆனால் பின்லேடனை

அரேபிய புரட்சிகளுக்குப் பின்புலமாக அமெரிக்க ஆதரவு என்.ஜி.ஒ.க்கள் பங்கு முக்கியமானது. குறிப்பாக சோவியத் ரஷ்யாவின் கம்யூனிச வீழ்ச்சியில் பொருளியல் பண்டங்களை விட, கருத்தியல் பண்டங்களான ஜனநாயகம், சமத்துவம், மனித உரிமை போன்றவை முக்கியப் பங்காற்றின.

புஷ் எதிர்ப்பது என்பதும் இருவரும் எதிரெதிரானவர்கள் என்பதும் வெளிப்படையாக தெரிந்தாலும் உலகை வீழ்ச்சியடைச் செய்ததில் இருவரின் பங்கும் விமான இடிப்பு - ஆப்கன் போராட்டம் என்பதன் வழியாக பேரரசின் விளையாட்டாக நிகழ்த்தப்பட்டதே. அதாவது உலகில் தீவிரவாதம் பேரரசின் எதிர் வடிவமாகத் தன்னை அறிவித்தது 9/11 என்கிற நிகழ்வில்தான். இந்தப் புள்ளியில் உலக முதலாண்மை என்பது ஒரு புதிய பரிமாணத்தை, அரசுமுறையின் வடிவத்தை, அரசிற்கும் தனக்குமான உறவை வரையறுத்துக்கொண்டது.



சுருக்கமான பொருளில் சிவில் சமூகம் என்பது, அரசிலிருந்தும் சந்தையிலிருந்தும் பிரித்து இனக்குழுவாக உள்ள மக்களிடம் தன்னிச்சையான வாழ்வை உருவாக்கும் ஒன்றாகச் செயல்படுகிறது. மக்களை அரசியலற்றவர்களாக மாற்றுவதே அதன் பணி. காளான்களாய் முளைத்த இந்நிறுவனங்கள் தான் அரேபிய புரட்சியை நடத்தின. சிவில் சமூகம் என்பது அரசியற்குச் சமமான அதிகாரத்தைப் பெற்றதாக முன்வைக்கப்படுகிறது. இந்தியாவில் அண்ணா ஹசாரே வின் அரசியல் அதைத்தான் முன்வைக்கிறது.

சிவில் சமூகத்திற்கு உதவுதல் என்பது அமெரிக்காவின் திறனை முன்னெடுப்பதாக உள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் 1991-2001க்கு இடையில் மட்டும் சிவில் சமூகத்தைப் பலப்படுத்த வென ஏறக்குறைய 150 மில்லியன் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் என்.ஜி.ஓ.க்களால் நடைமுறைப் படுத்தப்பட்டன.

சிவில் சமூக அமைப்புகள் குடிமக்களின் குரலாகத் தங்களை அறிவிக்கின்றன. மக்களின் அரசியல், சமூக மற்றும் ஆன்மீக நோக்கினை அமைதியான முறையில் கூட்டாக வெளிப்படுத்துவதற்கான ஒரு கருவியாக உள்ளன. சிவில் சமூக அமைப்புகள் மக்களின் அடிப்படை ஜனநாயக மதிப்பீடுகளைக் கற்றுத் தருகின்றன. மக்களின் தேவைகளை அரசின் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, அரசின் ஆளுகையினை மக்கள் ஏற்கும்படி செய்கின்றன. அரசியல் சட்டம் மக்களை நேரடியாக அரசு அதிகாரத்திற்குள் வைக்கிறது என்றால், சிவில் சமூக அமைப்புகள் மக்களுக்கு அரசியல் சட்டத்தை நடைமுறையில் சாத்தியப்படுத்துவதாக உள்ளது அல்லது அரசியல் சட்டத்தை ஏற்கும் ஒப்புக்கொள்ளும் தன்னிலை களாகக் குடிமக்களை மாற்றியமைக்கிறது.

சிவில் சமூகம் என்பது மேற்கத்தியர்களின் மனதில் 'மக்கள் அதிகாரத்திற்கான' இயக்கமாக அதனால், எதேச்சதிகாரத்தைத் தூக்கி எறிந்து மேற்கத்திய ஜனநாயகத்தைக் கொண்டுவரும் ஒன்றாகக் கருதப்படுகிறது. உலகெங்கிலும் அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஜனநாயகத்தை உவந்தளிக்கும் கருவியாகச் செயல்படுகிறது. சிவில் சமூகம் என்பது சிவிலிட்டி அதாவது நாகரி கப்பண்பு கொண்ட ஆண் என்கிற பிம்பத்தின் அடிப்படையில் உருவாகியது. அதாவது ஐரோப்பிய ஆண் பிம்பமே இதன் அடிப்படை.

காட்சி - 1 உம் கதை - 1உம்

சிவில் சமூகம் மற்றும் ஜனநாயகம் என்பதைக் கட்டமைப்பதில் ஒத்திசைவு (கான்சென்ஸஸ்) என்கிற பண்பே அடிப்படையானது என்பது ஹெபர்மாஸின் கோட்பாடு. முரண்களே (கான்பிளிக்ட்) அடிப்படையானது என்பது பூக்கோவின் கோட்பாடு. முரண்களின் அடிப்படையில் போர் எந்திரங்களின் வழி ஜனனாயகத்தை சிவில் சமூகத்தை உருவாக்குவது என்பது காட்சி - 1 இன்படி நடப்பது. ஒத்திசைவின் வழி உருவாக்குவது என்பது கதை -1 இன்படி நடப்பது. இந்த இரண்டையும் உலகப்பேரரசு தனது தந்திரமாக, கருவியாக பயன்படுத்தி உலக சிவில் சமூகத்தை

சிவில் சமூகம் என்பது, அரசிலிருந்தும் சந்தையிலிருந்தும் பிரித்து இனக்குழுவாக உள்ள மக்களிடம் தன்னிச்சையான வாழ்வை உருவாக்கும் ஒன்றாகச் செயல்படுகிறது. மக்களை அரசியலற்றவர்களாக மாற்றுவதே அதன் பணி.

உருவாக்குகிறது. அப்படி உருவாக்குவதன் மூலம் தனது ஆளுகையை உலகில் உறுதி செய்துகொள்கிறது. இப்படி உறுதிசெய்யப்பட்ட ஆளுகையால் தனக்கான எதிரிகளைக் கட்டமைப்பதும் அவர்கள் குறித்த பயங்கரத்தை உருவாக்கி பயமுறுத்துவதும் தொடர்ந்து நிகழ்த்தப்படும் நாடகங்களாக உள்ளது. பயங்கரவாதிகளுக்கும், பேரரசிற்கும் இடையில் நிகழும் இந்த நாடகத்தின் பாத்திர மேற்பவர்களாக, காட்சியாளர்களாக உலக மக்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இன்றைய இந்தியாவில் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் சட்டத்தை ஏற்ற தேசிய, பிராந்திய கட்சிகள் காட்சி - 1 இல் உள்ளதைப் போல், அதிகாரத்தை நேரடியாக அரசு என்கிற வடிவத்தில் செலுத்தி ஒரு பொருளாதாரப் போரை நிகழ்த்திக் கொண்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட இந்துத்துவ, ஐ.எஸ்.எஸ். உள்ளிட்ட இஸ்லாமிய மதவாத அமைப்புகள் கதை-2 இல் சொன்னதைப் போலக் கலாசார எந்திரங்களாகச் செயல்பட்டு குடிமக்களை அரசின் ஆளுகைக்குத் தயாரித்து அளிக்கின்றன. பேரரசின் உடலுறுப்போடு தன்னை இணைத்துக் கொள்ளாத எந்த அதிகார அரசியலுக்கும் இருப்பற்ற நிலையை உருவாக்கிக் காட்டிக்கொண்டு உள்ளது இந்த நிலைமை. 'டெவில் அண்ட் டீப் சீ' என்பதைப் போல மக்கள் மேலே பூதம் கீழே சீற்றம் கொண்ட கடல் என்ற தத்தளிப்பில் மரண பயத்திற்குள் நிறுத்தப்பட்டு உள்ளனர். இதில் யார் பூதம் யார் கடல் என்பதை ஐந்தாண் டுகளுக்கு ஒருமுறை தலைவிதி என முத்திரையிட்டுத் தீர்மானிக்கும் ஜனநாயக சிவில் உரிமைகள் மட்டுமே மக்களுக்கு மனம் உவந்து அதிகாரத்தால் அளிக்கப்பட்டு உள்ளது.

பயன்பட்ட கட்டுரைகள்

The War on Terrorism or a Global Crusade against Islam, Mahboob A. Khawaja. Ph.D. <http://www.asiantribune.com/news/2011/11/27/wat & terrorism & or & global & crusade & aganinst & islam.

Darkness Renewed: Terror as a Tool of Empire <http://www.chris& floyd.com/articles/1733&darkness&renewe&&terror &as&a&tool&of&empire.html> & CHRIS FLOYD <http://www.chris&floyd.com/component/content/article/1733&darkness &renewed&terror&as&a& tool&of& empire.html?

The Impperial Anatomy of Al-Qaeda. The CIA's Drug&Running Terrorists and the "Arc of Crisis" Part 1 by Andrew Gavin Marshall, <http://globalresearch.ca/index.php? context=va&aid=20907>

Multi, Billion, Dollar Terrorists and the Disappearing Middle Class, James Petras Economic, Political Weekly EPW october 1, 2011 vol xlvi no.40.

MIDDLE EASTERN DEMOCRACY is Civil Society the Answer? Amy Hawthorne, © 2004 Carnegie Endowment for International Peace.

NGOs and Their Role in the Global South, Monsiapile Kajimbwa, <http://www.icnl.org/research/journal/vol9iss1/art_7.htm>

அமெரிக்க பணத்தில் கொழிக்கிறது ஆர்.எஸ்.எஸ்- பெரியார் தளம் http://www.periyarthalam.com/2011/12/09rss&

வெளிவந்துவிட்டது...

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

Aasiriyam (pedagogy)

ஆசிரியம்

ආසියම්

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

முதலாம் ஆண்டுத் தொகுப்பு

மே 2011 தொடக்கம் ஏப்ரல் 2012 வரை

தொடர்புகளுக்கு:

"CHEMAMADU PATHIPPAKAM"

180/1/50 People's Park, Colombo -11

Tel: 011-2331475 E-mail : aasiriyam@gmail.com

படம்:நெடுந்தீவு முகிலன்